# பொழுது புலர்ந்தது

பொ. திருகூடசுந்தரம், எம்.ஏ., பி.எல்.

புத்தக நிலையம்

ராயவரம்

புதுக்கோட்டை ஸ்டேட்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு
தேதி 14-11-46

— விலை —

ரூ. 4-0-0


உரிமையுடையது

கபீர் அச்சுக்கூடம்
திருவல்லிக்கேணி

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நமது நிலைமை | ... | 1 |
| 2. | போர் | ... | 7 |
| 3. | காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா | ... | 12 |
| 4. | வகுப்பு வேற்றுமை | ... | 16 |
| 5. | முஸ்லிம் லீக் | ... | 23 |
| 6. | ராம்கார் காங்கிரஸ் | ... | 27 |
| 7. | பூனுக் கோரிக்கை | ... | 34 |
| 8. | சர்க்காரும் சத்யாக்ரகமும் | ... | 40 |
| 9. | சத்யாக்ரகம் | ... | 48 |
| 10. | சர்க்காரின் தாராளம் | ... | 56 |
| 11. | அட்லாண்டிக் சாஸனம் | ... | 60 |
| 12. | கிரிப்ஸ் வருகை | ... | 67 |
| 13. | கிரிப்ஸ் தோல்வி | ... | 71 |
| 14. | ஆகஸ்டு தீர்மானம் | ... | 85 |
| 15. | காங்கிரஸ் சிறைவாசம் | ... | 90 |
| 16. | காந்தியடிகளின் உபவாசம் | ... | 96 |
| 17. | சர்க்காரின் குற்றச்சாட்டு | ... | 106 |
| 18. | பாதுகாப்புச் சட்ட அமுல் | ... | 110 |
| 19. | புதிய வைஸிராய் நியமனம் | ... | 120 |
| 20. | லின்லித்கோ சாதித்தவை | ... | 122 |
| 21. | வங்காளப் பஞ்சம் | ... | 125 |
| 22. | ஸரோஜனி தேவியாருக்குத் தடை | ... | 131 |
| 23. | வேவல் பிரசங்கம் | ... | 134 |
| 24. | ஜின்னாவின் போக்கு | ... | 141 |
| 25. | காந்தியடிகளின் யோசனை | ... | 146 |
| 26. | இந்து முஸ்லிம் பிரச்னை | ... | 152 |

| | | | |
|---|---|---|---|
| 27. | ராஜாஜி திட்டம் | ... | 155 |
| 28. | காந்தி - ஜின்னு சம்பாஷணை | ... | 159 |
| 29. | காந்திஜியின் திட்டம் | ... | 162 |
| 30. | நற்குறிகள் | ... | 173 |
| 31. | சம்பாஷணைக்குப் பின் | ... | 180 |
| 32. | சிம்லா மஹாநாடு | ... | 185 |
| 33. | இந்திய தேசீய ராணுவம் | ... | 191 |
| 34. | ஜே ஹிந்த் | ... | 212 |
| 35. | பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டி | ... | 226 |
| 36. | காங்கிரஸ் லீக் பரிசீலனை | ... | 236 |
| 37. | தூதுகோஷ்டியார் பதில் | ... | 248 |
| 38. | இடைக்கால சர்க்கார் | ... | 252 |
| 39. | முஸ்லிம் லீக் போர் முறை | ... | 261 |
| 40. | சுயராஜ்ய ஆரம்பம் | ... | 271 |
| | அனுபந்தம் :— | | |
| | முஸ்லிம் லீக் வருகை | ... | 277 |




இடைக்கால சர்க்காரின் உப-தலைவர்.



நேரு



ஸ்ரீ சையத் அலி ஜஹீர்



ஸ்ரீ ஜான் மத்தாய்



சர்தார் பட்டேல்



ராஜாஜி



ராஜன் பாபு



ஆஸப் அலி



சரத்சந்திர போஸ்



பலதேவ் சிங்




ஜகஜீவன் ராம்



பாபா



ஷபா அத் அஹமத்கான்



# பொழுது புலர்ந்தது

## நமது நிலைமை

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் படை எடுத்து வந்த அலெக்ஸாண்டர் சக்கரவர்த்தி "பொன் மயமான பூமி" என்று புகழ்ந்த நமது பரத கண்டம்—சந்திரகுப்த சக்ரவர்த்தி காலத்திலிருந்த மெகாஸ்தனீஸ் என்னும் அறிஞன் "இரவில் தாழ்போடாமல் உறங்கும் நாடு" என்று சிறப்பித்த பாரத தேசம் - இளங்கோவடிகள் என்னும் கவிஞர் பெருமான் "முழங்கு கடல் ஞாலம் முழுவதும் வரினும் வழங்கத் தவா வளத்தது" என்று போற்றிய இந்திய நிலம் இப்பொழுதுள்ள நிலை என்ன?

டாக்டர் ஐயக்கர் கூறுவதுபோல சகல தேசங்களுக்கும் பின்னால் பரமதரித்திரமான "பாப்பராக" நிற்பதும், சமீபத்தில் வந்துபோன ஆங்கில விஞ்ஞான பண்டிதர் ஹில் என்பவர் கூறுவதுபோல இந்திய மகாஜனங்கள் 40 கோடியில் 20 கோடிப் பேர் போதுமான உணவில்லாமலும் அநேகர் பட்டினியாகவும் மிருகங்களிலும் கேவலமாக இருப்பதுமே நமது நிலைமை.

ஏழு வருஷ காலமாக இந்தியாவில் ஆட்சிபுரிந்துவிட்டு இப்பொழுது இங்கிலாந்து சென்றுள்ள லின்லித்கோ பிரபு அங்கே ஜனங்கள் பெருகாமல் ஜனன விகிதம் குறைந்து வருவது கண்டு வருந்தி அதை நிவர்த்திப்பதற்கான மார்க்கங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்து வருகிறார்.

ஆனால் நமக்கோ மக்கட்பேறு-புத்திர பாக்கியம் அதில் யாதொரு குறையுமில்லை. நமது ஜனத்தொகை வருஷத்துக்கு 50 லட்சமாகப் பெருகி வருகிறது. 1931-ம் வருஷத்தில் 35 கோடியாக இருந்தது. இப்பொழுது 40 கோடியாக ஏறி நிற்கிறது.

இவ்விதம் மக்கட் பயிர் இந்தியாவில் நாளுக்கு நாள் செழித்தோங்கி வருகிறதே, அது ஒரு விசேஷமான காரியம்தான்! ஆனால் இப்படி அமோகமாகப் பிறக்கும் குழந்தைகளுக்குப் பால் வேண்டுமே, அது மட்டுமில்லை. இங்கிலீஷ் குழந்தைகள் குடிக்கும் பாலில் எட்டில் ஒரு பங்கு கூடக் கிடைப்பதில்லை.

உணவு விஷயமோ—ஜனங்கள் பெருகுகின்றனர்; சாகுபடியாகும் நிலம் பெருகக் காணோம். விளைவும் குறைந்தே வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு அரிசியின் சராசரி விளைவு :—

1931ல் 909 ராத்தல்
1936ல் 872 ,,
1940ல் 684 ,,

ஆனால் இதர தேசங்களிலோ—

| | | |
|---|---|---|
| அரிசி | இந்தியாவில் | 731 ராத்தல் |
| | ஜப்பானில் | 2357 ,, |
| | எகிப்தில் | 2879 ,, |
| சர்க்கரை | இந்தியாவில் | 10 டன் |
| | ஜாவாவில் | 40 டன் |
| பருத்தி | இந்தியாவில் | 98 ராத்தல் |
| | ஜப்பானில் | 350 ,, |
| | எகிப்தில் | 450 ,, |

நமது தேசத்தின் தலை எழுத்து இதுதான் என்று வாரந்தோறும் திரும்பத் திரும்ப வாசித்துக் கொண்டிருந்த அமரி துரை கூட

"இந்தியாவில் ஒவ்வொருவர்க்கும் சராசரியாகக் கிடைக்கக் கூடிய உணவு சென்ற 30 வருஷ காலத்தில் ஒன்றுக்கு முக்காலாகக் குறைந்துவிட்டது" என்று கூறுகிருர்.

உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு

என்பது நமது வள்ளுவர் வாக்கு. அவ்விதமின்றி இப்பொழுது நமது ஜனங்கள் எப்பொழுதும் பசியால் வாடி வதங்கி வருவதால் உலகில் என்ன என்ன பிணிகள் உண்டோ அவைகள் எல்லாம் இங்கு வந்து சாஸ்வதமாகக் குடியேறிவிட்டன.

அமெரிக்க அரசாங்கம் அனுப்பிய டாக்டர் கிரான்ட் என்பவர் "ஆண்டு தோறும் இந்தியாவில் மலேரியாவினுல் இறப்பவர் 15 லட்சம்—காலராவினுல் இறப்பவர் 1 லட்சம்—வைசூரியினுல் இறப்பவர் ½ லட்சம்; ஆனுல் நாங்கள் ஆண்டுவரும் பிலிப்பைன் தீவில் இந்த மூன்று நோய்களாலும் இறப்பவர் கிடையவே கிடையார்" என்று கூறும்பொழுது நம்முடைய மனம் என்ன பாடு படுகின்றது? ஆமாம், பிலிப்பைன் தீவினர் அமெரிக்கருடைய ஆட்சியில் 50 வருஷ காலத்தில் அடைந்த "துர் அதிர்ஷ்டம்" அது!

இப்படி நோய்கள் பெருகி வருவதைத் தடுக்கவோ குணப்படுத்தவோ வைத்தியர்கள் உண்டா? இங்கிலாந்தில் ஜனத்தொகையில் ஆயிரத்துக்கு ஒரு வைத்தியர் இருக்க இந்த புண்ய பூமியில் பதினுயிரத்துக்கு ஒருவரே உளர். அதனுல்தான் சமீபத்தில் பெஷாவரில் நோயாளியாய் சர்க்கார் ஆஸ்பத்திரியில் இருந்து நேரில் அனுபவித்து அறிந்த நிக்கோலஸ் என்னும் அமெரிக்க நிருபர்,

"ஆஹா! இந்தியாவா? அதுதானே நோய்க் கிருமிகளின் சொர்க்க லோகம்!"

என்று லண்டனிலுள்ள ஸண்டே கிராணிக்கள் பத்திரிகைக்குத் தந்தி அடித்தார். என்னே நம்முடைய அதிர்ஷ்டம்!

இந்தியாவில் நோய் அதிகமாவதற்கு முக்கிய காரணம் பசியே என்று எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். அத்துடன் நோய்க்கு சிகிச்சை செய்ய வசதியுமில்லை. அதனால் குழந்தைகள் பிறந்து ஒரு வருஷ மாவதற்குள் ஆயிரத்தில் 66 மட்டும் இங்கிலாந்தில் இறக்க, இங்கே 274 இறக்கின்றன. ஆதலால் சராசரி வயது இங்கிலாந்தில் 62. இந்தியாவில் 26.

நமது பொருட் செல்வ நிலைமைதான் இப்படி என்றால் கல்விச் செல்வ நிலைமை எப்படி? நூறு வருஷங்கட்கு முன் சர்க்கார் பாடசாலைகள் கிடையா, நமது சுதேச பாடசாலைகளே இருந்தன. அப்பொழுது

" ஜனத்தொகையில் ஆயிரம் பேர்க்கு ஒரு பாடசாலை, ஆனால் இப்பொழுது அதுவுமில்லை "

என்று சென்னையில் பிஷப்பாக இருந்த டாக்டர் ஒயிட்ஹெட் கூறுகிறார். அக்காலத்தில் இந்தியாவிலிருந்த பாடசாலைகள் போன்ற பாடசாலைகள் இங்கிலாந்தில் கிடையா என்று சர்க்கார் ரிப்போர்ட் தயாரித்த ஆதம் துரை கூறுகிறார்.

இப்பொழுதோ ஜனங்களில் நூற்றுக்கு 90 பேர் நிரட்சரகுட்சியாய்விட்டார்கள். ஆனால் இந்த எழுத்து வாசனையின்மை 50 வருஷ அமெரிக்க ஆட்சியின் பயனாய் பிலிப்பைன் தீவில் 98 சதமானத்திலிருந்து 45 சதமானத்துக்கும் 20 வருஷ ஸோவியத் ஆட்சியின் பயனாய் ரஷ்யாவில் 73 சதமானத்திலிருந்து 8 சதமானத்துக்கும் குறைந்திருக்கிறது.

இப்படி பசி—பிணி—கல்வியின்மை நாளுக்கு நாள் பெருகி வருவதன் காரணம் என்ன?

சுமார் 60 வருஷங்கட்கு முன் ஆங்கில நாட்டிலிருந்த ஜான் ப்ரைட் என்னும் அறிஞர் பார்லிமெண்டு சபையில்

"இந்தியதேசம் நீர்வளம் நிலவளம் நிறைந்தது. இந்திய மகாஜனங்கள் அறிவும் ஊக்கமும் உடையவர். அப்படியிருந்தும் அந்த தேசம் இப்படிக் கேவலமாயிருப்பதன் காரணம் யாது?"

என்று கேட்டுவிட்டு அதற்கு அவரே

"அந்த நாட்டில் நடைபெறும் அரசாங்க முறையேதான் காரணம்" என்று விடையும் பகர்ந்தார்.

"ஆமாம், நமது கேவலமான நிலைமைக்கு மூல காரணம் நாம் 200 வருஷங்களாக சுதந்திரமிழந்து ஆங்கிலேயர்க்கு அடிமைகளாய்விட்டதே என்பதில் சந்தேகமில்லை. இதை இக்காலத்தில் மறுப்பார் யாருமிலர்.

இந்த உண்மையை உணர்ந்தே 60 வருஷங்கட்கு முன்னர் நமது பெரியார்கள் காங்கிரஸ் மகாசபையை நிறுவினார்கள். அது நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரவே 1906ம் வருஷத்தில் காங்கிரஸ் மகா சபையில் தலைமை பூண்ட நமது தாதாபாய் நௌரோஜி

"ஸ்வராஜ்யமே நமது தேவை"

என்று சுதந்திரக் கொடியை உயர்த்தினர். அடுத்த வருஷம் நமது பால கங்காதர திலக மகரிஷி

"ஸ்வராஜ்யம் நமது பிறப்புரிமை;
அதை அடைந்தே தீருவோம்"

என்று தேசம் முழுவதும் சங்க நாதம் முழக்கினர்.

அதன்பின் மகாத்மா காந்தியடிகள் வந்து காங்கிரஸ் மகாசபையை நாடெங்கும் பரவுமாறு செய்து, ஜயமின்றித் தோல்வியறியாத சத்தியாக்ரகம் என்னும் சுதந்திர சாதனத்தை அளித்து, புத்துயிரும் புதுபலமும்

கொடுத்து நாட்டில் தனிப்பெரும் அரசியல் ஸ்தாபனமாக ஆக்கினார். அதன்பின், காங்கிரஸ் மகா சபையானது

பரிபூரண சுதந்திரமே லட்சியம்,
அஹிம்சையே சாதனம்

என்று உலகம் முழுவதும் அறியும்படியாகப் பறை சாற்றியது.

1935ம் வருஷம் பிரிட்டிஷ் சர்க்கார் மாகாண சுயாட்சி தருவதாகச் சொல்லி ஒரு அரசியல் சட்டம் இயற்றினார்கள். காங்கிரஸ் மகாசபை அதை ஏற்று நடத்துவதா வேண்டாமா என்று ஆலோசித்தது. நம்முடைய அடிமைத் தளையை அதிகமாக இறுக்குவதற்காக ஆங்கிலேயர் செய்யும் சூழ்ச்சியோ என்று சிலர் சந்தேகப்பட்டார்கள். அப்பொழுது காந்தியடிகள் சங்கிலியை இறுக்கும் சுத்தியலைக் கொண்டே சங்கிலியை உடைத்தெறியவும் செய்யலாம் அல்லவா? என்று கூறினார். அதன்மேல் காங்கிரஸ் கமிட்டியார் பதவி ஏற்பதென்று தீர்மானித்தார்கள். ஆனால் கவர்னர்களுக்கு விசேஷ அதிகாரம் இருக்கிறதே என் செய்வது என்று தயங்கினார்கள். அப்பொழுது ராஜாஜி முன்வந்து கவர்னர்களின் நச்சுப் பற்களுக்குக் கவசமிட்டு விஷம் கக்காதவாறு செய்தார். கவர்னர்கள் தினசரி நடவடிக்கைகளில் குறுக்கிடுவதில்லை என்று வாக்களித்தார்கள். அதன்மேல் மூன்று மாகாணங்கள் தவிர எட்டு மாகாணங்களில் மந்திரிசபை அமைத்து இங்கிலீஷ் விரோதிகள்கூடப் புகழும்படி வெகு திறமையாக ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வந்தது.

# போர்

இப்படி யிருக்கையில் ஐரோப்பாவில் கீழ்புறம் ஸோவியத் ரஷ்யாவும் மேல்புறம் ஜெர்மனியும் பலத்தைத் திரட்டிவந்தன. பிரிட்டன் ஹிட்லர் செய்வதை வெறுத்தாலும், அதை ஏன் என்று கேட்க பயந்து, அவரைச் சமாதானப்படுத்திக் கொண்டே வந்தது. ஆனால் எவ்வளவு தூரம் சமாதானப்படுத்தினாலும் ஹிட்லர் தம் கருத்திலேயே கண்ணுயிருந்தபடியால் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் செய்த முயற்சிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராய்விட்டன.

ஆகவே 1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று, ஹிட்லர் யாதொரு முன்னெச்சரிக்கையுமின்றி போலந்து தேசத்தைக் கைப்பற்றுமாறு தமது துருப்புகளை அனுப்பினார். உடனே சேம்பர்லேன் ஜெர்மன் துருப்புகளை வாபீஸ் வாங்காவிட்டால் போர் மூளும்' என்று எச்சரிக்கை செய்தார். ஆனால் அது ஹிட்லர் காதில் விழவில்லை. அதனால் செப்டம்பர் மாதம் 3ம்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு சேம்பர்லேன் ஜெர்மனியோடு போர் ஆரம்பம் என்று ரேடியோ மூலம் உலகத்துக்கு அறிவித்தார்.

இப்படி உண்டான யுத்தத்தில் நமக்குள்ள சம்பந்தம் யாது? இந்திய சர்க்கார் போர் வரலாம் என்று முன் கூட்டியே எண்ணி ஆகஸ்டு மாதத்திலேயே தம் வசமுள்ள துருப்புக்களை மலேயாவுக்கும் எகிப்துக்கும் அனுப்பிவைத்தார்கள். ஆனால் அப்படிச் செய்யும்

பொழுது ஜனநாயக முறையை அனுஷ்டிப்பதாகக் கூறும் அவர்கள் மத்ய சட்டசபைகளைக் கலந்துகொள்ள வேண்டும் அல்லவா? வேண்டும்தான், ஆனால் அப்படிச் செய்யவில்லை.

அது போலவே போர் என்று சேம்பர்லேன் கூறி வாய் மூடுமுன் வைஸிராயும் "ஆம், இந்தியாவும் ஜெர்மனியுடன் போர்தான்" என்று பிரகடனம் செய்து விட்டார். அவர் மத்ய சட்டசபைகளையும் கலந்து கொள்ளவில்லை. மாகாணங்களிலிருந்த மந்திரிகளையும் கலந்து கொள்ளவில்லை.

அது மட்டுமா? பிரிட்டன் தாய்—கானடா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலியன குழந்தைகள். தாய்க்குப் போர் என்றால் குழந்தைகளுக்கும் போராகும். ஆனால் அந்த நாடுகள் எல்லாம் நம்முடைய வைஸிராயைப் போல் அவசரப்படவே இல்லை. சட்ட சபைகளுடன் கலந்து கொண்டு ஐந்தாறு நாட்களுக்குப் பின்னரே போரில் இறங்கின. அயர்லாந்து அப்படியும் செய்யாமல் "நடு நிலைமை" என்றே கூறி விட்டது.

ஜனப்பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளாமல் சண்டையில் சேர்ந்ததன் கருத்து யாது? ஜனப்பிரதிநிதிகளில் முக்கியமானவர்கள் காங்கிரஸ் மந்திரிகள், அவர்களிடம் சர்க்காருக்கு நம்பிக்கை இல்லையா? அல்லது அவர்களை லட்சியம் செய்ய வேண்டியதில்லை என்று எண்ணி விட்டார்களா?

எந்தக் காரணமானலும் வைஸிராய் செய்தது தவறு. காங்கிரஸ் மகா சபை பல வருஷங்களாகவே ஹிட்லர் முஸலோனி இருவர்களுடைய கொள்கைகளையும் அறவே வெறுத்து வந்திருப்பது நாடறிந்த விஷயம். அதனல் வைஸிராய் போர் என்று கூறுமுன் காங்கிரஸைக் கலந்திருந்தால் எதேச்சாதிகாரம் என்ற பழிச்சொல்லும்

உண்டாயிராது, இந்திய மகா ஜனங்களின் பேராதரவும் கிடைத்திருக்கும்.

ஆனாலும் மகாத்மா காந்தியடிகள் வைஸிராயிடம் தம்முடைய ஆத்மீக ஆதரவைத் தெரிவித்துக் கொண்டார். ஆனால் பண்டித நேரு,

"ஜனநாயகத்துக்கும் பாஸிஸத்துக்கும் உண்டாயுள்ள போரில் நாம் ஜனநாயகத்தை ஆதரிக்க வேண்டியதே நியாயமாகும். ஆனால் ஜனநாயகம் என்று வாயளவில் கூறினால் போதாது, அநுஷ்டானத்திலும் காட்ட வேண்டும்." என்று அறிக்கை வெளியிட்டார்.

அதுபோலவே செப்டம்பர் மாதம் 14ம் தேதி வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியாரும்,

"நாங்கள் நாஜிஸத்தை 1933ம் வருஷம் முதற் கொண்டே கண்டித்து வருகிறோம். ஆயினும் இங்கிலாந்துடன் ஒத்துழைக்க வேண்டுமானால் யுத்தத்தின் லட்சியங்களை முன் கூட்டி அறிய விரும்புகிறோம். உண்மையான ஒத்துழைப்பு என்பது சம அந்தஸ்து உடையவர்களிடையேதான் உண்டாக முடியும். இதனால் சர்க்கார் பூரண சுதந்திர உரிமையை ஒப்புக்கொண்டு, யுத்த காலத்தில் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு அதிகாரத்தை இந்தியர் கைக்கு மாற்றிக் கொடுக்க வேண்டும்" என்று கூறினார்கள்.

காந்தியடிகள் யாதொரு நிபந்தனையும் கூறாமல் பிரிட்டனுக்கு ஆதரவு அளிக்க முன் வந்திருக்க, காரியக்கமிட்டியார் நிபந்தனை கூறியதன் காரணம் என்ன? சென்ற மகா யுத்தத்தின் அனுபவம் தான் என்று சர்தார் படேலும் பண்டித நேருவும் கூறினார்கள். அந்த யுத்தத்தின்போது இந்திய மகா ஜனங்கள் 12 லட்சம் துருப்புக்கள் அனுப்பி வைத்தார்கள். பணமும் சாமான்களும் அள்ளி அள்ளி அளித்தார்கள். அசௌக்யமாயிருந்தும் கூட மகாத்மா

காந்தியடிகள் யுத்த லட்சியம் என்ன என்று கேளாமலே தாமாக ஊர் ஊராகச் சென்று யுத்தத்துக்குப் படை திரட்டிக் கொடுத்தார். ஆனால் அந்த உதவிக்கு எல்லாம் அடைந்த பலன் யாது? யுத்தம் முடிந்ததும் அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று வாயினிக்கப் பேசினார்கள். ஆனால் யுத்தம் முடிந்த பின்னர்,

"காது குளிரப் பேசுவதும் நெஞ்சு கசக்கச்செய்வதுவே நமது முறை" என்று முன்னால் வைஸிராயாயிருந்த லிட்டன் பிரபு கூறினாரே, அந்தப் பழைய பிரிட்டிஷ் தர்மத்தையே அனுஷ்டிக்கலானார்கள். போரில் செய்த உதவிக்குப் பரிசாக ரௌலட் சட்டம், ராணுவ ஆட்சி, ஜாலியன்வாலா அக்கிரமம், அடக்கு முறை அநீதிகள் முதலியனவே கிடைத்தன. இவைகள் எல்லாம் ஞாபகத்தில் பதிந்திருந்த படியினால் தான் நமது தலைவர்கள்—

ஜனங்களைக் கலவாமல் தேசத்தின் தலையில் சண்டையைத் தூக்கி வைத்து விட்டீர்கள், ஆயினும் உங்கட்கு உதவி செய்யத்தயார், ஆனால் இந்த யுத்தத்தின் லட்சியம் என்ன, அதைக் கூறுங்கள் முதலில்—என்று கூறினார்கள்.

அதனால் மகாத்மா காந்தியடிகள் செப்டம்பர் மாதம் 26ம் தேதி வைஸிராயைப் பேட்டி கண்டு—யுத்த லட்சியங்கள் எவை, இந்தியா உயிர் கொடுத்தால் அடையும் லாபம் என்ன—என்று கேட்டார். சுதந்திரத்துக்காக யுத்தம் புரிவதாகக் கூறுகிறீர்களே, அந்தச் சுதந்திரம் இந்தியாவுக்கும் உண்டா, அப்படி உண்டானால் தானே இந்திய மகா ஜனங்கள் இந்த யுத்தத்தில் மனப்பூர்வமாக இறங்குவார்கள் என்று வைஸிராய்க்கு விளக்கிக் கூறினார்.

அதற்கு மறுநாள், அப்பொழுது இந்தியா மந்திரியாயிருந்த ஜெட்லண்டு பிரபு பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில்

—நீங்கள் கேட்பது சரிதான், ஆனால் அப்படிக் கேட்பதற்கு இதுவா சமயம்?—என்று கூறினர்.

அதற்கு காந்தியடிகள்—அப்படிக் கேட்பதிலுள்ள தவறு என்ன? யுத்தம் முடிந்ததும் சுதந்திரம் கிடைக்கும் என்று நிச்சயமாய் அறிந்தால் தானே நாங்கள் ஜனங்களை இதில் சேருமாறு உற்சாகப்படுத்த முடியும்—என்று பதில் கூறினர்.

# காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா

அதன்பின் வைஸிராய் சமஸ்தானாதிபதிகளில் சிலரையும் கட்சித் தலைவர்களில் 52 பேர்களையும் அழைத்து அரசியல் நிலைமையைக் குறித்து ஆலோசித்தார்.

ஆனால் மலை கிள்ளி எலி பிடித்த மாதிரியாக 1939ம் வருஷம் அக்டோபர் மாதம் 17ம் தேதி ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டார். அதன் சாரமாவது :—

(1) இந்தியா டொமினியன் அந்தஸ்து பெறுவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் லட்சியம்.

(2) போர் முடிந்ததும் 1935ம் வருஷத்து அரசியல் சட்டத்தில் கண்ட சமஷ்டிப் பகுதியில் செய்ய வேண்டிய மாறுதல்களைக் குறித்து சர்க்கார் சகல கட்சியாரையும் கலந்து கொள்வார்கள்.

(3) அதுவரை வைஸிராய் தமக்கு உதவியாக முக்கியமான கட்சிகளிலிருந்து சில பிரமுகர்களைச் சேர்த்து ஒரு ஆலோசனை சபை அமைத்துக்கொள்வார்.

இந்திய மகா ஜனங்களுடைய விருப்பம் எங்கே? இந்த அறிக்கை அளிப்பதாகக் கூறும் அரசியல் அமைப்பு எங்கே? காங்கிரஸ் மகா சபை பூரண சுதந்திரமே கேட்கிறது. அதோடு வைஸிராய் கூறும் டொமினியன் அந்தஸ்து என்பதின் லட்சணம் யாது? அந்த அந்தஸ்தும் இந்தியாவுக்கு அளிக்கப்படும் தேதி என்ன?

அதுதான் எங்கள் லட்சியம், அதுதான் எங்கள் விருப்பம் என்று சர்க்கார் கூறினால் மட்டும் போதுமா? "ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குப் பின் நிறைவேற்ற

எண்ணும் உறுதி மொழிகளைக் கூறுவதால் என்ன பயன்?" என்று முன்னால் இந்தியா மந்திரியாயிருந்த மாண்டேகு துரை கேட்டது ஞாபகத்துக்கு வருகிறது.

சரி, அது போகட்டும், பல கட்சியாரையும் கலந்து கொள்வார்களாமே, அந்தப் பல கட்சியார் யார்? அவர்களில் சர்க்காருக்குத் துணை நிற்பவர் சமஸ்தானாதிபதிகளும் பிரிட்டிஷ் வியாபாரிகளும் ஆவர். "சமஸ்தானாதிபதிகள் இந்தக் காலத்தில் இருக்க வேண்டாத இடைக் காலச் சின்னங்கள்—பிரிட்டிஷ் வியாபாரிகள் இந்திய நாட்டின் பரம விரோதிகள்" என்று நேரு கூறினார். நம்முடைய தலை விதியை நிர்ணயிக்க இவர்களுக்கு உரிமை ஏது?

ஆகவே போர் முடிந்ததும் இந்தியாவுக்குக் கிடைப்பது இது என்று விளங்கவில்லை. அதற்கு ஒத்ததாக அதுவரை அமைக்கப்படுவது வெறும் ஆலோசனை சபை மட்டுமே. இதுவா காங்கிரஸ் மகா சபை கோரிய யுத்த லட்சிய விளக்கம்? ஆதலால் காந்தியடிகள்—"வைஸிராயின் அறிக்கை மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. இதை வெளியிட்டதை விட வெளியிடாமலே இருந்திருக்கலாம்" —என்று கூறினார். அதில் சந்தேகம் என்ன? பிரிட்டிஷ் சர்க்கார் இந்த யுத்தத்தை நடத்துவதின் உண்மையான நோக்கம் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றவே என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது. சுதந்திரத்துக்கான போர்—ஜனநாயகத்துக்கான சண்டை என்பதெல்லாம் வெறும் ஜால வார்த்தைகளாய் விட்டன. தேசத்தின் சகல பாகங்களிலிருந்தும் கண்டனங்கள் வெளி வந்தன.

காங்கிரஸ் காரியக்கமிட்டியார் வைஸிராயின் அறிக்கையை நன்ருய்ப் பரிசீலனை செய்து—

முற்றிலும் அதிருப்தி அளிப்பது. பழைய சாம்ராஜ்யக்கொள்கையையே கூறுவது. எங்களுக்குள் வித்யாசங்

கள் இருக்கலாம், அவற்றை நீங்கள் கவனிக்க வேண்டிய தில்லை. சுதந்திரம் அளிக்கப் பிரியமா பிரியமில்லையா. அதை மட்டும் கூறுங்கள். பிரியமில்லையானால் எங்களால் உங்களோடு ஒத்துழைக்க முடியாது. அதற்கு முதற்படியாக காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்வார்கள்—என்று கூறினார்கள்.

இப்பொழுதும் காங்கிரஸ் கமிட்டியார் கடுமையான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல், அரசாங்கம் இன்னும் தர்மத்தை உணராதா என்று எதிர்பார்த்தார்கள். அதனால் ஏழு மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரிகளின் ராஜிநாமா மட்டும் நடைபெற்றது. உடனே சர்க்கார் கவர்னர்களுடைய எதேச்சாதிகார ஆட்சி நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டார்கள்.

காங்கிரஸ் மந்திரி சபைகள் போய் கவர்னர்களுடைய ஆட்சி ஏற்படவே, வைஸிராய் 1939 நவம்பர் 11ம் தேதி காந்தியடிகளையும் காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பாவுவையும் ஜின்னாசாகேபையும் ஒன்று சேர்த்து ஆலோசிப்பதற்காக அழைத்தார். அப்படியே மூவரும் அவருடைய மாளிகைக்குச் சென்றார்கள். ஆலோசனையும் நடந்தது. ஆனால் அரசியல் வானத்தில் அணுவளவும் வெளிச்சம் உண்டாகவில்லை.

ஆயினும் வைஸிராய் சர்க்காருடைய யோசனைகளை விளக்கி காங்கிரஸ் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதற்கு காங்கிரஸ் தலைவர் எழுதிய பதிலின் சாரம் வருமாறு:—

"அரசாங்கத்தின் யுத்த லட்சியம் யாது? இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்கச் சம்மதமா? அதைப்பற்றி ஒன்றுமே கூறக்காணோம். அத்துடன் வகுப்புப் பிரச்னையை அனாவசியமாக இழுத்துக் குழப்புகிறீர்கள். அதற்கும் சுதந்திரப் பிரகடனத்துக்கும் யாதொரு சம்பந்த

மும் கிடையாது. நீங்கள் தலையிட்டால் அது எளிதில் தீரவும் செய்யாது. அதை நாங்கள் தீர்த்துக்கொள்வோம். அரசியல் நிர்ணய சபையை சகல கட்சியாரும் சம்மதிக்கும் முறையில் அமைத்து அதில் சிறுபான்மைக் கட்சியார்க் கெல்லாம் அவர்களுக்குத் திருப்தி உண்டாகுமளவு பரிபூரணமாக பாதுகாப்பு அளிக்கப்படும் என்று நாங்கள் தெளிவுபடுத்தி விட்டோம்.''

இவ்விதம் காங்கிரஸ் தலைவர் சிறுபான்மை வகுப்பார்க்கெல்லாம் பாதுகாப்பு அமைப்பதே காங்கிரஸின் நோக்கம் என்று தெளிவாகவும் அழுத்தமாகவும் கூறிய பின்னரும் இந்தியா மந்திரி ஜெட்லண்டு பிரபு பார்லிமெண்டு சபையில் மறுபடியும் - ஐயோ! இந்தியர்க்குள் எத்தனையோ வேற்றுமைகள் உளவே. அதுவல்லவோ அதிகாரத்தை அவர்களுக்கு அளிப்பதற்குத் தடையாக உள்ளது - என்று கூறினர்.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பதற்கு இதுவரை, போதுமான பாதுகாப்பில்லை, போதுமான ராணுவபலமில்லை, போதுமான அரசியல் ஞானமில்லை என்று எத்தனையோ பல காரணங்களைக் கூறிவந்தார்கள். ஆனால் இப்பொழுது அவைகளை எல்லாம் விட்டுவிட்டு இறுதியாக "வகுப்பு வேற்றுமை" என்னும் காரணத்தைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

# வகுப்பு வேற்றுமை

வகுப்பு வேற்றுமை என்பது நமது நாட்டில் தானுக முளைத்ததன்று. அந்த முட்டுக்கட்டை - சுய ராஜ்யத்தடை அரசாங்கத்தாராலேயே தங்களுடைய பிரித்தாளும் ராஜதந்திர முறைப்படி சிருஷ்டிக்கப்பட்ட தாகும். 1906-ம் வருஷத்தில் தாதாபாய் சுயராஜ்யமே நமது லட்சியம் என்று கூறினர் அல்லவா? அவ்வளவுதான் சர்க்கார் உடனே பயந்துவிட்டார்கள். காங்கிரஸின் பலத்தைக் குறைப்பதற்கான வழியைப்பற்றி ஆலோசித் தார்கள். அப்போது வைஸிராயாயிருந்த மிண்டோபிரபு வின் மனைவியார் எழுதியுள்ளது போல முஸ்லிம் பிர முகர்கள் வைஸிராயிடம் தூதுசெல்ல ஒரு "சூழ்ச்சி" செய்யப்பட்டது. அந்தச் சூழ்ச்சியைச் செய்துமுடித்த அரசாங்க உத்யோகஸ்தர் - "இன்று ஒரு மகத்தான ராஜதந்திர காரியம் சாதிக்கப்பட்டிருக்கிறது; இந்திய தேசத்தின் சரித்திரம் எவ்வளவோ மாறிப்போகும். ஆறு கோடி மக்களை ராஜத்துரோக இயக்கத்தில் சேராதபடி தடுத்துவிட்டோம்" என்று மிண்டோ பிரபுவுக்கு தம் முடைய சாமர்த்தியத்தையும் சந்தோஷத்தையும் தெரிவித் துக்கொண்டார். அப்படியே முஸ்லிம் பிரமுகர்கள் ஆகாகான் தலைமையில் வைஸிராயிடம் சென்று,

முஸ்லிம்களைத் "தனிவகுப்பாக" எண்ணவேண்டும் என்றும் அவர்களுக்கு அவர்களின் ஜனத்தொகையை எண் ணுமல் அவர்களுடைய அரசியல் முக்கியத்துவத்தையும்

சேவையையும் எண்ணி விசேஷசலுகைகள் அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கு வைஸிராய் மிண்டோ பிரபு "அதுவேதான் என்னுடைய அபிப்பிராயம்" என்று கூறி 1909-ம் வருஷத்தில் தயாரித்த அரசியல் சட்டத்தில் "தனித்தொகுதி முறை"யைச் சேர்த்தார். அப்பொழுது இந்தியா மந்திரியாயிருந்த மார்லி பிரபுவுக்கு இது பிடிக்கவில்லை. இது வேண்டாம், இதனுல் அனர்த்தமே விளையும் என்று பன்முறை வைஸிராயிடம் சொன்னுர். ஆயினும் ஏகாதிபத்திய ரத்தமே இறுதியில் வெற்றிபெற்றுவிட்டது. அன்றுமுதல் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தப் பூதத்தைக் காட்டி சுதந்திரம் கொடாமல் ஏமாற்றிவருகிறுர்கள்.

அப்படி மிண்டோ பிரபு சிருஷ்டித்த "வகுப்பு வேற்றுமை" முதலில் ஹிந்து முஸ்லிமோடு நின்று, பின்னுல் வந்தவர்களின் முயற்சியால் 1935-ம் வருஷத்து அரசியல் சட்டத்தில் ஒரு டஜனுக்கு அதிகமாக பல்கிவிட்டது. அடுத்த முறை அரசியல் சட்டம் வகுக்கும்பொழுது அது இன்னும் எத்தனை குட்டிகளுடன் தோன்றுமோ தெரியாது.

ஜெட்லண்டு பிரபு இன்னுமொன்று கூறினுர். ஒரு தேசம் மற்ருெரு தேசத்தைச் சுரண்டுமானுல் அதுதான் ஏகாதிபத்தியக் கொள்கை என்று ஏகாதிபத்தியக்கொள்கைக்கு லட்சணம் வகுத்தார். அவர் வகுத்தது சரிதான். அதுதான் அதன் லட்சணம், அம்மட்டில் அவருக்கு வந்தனம் செலுத்த வேண்டியதுதான்.

ஆனுல் அந்தக் கொள்கை பிரிட்டிஷாரிடம் கிடையாதாம் - அப்படியே ஒருவேளை எந்தக் காலத்திலாவது இருந்திருந்தாலும் அது 1919-ம் வருஷத்து அரசியல் சட்டம் வகுத்த தினத்திலேயே அடியோடு ஒழிந்து விட்டதாம்.

அப்படி யானால் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவில் இருந்து கொண்டிருப்பது நாம் ஒருவரை யொருவர் கழுத்தைத் திருகாமல் பார்த்துக் கொள்வதற்காகத்தானே? அந்த வேலையும் பார்த்துப் பார்த்து அவர்கள் அலுத்துப் போய் விட்டார்களோ? நமக்கு அணுவளவேனும் இரக்கமிருந்தால் அவர்கள் பாரத்தை இறக்கவிடாமல் தடை செய்துகொண்டிருக்கலாமா?

காங்கிரஸ் மகாசபை அதிகாரத்தை ஜனங்களிடம் தரும்படி கூறுகிறது. அரசாங்கமோ - எங்களுக்கு எதற்கு அதிகாரம்? ஆனால் உங்களுக்குள் ஒற்றுமை உண்டாகிவிட்டதா? - என்று கேட்கிறது.

இப்படித் திரும்பத் திரும்ப இதே பல்லவியைப் பாடுவதைக்கேட்டு, காங்கிரஸ் காரியக் கமிட்டியார் அலகாபாத்தில் கூடி ஆலோசித்து -

நீங்கள் கூறுவதைக் கேட்டால் கோபமே வருகிறது. நாங்களும் அஹிம்சாப் போர்க்குத் தயார்தான். ஆனால் சத்யாக்ரகி அவசரப்படக் கூடாது. அதனால் நீங்கள் எங்களைத் தள்ளிக் கதவைத் தாழிட்டாலும் நாங்கள் இனியும் சமாதானத்துக்கே முயல்வோம் - என்று சர்வ சாந்தமாகக் கூறினார்கள்.

ஆனால் காங்கிரஸ் கமிட்டியார் இப்படி மறுபடியும் மறுபடியும் சமாதானமான ஒரு ஏற்பாட்டை அமைக்க அரும்பாடுபட நியாய முண்டோ? அவர்கள் பிரிட்டிஷாரின் யுத்த லட்சியம் யாது என்று கேட்ட கேள்விக்குப் பதில் கூற விரும்பியதுபோல நவம்பர்மாதம் 26-ம்தேதி பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன்,

"எங்கள் யுத்தலட்சியம் எதிரியைத் தோல்வியுறச் செய்வது - எங்கள் சமாதான லட்சியம் புதியதோர் ஐரோப்பாவை அமைப்பது"

என்று ஸ்பஷ்டமாக ரேடியோவில் பிரசங்கித்தார்.

ஆகவே போருக்குப் பின் ஏற்படும் புது உலகில் ஐரோப்பா சேருமேயன்றி ஆப்பிரிக்காவோ ஆசியாவோ சேராது என்பதும் உலகமுழுவதிலும் ஜனநாயகத்தை யும் சுதந்திரத்தையும் ஏற்படுத்துவதற்காகவே போர் நடத்தப்படுகிறது என்று கூறிவருவது வெறும் வேஷமே என்பதும் தெளிவாகிவிட்டன.

இப்படிப் பிரிட்டிஷ் பிரதம மந்திரி கூறிய பிறகும் இங்குள்ளவர்கள் புதிய சகாப்தக் கனவுகாண நியாயம் உண்டோ? ஆனல் நன்மை செய்வதே மனித குணத்தின் பிரதான அம்சம் என்பதும் தவறு செய்வதை எடுத்துக் காட்டி நல்வழிப்படுத்துவதே நமது கடமை என்பதும் மகாத்மா காந்தியடிகளின் அசையாத நம்பிக்கை. அத ஞல்தான் அவர் சேம்பர்லேன் துரை கன்னத்தில் அறைந் ததுபோல் கூறிய பின்னரும் -

'பிரிட்டிஷார் நம்மை அவர்களுடன் ஒத்துழைக்க முடியாதபடிதான் செய்து வருகிருர்கள். ஆயினும், நாம் அவர்களுடைய யுத்த முயற்சிக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படுத்தலாகாது'—என்று நவம்பர் மாதம் 3-ம் தேதி ஹரிஜன் பத்திரிகையில் எழுதுகிருர்.

அது மட்டுமா? அவர் டிஸம்பர் 2-ந் தேதி "பிரிட்டன் சண்டையில் மாட்டிக் கொண்டிருக்கிறது, அந்தச் சமய மல்லவா சட்ட மறுப்பு ஆரம்பிக்க வேண்டும் என்று சிலர் எண்ணுகிருர்கள். ஆனல் அது தவறு. பிரிட்ட னுக்கு இடைஞ்சல் செய்யும் நோக்கத்தோடு ஒருநாளும் சட்டமறுப்பு ஆரம்பிக்கக் கூடாது" என்றும் கூறினர்.

இதுவல்லவா மகாத்மாக்களின் லட்சணம்? ஜாலி யன்வாலா அக்கிரமத்தைக் கண்டு மனம் பொருமல் அல்லவோ 1919-ல் சத்தியாக்கிரகக் கொடியை முதன் முதலாக உயர்த்தினர். அன்றுமுதல் அரசாங்கம் செய்து வரும் அநீதிகள் எத்தனை? அவற்றை எல்லாம் மறந்து

விட்டு போர் என்றதும் வைஸிராயிடம் சென்று தம்முடைய முழு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

அதன்பின் வைஸிராயிடம் பலமுறை சென்று யுத்த முயற்சியை விளக்கும்படி கேட்டார். வைஸிராய் சற்றும் அசையவில்லை. அதோடு பிரிட்டிஷ் மந்திரி இப்பொழுது எங்கள் நோக்கம் பூரண ஜனநாயக முறையை எங்கள் ஐரோப்பாக் கண்டத்தில் ஏற்படுத்துவது ஒன்றே என்று கூறிவிட்டார். ஆனால் இப்படி இந்திய மக்களின் அபிலாஷைகளில் தண்ணீரை அள்ளி இறைத்துவிட்ட இச்சமயத்திலும் காந்தியடிகள் பொறுமையா யிருங்கள் என்று போதித்தார்.

இராவணன் முதல்நாள் போரில் தோற்று நிலம் விரல் கிளைத்திட நின்ற சமயம் இராமபிரான் அவன் வெறுங் கையோடு நிற்கின்றான், கொன்று விடுவோம் என்று எண்ணாமல்,

அறந்தினு லன்றி அமரர்க்கும்
அருஞ் சமம் கடத்தல்
மறத்தினுல் அரிது என்பது
மனத்திடை வலித்துக் கொண்டு

இராவணனுடைய தனிமை கண்டிரங்கி அவனை நோக்கி,

உன் சேனைகள் எல்லாம்
பூளையாயின கண்டனை,
இன்று போய்ப் போர்க்கு
நாளைவா என நல்கினன்.

அன்று அவ்விதமாக எதிரியின் கஷ்ட சமயத்தை உபயோகித்துக் கொள்ள விரும்பவில்லை கோசல நாடுடைய வள்ளல். அதுபோலவே இன்று நமது பாரத

நாடுடைய வள்ளலும் பிரிட்டிஷாரின் கஷ்டத்தை உப யோகித்துக் கொள்ள விரும்பாத சாந்தமூர்த்தியாய் விளங்குகிறார்.

ஆனால் பிரிட்டிஷார் நீரிலும் நெருப்புப் பிறக்கச் செய்யும் நோக்கம் உடையவர்கள் போலவே நடந்து கொண்டார்கள். இந்தியா மந்திரி ஜெட்லண்டு பிரபு மறுபடியும் டிஸம்பர் 15-ம் தேதி பார்லிமெண்டு சபையில் தமது கர்ண கடூரமான பழைய பல்லவியையே பாட ஆரம்பித்து விட்டார். ஐயோ! உங்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்து விட நாங்கள் எப்பொழுது எப்பொழுது என்று காத்துக் கொண்டிருந்தாலும் நீங்கள் உங்களுக்குள் வகுப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள மாட்டோம் என்று பிடிவாதம் செய்கிறீர்களே என்று கூறினார். ஆகா! அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிடுவதில் எவ்வளவு ஆவல்! எவ்வளவு ஆத்திரம்! நாம் பிரிந்து நிற்பதைக்கண்டு அவர்களுக்கு எவ்வளவு பரிவு! எவ்வளவு பரிதாபம்!

இவருடைய பேச்சு இந்தியத் தாயின் புண்ணில் கோலிட்டதுபோல் ஆயிற்று. இதைப் பரிசீலனை செய்ய காங்கிரஸ் காரியக் கமிட்டியார் வார்தாவில் டிஸம்பர் 22-ம் தேதி கூடினார்கள். தீர்க்கமாக ஆலோசித்துச் செய்த முடிவின் சாரம் வருமாறு:—

(1) அன்னிய ஆட்சி நீங்கினால்தான் சாஸ்வதமான ஒற்றுமை உண்டாகும்.

(2) வகுப்பு ஒற்றுமை உண்டாக்க அரசியல் நிர்ணய சபை ஒன்றுதான் வழி.

(3) சிறுபான்மையோர்க்கு திருப்தி உண்டாகுமளவு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அதில் ஏதேனும் தகராறு ஏற்பட்டால் பட்சபாதமற்ற மத்தியஸ்தத்துக்கு விடவேண்டும்.

(4) ஆனால் சுதந்திரம் என்பது கஷ்டப்பட்டே அடையக்கூடிய உரிமையாகும்.

(5) அத்துடன் நமது சாதனம் அஹிம்சை ; நமது போர்முறை சத்யாக்ரகம் என்பதை மறக்கக் கூடாது.

(6) ஆதலால் சத்யாக்ரகப் போர்முரசு கொட்ட நேரிட்டால் அப்பொழுது போரில் இறங்கத் தயாராக இருப்பதற்காக நிர்மாணத் திட்டத்தில் முனைந்து நிற்க வேண்டும்.

ஆகவே காங்கிரஸ் கமிட்டியார்க்கு ஜெட்லண்டு பிரபுவின் "வேற்றுமை"ப் பிரசங்கம் கண்டு பெருங் கோபம் உண்டாயிற்று என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அவர்கள் அதற்காக ஆத்திரப்பட்டு எதுவும் செய்ய விரும்பாமல் சமாதானத்தையே நாடி நின்றார்கள். அப்படிச் சமாதானத்தை நாடி நின்றாலும், பிரிட்டனுக்கு சுயராஜ்யம் தேடித் தந்த ஆலிவர் கிராம்வெல்,

"கடவுளை நம்புங்கள், வெற்றி தருவார், ஆயினும் வெடி மருந்துகளை நனைந்து போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்"

என்று தம் படைகளுக்குக் கூறினாரே, அதையே தாங்களும் கடைப்பிடிக்க எண்ணி,

"சமாதானத்துக்கு முயல்வோம், ஆயினும் சத்யாக்ரகத்துக்குத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள்"

என்று தேசத்துக்கு உபதேசம் செய்தார்கள்.

பிரிட்டிஷார் இந்தியா சுதந்தரம் அடைய முடியாத படி வகுப்பு வேற்றுமை, வகுப்பு வேற்றுமை என்று முட்டுக்கட்டை போட்டு வருகிறார்களே, அந்த முட்டுக் கட்டையைச் சீவித் திருத்தித் தயாரித்தவர்கள் அவர்களே தாம் என்பதை முன்னால் கண்டோம்.

# முஸ்லிம் லீக்

ஆயினும் அந்த முட்டுக்கட்டையை உபயோகிப்பதற்கு அனுகூலமாக நிற்பவர் முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னு சாகேப் ஆவார். அவர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராய் இருந்தவர். அந்தக் காலத்தில் அரசியலில் "மத வேற்றுமை"களைக் கலப்பது அடாது என்று அழுத்தமாகக் கண்டித்தவர். அதனுல் மௌலானு மகமது அலியை "மௌலானு" என்று அழைக்க மாட்டேன், "மிஸ்டர்" என்றுதான் அழைப்பேன் என்றுகூடக் கூறியவர். அவ்வளவு தூரம் தேசீய உணர்ச்சி ததும்பிய அந்த ஜின்னு சாகேப் இப்பொழுது நம்முடைய தேசத்தின் துர்அதிர்ஷ்டத்தால் வகுப்புவாத சிரோன்மணியாக ஆயிருக்கிருர்.

அவர் 1934-ம் வருஷத்தில் முஸ்லிம் லீகிலிருந்து தேசீயத்தை விலக்கி, தனி வகுப்பு ஸ்தாபனமாகச் செய்து அதற்குப் பலம் தேட ஆரம்பித்தார். ஆனுல் முஸ்லிம்கள் அவருக்கு ஆதரவு அளிக்க முன்வரவில்லை. முஸ்லிம்களுக்கென்று தனித் தொகுதி ஏற்பட்டிருந்துங்கூட, முஸ்லிம்களில் 4 சதமானவர்களே, முஸ்லிம் லீக் அபேட்சகர்களுக்கு 1937-ல் நடந்த சட்டசபைத் தேர்தலில் வோட்டுச் செய்தார்கள். அந்தத் தேர்தலில் காங்கிரஸ்காரர்களுக்கே அமோகமான வெற்றி கிடைத்தது. அவர்களே எட்டு மாகாணங்களில் மந்திரி சபைகள் அமைத்தார்கள். அதைக் கண்டு அரசாங்கம் பயந்துவிட்டதோ என்னவோ, அன்றுமுதல் முஸ்லிம் லீகுக்கு அதிகமான ஆதரவு

அளிக்க ஆரம்பித்தது. அரசாங்க ஆதரவுள்ள எந்த ஸ்தாபனமும் அதிசீக்கிரத்தில் பலமும் செல்வாக்கும் பெற்றுவிடும் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

ஆதலால் வைஸிராயும் காங்கிரஸ் கமிட்டியாரும் அரசியல் விஷயமாகப் பேசும்போதெல்லாம் ஜின்ஞ சாகேப் என்னுடைய நிபந்தனைப்படியன்றி எவ்வித அதிகார மாற்றத்துக்கும் சம்மதிக்க மாட்டேன் என்று முட்டுக்கட்டை போட்டு வந்தார்.

இப்போது 1939 டிஸம்பர் 15ம் தேதி ஜெட்லண்டு பிரபு செய்த பிரசங்கத்தைக் கண்டித்து காங்கிரஸ் கமிட்டியார் 22-ந்தேதி சத்யாக்ரகப் போர்க்குத் தகுதியுடையவர்களாக ஆகும்படி தேசத்துக்கு வேண்டுகோள் விட்டனரே, அந்தச் சமயம் ஜின்ஞ சாகேப் என்ன செய்தார்?

காங்கிரஸ் கமிட்டியார் சுதந்திரம் கொடுப்பதாகச் சொல்லுங்கள், அதிகாரத்தை மாற்ற ஏற்பாடு செய்யுங்கள், நாங்கள் ஒன்றுபட்டு விடுவோம், உங்கட்கு வேண்டிய உதவியும் செய்வோம்—என்று கூறினர்கள்.

அதுபோல் சொன்ஞரா ஜின்ஞ சாகேப்? அவரும் அதுபோல் சொல்லியிருக்கக் கூடாதா? அதுபோல் சொல்லவேண்டாம், சும்மாவாவது இருக்கக்கூடாதா? அவர் என்ன செய்தார் தெரியுமா?

ஜனப்பிரதிநிதிகளிடம் கேளாமல் தேசத்தின் தலையில் சண்டையைத் தூக்கி வைத்துவிட்டதைக் கண்டிப்பதற்காக காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமாச் செய்தார்கள் அல்லவா? அதை உடனே ஜின்ஞ சாகேப் தமக்குக் கிடைத்த வெற்றியாக எண்ணிக்கொண்டு, டிஸம்பர் 22ம் தேதியை "விடுதலை" தினமாகக் கொண்டாடுமாறு தமது முஸ்லீம் லீகர்களுக்கு உத்தரவிட்டார்.

விடுதலை தினம் என்றால் எல்லா தேசங்களும் கொண்டாடிவரும் தேசவிடுதலை தினமா? தேசம் இன்னும் விடுதலை அடையவில்லையே, விடுதலை தினம் கொண்டாடுவது எப்படி? அல்லது பிரிட்டிஷ் சர்க்கார் முஸ்லிம்களிடமாவது அதிகாரத்தை மாற்றிக் கொடுத்துவிட்டார்களா? இவை எல்லாம் ஒன்றுமில்லை. காங்கிரஸ் மந்திரிகள் முஸ்லிம்களை இம்சித்து வந்தார்களாம், இப்பொழுது அந்தக் கொடுங்கோன்மையிலிருந்து அவர்கள் விடுதலை பெற்றுவிட்டார்களாம்.

ஆனால் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் — "காங்கிரஸ் மந்திரி சபைகள் முஸ்லிம்களுக்கு அநீதி செய்தார்கள் என்பது ஒரு பொய் மலையே யாகும்." என்று கூறினார்.

அப்படி அநீதிகள் செய்திருந்தால் அவைகளை எடுத்துக் கூறுங்கள் என்று கேட்டார்.

மந்திரிகள் முஸ்லிம்களுக்கு அநீதி செய்தால் அவைகளைத் தடுப்பதற்காக கவர்னர்களுக்கு விசேஷ அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதே, அந்த அதிகாரத்தை எந்த கவர்னரும் ஒரு தடவைகூட உபயோகிக்கவில்லையே, அதன் பொருள் என்ன? சிறு பிழை நேர்ந்தாலும் அதைப் பெரிதாக்கி இந்தியர்க்கு அரசாளத் தெரியாது என்று பறை சாற்றக் காத்துக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் கவர்னர்கள் காங்கிரஸ் மந்திரிகள் முஸ்லிம்களுக்குத் தீமை செய்திருந்தால் சும்மா இருந்திருப்பார்களா?

இதெல்லாம் ஜின்னா சாகேப் காதில் விழவில்லை. அது எப்படி விழும்? உறங்குகிறவனை எழுப்பலாம், உறங்காமல் விழித்துக் கொண்டிருப்பவனை எழுப்புவது எப்படி? அவர் விடுதலை தினம் கொண்டாடியதோடு நிற்காமல் இன்னொன்று செய்தார். அது அதனிலும் அதிகமாக வருந்தத்தக்க பிற்போக்கான காரியமாகும்.

காங்கிரஸ் மந்திரி சபைகள் முஸ்லிம்களுக்கு இழைத்த அநீதிகளைப்பற்றி விசாரித்து முடிவு செய்வதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு ராயல் கமிஷனை அனுப்ப வேண்டும் என்று சர்க்காரிடம் வேண்டிக்கொண்டார்.

இதன் பொருள் யாது? சர்க்கார் தாங்களாகவே சாக்குப்போக்குச் சொல்லிக் காலங் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் காலங் கடத்துவதற்கு இவருடைய ராயல் கமிஷன் யோசனை நெருப்புக்கு நெய் வார்த்ததுபோல் இருக்கும்.

அதைவிட மோசமானது வேறொன்று—அப்படி ஜனப்பிரதிநிதிகள் அமைத்த மந்திரி சபைகள் செய்த காரியங்களை பிரிட்டிஷார் விசாரித்து முடிவு செய்வது என்பது இந்தியர்க்கு அரசாளத்தகுதி உண்டா இல்லையா என்பதை பிரிட்டிஷார்தாம் முடிவு செய்யவேண்டியவர்கள் என்பதாகும். அரசாளத் தெரியுமோ தெரியாதோ அவரவர்கள் வீட்டுக்கு அவரவர்களே அதிகாரிகள் என்னும் மனித தர்மநீதியை அரசாங்கத்தார் மறந்துவிடுவதுபோலவே இவரும் மறந்துவிட்டார்.

அதனால் காந்தியடிகளும் பண்டித நேருவும் இந்த இரண்டு யோசனைகளையும் விட்டு விடும்படியாக ஜின்னா சாகேபுக்கு எழுதினார்கள். ஆனால் அவர் அதைக் கேளாமல் விடுதலை தினத்தைக் கொண்டாடியே முடித்தார். விசாரணை செய்தால் காங்கிரஸ் மகாசபையே அதிக பலம் பெறும் என்பது சர்க்காருக்கு நன்றாய்த் தெரியும். அதனால் அவர்கள் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளாதிருந்து விட்டார்கள்.

# ராம்கார் காங்கிரஸ்

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் சர்க்காரைப் பார்த்து (1) உங்கள் யுத்த நோக்கத்தைத் தெளிவாகக் கூறுங்கள் (2) இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் அளிப்பதாக வாக்களியுங்கள் (3) யுத்த காலத்தில் சாத்தியமான அளவு அதிகாரத்தை ஜனப்பிரதிநிதிகள் கையில் கொடுங்கள் என்று கூறினார்கள்.

வைஸிராய் லின்லித்கோ பிரபு அவர்களைத் தம் வசப்படுத்த பலமுறை முயன்றும் வெற்றி காணவில்லை. வேற்றுமைப் பூதத்தைக் காட்டி மருட்டப் பார்த்ததும் பலிக்கவில்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டியார் இந்திய மகா ஜனங்களின் பிரதிநிதிகளாகையால் தங்கள் கோரிக்கையில் கொஞ்சமும் குறைத்துக்கொள்ள விரும்பவில்லை. இவ்விதம் அவர்கள் ஓரே உறுதியா யிருப்பதைக் கண்டதும் லின்லித்கோ பிரபு தாம் முன்னால் 17-10-39ல் வெளியிட்ட யோசனைகளை மாற்றி 10-1-40ல் பம்பாயில் ஓரியண்ட் கிளப்பில் செய்த பிரசங்கத்தில் புதிய யோசனை ஒன்று கூறினார்.

அந்த யோசனையின் சாரம் வருமாறு :—

(1) இந்தியா இஷ்டப்பட்டால் பிரிட்டனிடமிருந்து பிரிந்து கொள்ளக்கூடிய உரிமையோடு கூடிய பூரண டொமினியன் அந்தஸ்துபெற வேண்டும் என்பதே பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம்.

(2) டொமினியன் அந்தஸ்தை எவ்வளவு சீக்கிர மாகப் பெறச்செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகப் பெறச் செய்வதாக உறுதி கூறுகிறார்கள்.

(3) யுத்தம் முடிந்ததும் சகல கட்சியாருடைய சம்ம தத்துடன் 1935ம் வருஷத்து அரசியல் சட்டத்தில் கண்ட சமஷ்டித் திட்டத்தில் அவசியமான மாறுதல்கள் செய் வார்கள்.

(4) தற்சமயம் வைஸிராயின் நிர்வாக சபையில் அரசியல் கட்சிகளில் முக்கியமானவற்றின் தலைவர்களில் சிலரைச் சேர்த்துக் கொள்வார்கள்.

பிரியப்பட்டால் பிரிந்து கொள்ளலாம் என்று கூறுவ தால் பரிபூரண சுதந்திர லட்சியத்தை ஒப்புக்கொள்வதாக எண்ணலாம், அந்த மட்டுக்கும் விசேஷம்தான்.

ஆனால் அது எப்பொழுது சித்தியாகும்? அவசியத் துக்கு அதிகமாகக் காலதாமதம் செய்யமாட்டோம் என்று சர்க்கார் கூறுகிறார்கள். அந்த அவசியமான கால எல்லையை நிர்ணயம் செய்வது யார்? அந்த அவசியமான காலம் ஒரு வருஷமாகவும் இருக்கலாம், ஒரு யுகமாகவும் இருக்கலாம் அல்லவா? ஏன் ஒரு தேதியை இப்பொழுதே குறிப்பிட்டு விடக்கூடாது?

சகல கட்சியாரும் சம்மதிக்கவேண்டும் எவ்வித மாற் றமும் செய்வதற்கு என்று கூறுகிறார்களே, இதற்குமுன் எத்தனையோ அரசியல் சட்டங்களை இயற்றி யிருக்கிறார் களே, அவைகளை எல்லாம் சர்வகட்சி சம்மதம் பெற்றுத் தான் செய்தார்களோ? சமஷ்டி முறையைப்பற்றி கூறு கிறாரே, அதையேனும் எல்லாக் கட்சியாரும் ஏற்றுக் கொண்டார்களோ?

பரிபூரண ஒற்றுமை ஏற்படுகிற எந்த தேசத்திலும் சுதந்திரம் ஏற்பட்டதில்லையோ? சுதந்திரம்தான் ஒற்று

மைக்கு மார்க்கம் என்றல்லவோ உலக சரித்திரம் முழங்குகின்றது?

இவை நிற்க. இப்போது உடனே செய்யப்போகும் அரசியல் மாற்றம் யாது? வைஸிராயின் சட்டசபையில் சில தலைவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவதால் என்ன பிரயோஜனம் உண்டாகும்?

இந்த விதமாகப் பல ஆட்சேபணைகள் செய்யக் கூடியதா யிருந்தாலும் மகாத்மா காந்தியடிகள் "லின்லித்கோ பிரபு கூறும் யோசனையில் கௌரவமான ஒரு சமரஸத்துக்கு இடம் உண்டாகும்போல் தோன்றுகிறது" என்று கருதினார். அதுபோலவே அதைப் பரிசீலனை செய்வதற்காக வார்தாவில் கூடிய காரியக் கமிட்டியாரும் அபிப்பிராயப் பட்டார்கள். அதனால் அவர்கள் காந்தியடிகள் வைஸிராயிடம் சென்று அவருடைய யோசனையில் கண்ட சில அம்சங்களைத் தெளிவாகக் கேட்டு வர வேண்டுமென்று விரும்பினார்கள்.

அப்படியே காந்தியடிகள் வைஸிராயைப் பேட்டி கண்டு பேசினார். ஆனால் அதன் பயனாக ஒன்றும் உருப்படியாகாமல் போய்விட்டது. ஜனங்கள் எல்லோரும் சமரஸம் ஏற்பட்டுவிடலாம் என்று எதிர்பார்த்தது வெறுங்கனவாய் மறைந்துவிட்டது. வைஸிராய் யுத்த காலம்—வகுப்பு வேற்றுமை என்ற காரணங்களைக் கூறி, இதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லி முடித்து விட்டார்.

அதை ஒட்டியே இந்தியா மந்திரி ஜெட்லண்டு பிரபுவும் பார்லிமெண்டு சபையில் "காங்கிரஸ் சபை கண் முன்னால் உள்ளதை மறந்து கனவு லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அரசியல் அமைப்பைத் தயாரிக்கும் வேலையை இந்தியர்களிடம் விட்டுவிட்டால் அரை நொடியில் வேற்றுமைகள் எல்லாம் மறைந்துபோகும்

என்று கூறுகிறது. அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று கூறினர்.

அதன்மேல் காந்தியடிகள்—சர்க்கார் பரிபூரண சுதந்திரம் கொடுப்பதாகக் கூறுவது உண்மையானல் அந்தஸ்தைப் பற்றி முடிவு செய்வதை அரசியல் நிர்ணய சபையிடம் விட்டுவிட ஏன் தயங்கவேண்டும்? அவர்களுடைய தயக்கம் எதைக் காட்டுகிறது? அவர்களுக்கு அதிகாரத்தை விட்டுவிடப் பிரியமில்லை என்பதைத் தானே? அதை ஜெட்லண்டு பிரபுவும் உறுதிசெய்து விட்டார் அல்லவா? அதனால் இனியும் சர்க்காரிடம் உங்கள் யுத்த நோக்கம் என்ன என்று கேட்கவேண்டிய அவசியம் உண்டா?—என்று அறிக்கை வெளியிட்டார்.

காந்தியடிகள் வைஸிராயின் யோசனையைக் கண்டதும் சமரஸம் ஏற்பட்டுவிட ஏதுவுண்டு என்று சந்தோஷப்பட்டார். சட்டமறுப்பை ஆரம்பியாமல் சமரசத்துக்குப் போவானேன் என்று போஸ் முதலியவர்கள் கேட்ட பொழுது சத்யாக்ரகத்துக்கு என்ன அவசரம், சமரசத்துக்கு வழி உண்டா இல்லையா என்று பார்ப்போமே, சர்க்கார் சரிப்பட்டு வரலாம் என்ற நம்பிக்கை இன்னும் எனக்கு இருந்து வருகிறது—என்று கூறினர். வைஸிராயிடம் போய் வெறுங்கையோடு திரும்பி வந்தபொழுதும்... "நான் போன காரியம் தோல்விதான், ஆயினும் அதையே வெற்றிக்கு ஏறும் படியாக உபயோகித்துக் கொள்வேன்" என்று உரைத்தார்.

இவ்விதம் பிரிட்டிஷாரிடம் உறுதியான நம்பிக்கை வைத்திருந்த காந்தியடிகளுங்கூட இந்தியா மந்திரி ஜெட்லண்டு பிரபுவின் பிரசங்கத்தைக் கண்டு மனக் கொதிப்பு அடையலானர்.

இது இப்படி இருக்க அந்தச் சமயம் காங்கிரஸ் தலைவரான பாபு ராஜேந்திர பிரஸாத் காச நோயால்

கஷ்டப்பட்டபடியால் தம்முடைய பதவியினின்று விலக விரும்பினுர். தேசத்திலுள்ள காங்கிரஸ் பக்தர்கள் எல்லோரும் மௌலாஞ அபுல்கலாம் ஆஸாதே தலைவராக இருக்கவேண்டும் என்று ஆசைப் பட்டார்கள். அவர் முதலில் தயங்கிஞலும் எல்லோருடைய வேண்டுகோளை யும் மறுக்கமாட்டாமல் தேர்தலுக்கு அபேட்சகராக நின்று அமோகமான வோட்டுக்களால் நாட்டின் முடி சூடா மன்னர் பதவியைப் பெற்ருர். அவர் அன்று முதல் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடந்துகொண்ட மாதிரியும் காட்டிய திறமையும் இந்தச் சமயத்தில் அவரை விடச் சிறந்த தலைவர் கிடைத்திருக்க முடியாது என்று சான்று பகர்கின்றன.

அவருடைய தலைமையில் காங்கிரஸ் கமிட்டியார் பாட்ஞ நகரத்தில் 1-3-40ல் கூடி நிலைமையை நன்ருகப் பரிசீலனை செய்து ஒரு நீண்ட தெளிவான தீர்மானம் செய்தார்கள். அதன் சாரமாவது :—

(1) இந்தியரிடம் கேளாமல் இந்தியாவை யுத்தத்தில் இறக்கியது இந்திய மகா ஜனங்களுக்கு அவமானமாகும்.

(2) பிரிட்டிஷ் சர்க்காரின் கூற்றுக்கள் யுத்தம் நடைபெறுவது ஏகாதிபத்தியத்தைக் காப்பதற்காகவே என்று தெளிவுபடுத்தி விட்டன.

(3) அதஞல் காங்கிரஸ் மகாசபை இந்த யுத்தத்தில் கலந்துகொள்ள முடியாது.

(4) பரிபூரணமான சுதந்திரமே இந்தியாவின் லட்சியம்.

(5) இந்தியா சுதந்திரம் அடைய விரும்புவது இந்தியா முழுவதற்குமே ஆகும்.

(6) ஜனங்கள் தாம் அதை வகுக்கவேண்டும்.

(7) வகுப்பு வேற்றுமைகளைத் தீர்க்க அரசியல் நிர்ணய சபை தவிர வேறு வழி கிடையாது.

(8) சகல வகுப்பார்க்கும் திருப்தியான முறையில் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

(9) சமஸ்தானங்களும் அன்னியர் நலன்களும் ஜனங்களுடைய அரசுரிமையைப் பாதிக்கவிட முடியாது.

(10) சுதந்திர லட்சியத்தைப் பெறுவதற்காகவே காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்தன.

(11) காங்கிரஸ் ஸ்தாபனம் சட்டமறுப்பு செய்யத் தகுதி அடைந்ததும் அதை ஆரம்பிக்க வெண்டும்.

(12) ஆயினும் காந்தியடிகள் பரிபூரணமான கட்டுப்பாடு இருப்பதாகக் கண்ட பிறகே சட்ட மறுப்பை ஆரம்பிப்பார்.

(13) சட்டமறுப்பை ஆரம்பிக்க எண்ணுவது ஜனங்களிடம் தியாக புத்தியை எழுப்புவதற்காகவே.

இரண்டு வாரம் கழித்து ராம்காரில் காங்கிரஸ் மகா சபை கூடிற்று. அதில் பாட்னுவில் காரியக்கமிட்டியார் செய்த தீர்மானம் ஒன்றுதான் ஆலோசனை செய்யப்பட்டது.

பொதுவாக ஜனங்களிடம் பரபரப்பு அதிகமாக இருந்தது. காந்தியடிகளும் காரியக் கமிட்டியாரும் ஏழெட்டு மாதமாக இடைவிடாது முயன்றும் இங்கிலீஷ் சர்க்கார் இம்மியளவும் அசைந்து கொடுக்கவில்லையே, இன்னும் சர்க்காருடன் என்ன சமரஸம், இப்பொழுதேனும் சட்ட மறுப்புப் போர் ஆரம்பித்தால் என்ன என்று எங்கும் பேசலானுர்கள். பண்டித நேருவுங்கூட இனிமேல் காத்திருக்க முடியாது என்று முழங்கினுர்.

ஆனல் மகாத்மா காந்தியடிகள்—சட்ட மறுப்பு ஆரம்பிக்க வேண்டியது அவசியம்தான்; ஆனலும் அவசரப் படவேண்டாம், இன்னும் சமரஸத்துக்கு வழி உண்டா என்று பார்ப்போம்—என்று விஷயாலோசனைக் கமிட்டியில் கூறினுர்.

அதனால் காங்கிரஸ் மகாசபை உடனே சட்ட மறுப்பில் இறங்கவேண்டுமென்று தீர்மனியாமல் பாட்னா தீர்மானத்தையே ஏகமனதாக நிறைவேற்றிற்று.

தீர்மானம் சட்ட மறுப்பைப் பற்றிப் பிரஸ்தாபித்தாலும் அதை உடனே ஆரம்பிக்கவேண்டும் என்று கூறவில்லை. மகாத்மா காந்தியடிகளும் சட்ட மறுப்புக்கு நான் ஆத்திரப் படவில்லை, அது நடவாமல் தடுக்கவே ஆத்திரப்படுகிறேன் என்று தெளிவாகக் கூறினார்.

அப்படியிருந்தும் காங்கிரஸ் விரோதிகள் பிரிட்டன் போரில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சமயம்பார்த்து அதற்குத் தொல்லை கொடுக்கவே காங்கிரஸ் மகாசபை திட்டம் போட்டிருக்கிறது என்று பொய்யாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

அதைக் கண்டதும் காந்தியடிகள் காங்கிரஸ் இது வரை சர்க்காருக்கு எவ்வித தொல்லையும் கொடுக்கவில்லை, இனிமேலும் கொடுக்க விரும்பவில்லை என்று அறிக்கை வெளியிட்டார்.

ஆதலால் அவர் பிரிட்டனுக்குத் தொல்லை கொடாத முறையில் சட்ட மறுப்பு ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு காங்கிரஸ் கமிட்டிகளுக்கு உத்தரவிட்டார். அப்படியே 1940-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் சட்டமறுப்பு ஆரம்பிப்பதற்கான சகல சாத்வீக ஏற்பாடுகளும் நடைபெறலாயின.

# பூனக் கோரிக்கை

நாட்டில் சத்யாக்ரக இயக்கம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே சமயத்தில் ஹிட்லரின் சேனைகள் டென்மார்க், ஹாலந்து பெல்ஜியம் ஆகிய தேசங்களைக் கைப்பற்றி விட்டன. பிரிட்டனுடன் சேர்ந்திருந்த பிரான்ஸ் தேசம் ஹிட்லருக்குச் சரணடையும் தறுவாயில் இருந்தது. நார்வே தேசமும் ஜெர்மன் வசமாய்விட்டது.

ரஷ்யா ஜெர்மனியுடன் சேர்ந்து, பக்கத்திலிருந்த சிறு நாடுகளைத் தன் வசமாக்கிக் கொண்டிருந்தது. பிரிட்டன் ரஷ்யாவைத் தன் பக்கம் திருப்ப முயன்றது, அந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

ஜப்பான் சைனவைச் சரணடையச் செய்ய முயன்று கொண்டும், வெள்ளைக்கார தேசங்கள் ஆசியாவில் தலையிடக் கூடாது என்று எச்சரிக்கை செய்துகொண்டுமிருந்தது. பர்மா வழியாக எதுவும் சைனவுக்குக் கொண்டுபோக அனுமதிக்கக் கூடாது என்று பிரிட்டனுக்குத் தாக்கீது அனுப்பியது. பிரிட்டனும் ஆகட்டும், அப்படியே செய்கிறேன் என்று "பர்மா பாதை"யை மூடி விட்டது.

அமரிக்கா ஏதோ உதவி சிறிது சிறிதாக அனுப்பிக் கொண்டிருந்ததே யன்றி இன்னும் பிரிட்டனுடன் சேர்ந்து கொள்வதற்கான அறிகுறி ஒன்றும் தோன்றவில்லை.

ஆகவே 1940-ம் வருஷத்தின் மத்தியில் பிரிட்டன் தனியாக நின்றே போர்புரியும் அதிகக் கஷ்டமான நிலைமையில் இருந்துகொண் டிருந்தது.

அதனால் நமது தேசத்தில் அப்பொழுது எங்கும் பயபீதி உண்டாய்விட்டது. பிரிட்டன் நம்மைக் காப்பாற்ற முடியுமோ என்ற சந்தேகம் உதித்தது. அதுமட்டுமன்று; நம்மைக் காக்கா விட்டாலும் பாதகமில்லை, பிரிட்டனுக்குத் தோல்வி கிடைத்தால் போதும் என்ற எண்ணங் கூடத் தோன்றலாயிற்று. நம்மை அடிமையாக்கி வைத்திருக்கும் அரசாங்கத்துக்கு இது வேண்டியதுதான் என்ற சந்தோஷமும் தலைகாட்ட ஆரம்பித்தது.

ஆனால் இதைக் கண்டதும் பண்டித நேரு "அப்படியா, அது தவறு, நம்மை யாரேனும் தாக்கவந்தால் நாம் சும்மா யிருக்கக் கூடாது, எதிர்த்துத் துரத்தவேண்டும், அத்துடன் அச்சமயத்தில் ஆங்கிலேயர்க்கு எவ்வித ஹானியும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வதே நமக்குப் புகழ் தருவதாகும்" என்று இந்திய மகா ஜனங்கட்கு எச்சரிக்கை செய்தார்.

பிரிட்டனில் சேம்பர்லேன் பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகிக் கொண்டார். சர்ச்சில் முதல் மந்திரி ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு புதிய மந்திரி சபை அமைத்தார். யுத்தத்தைச் சரியாக நடத்துவதற்குப் போதுமான திறமை உள்ளவர் சர்ச்சில் ஒருவரே என்று உணர்ந்தே அந்த தேசத்தின் பிரதிநிதிகள் ராஜ்ய பாரத்தை அவருடைய கையில் ஒப்புவித்தார்கள்.

அவர் அமைத்த மந்திரி சபையில் அமரி என்பவர் இந்தியா மந்திரி பதவி பெற்றார். அவர் எப்பொழுதும் சர்ச்சிலுக்கு வலது கைபோல் இருந்து வருபவர். ஆயினும் 1935-ம் வருஷத்தில் இந்திய அரசியல் சட்டம் பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்ட சமயத்தில்—"கானடா

வுக்கும் தென் ஆப்பிரிக்காவும் காலாகாலத்தில் சுதந்திரம் அளித்தோமே, என்ன கேடு உண்டாயிற்று? அதுபோல் இந்தியாவுக்கும் அது மனம் கசந்து நம்மை வெறுக்கு முன்னரே சுதந்திரம் அளிப்பதே நல்லது. அதனுல் அபாயங்கள் வந்தாலும் வரலாம், ஆனுல் நாம் எந்தக் காலத்திலும் அபாயத்தை நீக்கிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உடையவர்கள அல்லரா?" என்று கூறினுர். அதனுல் இந்தியா மந்திரி அமரி என்றதும் சிலர் மனத்தில் திருப்தி உண்டானது இயற்கையே.

ஆனுல் அவர் பார்லிமெண்டில் இந்தியா விஷயமாகப் பேச ஆரம்பித்ததும் தம்முடைய சுய சொரூபத்தைக் காட்டலானுர். "அடிப்படையான விஷயங்களைக்குறித்து அபிப்பிராய பேதங்கள் உளவே. அப்படியிருக்க அதிகாரத்தை மாற்றுவது எப்படி?" என்று கேட்டார். ஆகவே ஆள்தான் மாறியதேயன்றி அபிப்பிராயமும் கொள்கையும் மாறவே இல்லை.

ஆயினும் காந்தியடிகள்—"பிரிட்டன் அழிய நாம் சுதந்திரம் பெற விரும்பவில்லை. சட்ட மறுப்பு ஆரம்பிப்பதற்கு பிரிட்டன் உயிருக்காகத் திண்டாடும் இந்தச் சமயம் ஏற்றதன்று" என்று 21-6-40 ஹரிஜன் பத்திரிகையில் எழுதினுர்.

காங்கிரஸ் கமிட்டியாரும் அதே தேதியில் வார்தாவில் கூடி நிலைமையைப் பரிசீலனை செய்தார்கள். இது வரை மகாத்மாகாந்தியடிகளின் போதனையை ஏற்று நாட்டில் எது செய்தாலும் அஹிம்சா முறையிலேயே செய்து வந்தார்கள். ஆனுல் இப்பொழுது சுயராஜ்ய இயக்கம் ஒன்றே அஹிம்சா முறையில் நடத்துவது; அயல் நாட்டுப் படை எடுப்பையும் உள்நாட்டுக் குழப்பங்களையும் எதிர்க்க ஹிம்சை முறையை உபயோகிப்பது என்று முடிவு செய்தார்கள். அந்த முடிவையொட்டி

காங்கிரஸ் வாதிகள் சர்க்கார் அமைத்துள்ள யுத்த சபைகளிலும் பாதுகாப்புப் படைகளிலும் சேரக்கூடாதாயினும் தனியாக பாதுகாப்புச் சங்கங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று யோசனை கூறினார்கள்.

மகாத்மா காந்தியடிகள் எந்தச் சமயத்திலும் அஹிம்சை முறையை விட்டு அணுவளவும் பிறழலாகாது என்று கண்டிப்பாய் கூறுகிறவர் அல்லவா? அதனால் அவர் காரியக் கமிட்டியாரிடமிருந்து பிரிந்து கொண்டார். ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டுந்தான் அவருக்கும் அவர்களுக்கும் வித்யாசம் ஏற்பட்டதேயன்றி இதர விஷயங்களில் எல்லாம் எவ்விதமான அபிப்பிராய வேற்றுமையும் உண்டாகவில்லை.

புதிய யுத்த நிலைமையில் புதிய யோசனை ஏதாவது உண்டா என்று அறியும்பொருட்டு காந்தியடிகள் 29-6-40-ல் வைஸிராயைப் பேட்டிக் கண்டார். அதன் விபரத்தை காரியக்கமிட்டியாரிடம் வந்து கூறினார். அவர்கள் அதைக் குறித்து 30 மணி நேரம் ஆலோசித்த பின் ஜுலை 7-ம் தேதியன்று ஒரு யோசனையை வெளியிட்டார்கள். அந்த யோசனையை ஜுலை 27-ம் தேதி புனாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியார் ஊர்ஜிதம் செய்தார்கள்.

அதுவே "காங்கிரஸின் புனா யோசனை" என்று பெயர் பெறும். அதன் சாராம்சமாவது :—

(1) அரசியல் பிரச்னை தீர்வதற்கு அரசாங்கம் பரிபூரண சுதந்திரம் அளிக்க ஒப்புக்கொள்வது ஒன்றே மார்க்கம்.

(2) அப்படி ஒப்புக்கொண்ட பின்னர், அதன் முதற்படியாக இப்பொழுதுள்ள மத்ய சட்டசபைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்கத்தினர்களுடைய நம்பிக்

கைக்குப் பாத்திரமான தேசீய சர்க்காரை அமைக்க வேண்டும்.

(3) இந்த இரண்டும் நடைபெறுமாஞல் காங்கிரஸ் மகாசபை தேசத்தின் பாதுகாப்பிற்கான சகல காரியங்களிலும் முழு மூச்சாக ஈடுபடும்.

ஆகவே யுத்தத்தில் இந்தியாவுக்கு நேரடியான சம்பந்தம் எதுவு மில்லாவிட்டாலும், பிரிட்டனுக்கு அபாயம் வந்துள்ள இந்தச் சமயத்தில் இந்தியா விலகி நிற்க விரும்பவில்லை. பிரிட்டனுடன் சேர்ந்து நாஜிஸத்தையும் பாஸிஸத்தையும் நசுக்கி அழித்துவிட ஆசைப்பட்டது. அதற்காக பாரத பூமிக்குப் புத்துயிர் அளித்த மகான் காந்தியடிகளேயுங்கூட விலக்கிவிட்டுவிடத் தயாராயிற்று. மத்திய சபைகளுக்குப் புதிய தேர்தல்கூட நடத்த வேண்டாம், இப்பொழுதுள்ள அங்கத்தினர்க்கு ஜவாப்தாரியான தேசீய மந்திரிசபை ஏற்படுத்திஞல் போதும் என்று தன்னுடைய கோரிக்கையை அதிகமாகக் குறைத்துக் கொள்ளவும் சம்மதித்தது.

பூரண சுதந்திரப் பிரகடனம் செய்யுங்கள்—தேசீய சர்க்கார் ஏற்படுத்துங்கள்—அப்பொழுதுதான் நாங்கள் ஜனங்களே இந்த யுத்தத்தில் முழு மனதுடன் சேரும்படி செய்ய முடியும்—ஜெர்மனி வந்துவிட்டது என்று பயமுறுத்துவதைவிட சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று உற்சாகப்படுத்துவதே சரியான மார்க்கம் என்று ராஜாஜி கூறிஞர்.

காங்கிரஸ் கமிட்டியார் தேசீய சர்க்கார் அமைத்தால் யுத்த முயற்சிகளில் கலந்துகொள்வதாகத் தீர்மானித்ததோடு அமையாது, அந்த யோசனையை ஜின்ஞ சாகேபும் ஏற்றுக்கெண்டால் நல்லதல்லவா, அப்பொழுதுதானே தேசீய சர்க்கார் அமைப்பதில் கஷ்டம் உண்டாகாது, சீக்கிரமாகத் தேசத்தைத் திரட்டலாம் என்றும் எண்ணி

னர்கள். அதனால் காங்கிரஸ் தலைவர் ஆஸாத் "தற்காலிக தேசீய சர்க்கார் அமைப்புக்கு சம்மதிக்கிறீர்களா?" என்று கேட்டு ஜின்னாவுக்கு ஒரு கடிதம் எழுதினர். ஆனால் ஜின்னா சாகேப்—அதை எழுதக்கூட வெட்கமாயிருக்கிறது. அவரைப் போன்ற தலைவர் ஒருவர், காங்கிரஸ் தலைவர்—மகா மேதாவி—முஸ்லிம் பண்டித சிரோன்மணி—சாந்த மூர்த்தி, அத்தகைய பெரியார்க்கு மிகக் கேவலமான வசை மொழிகள் நிறைந்த பதில் கடிதம் ஒன்று அனுப்பலாமா?

சரி, காங்கிரஸ் கமிட்டியார் தங்கள் யோசனையை வெளியிட்டார்களே, அப்பொழுது அவர்கள் அதை இவ்வளவு காலத்துக்குள் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கால எல்லை ஏற்படுத்தவில்லை. ஆயினும் ஆஸாத் "நாங்கள் அதிக காலம் காத்துக்கொண்டிருக்க முடியாது" என்று அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய்தார்.

பிரிட்டிஷ் நன்மைகளைப் பாதுகாப்பதற்காக பம்பாயில் நடந்துவரும் "டைம்ஸ் ஆப் இந்தியா" என்ற ஆங்கிலப் பத்திரிகையும்—"காங்கிரஸ் கூறிவிட்டது. காரியம் செய்யவேண்டியது கவர்ன்மெண்டைப் பொறுத்ததாகும். எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகச் செய்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. நாம் இதுவரை இந்தியா விஷயத்தில் எதுவும் காலங்கடந்தே செய்து வருகிறோம்." என்று பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஞாபகப் படுத்தியது.

ஜனங்கள் எல்லோரும் சர்க்கார் செய்யும் காரியத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

# சர்க்காரும் சத்தியாக்ரகமும்

"போர் மும்மரமாய்விட்டது. ஜெர்மன் நாஜி வெள்ளம் ஐரோப்பா முழுவதும் பரவிவிட்டது. இத்தாலிய பாஸிஸமும் அத்துடன் கலந்து அலைவீச ஆரம்பித்துவிட்டது. பிரிட்டன் மட்டும் தனித்து நின்று தத்தளிக்கிறது. என்ன வந்தாலும் பிரிட்டன் சமாளித்துக்கொள்ளும், ஆனாலும் அதற்கு இப்பொழுது இக்கட்டான நிலைமை. இந்தச் சமயம் நாம் அஹிம்சை என்று கூறி விலகி நிற்கக்கூடாது. அஹிம்சா தர்மம் மகாத்மாக்களுக்கே பொருந்தும். நாம் சாதாரண மனிதர்கள். அதனால் சுயராஜ்யப் போர்க்கு மட்டும் அஹிம்சையை வைத்துக்கொண்டு மற்றப் போர்க்கெல்லாம் ஹிம்சையைக் கையாளுவோம். ஆனால் ஜனங்கள் நாமாக இழுத்துக்கொண்ட போர் அல்லவே, நாம் ஏன் அதில் இறங்கி உயிர் கொடுக்கவேண்டும் என்று கேட்பார்கள். அதனால் பிரிட்டிஷார் இந்தப் போர் எங்களைக் காத்துக்கொள்வதற்காக மட்டும் அன்று, ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் காப்பதற்காகவும் ஆகும், அதனால் உங்கட்கு யுத்த முடிவில் பூரண சுதந்திரம் அளிக்கிறோம், அது உண்மை என்று நிரூபிக்க இதோ உங்கட்கு மத்ய சட்டசபைகளுக்கு ஜவாப்தாரியான தேசிய சர்க்கார் அமைத்து அதனிடம் அதிகாரத்தைத் தருகிறோம் என்று கூறட்டும். அப்படியானல் நாங்கள் அவர்களுக்காக உடல்பொருள் ஆவி யாவும் அளிக்கும்படி செய்ய முடியும். பிரிட்டிஷார் கருத்து யாது? சீக்கிரமாக கூறட்டும்"

என்று காங்கிரஸ் கமிட்டியார் புனு தீர்மானத்தின் மூலம் பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கூறினார்கள்.

இந்த யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொள்வார்கள் என்று இங்கிலாந்திலும் இந்தியாவிலும் அநேகர் எதிர் பார்த்தார்கள். ஆனால் அரசாங்கம் அளித்த பதில் யாது ?

வைஸிராய் லின்லித்கோ பிரபு 1940 ஆகஸ்டு 8-ம்தேதி ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டார். அதனால் அது "ஆகஸ்டு அறிக்கை" என்று பெயர் பெற்றிருக் கின்றது. அது வெளியிட்டு நான்கு வருஷங்கள் ஆகின் றன. ஆயினும் அதன் சாரத்தையேதான் அரசாங்கம் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு வருகிறது. அப்படி சர்க்கார் விடாப்பிடியாகப் பிடித்து நிற்கும் அந்த அற்புத யோசனைதான் என்ன ?

(1) யுத்தம் முடிந்தபின் எவ்வளவு சீக்கிரமாக இயலுமோ அவ்வளவு சீக்கிரமாக அரசாங்கம் இந்தியாவி லுள்ள முக்கியமான வருப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்டு இந்தியாவுக்கு வேண்டிய அரசியல் அமைப் பைத் தயாரிக்கும்படி செய்வார்கள்.

(2) இந்த நாட்டில் வேற்றுமைகள் மறையாது இருப்பது கண்டு வருந்துகிறார்கள். ஆயினும் பெரும் பான்மைக் கட்சியார் சிறுபான்மைக் கட்சியாரை அடக்க முயன்றால் அதற்குச் சிறிதும் இடங்கொடுக்கமாட்டார் கள்.

(3) இப்பொழுது யுத்த காலத்தில் பிரதிநிதித்வம் வாய்ந்த இந்தியர்களில் சிலர் வைஸிராயின் நிர்வாக சபை யில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். வைஸிராய்க்கு யுத்த விஷயமாக ஆலோசனை கூற ஒரு 'யுத்த ஆலோ சனை சபை'யும் அமைக்கப்படும்.

இதுதான் வைஸிராயின் பேர்போன யோசனை. இதற்கும் 1939 அக்டோபரில் கூறிய யோசனைக்கும் அதிக வித்தியாசம் கிடையாது.

யுத்த முடிவில் புதிய அரசியல் அமைப்பை அமைக்க வழி செய்வோம் என்கிறாரே, அதற்கான நிர்ணய சபை எப்படிப்பட்டதா யிருக்கும்? அந்த சபையும் யுத்தம் முடிந்து எவ்வளவு காலத்துக்குள் ஏற்படுத்தப்படும்? இவ்வளவு காலத்துக்குள் என்று ஏன் கூறக்கூடாது?

வேற்றுமைகள் கண்டு வருந்துகிறாராமே, அந்த வேற்றுமைகளைச் சிருஷ்டித்தது யார்? அவர்கள் சிருஷ்டிக்காவிட்டாலும் வேற்றுகள் இருந்தால் அவைகளை ஒழிக்க வழிதேட வேண்டியது அரசாங்கமே அல்லவோ? அவர்கள் நினைத்தால் அது முடியாத காரியமா? "அவர்கள் மட்டும் பூரண சுதந்திரம் அளிப்பதாகக் கூறட்டும், அடுத்த நிமிஷமே வேற்றுமைகள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்து போகும்" என்று காந்தியடிகள் கூறுவது உண்மையல்லவா?

சிறுபான்மைக் கட்சியாரை அடக்கவிடமாட்டோம் என்கிறாரே, சிறுபான்மைக் கட்சியாரை அடக்கவேண்டும் என்று கூறுபவர்கள் யார்? சிறுபான்மைக் கட்சியார்க்குத் திருப்தியான அளவு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றல்லவோ காங்கிரஸ் கமிட்டியாரும் காந்தியடிகளும் கூறிவருகிறார்கள்? அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்று நிற்கும் முஸ்லிம் லீகைத் தவிர மற்ற ஐந்து பெரிய முஸ்லிம் சபையார்களும் இதர கட்சியார்களும் அந்தக் காங்கிரஸின் யோசனையைப் பரிபூரணமாக ஏற்றுக்கொண்டு விட்டார்கள் அல்லவா? இதை எல்லாம் கண்டும் காணாததுபோல் சிறுபான்மைக் கட்சியார், சிறுபான்மைக் கட்சியார் என்று பாடுவதைப் பார்த்தால் ஏதேனும் ஒரு கட்சி சம்மதிக்கமாட்டேன் என்று கூறி

ஞலும் சரி, உடனே சுதந்திரம் கிடையாது போலிருக்கிறது அல்லவா? இப்படிச் சிறுபான்மைக் கட்சியார்க்கு முட்டுக்கட்டைபோடும் உரிமையைக் கொடுத்து பெரும்பான்மைக் கட்சியாரை அடக்கவிடுவது சரியா என்று நியூ ஸ்டேட்ஸ்மன் என்னும் லண்டன் பத்திரிகை கேட்பது நியாயம்தானே?

சரி, இவை எல்லாம் வருங்காலத்தைப் பற்றியவைகள். அவைகளைப் பற்றிப் பின்னுல் பார்த்துக்கொள்வோம். இப்பொழுது உடனடியாகச் செய்யப்போகும் காரியம் யாது?

வைஸிராய் தம்முடைய நிர்வாக சபையில் பிரதிநிதித்வம் வாய்ந்த சில இந்தியர்களைச் சேர்த்துக் கொள்வாராம். யுத்த ஆலோசனை சபை ஒன்று ஏற்படுத்துவாராம்.

'யுத்த ஆலோசனை சபை' மட்டும்தான் "ஆலோசனை" சபையோ? நிர்வாக சபையும் ஆலோசனை சபையன்றி வேறு என்ன? நிர்வாக சபை மெம்பர்கள் யாருடைய பிரதிநிதிகள்? ஜனங்கள் தேர்ந்தெடுக்காததால் ஜனங்களுடைய பிரதிநிதிகள் அல்லர்; சர்க்காருடைய பிரதிநிதிகளே ஆவர். அந்தப் பிரதிநிதிகள் யாருக்கு ஜவாப்தாரிகள்? அவர்களை நியமிக்கும் வைஸிராய்க்குத்தானே. அவர்களுடைய யோசனைப்படி வைஸிராய் நடப்பாரா? அப்படி அவர் நடக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனுல் அவர்கள் அவருடைய சொற்படியே நடக்கவேண்டும் என்ற கட்டாயம் உண்டு. இத்தகைய ஆலோசனை சபைகள் ஏற்படுத்தி எத்தனை ஆயிரம் இந்தியர்களைச் சேர்த்துக்கொண்டாலும் இந்திய மகாஜனங்களுக்கு என்ன நன்மை? இதைக் கேட்டு உற்சாகம் எள்ளளவேனும் உண்டாகுமோ?

இதுபோன்ற விஷயங்களை எல்லாம் எண்ணி மகாத்மா காந்தியடிகள்—"வைஸிராயின் அறிக்கை மன

துக்கு அதிகமான வருத்தத்தைத் தருகிறது. இந்தியர்களுடைய அபிலாஷைகளைக் கொஞ்சமும் எண்ணிப் பார்க்கவில்லை. இதுவா பிரிட்டன் நியாயத்துக்காகப் போர் செய்வதாகப் பறைசாற்றுவதன் கருத்து?" என்று கூறினர்.

காங்கிரஸ் கமிட்டியார் தமக்குக் கண்ணுக்குக் கண்ணுயுள்ள காந்தியடிகளையும் விட்டுப் பிரிந்து இருபது வருஷமாய்ப் போற்றிவந்த அஹிம்சா தர்மக் கொடியையும் சற்றுத் தாழ்த்திக்கொண்டு, பிரிட்டனுடைய கஷ்ட காலத்தில் உதவி செய்ய ஆத்திரப்பட்டதற்கு இதுவா பதில்? பண்டித நேருவுக்கு இதைச் சகிக்க முடியவில்லை.

"இனி என்ன யோசனை? காங்கிரஸ் போர் தொடுக்க வேண்டியதுதான். இனி மேலும் சமரசம் பேச முடியாது. இப்படித்தான் வகுப்புவாதிகள் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே இருப்பார்கள்" என்று கூறினர்.

வைஸிராய் ஆகஸ்டுமாதம் 8-ம்தேதி அறிக்கை வெளியிட்டார். இந்தியா மந்திரி 14-ம்தேதி அந்த அறிக்கைக்கு பார்லிமெண்டு சபையில் வியாக்கியானம் செய்தார்.

இந்தியாவில் பல வேற்றுமைகள் இருக்கும்பொழுது எப்படிப் பூரண சுதந்திரம் அளிப்பதாக கூறமுடியும்? மத்திய சட்டசபைக்கு ஜவாப்தாரியான நிர்வாகசபை ஏற்படுத்தும்படி கூறுகிறுர்களே, அப்படியானல் அரசியல் சட்டத்தையே மாற்றவேண்டுமே, அது எப்படி யுத்தத்தின் மத்தியில் சாத்தியமாகும்?—என்று கூறினர்.

வேற்றுமை—வேற்றுமை என்பது நாம் முன்னுலேயே கண்ட பழய விஷயம்தான். ஆயினும் இந்தச் சமயத்தில் ராஜாஜி, வேற்றுமை மறைந்தால் அடுத்த நிமிஷமே பூரண சுதந்திரம் வழங்குவதாகச் சர்க்கார் கூறுவது உண்மைதானு என்று பரிசோதிக்கும் பொருட்டு—

"தேசீய சர்க்கார் அமைப்பதாகக் கூறுங்கள். நான் காங்கிரஸ் கமிட்டியாரை முஸ்லிம் லீகே தேசீய சர்க்காரை அமைத்துத் தலைமை வகிப்பதற்குச் சம்மதிக்கும்படி செய்கிறேன். நீங்கள் கூறுவது உண்மையானால் நான் கூறுவதை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று சர்க்காருக்கு ஒரு ஸவால் விடுத்தார். ஆனால் அரசாங்கம் அதைக் குறித்து ஒன்றுமே சொல்லாமல் மௌனம் சாதித்து விட்டது. அதிலிருந்து அமரி முதலியவர்கள் கூறுவதெல்லாம் வெறும் சாக்குப்போக்கே என்று இந்திய மக்கள் எண்ணலானார்கள்.

யுத்தத்தின் நடுவில் சட்டத்தை மாற்ற முடியாது என்கிறாரே, பிரான்ஸ் தேசம் ஜெர்மனிக்குச் சரணாகதியடையும் சமயம் சர்ச்சில்துரை பிரான்ஸும் பிரிட்டனும் சேர்ந்து ஒரே ஐக்ய நாடாவதற்குப் புதிய சட்டம் இயற்றப் புறப்படவில்லையா? நமது தமிழ்நாட்டுத் தலைவர் ஸி. ஆர். கூறியதுபோல "அரசியல் அமைப்பெல்லாம் தோல்போல் மாற்றமுடியாத ஒன்றாயிராமல் உடைபோல் மாறிக்கொண்டே இருக்கக்கூடிய ஒன்றுதானே?" அது தவிர, ஒரு அமைப்பு தனக்கு உபயோகமில்லை என்று கண்ட மறு நிமிஷமே அதை மாற்றத் தயங்காத ஜாதி அல்லவா பிரிட்டிஷ் ஜாதி? அப்படியிருக்க இப்போதுமட்டும் சட்டத்தை மாற்றத் தயங்குவானேன்?

இந்தச் சமயத்தில் இந்திய அரசாங்கம் அதிகாரத்தில் அணுவளவும் விட்டுக்கொடுக்க விரும்பாததோடு நிற்காமல், யுத்தத்தில் சேர்ந்துள்ள விஷயத்தைப் பற்றியும் அதற்கு உதவி செய்யும் விஷயத்தைப் பற்றியும் காங்கிரஸ்காரர்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட முடியாத வண்ணம் சில உத்தரவுகளைப் பிறப்பித்தது.

ஆகவே காங்கிரஸ் காரியக் கமிட்டியார் அரசியல் நிலைமையைக் குறித்து ஆலோசிப்பதற்காக வார்தாவில்

ஆகஸ்டு மாதம் 22-ந்தேதி கூடினார்கள். அவர்கள் செய்த முடிவின் சாரம் வருமாறு :—

(1) காங்கிரஸ் கோரிக்கையை சர்க்கார் நிராகரித்து விட்டதிலிருந்து சர்க்காருக்கு அதிகாரத்தை விட்டு விலகப் பிரியமில்லை என்று தெளிவாகிறது.

(2) காங்கிரஸ் மைனாரிட்டிகளுக்குப் பரிபூரணமான பாதுகாப்பு அளிப்பதாகக் கூறியிருந்தும் மைனாரிட்டிகளை அடக்க முயல்வதாகக் கூறுவது வேற்றுமைகளை சர்க்கார் தான் சிருஷ்டிக்கிறார்கள் என்று, நாட்டில் பரவியுள்ள அபிப்பிராயத்தை ஊர்ஜிதப்படுத்துகிறது.

(3) காங்கிரஸ் இந்த இக்கட்டான சமயத்தில் சர்க்காருக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பாததை சர்க்கார் அலட்சியம் செய்வதோடு நிற்காமல், ஜனங்களின் கௌரவத்தையும் உரிமைகளையும் காக்கும் பொருட்டு ஒரு போர் துவக்கும்படியும் செய்து வருகிறார்கள்.

(4) அதன் பின் செப்டம்பர் 15-ம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் பம்பாயில் கூடி காரியக் கமிட்டியாருடைய தீர்மானத்தைப் பரிசீலனை செய்தபின் —சர்க்கார் இந்த யுத்தத்தைப் பற்றி யாதொரு அபிப்பிராயமும் கூறவொட்டாமல் தடுக்கிறார்கள் ; அவ்விதம் பேச்சு சுதந்திரத்தை இழப்பதானால் இந்திய மகா ஜனங்களின் அடிமைத் தளை ஒரு நாளும் அறுபடாது, அழிந்து போவார்கள். அதனால் அதற்காகப் போர் துவக்கும்படியான நிலைமையைச் சர்க்கார் ஏற்படுத்திவிட்டார்கள். ஆனால் காங்கிரஸுக்கு பிரிட்டிஷாரிடத்தில் மதிப்புளதேயன்றி வெறுப்புக் கிடையாது. அவர்களுக்குத் தொந்தரவு தரக்கூடாது என்ற எண்ணமே உண்டு. ஆதலால் அதற்கிணங்க நாட்டுக்கு வழி காட்டுமாறு மகாத்மா காந்தியடிகளைக் கேட்டுக்கொள்கிறோம்—என்று முடிவு செய்தார்கள்.

அதன் பின் காந்தியடிகள் அந்தக் கூட்டத்தில் "நாம் பிரிட்டனுக்குக் கேடு சூழவுமில்லை, அது தோற்கவேண்டும் என்று எண்ணவுமில்லை. அதற்குத் தொந்தரவு தரப் போவதுமில்லை. ஆனால் யுத்தத்தைப் பற்றி அபிப்பிராயம் கூறும் பேச்சு சுதந்திரத்தை நாம் இழந்துவிட முடியாது. அந்தச் சிறு சுதந்திரமும் போய்விட்டால் காங்கிரஸ் அழிந்துபோக வேண்டியதுதானே என்று உங்கள் தீர்மானத்துடன் சென்று வைஸிராயிடம் கேட்பேன். எதுவாயினும், சமூக சட்டமறுப்பு ஆரம்பிக்கப் போவதில்லை. ஆனால் எத்தகைய போர் என்பது குறித்து எனக்கு இன்னும் விளங்கவில்லை"—என்று விஷயத்தைத் தெளிவாக விளக்கினார்.

மகாத்மா காந்தியடிகள் கூறுவது உண்மைதானே. இந்தச் சிறு சுதந்திரத்தைக்கூட வற்புறுத்தாது இருந்துவிட்டால், இந்தியா தேசம் பிரிட்டிஷ் ஆட்சியே போதும் என்று திருப்தி அடைந்து விட்டதாக அல்லவா, உலகம் முழுவதும் நினைத்துவிடும்?

சர்க்கார் அதிகாரத்தை விட்டுக் கொடுக்கவுமாட்டார்கள், அதைப்பற்றி நம்முடைய அபிப்பிராயத்தைக் கூறச் சம்மதிக்கவுமாட்டார்கள், அப்படியானால் நாம் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்துவிடுவதா, பேச்சு சுதந்திரத்தை இழக்க முடியாது என்று உலகமெல்லாம் தெரியும்படி செய்ய வேண்டாமா—என்று ராஜாஜி கேட்டார்.

அதனால் காந்தியடிகள் வைஸிராயைக் கண்டு பேசினார். ஆனால் லின்லித்கோ பிரபு அவருடைய கோரிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டார். அது விபரத்தையும் அதன்மேல் தாம் ஆரம்பிக்க எண்ணும் போர் முறையையும் காந்தியடிகள் காங்கிரஸ் கமிட்டியாரிடம் கூறினார். அவர்கள் அவருடைய யோசனையை அங்கீகரித்து அவர் தெரிந்தெடுக்கும் சத்யாக்ரகிகளைத் தவிர வேறு யாரும் சத்யாக்ரகம் செய்யக் கூடாது என்று காங்கிரஸ்காரர்களுக்குக் கண்டிப்பாக உத்தரவிட்டார்கள்.

# சத்யாக்ரகம்

போரில் இந்தியாவை ஈடுபடுத்தியபொழுது நம்மைக் கலந்து கொள்ளவுமில்லை. அதுதான் போகட்டும், உங்கள் யுத்த லட்சியம் யாது என்று கேட்டதற்குச் சரியான விடை கூறவுமில்லை. நீங்கள் கஷ்டமான நிலைமையில் இருக்கிறீர்கள், உங்கட்கு உதவி செய்ய விரும்புகிறோம், அதற்காக அதிகாரத்தை எங்கட்கு அளியுங்கள் என்று கேட்டதற்குச் செவி சாய்க்கவுமில்லை. அதிகாரத்தை விட்டுக் கொடுக்க விரும்பாவிட்டால், அது பற்றி அபிப்பிராயத்தைக் கூற எங்களுக்குள்ள உரிமையைப் பிடுங்காதீர்கள் என்றதற்கு, அதுவும் மாட்டோம் என்று சர்க்கார் சாதித்துவிட்டார்கள். ஆதலால் காந்தியடிகள் சட்டமறுப்பு ஆரம்பிக்காமல் இருப்பதற்கில்லை.

ஆனால் பிரிட்டன் உயிருக்கு மன்றாடும் அபாய நிலைமையிலிருக்கும்பொழுது, அதற்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாதல்லவா? அதனால் காந்தியடிகள் தாம் சத்யாக்ரகம் செய்து கைதியாவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டதோடு தனிப்பட்டவர் சட்டமறுப்புக்கே ஏற்பாடு செய்தார்.

யாரும் அவரவர் நினைத்தவண்ணம் நினைத்த நேரம் நினைத்த இடத்தில் சத்யாக்ரகம் செய்யலாகாது; ஒவ்வொருவரும் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்; விண்ணப்பதாரர் தம்முடைய சத்யாக்ரக யோக்யதைகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே சத்யாக்ரகம் செய்யலாம். சர்க்காருக்கு விடுமுறையான நாட்களில் சத்யா

க்ரகம் செய்யலாகாது. அத்துடன் சத்யாக்ரகம் செய்யும் பொழுது அதனால் ஜனங்கட்கு எவ்வித இடைஞ்சலும் உண்டாகாமல் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். சேனைகள் வெடிமருந்து உள்ள இடங்களுக்குச் சமீபத்தில் செல்லலாகாது—இப்படிப் பல விதிகள் ஏற்படுத்தினர்.

சத்யாக்ரகம் செய்பவர்கள் எல்லோரும் ஒரேவித மான பிரசங்கமே செய்யவேண்டும், அதைச் செய்யுமுன் அது செய்ய உத்தேசிக்கும் இடத்தையும் காலத்தையும் குறித்து முன்கூட்டி ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு அறிவித்துவிட்டே செய்யவேண்டும். அந்தச் சமயம் எவ்விதமான ஆர்ப்பாட்டமும் நடைபெறலாகாது என்று உத்தரவிட்டார்.

ஒரு சமயம் லாகூரில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபொழுது—"இப்படிச் செய்தது தேசத்துக்குத் தீங்கு செய்ததாகும்; இந்த இயக்கம் சர்க்காருக்குக் கஷ்டம் கொடுப்பதற்காக ஏற்பட்டதன்று; தேசத்தின் மானத்தைக் காக்க தியாகம் செய்வதற்காகவே ஏற்பட்டதாகும். இதைச் சிறிதும் மறந்துவிடலாகாது"—என்று கண்டித்து எழுதினார்.

ஆகவே அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பிரகடனம் செய்த நான்கு சுதந்திரங்களில் ஒன்றாகிய பேச்சு சுதந்திரத்துக்காகவே இந்த சத்யாக்ரகம் நடைபெற்றது. அதுவும் சர்க்கார் கொள்கையைக் கண்டிப்பதற்காக நடைபெற்றாலும், யாருக்கும் இடைஞ்சல் இல்லாத விதத்தில், சாத்வீக விஷயம் நன்கு அறிந்த காங்கிரஸ்காரர்களால் மட்டுமே தனித்தனியாகச் செய்யப்பட்டது.

ஆயினும் அதற்குச் சர்க்கார் அளித்த பதில் யாது? பேச்சு சுதந்திரம் அளிக்கச் சம்மதித்தார்களா? இல்லை. அடக்கு முறையே அவர்கள் அளித்த பதில்.

காந்தியடிகளால் முதல் சத்தியாக்கிரகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விநோபா பாவே அக்டோபர் 17-ந் தேதி சத்யாக்ரகம் செய்து கைதியானார். அடுத்தவர் பண்டித நேரு அக்டோபர் 21-ந் தேதி கைதியாகி நான்கு வருஷத் தண்டனையடைந்தார். இதைக் கேட்டதும் ஒரு பார்லிமெண்டு மெம்பர் "நான்கு வருஷமா! இதென்ன காட்டுமிராண்டித்தனமான தண்டனை!" என்று கூறினாராம்.

இதுவும் யாருக்கு? ஜெர்மன் கொள்கைக்குப் பரம விரோதியான ஜவஹருக்கா? ஜெர்மன் கொள்கை ஜெயித்தால் இந்தியாவுக்குச் சுதந்திரம் ஏது என்று யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னாலேயே கூறியவராயிற்றே! ஆயினும் என்ன, சர்க்கார் உத்தரவை மீறினால் தண்டனை அடைய வேண்டியதுதானே, சர்க்கார் உத்தரவு சரியா என்று கேட்க அடிமைக்கு உரிமை உண்டா?

அவருக்குப் பின்னால் காங்கிரஸ் மந்திரிகள், சட்டசபைத் தலைவர்கள், மெம்பர்கள் என்று இப்படி ஆயிரக்கணக்கான காங்கிரஸ்வாதிகள் சிறைச்சாலைக்குப் போகலானார்கள்.

நவம்பர் மாதம் கூடிய மத்திய சட்டசபையில் லின்லித்கோ பிரபு ஆகஸ்டு மாதம் கூறிய யோசனையை ஏற்றுக்கொண்டால் உண்மையான அதிகாரமும் பொறுப்பும் இந்தியர்கள் கைக்கு வந்துவிடுமே, அதை வேண்டாம் என்று எதிர்க்கிறீர்களே என்று கேட்டார்.

நிர்வாக சபையாருடைய தீர்மானத்தை நிராகரிக்க வைஸிராய்க்கு அதிகாரம் இருக்கும்பொழுது நிர்வாக சபைக்கு "உண்மையான அதிகாரம்" வருவது எப்படி?

நிர்வாக சபை தவறு செய்தால் அதை நீக்கச் சட்டசபைக்கு அதிகாரமில்லாதபொழுது "பொறுப்பு வாய்ந்த" நிர்வாக சபை என்று கூறுவது எவ்விதம்?

இந்தியர்களைச் சேர்த்துக் கொள்வதால் அதிகாரமும் பொறுப்பும் "இந்தியர்கள்" கையில் வந்துவிடும் என்று கூறுவதும் எங்ஙனம்?

அதன்பின் இந்தியா மந்திரி டிஸம்பர் மாதத்தில் பார்லிமெண்டு சபையில்—இந்தியாவில் பல வகுப்புக்கள் இருந்தாலும் அவர்கள் 'இந்தியா பிரதானம்' என்று எண்ணி நடந்தால் நல்லது—என்று கூறினார். அப்படியானால் அமெரிக்கு ஞாஞேதயம் உண்டாய் விட்டதா, அல்லது மறந்ததுதான் இப்படிக் கூறுகிருரா? சிறுத்தைப் புலி ஒருநாளும் தன்னுடைய புள்ளிகளை மாற்றிக் கொள்ளாது என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டல்லவா?

என்ன காரணமோ, அமெரி இப்படி இந்தியாவே பிரதானம் என்று ஒரு பிரசங்கத்தைச் செய்து விட்டார். அவ்வளவுதான், உடனே ஜின்னு சாகேபுக்குக் கோபம் வந்துவிட்டது.

நாங்கள் முஸ்லிம்கள் ஒரு வகுப்புமல்ல; சிறுபான்மைக் கட்சியாருமல்ல. நாங்கள் ஒரு 'தேசீய சமூகம்.' இந்தியா ஒன்ரு? இரண்டு. ஹிந்து, முஸ்லிம் என்று இரண்டு சமூகங்கள் உள. அதனுல் ஹிந்துக்கள் அதிகமாகவுள்ள பாகத்தை ஹிந்துஸ்தான் என்றும், முஸ்லிம்கள் அதிகமாகவுள்ள பாகத்தை பாகிஸ்தான் என்றும் பிரித்துவிட வேண்டும். இதுவே எங்கள் லட்சியம்—என்று கர்ஜித்தார்.

இது புது யோசனை. இதற்குமுன் சட்டசபை முதலியவைகளில், ஹிந்துக்களுக்கு எத்தனை ஸ்தானங்களோ, அத்தனை ஸ்தானங்கள் முஸ்லிம்களுக்கும் வேண்டும் என்று கூறினுரேயன்றி, இதுவரை ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஒன்றுபட்டிருக்கும் இந்த நாட்டை இரண்டு துண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கூறவில்லை.

இப்பொழுது அவர் நாட்டை இரண்டாகப் பிரித்து விடச் சம்மதித்தாலன்றி சுதந்திரம் அளிப்பதைப் பற்றிச் பேசச் சம்மதிக்க மாட்டேன் என்று கூறலானர்.

இந்தப் பாகிஸ்தான் யோசனையைக் கண்டதும் காந்தியடிகள்—" இரண்டு சமூகங்கள் என்னும் தத்துவம் உண்மையானதன்று. கடவுள் ஒன்ருய் இணைத்து வைத்துள்ளதை ஒருநாளும் பிரித்துவைக்க முடியாது " என்று கூறினர்.

ஆனல் அமெரி துரை, ஜின்னவின் இரண்டு சமூகப் புதிரைக் கேட்டதும்—" ஆமாம், சுதந்திரம் கொடுக்குமுன் ஒன்பது கோடி முஸ்லிம்களைத் திருப்திப்படுத்த வேண்டியதுதான் " என்று கூறலானர்.

அவ்வளவுதான், இந்தியாவிலுள்ள ஆறு பெரிய முஸ்லிம் ஸ்தாபனங்களில் ஒன்றேயாகிய முஸ்லிம் லீக் அத்தனை முஸ்லிம்களுக்குமே ஏகப் பிரதிநிதியாகி விட்டது!

இப்படி ஒருபக்கம் காந்தியடிகள் இந்தியாவின் கௌரவத்தைக் காப்பதற்காக சத்யாக்ரகம் நடத்திக் கொண்டிருக்கும்பொழுது, இந்தியாவை இரண்டாகப் பிரிக்கும்வரை சுயராஜ்யம் வேண்டியதில்லை என்று ஜின்னவும், வேற்றுமை இருக்கும்வரை நாங்கள் விலகுவது எப்படி என்று அமெரியும் முழங்கிக் கொண்டிருந்தார்கள்.

இப்படி அமெரி வேற்றுமை, வேற்றுமை என்று இடைவிடாது கூறி வருகிருரே, " இது தனித் தொகுதி முறை " ஏற்படுத்தியதன் விளைவுதான் அல்லவோ? இந்த முறை வந்த பிறகுதானே ஆயிரம் வருஷமாக ஒற்றுமையாக வாழ்ந்துவந்த இந்து—முஸ்லிம்களிடை வேற்றுமை உணர்ச்சி அரும்பலாயிற்று. " இந்த முறை சுயராஜ்ய வளர்ச்சிக்குத் தடையாய் நிற்கிறது " என்று

1919-ம் வருஷத்து அரசியல் திட்டம் வகுத்த வைஸிராய் செம்ஸ்போர்டும் இந்தியா மந்திரி மாண்டேகுவும் கூற வில்லையா?

ஒற்றுமை ஏற்பட்டாலன்றி சுதந்திரம் கிடையாது என்று கூறுகிறீரே; ஆமாம் என்று ஜின்னாவும் ஆமோதிக்கிறீரே; ஆனால் ஜின்னா சாகிபே முன்னால் இந்தியா மந்திரியாயிருந்த பர்க்கன்ஹெட் பிரபுவிடம் கானடாவில் செய்ததுபோல் செய்யுங்கள், கண நேரத்தில் ஒற்றுமை உண்டாய்விடும் என்று கூறியதை மறந்துவிட்டதன் காரணம் என்ன?

கானடா தேசத்தில் பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் உளர். சுயராஜ்யம் கிடைக்குமுன் அவர்களிடையே ஜாதி மத பாஷை முதலிய பல வேறுபாடுகள் காணப்பட்டன. அவர்கள் ஒருவரையொருவர் பரம விரோதிகளாக எண்ணி நடந்து வந்தார்கள். அவர்களுக்குள் இருந்த துவேஷ உணர்ச்சி எந்த நாட்டிலும் காண முடியாது. நம்முடைய நாட்டில் வேற்றுமை உணர்ச்சி யிருப்பதாக பிரிட்டிஷார் கூறுகிறார்கள், ஜின்னாவின் சிஷ்யர்களும் அதை ஒப்புக் கொள்கிறார்கள், அவர்கள் எல்லோரும் பத்து சதமானங்கூட இருக்கமாட்டார்கள். அவர்கள் நகரத்திலுள்ளவர்கள். அவர்களிடை ஜின்னாவின் முயற்சியால் வேற்றுமை உணர்ச்சி உண்டாயிருந்தாலும் உண்டாயிருக்கலாம். ஆனால் தொண்ணூறு சதமான ஜனங்கள் வசிக்கும் கிராமங்களில் வேற்றுமை உணர்ச்சி அணுவளவேனும் கிடையாது. வேற்றுமை உணர்ச்சி எத்தனை தூரம் முற்றினால் துவேஷ உணர்ச்சியாகும், அந்தத் துவேஷ உணர்ச்சியே கானடாவில் அந்தக் காலத்தில் புது வெள்ளம் பெருக்கெடுத்து கரை புரண்டு புலன்களை நாசமாக்குவதுபோல நாட்டைப் பாழ்படுத்திக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஜனங்களும் அதில் ஈடுபட்

டிருந்ததால் பிரிட்டிஷ் சர்க்கார் அதுபற்றி அதிகக் கவலை யடைந்தார்கள். எத்தனையோ புதிய புதிய முறைகள் கையாண்டும் எள்ளளவு பயனும் உண்டாகாது போகவே இறுதியில் டர்ஹாம் பிரபுவை ஏதேனும் விமோசன மார்க்கம் உண்டா என்று காணும் பொருட்டு கானடா விற்கு அனுப்பி வைத்தார்கள். அவர் விஷயத்தை நன்கு பரிசீலனை செய்த பின்னர், சுதந்திரம் அளித்தாலன்றி ஒற்றுமை உதிக்காது என்று தைரியமாய் யோசனை கூறினார். அப்படியே சுதந்திரம் கொடுத்ததும் ஒற்றுமை உண்டாய் விட்டது. அதுபோலவேதான் தென் ஆப்பிரிக் காவிலும் பிரிட்டிஷாரும், டச்சுக்காரரும் சுதந்திரம் பெற்றதும் இணைபிரியாத சகோதரர்களாய் விட்டார்கள். அந்த அற்புதம் இந்தியாவிலும் நடத்தலாகாதோ? அப்படிக்கின்றி இப்பொழுதே ஒற்றுமையைக் காட்டுங் கள் என்று கூறுவது ஸர் என். என். ஸர்க்கார் கூறியது போல—“உஷ்ணமான ஐஸ் கட்டி கொண்டுவா, ஒரு கோடி ரூபாய் தருகிறேன்” என்று கூறுவதுபோலவே இருக்கிறது. இது உண்மையான பேச்சா?

சரி, இப்பொழுதே ஒற்றுமையை உண்டாக்கி விட்டோம் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுதும் சுயராஜ்யம் தரச் சம்மதிப்பார்களா? ஒன்று சேர்ந்து கேட்டதெல்லாம் கொடுத்து விட்டார்களோ?

கிலாபத் காலத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்திருந்தார்களே, பெற்றது என்ன?

இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் இந்துக் களும் முஸ்லிம்களும் ஒன்றுசேர்ந்து கொடுத்த அறிக்கைக் குக் கிடைத்தது என்ன?

மத்திய சட்ட சபையில் காங்கிரஸ் மெம்பர்களும் முஸ்லிம் லீக் மெம்பர்களும் சேர்ந்து நிராகரித்த பட்ஜெட்

களுக்கு எல்லாம் வைஸிராய் உயிர் கொடுத்துவிட வில்லையா ?

ஆகவே வேற்றுமை என்பதெல்லாம் வெறும் வேஷம் தான். ஆயினும் மிதவாதக் கட்சியார் 1941 மார்ச்சு மாதம் பம்பாயில் கூடி—சர்க்கார் யுத்தத்துக்குப்பின் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் டொமினியன் அந்தஸ்து தருவதாக வாக்களிக்க வேண்டுமென்றும், அதுவரை உத்யோகப்பற்றற்ற இந்தியர்களைக் கொண்டு நிர்வாக சபையை அமைத்து, சேனை, நிதி யாதிய விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் ஒப்புவித்து விட வேண்டும் என்றும், ஆனால் அவர்கள் சட்ட சபைக்கு ஜவாப்தாரியா யிருக்க வேண்டியதில்லை என்றும், சேனாதிபதியே தேசத்தின் பாதுகாப்பு நிர்வாகஸ்தராய் இருக்கலாம் என்றும் தீர்மானித்தார்கள்.

ஆகவே அவர்கள் பூரண சுதந்திரமும் கேட்கவில்லை, பொறுப்பாட்சியும் கேட்கவில்லை, அதனால் சட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்றும் கேட்கவில்லை.

அவர்கள் கேட்டதெல்லாம்—நிர்வாக சபையில் உத்யோகப்பற்றற்ற இந்தியர்களே மெம்பர்களாக இருக்க வேண்டும் என்பதும் அவர்கள் ஆலோசனை கூறுகிறவர்களாகவே இருந்தாலும் எல்லா விஷயங்களையும் அவர்களிடமே விட்டுவிட வேண்டும் என்பதுமேதான்.

இது காங்கிரஸ் கோரிக்கையைவிட எவ்வளவோ குறைந்ததாகும், இதற்கேனும் சர்க்கார் சம்மதித்தார்களோ ?

## சர்க்காரின் தாராளம்

காங்கிரஸ்காரர்கள் காந்தியடிகளையும் அவருடைய அஹிம்சா தர்மத்தையும் பின் பற்றுகிறவர்கள். அதனுல் யுத்தங்களில் கலந்துகொள்ள விரும்பாதவர்கள். ஆயினும் பிரிட்டன் அபாய நிலைமையில் இருப்பதைக் கண்டு, காந்தியடிகளை விட்டுப் பிரிந்து நின்று, தேசீய சர்க்கார் அமைத்தால் யுத்த முயற்சிகளில் உதவி செய்வதாகக் கூறிஞர்கள்.

ஆனுல் சர்க்கார் சம்மதிக்கவில்லை. அத்துடன் பேச்சு சுதந்திரமும் கிடையாது என்று கூறி விட்டார்கள். ஆனுல் அதுவே எந்த தேசத்துக்கும் ஜீவாதாரம். ஆகையால் காங்கிரஸ் கமிட்டியாரும் காந்தியடிகளும் அதைக் காக்கும் பொருட்டு சத்யாக்ரகம் ஆரம்பித்தார்கள்.

அப்படியே சத்யாக்ரகம் செய்து சிறை புகுந்தவர்கள் அமரியின் அறிக்கையின்படி 1941 ஜூலை முதல் தேதியன்று 28 மாஜி மந்திரிகள், 290 சட்ட சபை மெம்பர்கள் உள்பட 12,129 பேர் ஆவார்கள்.

காங்கிரஸ் நிலைமை இது. ஜின்ஞு சாகிப்—மகாத்மா காந்தியடிகள் சாப்ரூவுக்கு எழுதியது போல்—"தம் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளச் செய்வதற்கு வேண்டிய பலத்தை தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார்." மிதவாதிகள் மிகச் சிறிய கோரிக்கை ஒன்றைக் கூறிவிட்டு சர்க்கார் அதற்கேனும் சம்மதிப்பார்களா என்று எதிர் பார்த்து எதிர்பார்த்து அலுத்துப் போயிருந்தார்கள். தேசம் முழுவதும் அதிருப்தி நிலவியிலிருந்தது.

அதை நீக்கும் பொருட்டு வைஸிராய் லின்லித்கோ பிரபு தாம் 1940 ஆகஸ்டு மாதம் வெளியிட்ட யோசனைகளை ஒட்டி தம்முடைய நிர்வாக சபையில் பொறுப்புள்ள ஸ்தானங்கட்கு பிரதிநிதித்வம் வாய்ந்த உத்யோகப் பற்றற்ற இந்தியர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்புவதாகக் கூறி 21-7-41ல் இந்திய மெம்பர்களின் தொகையைக் கூட்டி உத்யோகப்பற்றில்லாதவர் பெரும்பான்மையோராக இருக்கும்படி செய்தார்.

இது ஜனங்களில் எந்தக் கட்சியார்க்கும் திருப்தி அளிக்கவில்லை. வைஸிராய் நிர்வாக சபையில் செய்த மாற்றங்கள் இரண்டு :—(1) அதிகமான இந்திய மெம்பர்கள். (2) உத்யோகப்பற்றில்லாதவர் மெஜாரிட்டி.

அத்தனை பேருமே இந்தியர்களாயிருந்தாலும் என்ன பயன்? அவர்கள் வெறும் ஆலோசனை சொல்லுபவர்கள் தானே, அதிகாரம் எல்லாம் வைஸிராயின் கையிலேயே அல்லவா?

அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இலாகாக்களும் முக்கியமில்லாதவைகளே. ஆங்கில மெம்பர்கள் கையிலுள்ள விஷயங்களை அவர்களுக்கு ஏன் மாற்றவில்லை?

அதுவும் தவிர சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் பிரதிநிதித்வம் வாய்ந்தவர்களா? அதுவுமில்லை. அவர்கள் எல்லோரும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப் பிரதிநிதிகள் அல்லர். வைஸிராயின் ஊழியர்களே ஆவர்.

ஆதலால் இதுவல்ல காங்கிரஸ் கேட்ட தேசிய சர்க்கார் என்று காந்தியடிகளும்—இதுவல்ல நாங்கள் கோரிய நிர்வாக சபை மாற்றம் என்று மிதவாதிகளும் கூறினார்கள்.

ஜின்னா சாகேப் முஸ்லிம் லீக் தலைவன் நானிருக்க என்னைக் கேளாமல் என்னுடைய லீக் மெம்பர்களை நியமித்து விட்டாரே என்று கோபப்பட்டார்.

வைஸிராய் நிர்வாக சபையில் செய்த மாற்றங்களோடு நிற்கவில்லை. "தேசீயப் பாதுகாப்பு கவுன்ஸில்" ஒன்று ஸ்தாபிப்பதாகவும், அதை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்டி யுத்த நிலைமையை தெரிவிப்பதாகவும் கூறி அதற்கும் மெம்பர்களை நியமித்தார். ஆனால் அதிகாரமோ பொறுப்போ இல்லாத இந்தச் சபையால் என்ன நன்மை உண்டாய் விடும்? தேசத்தின் பிரதிநிதிகள் இல்லாத சபையை தேசீயப் பாதுகாப்பு சபை என்று எப்படிச் சொல்ல முடியும்?

ஆனால் ஜின்னா சாகேப் அதை ஒன்றும் சிந்திக்க வில்லை. நம்முடைய கோரிக்கைக்கு இணங்காததால் யுத்த முயற்சியில் கலந்துகொள்ள வேண்டாம், லீக் மெம்பர்கள் விலகிக்கொள்ளுங்கள் என்றுமட்டுமே கூறினார். அப்படிக் கூறினாரே, அந்த சபை வெறும் ஆலோசனை சபை மட்டுந்தான் என்பதையும், பஞ்சாபிலுள்ள முஸ்லிம் லீக் பிரதம மந்திரி படை திரட்டுவதில் பரிபூரணமாக ஈடுபட்டிருப்பதையும் மறந்து விட்டாரே ஏன்? முஸ்லிம் லீக் யுத்த முயற்சிகளில் கலந்து கொள்வதில்லை என்றால் அவரை ஏன் படை திரட்டுவதினின்றும் தடுக்கவில்லை? அது நிற்க.

வைஸிராயின் அறிக்கையை விளக்க இங்கிலாந்தில் வெளியாகும் சர்க்கார் அறிக்கையை "வெள்ளைத்தாள்" என்று கூறுவார்கள். அது வெறும் வெள்ளைத்தாள்தான். அதில் இந்தியர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதான அறிகுறி அணுவளவும் காணப்பட வில்லை. அதற்குப் பதிலாக பிரிட்டிஷாருடைய பலத்தைப் பெருக்குவதாகவே காணப்பட்டது.

பிரிட்டன் தோல்வி அடைந்தால் இந்தியாவுக்கு அபாயமாம், அதனால் இந்தியாவைக் காப்பாற்றுவதற்காகவும் பிரிட்டன் போர் புரிகிறதாம்.

பிரிட்டன் தோல்வி அடையக்கூடாது, ஜெயிக்க வேண்டும் என்றே இந்தியர்கள் விரும்புகிறார்கள். அத்துடன் பிரிட்டன் ஜெயிப்பது நிச்சயம் என்றும் நம்புகிறார்கள். பிரிட்டன் தோற்றால் இந்தியாவுக்கு அபாயம் என்பதை ஒப்புக்கொள்ளவும் செய்கிறார்கள். ஆனால் பிரிட்டன் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளியாதவரை இந்தியாவுக்காகச் சண்டை செய்கிறது என்பதை ஏற்றுக் கொள்வது எப்படி?

பிரிட்டிஷ் சர்க்காருடைய "வெள்ளைத்தாள்", யுத்த சமயத்தில் அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்வது அநுபவசாத்தியமான விஷயமன்றே என்றும், அப்படி மாற்றங்கள் செய்வதற்கும் முக்கியமான வகுப்பாரிடை ஒற்றுமை உண்டாக வேண்டியது அத்தியாவசியமாயிற்றே என்றும் பழய பாடத்தை ஒப்புவிக்கிறது.

யுத்த சமயத்தில் அரசியல் சட்ட மாற்றங்கள் சாத்தியமில்லை என்றால், பிரிட்டனுக்கு அதோகதி என்று கூறுமாறு போர் வெகு மும்மரமாயிருந்த சமயம் பிரிட்டனும் பிரான்ஸும் ஒரே ஐக்கிய நாடாக சட்டம் இயற்றத் தயாரானதும், ஜமைக்கா, டிறினிடாட், பிரிட்டிஷ் கயானா, ஆகிய நாடுகளில் அரசியல் சட்ட மாற்றங்கள் செய்ததும் எப்படிச் சாத்தியமாயின? அங்கு சாத்தியமானது இங்கும் சாத்தியமாகாதோ?

எங்கள் யோசனைகளை ஏற்றுக் கொண்டால் எவ்வித மாற்றமும் வேண்டியதில்லை என்று பம்பாயில் கூடிய மிதவாதிகள் கூறினார்களே, அந்த யோசனைகளையுங் கூட ஏற்றுக்கொள்ள வில்லையே ஏன்?

இதிலிருந்து சர்க்காருக்கு இம்மிகூடத் தங்கள் அதிகாரத்தைக் குறைத்துக்கொள்ள விருப்பம் இல்லை என்பது தானே தெளிவாகிறது?

# அட்லாண்டிக் சாஸனம்

காங்கிரஸ் கமிட்டியார் பிரிட்டிஷாருடைய யுத்த நோக்கம் யாது என்று கேட்டார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் நாகரிகம் அழிந்து போகாதிருக்கவும், ஜன நாயகத்தையும் சுதந்திரத்தையும் காப்பதற்காகவும், யுத்த பயம் என்பதை ஒழியச் செய்வதற்காகவும், நாசிசத்தைக் கொன்று மூடுவதற்காகவும் சண்டை செய்வதாகக் கூறி வந்தார்கள். ஆயினும் இந்தச் சொற்றொடர்களால் விஷயம் கொஞ்சமும் விளங்காதிருந்ததால் சகல தேசத்திலுள்ளவர்களும் நேசதேசங்களின் லக்ஷியம் புதியதோர் உலகை சிருஷ்டிப்பது என்று கூறுகிறார்களே, அது எப்படி இருக்கும் என்று சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள்.

ஆதலால் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும் அமரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஏதோ ஒரு இடத்தில் கூடி யோசித்து எட்டு ஷரத்துகள் உள்ள ஒரு அறிக்கையை 1941 ஆகஸ்டு 15-தேதி வெளியிட்டார்கள். அவர்கள் கூடிய இடம் அட்லாண்டிக்; ஆனதால் அது "அட்லாண்டிக் சாஸனம்" என்று வழங்கப்படுகிறது.

அவர்கள் இருவரும் அதை "உலகத்தின் எதிர்கால க்ஷேமார்த்தமாக" வெளியிடுவதாக ஆரம்பித்து எட்டு அஸ்திவாரமான கொள்கைகளை அவலம்பிக்கிறார்கள்.

அவற்றுள் மூன்றாவது ஷரத்து மிக முக்கியமானது. அதில் அவர்கள் சகல ஜன சமூகங்களுக்கும் தங்கள் இஷ்டம்போல் அரசியல் அமைத்துக்கொள்ள உரிமை

உண்டென்றும், சுயராஜ்யம் பறித்துக் கொள்ளப் பட்டவர்களுக்கு எல்லாம் சுயராஜ்யம் கிடைக்குமாறு செய்யப்படும் என்றும் கூறுகிறார்கள்.

இதைக்கண்டதும் உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும்—அதிலும் அடிமையாயுள்ள நாட்டார் அனைவரும் இதோ சுதந்திர சூரியன் உதித்துவிட்டான், இனிமேல் அடிமையில்லை, எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் என்று சந்தோஷம் அடைந்தார்கள்.

சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் "உலகத்தின் க்ஷேமார்த்தமாக" என்றும், "சகல ஜன சமூகங்களுக்கும்" என்றும் கூறுகிறார்கள். நமது இந்திய நாடும் உலகத்தில் ஒரு பகுதி, நம்முடைய சமூகமும் உலகத்திலுள்ள ஜன சமூகங்களில் ஒன்று, நம்முடைய சுதந்திரமும் பறிக்கப்பட்டிருக்கிறது, அதனால் அட்லாண்டிக் சாஸனம் நமக்கும் விமோசனம் அளிக்கிறது என்று எண்ணி இந்திய மக்களும் அந்த சந்தோஷத்தில் கலந்துகொண்டார்கள்.

அவர்களுடைய அனுமானமும் நம்பிக்கையும் சரிதானா, அல்லது அனாவசியமாகக் கனவுதான் கண்டார்களா ?

அட்லாண்டிக் சாஸனத்தில் கையெழுத்திட்டபின் ரூஸ்வெல்ட் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு அளித்த பேட்டி சமயத்தில் - "உலகில் ஒரு பாகங்கூட எங்களால் விசாரிக்கப்படாமல் இருக்கவில்லை" என்று கூறினார்.

அவருடைய நோக்கங்களை அறிந்த அமெரிக்க மந்திரி கார்டல் ஹல் என்பவரும் "அட்லாண்டிக் சாஸனம் அனைவருக்கும் பொருந்தும்" என்று கூறினார்.

பிரிட்டனில் உதவிப் பிரதம மந்திரி ஆட்லி துரையும் "அப்படியே ஆசியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் சேர்த்துத்தான்" என்று பார்லிமெண்ட் சபையில் கூறினார்.

இந்த மூன்று பேரும் கூறியதிலிருந்து இந்திய மக்கள் எண்ணியது சரிதான் என்று தோன்றுகிறது அல்லவா? ஆயினும் அறிவாளிகள் பலர், அவர்கள் கூறுவது உண்மை தான், ஆனால் ஏகாதிபத்திய வாதிகளுடைய அந்தரங்க எண்ணங்களை யார் அறிவார், அவர்கள் எப்படி வேண்டு மானாலும் தங்கள் இஷ்டம்போல் வியாக்கியானம் செய்வ தில் சமர்த்தர்கள் ஆயிற்றே என்று சந்தேகங்களைக் கிளப் பினார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசி ஆச்சாரிய கிரு பாளனி சாஸனத்தில் கண்ட எட்டுக் கொள்கைகளும் பொதுவாகவும் தெளிவில்லாமலுமே உள, ஆனாலும் சாஸனத்தைச் செய்தவர்கள் மனம் வைத்தால் அதை நல்ல மாதிரியாக நடத்தி வைக்கலாம். ஆனால் இந்தியா வுக்கு நன்மைசெய்யவேண்டும் என்ற மனம் சர்ச்சிலுக்கு உண்டா என்று கேட்டார்.

அது உண்மைதான், அவருக்கு இதுவரை இருந்த தில்லை, ஆனால் இனிமேல் எப்படியோ? 1935-ம் வருஷத்து அரசியல் சட்டம் நமக்குப் பிரமாதமான நன்மைகள் எது வும் செய்யக் கூடியதாயில்லை, அதனால் நமக்குக் கிடைத்த பெரும்பாக்கியம் நாட்டில் பிளவுகள் ஏற்பட்டதுதான். ஆனால் அந்தச் சட்டங்கூட வேண்டாம் என்று ஒரே பிடி வாதமாக பார்லிமெண்டில் எதிர்த்த கூட்டத்தார்க்கு தலைவராய் இருந்தவர் சர்ச்சிலே ஆவார். அப்பொழுது அவர் "பிரிட்டிஷ் அரசருடைய கிரீடத்தில் அதிக விலை யுள்ளதும் பிரகாசமுள்ளதுமான இரத்தினம் இந்தியா தானே, அதை நாங்கள் எப்படி விட்டுவிட முடியும், இந்தியா போய்விட்டால் இங்கிலாந்து வல்லரசாய் இருப் பது எப்படி" என்று கேட்டார்.

அவர் இந்தியா விஷயத்தில் மட்டும்தான் அப்படி என்று எண்ணவேண்டாம், இங்கிலாந்துக்கு அடிமையா

யுள்ள நாடுகள் என்றென்றைக்கும் அடிமையாகவே இருக்கவேண்டும் என்பதே அவருடைய இரத்தத்தில் ஊறிய கொள்கை. எகிப்துக்கு சுதந்திரம் அளிக்குமாறு ஜனரல் ஆலன்பி வற்புறுத்தியபொழுது, கூடாது என்று பிடிவாதமாய்க் கூறியவர் சர்ச்சிலே என்று இப்பொழுது வைஸ்ராயாக வந்துள்ள வேவல் பிரபு தாம் எழுதும் ஆலன்பி சரிதையில் கூறுகிறார்.

இப்படிப்பட்ட ஏகாதிபத்திய வாதியாகிய சர்ச்சில் அட்லாண்டிக் சாஸனத்தைத் தயாரித்தபொழுது இதன் படி இந்தியாவுக்கும் சுதந்திரம் வழங்கவேண்டியதுதான் என்று எண்ணி இருக்க முடியுமா? அவரே "அப்படி எண்ணவில்லை, நாங்கள் சுதந்திரம் தேடிக்கொடுக்க வேண்டும் என்று விரும்பியதெல்லாம் ஜெர்மனி பிடித்துள்ள நாடுகளுக்கு மட்டும்தான்" என்று பார்லிமெண்டு சபையில் ஸ்பஷ்டமாகக் கூறினார்.

அமெரிக்க அறிஞர் லூயி பிஷர் என்பவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையில் நடப்பதைப் பார்க்கும் பொருட்டு ஒருநாள் போயிருந்தாராம், அப்பொழுது ஒரு மெம்பர் அட்லாண்டிக் சாஸனம் இந்தியாவுக்கும் உண்டா என்று கேட்டாராம். உடனே சர்ச்சில் எழுந்து "கிடையாது" என்று ஒரே மொழியில் பதில் கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டாராம்.

அதற்கு அடுத்தவாரம் அட்லாண்டிக் சாஸனத்தை ஊர்ஜிதம் செய்வதற்காக நேசதேச மகாநாடு பிரிட்டிஷ் அயல்நாட்டு விவகார மந்திரி ஈடன் துரையின் தலைமையில் கூடியது. அதில் கானடா முதலிய டொமினியன்களுக்கு ஸ்தானம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தியாவுக்கு அளிக்கப்படவில்லை. அமரிமட்டுமே இந்தியாவுக்காக பிரஸன்னமாயிருந்தார். அத்துடன் தலைவரும் தமது உரையில் இந்தியாவைப்பற்றிப் பிரஸ்தாபிக்கக்

கூடவில்லை. இதர சமயங்களில் எல்லாம் இந்தியாவை டொமினியன்களுடன் சேர்த்துப் பேசுவது வழக்கமாயிருந்தும் இப்பொழுது அதைக்குறித்து மூச்சுவிடாதிருந்துவிட்டார்கள். அதன் பொருள் யாது?

சர்ச்சில் அட்லாண்டிக் சாஸனம் இந்தியாவுக்குக் கிடையாது என்றார். ஈடன் அதைப்பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாதிருந்துவிட்டார். ஆனால் நமது இந்தியா மந்திரி அமரியோ உங்களுக்கு அட்லாண்டிக் சாஸனம் எதற்கு? அதைவிட உயர்ந்ததாயிற்றே 1940 ஆகஸ்டில் வைஸ்ராய் வெளியிட்ட யோசனைகள் என்று கேட்டார்.

அப்படியானால் அட்லாண்டிக் சாஸனம் எதற்கு? அமெரிக்காவும்கூட ஆகஸ்ட் யோசனைப்படி தன்னுடைய அரசியலைத் திருத்தி அமைத்துக் கொள்ளலாமே. ஆங்கிலேயர் என்ன வேண்டுமானாலும் கூறலாம், இந்தியர்கள் நம்பிக்கொள்வார்கள் என்று எண்ணி விட்டார்கள் போலும்!

இப்படியெல்லாம் இவர்கள் வியாக்கியானம் செய்து அழித்து விடுவார்கள் என்று யோசித்து இந்து மகா சபைத் தலைவர் சவர்க்கர் அட்லாண்டிக் சாஸனம் இந்தியாவுக்கும் உண்டா, அமெரிக்கா எங்களுக்கும் சுதந்திரம் கிடைக்கும்படி செய்யுமா, அப்படியில்லையானால் சுதந்திரம் என்று பேசுவது எல்லாம் வெறும் பித்தலாட்டமே என்று விஷயத்தை விளக்குமாறு ரூஸ்வெல்ட்டுக்குத் தந்தி அனுப்பினார்.

அதற்கு ரூஸ்வெல்ட் பதில் அனுப்பவில்லை. ஆனால் நவம்பர் மாதத்தில் செய்த பிரசங்கத்தில் "சுதந்திரத்திற்காகச் சண்டை செய்வது சரியான காரியம் என்றே அமெரிக்கர்கள் நம்புகிறார்கள்" என்று கூறினார். ஆனால் யாருடைய சுதந்திரத்திற்காக? எல்லோருடைய சுதந்

திரத்திற்காக என்றால் சர்ச்சில் செய்யும் வியாக்கியானம் தவறு என்று கூறாமல் ஏன் மௌனம் சாதிக்கிறார்?

சர்ச்சில் அதற்கு முந்திய நாள் பார்லிமெண்டு சபையில் "நான் இந்திய சாம்ராஜ்யத்தை விட்டுவிடுவதற்காகவா பிரதம மந்திரியானேன்" என்று கூறியதை ரூஸ்வெல்ட் ஒப்புக்கொள்ளுகிறாரா?

ஆனால் இதில் ஒரு விசேஷம். இந்தியா சென்ற யுத்தத்தில் 150 கோடி ரூபாய் இனாமாகக் கொடுத்தது, லட்சக்கணக்கான துருப்புக்களும் சாமான்களும் வழங்கிற்று இந்த யுத்தத்திலும் 500 கோடி ரூபாய்க்குமேல் செலவழித்தது. இத்தாலியில் ஜெயக்கொடி உயர்த்தியதும் நமது படையே. அப்படி யிருந்தும் அட்லாண்டிக் சாஸனம் நமக்கில்லையாம் வேறு யாருக்கோவாம்!

ஆனால் நேச தேசங்களில் ஒன்றாகிய 'சுதந்திர பிரஞ்சு சர்க்கார்' சர்ச்சில் இப்படிக் கூறிய இதே சமயத்தில் தங்களுக்கு அடிமையாயுள்ள சிரியாவுக்கும் லெபனனுக்கும் பூரண சுதந்திரம் அளித்து விட்டார்கள். அவர்களுக்குள்ள நியாய புத்தி ஆங்கில அரசாங்கத்திற்கு என்று உதிக்குமோ தெரியவில்லை. ஆனால் அது உதிக்கும் வரை உலகத்தில் சமாதானம் என்பது ஒரு நாளும் உண்டாகப் போவதில்லை.

இவ்விதமாக சர்ச்சிலும் அமரியும் அட்லாண்டிக் சாஸனத்துக்கு விபரீதமான பொருள் கூறினாலும் அதைப் பற்றி நமக்கு அக்கரையில்லை என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அதன் காரணம் யாதெனில், அட்லாண்டிக் சாஸனம் இந்தியாவுக்கும் உண்டு என்று சர்ச்சிலே அல்ல சக்கரவர்த்தியே கூறினாலும் பார்லிமெண்டு ஒப்புக்கொள்ளாதவரை பிரயோஜனமில்லையாம், கடைசியாகத் தீர்ப்புக் கூற வேண்டிய அதிகாரம் பார்லிமெண்டா

ருடையதே என்று காமன்ஸ் சபை உப தலைவர் ராங்கிலர் கூறுகிறார்.

ஆதலால் அட்லாண்டிக் சாஸனம் பிரிட்டிஷ் சர்க்காரின் மனப்பான்மையை மற்றுமொரு முறை உலகத்துக்கு வெட்ட வெளிச்சமாக்க உபயோகமாயிற்று என்பதோடு திருப்தி அடைவோம்.

# கிரிப்ஸ் வருகை

சர்ச்சில் துரை இந்தியாவை விட்டுவிடவா மந்திரியானேன் என்று கூறிக்கொண்டிருந்த அதே சமயத்தில் ஜப்பானும் யுத்தத்தில் கலந்து கொள்ளும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றலாயின. நேசதேசங்களில் இருந்த ஜப்பானியர் தமது தாய் நாட்டுக்கு அவசரமாகத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். அமரிக்காவும் பிரிட்டனும் ஜப்பானுக்கு மண்ணெண்ணெய் அனுப்பி வந்ததை நிறுத்தி விட்டன.

அதன் பேரில் ஜப்பானிய ஸ்தானாதிபதி அமரிக்க சர்க்காரோடு சமரஸம் பேசிக் கொண்டிருந்தார். ஆயினும் அதே சமயத்தில் ஜப்பானியர் யாதொரு யுத்தப் பிரகடனமும் செய்யாமல் அமரிக்காவுக்குச் சொந்தமான பிலிப்பைன் தீவிலுள்ள 'பெர்ல்' துறைமுகத்தைத் தாக்கி அளவற்ற சேதம் விளைவித்தார்கள். ஆகவே யுத்தம் கிழக்கிலும் வந்துவிட்டது, இதுவரை யுத்த ரங்கத்திற்கு வெகு தொலையிலிருந்த இந்தியாவையும் சமீபித்து விட்டது.

இந்தச் சமயம் சர்க்கார் என்ன யோசித்தார்கள்? காந்தியடிகளின் சத்யாக்கிரகத்தால் யுத்த முயற்சிக்கு கொஞ்சமும் ஊறு உண்டாகவில்லை. தேசத்தின் அமைதி குறையவுமில்லை. ஜெர்மன் கொள்கைக்கு விரோதமானவர்களை ஜெயிலில் அடைத்து வைத்திருப்பதைக் குறித்து மற்ற நாட்டார்கள் குறை கூறுகிறார்கள், இப்பொழுது

ஜப்பானும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. அதனால் காங்கிரஸ்காரர்களை விடுதலை செய்து விடுவோம் என்று எண்ணி ஆஸாதையும் நேருவையும் விடுதலை செய்தார்கள்.

அத்துடன் வைஸிராய் கல்கத்தா வியாபார சங்கத்தில் செய்த பிரசங்கத்தில் தம்முடைய ஆகஸ்ட் யோசனையை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் இந்தியாவுக்கு அபாயம் நெருங்கி வந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலும், யாரும் தீண்டாத அந்தப் பழைய யோசனையைத் தானா மறுபடியும் கூற வேண்டும்? 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' தான், ஆனால் மற்றப் பறவைகள் அப்படி நினைப்பதில்லையே.

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் நெருக்கடியான நிலைமை வந்துவிட்டதை உணர்ந்து, காந்தியடிகளை சத்யாக்ரஹத்தை நிறுத்தும்படியாகக் கேட்டுக்கொண்டு, தேசத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியர்களிடம் ஒப்புவித்து, அதற்கான அதிகாரங்களையுங் கொடுத்தால் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுப் பாதுகாப்புக் காரியங்களை அணுவளவும் பிசகாமல் நடத்தி வைப்பார்கள் என்ற தீர்மானத்தைச் செய்தார்கள். அதை வார்தாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியாரும் அங்கீகரித்துக் கொண்டார்கள்.

ஆகவே காங்கிரஸ் கமிட்டியார் பிரிட்டனுக்கு உதவி செய்யவும் இந்தியாவைக் காப்பாற்றவும் விரும்பி மகாத்மா காந்தியடிகளை மறுபடியும் விட்டுப் பிரிந்து சர்க்காருடன் ஒத்துழைப்பதாகக் கூறினார்கள். ஆனால் செவிடர் காதில் சங்கூதிப் பிரயோஜனமென்ன?

சர்க்கார் செவிசாய்க்க விரும்பாவிட்டாலும் செவி சாய்க்கும்படியான காரியங்களை ஜப்பான் வெகு துரிதத்தில் செய்துவந்தது. ஜப்பானியர் சண்டையில் இறங்கியதுதான் தாமதம், தடதட வென்று இந்தோ சைனு, மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், ஆகியவற்றை எல்லாம் ஆக்ரமித்துக்கொண்டார்கள். அசைக்க முடியாத கப்பற் படை அரணை சிங்கப்பூரில் கட்டுகிறேன் என்று பிடிவாதமாய் அமரிதுரை கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டி கட்டிய சிங்கப்பூர் அரண் பெப்ரவரி மாதம் 15-ம் தேதி ஜப்பானியர் வசமாய்விட்டது. ரெங்கூன் காலி செய்யப்படுவதாகச் செய்தி மார்ச் 7ந்தேதி வந்தெட்டியது. பர்மாவிலிருந்து 50 ஆயிரத்துக்கு அதிகமான இந்திய மக்கள் அஸ்ஸாம் வழியாக வந்து சொல்லமுடியாத கஷ்டங்கள் அநுபவித்தார்கள். பர்மா போனதால் சைனுவுக்கு வேண்டிய தளவாடங்கள் அனுப்பமுடியாமல் ஆயிற்று.

ஜப்பானு, அந்த வெள்ளத்துக்கு அணைபோடுவது எப்படி என்று எல்லோரும் கவலையுற்ருர்கள். அவனை இந்தியாவுக்கு வரவொட்டாமல் செய்தால் மட்டுமே விமோசனம் உண்டு என்று எண்ணிஞர்கள்.

இந்த எண்ணமும் கவலையும் இந்தியாவில் மட்டும் அன்று, இங்கிலாந்திலும் பரவிற்று. எங்கு பார்த்தாலும் இந்தியாவை ஒத்துழைக்கும்படி சமாதானப்படுத்த வேண்டாமா என்ற பேச்சாகவே யிருந்தது. பார்லிமெண்டு மெம்பர்கள் காலங்கடத்திக் காலங்கடத்தி அயர்லாந்தை இழந்தோம், அதுபோல் செய்துவிட வேண்டாம். டர்ஹாம் பிரபுவை அனுப்பிக் கானடாவை சமாதானப்படுத்தியது போல யாரையேனும் இந்தியாவுக்கு அனுப்பினுல் என்ன என்று கூறிஞர்கள்.

"சைஞ நான்கு வருஷ காலமாக ஜப்பானை எதிர்த்து நின்று வருகிறது. ரஷ்யா ஜெர்மன் வெள்ளத்தைத் தனியாக நின்று தேக்கி வருகிறது, அப்படிச் செய்வதற்கு அவைகளுக்குள்ள பலம் யாது, அந்த பலத்தை இந்தியாவுக்கும் அளியுங்கள்" என்று ஸ்டோக்ஸ் என்னும் மெம்பர் கூறினர்.

ஆனல் சர்ச்சில் இதற்குச் சம்மதிக்க முடியுமா? அவருடைய மனம் இடங்கொடாதுதான், ஆனல் அபாயம் அதிகமாய்விட்டது, அனைவரும் ஏதேனும் உடனே செய்ய வேண்டியது அவசியம் என்று வற்புறுத்துகிருர்கள். அத்துடன் காங்கிரஸ்காரர்தாம் ஜனங்களைத் தட்டி எழுப்பச் சக்தி வாய்ந்தவர்களா யிருக்கிருர்கள். ஆதலால் சர்ச்சில் 1942 மார்ச் 12-ம் தேதி பார்லிமெண்டு சபையில் இந்தியாவுக்கு ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸை அனுப்பி அதன் ஒத்துழைப்பைப் பெறப் போவதாகக் கூறினர். அப்படியே கிரிப்ஸ் துரையும் மார்ச் 23-ம்தேதி யன்று புது டில்லியில் வந்து சேர்ந்தார்.

# கிரிப்ஸ் தோல்வி

1942 ஜனவரி பெப்ரவரி இரண்டு மாதங்களில் ஜப்பான் மலேயாவையும் பர்மாவையும் பிடித்துக் கொண்டதோடு வங்காளக் குடாக்கடலிலுள்ள அந்தமான் தீவுகளையும் கைப்பற்றிக்கொண்டது. ஆகவே அந்தக் கடல் ஜப்பான் குளமாகிவிட்டது. பிரிட்டிஷ் கப்பல்கள் அதில் தலைகாட்ட முடியாமல் ஆகிவிட்டது. எந்த நிமிஷம் ஜப்பான் இந்தியாவைத் தாக்குமோ என்ற பயம் இந்தியாவிற்போலவே இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சைனுவிலும் உண்டாய்விட்டது.

காங்கிரஸ் கமிட்டியார் பிரிட்டிஷ் சர்க்காருடைய மனப்பான்மை இன்னும் மாருவிட்டாலும் இந்தச் சமயம் விலகி நிற்கக்கூடாது என்று எண்ணி நாங்கள் காந்தியடிகளையும் அஹிம்ஸா தர்மத்தையும் விட்டுப்பிரிந்து, யுத்த முயற்சியில் ஈடுபடத் தயார், எங்களுக்கு அதற்கான அதிகாரத்தைத் தாருங்கள் என்று கேட்டார்கள்.

சாப்ரூ, சாஸ்திரியார் போன்ற இருபது மிதவாதத் தலைவர்கள் இப்பொழுதாவது வைஸ்ராய் நிர்வாக சபையை இந்திய மயமாக்கி சகல விஷயங்களையும் அவர்கள் கையில் கொடுத்து ஜப்பானை எதிர்த்துத் தடுக்க சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்று அமெரிக்காவுக்குப் போயிருந்த சர்ச்சிலுக்குத் தந்தி கொடுத்தார்கள். அதையொட்டி கட்சிப்பற்றில்லாத தலைவர்கள் மகாநாடும் தீர்மானம் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்பிவைத்தது.

வங்காள சிந்து பிரதம மந்திரிகளாகிய ஹக்கும் அல்லாபக்ஷ‍ும் இன்னும் வேற்றுமை வேற்றுமை என்று கூறிக்கொண்டிராமல் உடனேயே அதிகாரத்தை இந்திய ஜனப்பிரதிநிதிகளிடம் கொடுத்து தேசப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று அறிக்கை விடுத்தார்கள்.

அமெரிக்காவில் 'நியூயார்க் டைம்ஸ்' போன்ற அதிகச் செல்வாக்குடைய பத்திரிகைகள் எல்லாம் இந்தியாவைச் சமாதானப்படுத்தி அதன் ஒத்துழைப்பை உடனே பெறவேண்டும் என்று வற்புறுத்தின. அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இந்திய பிரச்னையை தீர்த்து வைக்கும்படி சர்ச்சிலுக்கு எழுதினர்.

இங்கிலாந்தில் அரசாங்கத்தை ஆதரிக்கும் டைம்ஸ் பத்திரிகையும்கூட அப்படியே எழுதியது. இந்தியா விஷயத்தில் எப்பொழுதும் சர்ச்சிலைத் தாக்கி எழுதும் டெய்லி மெயில் பத்திரிகை அமெரியை விலக்கிவிட வேண்டும் என்றுகூடக் கூறலாயிற்று. பார்லிமெண்டு மெம்பர்களும் சர்க்கார் ஏதேனும் உடனே செய்துதான் ஆகவேண்டும் என்று வற்புறுத்தினர்கள்.

சைனுவின் சேனுதிபதியான மாபெருந் தலைவர் சியாங்கேஷேக் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்திருந்தவர்— "சைனுவுக்கும் இந்தியாவுக்கும் சுதந்திரம் இல்லை என்ருல் உலகத்தில் ஒருநாளும் உண்மையான சமாதானம் உண்டாக முடியாது, ஆனுல் சைனுவும் இந்தியாவும் சுதந்தரமாய் வாழ்வதற்கும் உலகம் முழுவதுமே சுதந்தரம் பரவியிருக்க வேண்டும். அதனுல் இந்தியா இந்த யுத்தத்தில் இறங்காமல் விலகி நிற்கக்கூடாது, உலகில் பெரும் பாகம் இந்தியருடைய சுதந்திர விருப்பத்தில் அநுதாபம் உடையதாய் இருக்கிறது. பிரிட்டனும் இந்திய மகா ஜனங்கள் கேட்கும் முன்பே அவர்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் சகல அதிகாரத்தையும் கொடுத்துவிடும் என்று

நம்புகிறேன், அப்படிச் செய்வதுதான் சிறந்த ராஜ தந்திரம், அதுவே பிரிட்டனுக்குப் புகழுண்டாக்கும்"— என்று ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விதமாக ஜப்பானைத் தேக்கி முறியடிக்க ஏதேனும் உடனே செய்யவேண்டும் என்று உலகஜன அபிப்பிராயம் திரண்டு வரவே சர்ச்சில் கிரிப்ஸ் துரையை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். அவர் மார்ச் இருபத்திமூன்றும் தேதி வந்து முதலில் கவர்னர்களிடமும் நிர்வாக சபை மெம்பர்களிடமும் பின்னால் பல அரசியல் கட்சித் தலைவர்களிடமும் பிரிட்டிஷ் சர்க்காருடைய புதுத்திட்டத்தைத் தெரிவித்தார். அந்தத் திட்டத்தின் முக்கிய ஷரத்துக்களின் சாரமாவது :—

(1) யுத்தத்தின் பின் டொமினியன் அந்தஸ்து அளிக்கப்படும், இஷ்டப்பட்டால் பிரிட்டனைவிட்டுப் பிரிந்து கொள்ளலாம்.

(2) யுத்தம் முடிந்ததும் அரசியலை வகுக்க கீழ்கண்ட முறையில் ஒரு சபை ஏற்படுத்தப்படும்.

(அ) மாகாண சட்ட சபைகளுக்கு தேர்தல் நடக்கும், அந்த மெம்பர்கள் எல்லோரும் சேர்ந்து வீதாச்சார பிரதிநிதித்துவ முறையில் அரசியல் நிர்ணய சபைக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பார்கள்.

(ஆ) சமஸ்தானாதிபதிகள் தங்கள் ஜனத்தொகைக்குத் தக்கபடித் தங்கள் பிரதிநிதிகளை நியமனம் செய்வார்கள்.

(இ) யுத்த முடிவிற்குள் முக்கியமான கக்ஷிகளின் பிரதிநிதிகள் வேறு விதமான தேர்தல் முறையை வகுத்துக் கொண்டால் அந்த முறையில் நடைபெறும்.

(3) அரசியல் நிர்ணய சபை அரசியலை வகுத்ததும் சர்க்கார் அதை யேற்று அமுலுக்குக் கொண்டு வருவார்கள்.

(4) அதை ஏற்றுக்கொள்ளச் சம்மதியாத மாகாணங்கள் இப்பொழுதுள்ள நிலையிலேயே இருக்கும், ஆனால் இஷ்டப்பட்டால் பின்னால் சேர்ந்து கொள்ளவும் செய்யலாம். அல்லது ஒன்று சேர்ந்து வேறொரு ஐக்கியப் பிரதேசமாகவும் ஆகலாம்.

(5) போர்முடியும் வரை பிரிட்டிஷ் சர்க்காரே இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்பை வைத்துக்கொண்டிருப்பார்கள்.

(6) ஆயினும் பிரிட்டிஷ் சர்க்கார், முக்கியமான கக்ஷிகளின் தலைவர்கள் சர்க்கார் நிர்வாகத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இந்தத் திட்டம் பிரிட்டிஷ் சர்க்காரின் "நியாயமான முடிவான யோசனை" என்றும், இதை முழுவதுமாக ஏற்றுக்கொள்க அல்லது முழுவதுமாகத் தள்ளிவிடுக என்றும் கிரிப்ஸ் ஆரம்பத்திலேயே கூறினார்.

நீங்கள் சம்மதித்தாலும் சம்மதியாவிட்டாலும் இது தான் எங்கள் முடிவான யோசனை, என்ன சொல்லுகிறீர்கள், உங்கள் இஷ்டம் என்ன என்று கேட்பது, ஆண்டான் அடிமையிடம் கேட்பதுபோல் இருக்கிறதல்லவா?

இப்படித்தான் கர்ஸன் பிரபு வங்காளத்தைப் பிரித்துவிட்டு, இது முடிந்த காரியம், இதை மாற்ற முடியாது என்று பிடிவாதம் செய்தார். ஆனால் அது மாற்றப்படாமல் இருக்கவில்லை. அதுபோல் இப்பொழுதும் முடிவான யோசனை 'முடிந்து' போகும் என்பதில் சந்தேகம் இல்லை.

இனி இந்த முடிவான யோசனையைக் கவனிப்போம்:—

கானடா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியாவில் இருப்பவர்களில் பெரும்பாலோர் பிரிட்டனிலிருந்து குடியேறிய பிரிட்டிஷ் மக்கள். அதனால் அந்தநாடுகளை டொமி

னியன் - குடியேற்றநாடு என்று கூறுவது பொருந்தும், ஆனால் இந்தியாவை டொமினியன் என்று கூறுவது எப்படி ?

ஆயினும் இஷ்டப்பட்டால் பிரிந்துகொள்ளலாம் என்பதால் காங்கிரஸ் கேட்கும் பரிபூரண சுதந்திரமே அது என்று கூறப்படுகிறது. அப்படியானால் டொமினியன் அந்தஸ்து என்று கூறாமல் பரிபூரண சுதந்திரம் என்று கூறிவிட்டால் என்ன ? அதைவிட்டு டொமினியன் என்று கூறுவது இந்தியர்க்குக் கர்ணகடூரமாகவே இருக்கும் என்று ஆக்லண்டு என்பவர் பார்லிமெண்டில் கூறியது தான் சரி.

போர் முடிந்ததும் வழங்குவதாகக் கூறுவது ஒருபடி முன்னேற்றம்தான். ஆனால் அரசியல் நிர்ணய சபையின் அமைப்பு முறையையும் அதன்பின் அமையும் அரசியலையும் பார்த்தால் நாட்டுக்கு நன்மை செய்யும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

அரசியல் நிர்ணய சபையின் மெம்பர்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுவது போல் சமஸ்தானப் பிரஜைகளாலும் தெரிந்தெடுக்கப்படவேண்டாமோ ? சமஸ்தானாதிபதிகளே மெம்பர்களை நியமிப்பார்கள் என்று கூறுவது ஜனநாயக முறை ஆகுமா ? சமஸ்தானாதிபதிகள் சர்க்காருடைய பாதுகாப்பில் வாழ்பவர்கள். அவர்களால் ஜனவிகிதப்படி நியமிக்கப்படுபவர்கள் அரசியல் நிர்ணயசபையில் நான்கில் ஒரு பகுதியினர்க்கு அதிகமாயிருப்பார்கள். சர்க்கார் அவர்களைக் கொண்டு அரசியல் நிர்ணய சபையைத் தங்கள் இஷ்டம் போல் ஆட்டிவைக்க இடம் ஏற்பட்டுவிடும்.

மாகாணங்கள் இஷ்டப்பட்டால் தனித்து நிற்கலாம் என்றுகூறுவது நாட்டைக் கூறுபோடுவதேயாகும். ஜின்னா சாகேப் இரண்டாகப்பிரிக்கச்சொல்லுகிறார். அதற்கு சர்க்

கார் அதுமுடியாது, ஒரே ஐக்யநாடு, ஒரேசமஷ்டி சர்க்கார், சேர்ந்து வாழ்ந்தபின் பிரிந்துகொள்ள உரிமை உண்டே யன்றிசேராதிருக்க உரிமை கிடையாது, அதுவும் சகலகட்சிப் பிரதிநிதிகளும் அடங்கிய அரசியல் நிர்ணயசபை தீர்மானிக்க வேண்டிய விஷயமேயன்றி இப்பொழுதே முடித்துவிடக் கூடிய விஷயமன்று என்று கூறவேண்டியதேநியாயமாயிருக்க, அப்படிக் கூருமல் அதற்குப் பதிலாகநாட்டை நான்காகப் பிரிக்கத் திட்டம்போட்டுவிட்டார்கள். அரசியல் வகுத்து ஒன்றுசேரும் பகுதி ஒன்று; அதில் சேராதுநிற்கும் மாகாணங்கள் ஒன்று; அப்படி விலகி நிற்கும் மாகாணங்களில் சில ஒன்று சேர்ந்து நிற்பது ஒன்று; தனித்து நிற்கும் சமஸ்தானங்கள் ஒன்று.

காந்தியடிகள் "பிரிய விரும்புகிறவர்களுக்குப் பிரிய இடந்தரவேண்டியது நியாயமே யானுலும் முதலிலேயே பிரித்துவிட எண்ணுவது அடாத பாபச்செயலே யாகும்" என்று கூறினுர். "ஒன்று சேர்ந்து வாழ்வதுதான் நல்லது. ஒன்று சேர்ந்து வாழ்ந்தபின் ஒன்று சேர்ந்திருக்க முடியாது என்று கண்டால் பிரிந்துகொள்ளட்டும். அப்படிக்கின்றி இப்பொழுதே சேராதிருக்கும் உரிமையைக் கொடுப்பது விவாகத்துக்கு முன்பே விவாகரத்துசெய்வதுபோலாகும்" என்று ஆஸாதும் நேருவும் கூறினுர்கள்.

பிரிட்டிஷார் தாங்கள் வந்து செய்த நன்மைகளில் தேசத்தை ஒரே ஐக்கியமாக்கியது ஒன்று என்று எப்பொழுதும் பிரமாதமாகப் பெருமை பேசிக்கொள்வது வழக்கம். அப்படியிருக்க அவர்கள் இதுவரை அரும்பாடு பட்டு ஆக்கியதை இப்பொழுது அரைநொடியில் அழிக்க எண்ணுவதேன்?

நாட்டைப் பிரிக்கும் இந்த விஷயம்தான் கிரிப்ஸ் திட்டத்தில் பிரதானமானகுறை. கானடாவில் ஆங்கிலேய

ரையும் பிரஞ்சியரையும் - தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலேயரையும் டச்சுக்காரர்களையும் சேர்த்துவைத்தே சுதந்திரம் வழங்கினுர்கள். அமெரிக்காவில் தென்பாகம் பிரிய விரும்பியபொழுது, அது கூடாது என்று போர் நடந்து ஐக்யமாயிற்று. அப்படிச் சேர்ந்திருப்பதினுல்தானே இப்பொழுது அந்த நாடுகள் மிகுந்த பலமுடைய வல்லரசுகளாக விளங்குகின்றன. அப்படியிருக்க இந்தியாவை மட்டும் பிரித்து பலவீனப்படுத்த எண்ணுவதேன்? அப்படிப் பிரித்துவிட்டால் சுதந்திரம் என்பது ஏது? பிரிந்து நிற்கும் பாகங்கள் சண்டை பிடித்துக் கொள்ளாமலிருப்பதற்காக பிரிட்டிஷ் படைகள் சாஸ்வதமாக இருந்து கொண்டிருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் இந்த யோசனையோ?

இப்படி எத்தனையோ ஆட்சேபங்கள் எழுப்பக் கூடியதாயிருப்பதால், போர்க்குப்பின் செய்யப்போகும் விஷயத்தைப் பின்னுல் ஆலோசித்துக்கொள்வோம், இப்பொழுது உடனே செய்யவேண்டியதைப்பற்றிப் பேசுவோம் என்று ஆஸாதும் நேருவும் கிரிப்ஸிடம் கூறினுர்கள்.

போரில் இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெறுவதே பிரிட்டிஷாருடைய பிரதான நோக்கமாயிருந்தபடியால் கிரிப்ஸும் அவர்களுடைய யோசனையை ஏற்றுக் கொண்டு, உடனே தேசிய சர்க்கார் அமைப்பதாகக் கூறினுர்,

தேசிய சர்க்கார் அமைக்க விரும்புவது தேசத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசரமான நிலைமையை முன்னிட்டே யாதலால், அந்த விஷயமே முதலில் விவாதிக்கப் பட்டது.

தேசத்தில் எந்த நிமிஷம் தேர்தல் நடத்தினுலும் காங்கிரஸே வெற்றிபெறும் என்பதை அறிந்திருந்தபடி

யால் கிரிப்ஸ் காங்கிரஸ் தலைவர் ஆஸாதுடனும் நேருவுடனுமே பேசலானர்.

போருக்குப் பின்னுள்ள விஷயங்களைக் குறித்து அவராகவே பேசலாம், ஆனல் இப்பொழுது உடனே செய்ய வேண்டிய அரசியல் - பாதுகாப்பு விஷயங்களைக் குறித்து வைஸிராயிடமும் சேனதிபதியிடமும் கலந்துகொள்ள வேண்டியவரா யிருந்தார். அப்படியே அவர்களிடம் கலந்துகொண்டார், ஆஸாத்தையும் நேருவையும் கலந்து கொள்ளுமாறு கூறினர்.

இதன் பயனக அவர் சேனதிபதியின் யுத்த இலாகாவிலிருந்து சில விஷயங்களைப் பிரித்து, பாதுகாப்பு இலாகா என்ற பெயர்கொடுத்து, ஜனப்பிரதிநிதியான இந்தியர் ஒருவரை வைஸிராய் நிர்வாக சபையில் சேர்த்துக்கொண்டு, அவர்வசம் கொடுக்கப்படும் என்று கூறி அப்படிப் பிரித்துக்கொடுக்கும் விஷயங்களின் ஜாப்தாவை ஆஸாதுக்கு அனுப்பிவைத்தார்.

அப்படிப் பிரித்துக் கொடுப்பதாகக் கூறிய விஷயங்கள் எவை? துருப்புக்களுக்கு வேண்டிய ஹோட்டல்கள் முதலிய சௌகர்யங்கள் செய்தல், சேனைக்கு வேண்டிய பேப்பர், பென்ஸில் முதலியன தயாரித்தல், எதிரி வந்தால் ஊரைவிட்டு ஓட வசதிசெய்து கொடுத்தல், இப்படிப் பதின்மூன்று மகத்தான காரியங்கள் செய்ய இந்தியாவுக்கு உடனடியாகச் சுதந்திரம் கொடுத்து விடுவார்களாம்! இதைவிட நமக்கு என்னவேண்டும்? யார்க்கும் கிடையாத பரிபூரண சுதந்திரம் அடைந்த மாதிரிதானே!

காங்கிரஸ் கமிட்டியார் இது பொருந்தாது என்று கூறவே அமெரிக்க ஜனதிபதியின் பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்திருந்த கர்னல் ஜாண்ஸன் என்பவர் சமரஸம் பேச ஆரம்பித்தார்.அதன் பயனக புதியதோர் யோசனை ஆஸாதுக்கு அனுப்பப்பட்டது. ஆஸாத் திருத்தினர்,

கிரிப்ஸூம் திருத்தினர். அப்படித்திருத்தி முடிந்த யோசனை சேனதிபதியின் இலாகா போர் நடைமுறையை யும் பாதுகாப்பு மெம்பரின் இலாகா அதுபோக எஞ்சிய பாதுகாப்பு விஷயங்களையும் கவனித்துக்கொள்ளும் என்பதாகும்.

இப்படி முடிவாக இருவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு யோசனைக்கு வந்துகொண்டிருப்பதை அறிந்த இந்திய மகாஜனங்கள் சரி, முட்டுக்கட்டை தீர்ந்துவிடும், போரில் இறங்கி ஜப்பானைத்துரத்தி விடுவோம் என்று எண்ணி ஞர்கள்.

ஆனல் பிரிட்டிஷ் தெய்வத்துக்கு அது ஏற்குமா? இலாக்காக்களைப் பிரிப்பதுபற்றி யோசனை முடிந்தாலும் இந்தியப் பாதுகாப்பு மெம்பரிடம் தரப்படும் விஷயங்கள் எவை என்பது காங்கிரஸூக்கு விளங்கவில்லை. அதனல் ஆஸாதும் நேருவும் ஏப்ரல் 9-ம் தேதி மாலை கிரிப்ஸைக் கண்டு கேட்டார்கள். அதற்கு அவர் பழைய "காகிதம் பென்ஸில்" ஜாப்தாவையே காட்டினர்!

அதுமட்டுமன்று, கிரிப்ஸ் ஆஸாத் நேருவைக் கண்டு பிரிட்டிஷ் திட்டத்தைக் கூறிய நாள்முதல் சம்பாஷணை களிலும் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகளிலும் "தேசீய சர்க்கார்" - "மந்திரிசபை" என்ற மொழிகளையே உபயோகித்து வந்தபடியால் எல்லோரும் இப்பொழு துள்ள வைஸிராய் நிர்வாகசபை போய்விடும், இங்கிலாந்தி லுள்ளது போன்ற மந்திரிசபை ஏற்பட்டுவிடும் என்று எண்ணினர்கள். ஆனல் இப்பொழுது வைஸிராயும் நிர் வாக சபையும்தான், வேறுமாற்றம் கிடையாது என்று கூறி ஆஸாதையும் நேருவையும் வெறுங்கையோடு அனுப்பிவைத்தார்.

அத்துடனில்லாது மறுநாள் ஆஸாத்துக்கு "இந்தியா வைக் காக்கவேண்டியது பிரிட்டிஷாரின் பொறுப்பு;

அப்படி யிருக்க நீங்கள் சேனதிபதியின் காரியங்களில் தலையிடவிரும்புகிறீர்கள் ; தேசீய சர்க்காரை மந்திரிசபை முறையில் அமைக்க வேண்டுமானல் அரசியல் சட்டம் புதிதாகச் செய்யவேண்டாமா, அது யுத்தசமயத்தில் சாத்தியமா ? சட்டம் வேண்டாம், ஒப்பந்தம் போதும் என்று கூறினல் சிறுபான்மையோரைப் பெரும்பான்மை யோர் அடக்கிவிடுவார்களே, சிறுபான்மையோரைக் காப்பதாக நாங்கள் வாக்களித்திருக்கிறோம் அல்லவா, அதனல் பிரிட்டிஷ் சர்க்காரின் திட்டத்துக்கு அதிகமாக ஒன்றும் செய்ய முடியாது '' என்று ஒரு கடிதமும் எழுதினர்.

அதற்கு ஆஸாத், "நாங்கள் சேனதிபதிக்கு நியாயமாகவுள்ள அதிகாரத்தைக் கொஞ்சமும் குறைக்க விரும்பவில்லை, அதற்குப்பதிலாக அவர்க்கு வேறு சில அதிகாரங்களும் கொடுக்ககூடத் தயாராயிருந்தோம், உங்களுக்கு ஜனங்களிடம் நம்பிக்கையில்லை என்பதே உண்மை, ஆனல் ஜனங்களை நம்பாதவரை சரியான பாதுகாப்பை ஏற்படுத்த முடியாது என்பதை மறந்துவிடுகிறீர்கள் ; நாங்கள் தங்களைக் கண்ட முதல்நாளிலேயே இங்கிலாந்தில் அரசரும் மந்திரி சபையும் இருப்பது போலவே இங்கே வைஸிராயும் மந்திரிசபையும் கூடிய தேசீய சர்க்காரை அமைப்பதாகக் கூறினீர்கள். ஆனல் இப்பொழுது பழய நிர்வாக சபையையே காட்டுகிறீர்கள். நாங்கள் புதிய சட்டம் செய்யவேண்டும் என்று சொல்லவில்லை, நமக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டால் போதும் என்றே கூறினேம். பெரும்பான்மையோர் ஏதேச்சாதிகாரம் என்ற விஷயம் இதுவரை கிளம்பவில்லை. அதிகாரத்தை மாற்றிவிட்டால் அது எளிதில் தீர்ந்துவிடும். அதுவும் தவிர காங்கிரஸ் அதிகாரம் கேட்பதெல்லாம் தனக்கன்று, இந்திய மகாஜனங்கள் எல்லோர்க்குமே, அதனல் எல்லோரும் சேர்ந்த மந்திரிசபை அமைத்துவிடுவதில் கஷ்டம் ஏற்

படாது. பிரிட்டிஷ் சர்க்கார்மட்டும் பிரித்தாளும் முறையை விட்டுவிடட்டும், உடனே ஒற்றுமை உண்டாய்விடும். ஆனால் நடப்பதைப் பார்த்தால் அவர்கள் அதிகாரத்தைக் கொடாமலிருப்பதற்காக ஜனங்களிடைப் பிளவுகளை உண்டாக்கி வருவதில் கண்ணுயிருக்கிறார்களேயன்றி எங்களைப்போல் தேசப் பாதுகாப்பில் கண்ணுயில்லை என்று முடிவுசெய்ய வேண்டியவர்களா யிருக்கிறோம்" என்று பதில் எழுதினார்.

இந்தவிதமாக கிரிப்ஸ் திட்டம் பத்துநாள் அதிசயமாக இருந்து மறைந்து போயிற்று. கிரிப்ஸுக்குத் தாம் வந்த காரியம் பலனடையாமற் போயிற்றே என்று வருத்தம். வைஸிராயின் நிர்வாக சபையில் மெம்பராயிருந்த டாக்டர் ராகவேந்திரராவ் கூறியதுபோல, கிரிப்ஸ் இந்தியர்கள் என்ன கூறினாலும் எளிதில் நம்பிவிடும் பேதைகள் என்று எண்ணியிருந்தார். ஏமாந்துபோனார். அதனால் கோபம் உண்டாய்விட்டது. காங்கிரஸ்தான் காந்தியடிகளின் போதனையைக் கேட்டு காரியத்தைக் கெடுத்துவிட்டது என்று தூற்ற ஆரம்பித்தார்.

காந்தியடிகளின் அஹிம்சா போதனை கிரிப்ஸ் திட்டத்துக்குக் குறுக்கே நிற்கவில்லை. காந்தியடிகள் உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள் என்று டில்லியிலிருந்து வார்தாவுக்குப் போய்விட்டார். காங்கிரஸ் கமிட்டியார் தேசப்பாதுகாப்பு விஷயத்தில் ஹிம்சைமுறையைப் பின்பற்றத் தயாராயிருந்தது கிரிப்ஸுக்கு நன்றாய்த் தெரியும்.

காங்கிரஸ் கெடுத்துவிட்டதாகக் கூறுகிறாரே, அவர் எதைக் கொடுக்கத் தயாராயிருந்தார்? அவர்கள் எப்படிக் கெடுத்துவிட்டார்கள்?

கிரிப்ஸ் முதலில் தேசீய மந்திரிசபை அமைப்பதாக வாய்ப் பாயஸம் காய்ச்சினார். அவர்க்கு அப்படிக் கூற

அதிகாரம் உண்டா என்று கேட்டதற்கு ஆமாம் என்றும் கூறினார். ஆனால் கடைசி நேரத்தில் தேசிய சர்க்கார் கிடையாது, வைஸிராயின் நிர்வாக சபையில் சேனாதிபதி தவிர மற்ற மெம்பர்கள் எல்லோரும் இந்தியராகச் செய்வோம், வைஸிராய், இந்தியா மந்திரி, பார்லிமெண்டு இவர்கள் அதிகாரங்கள் எல்லாம் போர்முடிந்து புது அமைப்புத் தயாராகும்வரை அப்படியேதான் இருக்கும் என்று கூறினார். பாதுகாப்பு விஷயமோ என்று கேட்டதற்கு காப்பிக்கடை காகிதம் பென்ஸில் போன்ற விஷயங்களைக் காட்டினார்.

இதைக்கொண்டு எந்த இந்தியனாவது திருப்தி அடைய முடியுமா? காங்கிரஸ் மட்டுமா, சகல கட்சியாரும் கிரிப்ஸ் திட்டத்தை வேண்டாம் என்று கூறினார்கள். அப்படியிருக்க காங்கிரஸ்மீது குறை கூறலாமா?

பிரிட்டிஷ் பத்திரிகையாகிய கல்கத்தா ஸ்டேஸ்மென் "காரியம் கெட்டுப்போனதற்குக் காரணஸ்தர் காங்கிரஸ்காரர் அல்லர், கவர்ண்மெண்டாரே" என்று கிரிப்ஸ் இந்தியாவைவிட்டுப் புறப்பட்டுப் போகுமுன்பே உண்மையை வெளியாக்கிற்று. அதனால் அதுதான்காரணம் என்பதை அவரும் ஒப்புக்கொள்கிறார் என்பதில் சந்தேகமில்லை. அப்படியிருக்க அதைவிட்டு வேறு விபரீதமான காரணங்கள் கூறுவானேன்?

கிரிப்ஸ் பல வருஷங்களாக இந்தியா விஷயத்தில் அனுதாபம் காட்டிவந்தவர் - நேரு முதலிய பல காங்கிரஸ் தலைவர்களின் நண்பர் - இதற்குமுன் இந்தியாவுக்கு வந்தபொழுது ஜனங்களால் இராஜ உபசாரம் செய்யப் பெற்றவர் - இரண்டு வருஷங்களுக்குமுன் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படாதவரை சுதந்திரமில்லை என்று கூறுவது தவறு என்று எழுதியவர் - போரின் ஆரம்பத்

தில் 'நாம் ஜனநாயகத்துக்காகப் போர்செய்வது உண்மையானால் போலந்திடம் பரிவுகாட்டுவதுபோலவே இந்தியாவிடமும் காட்டவேண்டாமா?' என்று பார்லிமெண்டுசபையில் முழங்கியவர். அப்படிப்பட்டவர் இப்பொழுது ஹிந்து முஸ்லிம் வேற்றுமையைக் காட்டுவதும், காந்தியடிகளின் கருத்தைத் திரித்துக் கூறுவதும், காங்கிரஸ்மீது பழி சுமத்துவதும் ஏன்?

"ஏகாதிபத்திய யந்திரத்தில் ஒரு சக்கரமாய்விட்டபடியால் அவருக்கு அதனுடைய குணம் வந்துவிட்டது" என்று காந்தியடிகள் கூறுவதுதான் காரணம். ஆம், நேரு கூறுவதுபோல அவர் சாத்தானுக்கு வக்காலத்து வாங்கிவிட்டார். அந்தப் புண்ணிய மூர்த்தியின் வக்கீல் இந்தவிதமாகப் பேசாமல் எந்தவிதமாகப் பேசுவார்?

அப்படி ஏகாதிபத்திய இரத்தம் ஓட ஆரம்பித்துவிட்டபடியினால்தான், அவர் சம்பாஷணைகள் நடத்திய காலத்திலேயே, "வேற்றுமை உண்டாக்கிக் கொண்டிருந்தால் விரும்பியபடி எல்லாம் ஆளலாம்" என்னும் ஏகாதிபத்திய இராஜதந்திர சாஸ்திரத்தின் முதற் சூத்திரத்தைக் கையாள ஆரம்பித்து விட்டார்.

வைஸிராய் நிர்வாகசபை மெம்பராயிருந்த டாக்டர் ராவ் கூறியதுபோல அவர் ஒருவரிடம் பேசியதுபோல ஒருவரிடம் பேசாமல் ஆளுக்கு ஆள் வேறு விதமாகப் பேசினார். இப்படி வித்யாசமாகப் பேசி மனக்கசப்பு ஏற்படச் செய்வது கூடாது என்று பிரிட்டிஷ் பிரதம பிஷப் டாக்டர் டெம்பிள் கண்டித்தது யாவரும் அறிவார்கள்.

முஸ்லிம் பத்திரிகைகள்—ஹிந்துப் பத்திரிகைகள் என்ற பாகுபாடு இதுவரை கேட்டிருக்கிறோமா, இல்லையே. அப்படியிருக்க கிரிப்ஸ் ஆஸாதுக்கு எழுதிய

கடிதமொன்றில் ‘ஹிந்துப் பத்திரிகைகள்’ என்று குறிப்பிடலானார். ஆனால் உடனேயே ஆஸாத் அது தவறு என்று காட்டி கிரிப்ஸை மன்னிப்புக் கேட்குமாறு செய்ததையும் யாவரும் அறிவார்கள்.

ஆகவே ‘தார் எண்ணெய்யைத் தொட்டால் அசுத்தமாகாமல் இருக்க முடியாது’ என்னும் ஆங்கிலப் பழமொழியை இந்த ஆங்கிலேயர் மறந்து விட்டதேன்? அவர் மறந்துபோய் அசுத்தமாக்கிக் கொண்டதற்கும் அதை இன்னும் அகற்றுமல் இருப்பதற்கும் காரணம் யாது?

# ஆகஸ்டு தீர்மானம்

கிரிப்ஸ் வந்தார். கட்சித் தலைவர்களிடம் பிரிட்டிஷ் திட்டத்தைத் தெரிவித்தார். ஆனால் மிதவாதிகளுக்குச் செல்வாக்கு கிடையாது. முஸ்லிம் லீக் நமது பிரிட்டிஷாரின் செல்வப் பிள்ளை, அவர்கள் சொல்லைத் தட்டாது.

'அதிகத் திறமை வாய்ந்த அரசியல் ஸ்தாபனம் காங்கிரஸ் ஒன்றே, அதுவே அனைவரையும் அணைத்து தேசிய மயமாயிருப்பது' என்று 1940 ஆகஸ்டில் அமரி துரை பார்லிமெண்டு சபையில் கூறியதால் இந்தியர் மனப்பேழையின் சாவி காங்கிரஸிடமேதான் உண்டு என்று தெரிந்திருந்தபடியால் காங்கிரஸ் தலைவர்களுடனேயே விவாதங்களை நடத்தினர். ஆனால் உண்டான பலன் யாது?

கிரிப்ஸ் வரப்போகிறார் என்று கேட்டவுடன் இந்திய மக்கள் நம்முடைய கிரிப்ஸா, நமக்குக் கட்டாயம் நன்மையான யோசனைகளையே கொண்டு வருவார் என்று மனப்பால் குடித்தார்கள். சர்ச்சிலும், ரஷ்யர்கள் கிரிப்ஸிடம் நம்பிக்கை வைத்திருந்தபடியால் கிரிப்ஸ் போய் ரஷ்யாவை நம் பக்கம் திருப்பிவிட்டார், அதுபோல் இந்தியர்க்கும் கிரிப்ஸிடம் நம்பிக்கை இருப்பதால் அவர்களையும் நம் பக்கம் திருப்பிவிடுவார் என்று எண்ணியே அமரியை அனுப்பாமல் கிரிப்ஸை அனுப்பி வைத்தார்.

கிரிப்ஸ் வந்தால் நன்மை கிடைக்கும் என்று இந்தியர் எதிர்பார்த்ததும் சரி, கிரிப்ஸ் போனால் இந்தியா ஒத்துழைக்கும் என்று சர்ச்சில் எதிர்பார்த்ததும் சரி. ஆனால் ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை கூறியபடி 'இந்தத் திட்டம்

கொண்டுவந்து யார்தான் வெற்றிபெற முடியும்?' உணவு வேண்டிய சமயத்தில் உமியைக் காட்டினால் ஒப்புக் கொள்ள முடியுமா? இந்தியரிடம் அதிகாரத்தைக் கொடுக்க வேண்டிய சமயத்தில் நிர்வாக சபையை இந்திய மயமாக்குகிறோம் என்று கூறினால் யார்தான் ஏற்றுக் கொள்வார்கள்? இந்தியாவின் பாதுகாப்பை இந்தியர் கையில் ஒப்படைக்க வேண்டிய சமயத்தில் சேனைக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்யுங்கள் என்று கூறுவது என்ன பிரயோஜனம் தரும்?

ஜப்பான் சைனாவைத் தாக்க ஆரம்பித்துவிட்டது, இந்தியாவை எந்த நிமிஷம் தாக்குமோ, தடுக்கப் போது மான பலமில்லையே, நாஜி வெள்ளம் ரஷ்யாவுக்குள் காடு மலை என்று பாராமல் ஓட ஆரம்பித்து விட்டதே, ஆப்பிரிக்காவில் அலக்ஸாண்டிரியாவரை எட்டிவிட்டதே, பிரிட்டிஷ் சர்க்கார் பிறர்க்கு உதவி அனுப்ப முடியாத நிலைமையில் இருக்கிறார்களே என்று சர்க்காரும் ஜனங் களும் பயந்து கொண்டிருந்தார்கள்.

சென்னை முதலிய கீழ்கரை நகரங்களைக் காலி செய்யு மாறு ஜனங்களைக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். ஜனங்கள் அப்படிச் செய்வதில் அளவில்லாத கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளானார்கள். பர்மாவிலும் மலேயா விலும் ஆயிரக்கணக்கான இந்தியப் போர் வீரர்கள் இறந்தும் அகப்பட்டும் போனது தவிர 50 ஆயிரம் இந்திய ஜனங்கள் கடல் மார்க்கம் வரமுடியாமல் காடு மலை கடந்து கால் நடையாக வந்ததில் பட்ட கஷ்டங்கள் இத்தனை என்று கூற முடியாது. அதில் சர்க்கார் உத்யோகஸ்தர்கள் ஐரோப்பியர்களுக்கு விசேஷ சௌகர் யங்கள் செய்து கொடுத்ததைக் கண்டித்து நேரு அறிக்கை வெளியிட்ட பின்னர் வைஸிராயின் நிர்வாக சபை மெம்பர் ஆனே அது உண்மைதான், அதைத் தடுக்க

ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். இந்தவிதமாக வந்தவர்களில் ஆயிரக் கணக்கானவர் வழியிலேயே மரணம் அடைந்தார்கள். உயிர் தப்பி வந்தவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடிவந்தபடியால் ஏழைகளாய்த் தவித்தார்கள்.

அத்துடன் விலைவாசிகள் நாளுக்கு நாள் அதிகமாக விஷம்போல் ஏற ஆரம்பித்து விட்டன. சர்க்கார் உணவுப் பிரச்னை விஷயத்தில் சரியான கவனம் செலுத்தவுமில்லை. கவனம் செலுத்தக் கூடிய ஜனநாயக சர்க்காரை ஏற்படுத்தவுமில்லை.

கிரிப்ஸ் வந்துபோனதில் இந்திய மக்கள் ஏமாற்றமே அடைந்தார்கள். இந்தச் சமயத்தில்கூட இங்கிலீஷ்காரர் அசையமாட்டோம் என்கிறார்களே, இவர்கள் தேசத்தைக் காப்பாற்றும் விஷயங்கூட சந்தேகத்திலிருக்கிறதே என்ற எண்ணம் ஜனங்களிடையே உதிக்கலாயிற்று. இப்பொழுதுபோல எந்தக் காலத்திலும் இந்தியர் இவ்வளவு வெறுப்பு இங்கிலாந்திடம் காட்டியதில்லை என்று லின்லித்கோ பிரபு லூயிபிஷர் என்ற அமரிக்க அறிஞரிடம் கூறியதுதான் அப்பொழுதுள்ள நிலைமை.

இப்படி அரசியல், உணவு, போர் மூன்று விஷயத்திலும் ஜனங்கள் பரம அதிருப்தி அடைந்துள்ள நிலைமையில் யார்தான் சும்மா கைகட்டிக்கொண் டிருக்க முடியும்? கைகட்டிப் பார்த்துக்கொண்டு நில்லுங்கள் என்று சர்க்கார் கூறினாலும் ஜனங்களுக்கு உண்டாயிருந்த கஷ்டத்தையும் பயத்தையும் காண காந்தி அடிகளுக்குப் பொறுக்க முடியாமல் ஆய்விட்டது. அதனால் அவர் வேதனை சகிக்க முடியாமல், "இந்தியாவை விட்டுப் போங்களேன்" என்று கூறலானார். ஆனால் சர்க்கார் அவருடைய பரமதயவான வேண்டுகோளைக் கவனித்து வேண்டுவன செய்யாமல் அதற்குப் பதிலாக இதோ பாருங்கள், இந்த

இக்கட்டான வேளையில் எங்களையும் எங்கள் சேனைகளை யும் போகச் சொல்லுகிறாரே, இது சாத்தியமான காரியமா என்று உலகத்துக்குப் பறைசாற்ற ஆரம்பித்தார்கள்.

காந்தி அடிகள் பிரிட்டிஷ் ஜனங்களையும் பிரிட்டிஷ் அமெரிக்கத் துருப்புக்களையுமா போகச் சொன்னார், போகச் சொன்னது பிரிட்டிஷ் அதிகாரத்தைமட்டும் தானே ?

சர்க்கார் கூறுவது சரியா என்று கேட்டபொழுது காந்தி அடிகள் "பிரிட்டிஷ் துருப்புக்கள் இருக்க வேண்டியது அவசியமே, ஆனால் அவர்கள் நமது யஜமா னர்களாக இராமல் சுதந்திர இந்தியாவின் நண்பர் களாகவே இருக்க வேண்டும்" என்று தெளிவாக சந்தே கத்துக்கிடமில்லாதபடி பதிலெழுதினார். அதுபோலவே நேருவும் இந்தியாவை விட்டுப் போங்கள் என்னும் சொற்றொடரின் பொருளை விளக்கினார்.

அதுமட்டும் அன்று. லூயி பிஷர் காந்தி அடிகளைப் பார்க்கப் போயிருந்தபொழுது மகாத்மாவின் காரியதரிசி, மகாத்மா வைசிராயைத் சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். பிஷரும் வைசிராயிடம் அது விஷயத்தைத் தெரிவித்தார். ஆனால் வைசிராய் சும்மா யிருந்து விட்டார்.

அதன்பின் காந்தியடிகள், இவ்விஷயத்தில் தலையிட்டு ஒழுங்கு செய்யுமாறு வேண்டி ரூஸ்வெல்ட்டுக்கு ஒரு கடிதம் எழுதினார். நேச தேசங்களில் ஒன்றாகிய சைனா வின் சேனாதிபதி சியாங்கே ஷேக்குக்கு "யார் தாக்கி னாலும் எதிர்க்க வேண்டும் என்பதே என் எண்ணம். ஆனால் அடிமையாய் இருக்கும்வரை அப்படிச் செய்ய முடியாது" என்று எழுதினார்.

ஏதேனும் சமரசமாக நடைபெறாதா என்று காந்தி யடிகளும் காங்கிரஸ் கமிட்டியாரும் ஒரு மாத காலம்

எதிர் பார்த்துக்கொண்டு நின்ருர்கள். ஆனுல் சர்க்கார் இந்திய மக்களைச் சமாதானப் படுத்த யாதொன்றும் செய்யாமல் இருந்துவிட்டார்கள்.

ஆதலால் 1942 ஜுலை மாதம் 15-ந் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டியார் வார்தாவில் கூடி இந்தியாவுக்கு உடனே பூரண சுதந்திரம் கேட்பதாகவும், இல்லையாளுல் சமூக சாத்வீக சட்டமறுப்புப் போர் நடத்த காந்தியடிகளுக்கு அதிகாரம் கொடுப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றினுர்கள். அதை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியார் ஆகஸ்ட் 8-ம் தேதி பம்பாயில் கூடி ஊர்ஜிதம் செய்தார்கள். இதுவே சர்க்கார் இடைவிடாது ஸ்மரித்து வரும் "ஆகஸ்டுத் தீர்மான"மாகும்.

# காங்கிரஸ் சிறைவாசம்

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியார் ஆகஸ்ட் தீர்மானம் செய்த மறுநாள் காலை விடியுமுன், காந்தியடிகளும் காரியக் கமிட்டியாரும் கைதி செய்யப்பட்டார்கள். இப்படித் திடீரென்று கைதி செய்ததின் காரணம் அவர்கள் நிறைவேற்றிய தீர்மானந்தான் என்று அரசாங்கம் கூறுகின்றது. அப்படி அதில் சர்க்கார்க்கு விரோதமான காரியம் ஏதேனும் உண்டா?

தீர்மானத்தில் (1) பூரண சுதந்திரக் கோரிக்கை, (2) சட்ட மறுப்பு ஆரம்பிக்க காந்தியடிகளுக்கு அதிகாரம் என்று இரண்டு பாகங்கள் உள.

பூரண சுதந்திரக் கோரிக்கையாவது :—இந்தியாவைத் தாக்க வருபவர்களை எதிர்க்கக்கூடிய சக்தியை வளர்க்கவும், ஜனங்களுக்கு சர்க்காரிடம் நல்லெண்ணம் உண்டாகுமாறு செய்யவும், சகல தேசங்களுக்கும் சுதந்திரம் கிடைப்பதற்காக நேச தேசங்களுடன் இந்தியாவும் ஒரு நேசதேசமாகச் சேரவும், உடனே இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுப்பதாக பிரிட்டிஷ் சர்க்கார் பிரகடனம் செய்யவேண்டும். அது உண்மை என்று காட்ட பெரிய கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு கூட்டு தேசிய சர்க்கார் அமைத்து போரை வெற்றிகரமாக நடத்தும் பொருட்டு தேசத்தின் சக்திகளை எல்லாம் திரட்டும்படி செய்யவேண்டும்.

இதுதான் காங்கிரஸ் கோரிக்கையின் சாரம். காங்கிரஸ் தலைவர் "பூரண சுதந்திரம் இனிமேல் தருவ

தாகச் சொன்னால் போதாது, இப்பொழுதே தந்துவிட வேண்டும், அதைத் தந்துவிட்டால் நாம் உடனே நேச தேசத்தாருடன் ஒரு நேச தேசமாகச் சேர்ந்துகொள்வோம்" என்று கூறினர்.

பண்டித நேரு—"நானும் துப்பாக்கி எடுத்து ஜப்பானை எதிர்க்கத் தயார், ஆனால் சுதந்திர புருஷனால் தான் அப்படிச் செய்ய ஆற்றல் வரும்" என்று கூறினர்.

இவ்விதமாகப் பூரண சுதந்திரம் கேட்டது தவறு? பூரண சுதந்திரம் நமது திலக மகரிஷி கூறியதுபோல ஒவ்வொரு தேசத்தார்க்கும் பிறப்புரிமை அல்லவா? அத்துடன் காங்கிரஸ் அதுதான் எங்கள் லட்சியம் என்று இன்று நேற்று கேட்கவில்லையே, சென்ற இருபத்தைந்து வருஷ காலமாகக் கூறுவது சர்க்கார்க்கும் தெரியுமே. அரசாங்கமும் 1919-ம் வருஷத்து அரசியல் சட்டத்திலேயே பூரணமான பொறுப்பு வாய்ந்த அரசியலுக்கு வழி கோலுவதாகக் கூறவில்லையா? இப்பொழுது கிரிப்ஸ் வந்து, இஷ்டப்பட்டால் பிரிந்து கொள்ளும் உரிமையுடைய டொமினியன் அந்தஸ்து தருவதாகக் கூறவில்லையா? அதுவுந்தவிர அட்லாண்டிக் சாஸனம் சகல தேசங்களும் சுதந்திரம் பெறுவதற்காகவே போர் நடப்பதாகக் கூறுகிறதே, அப்படியானல் இந்தியா மட்டும் சுதந்திரதாகம் கொள்ளக் கூடாதா?

இப்பொழுது உடனே அரசியல் அமைப்பை நிர்மாணித்துவிட வேண்டும் என்று கேளாமல் போரை வெற்றிகரமாக நடத்தக் கூடிய தற்காலிக கூட்டு மந்திரி சபை தானே ஏற்படுத்தும்படிக் கோருகிறது. அதிலும் குற்றம் உண்டா?

சர்க்கார் காந்தி அடிகளையும் காங்கிரஸ் தலைவர்களையும் இந்த இரண்டு காரணங்களுக்காக கைதி செய்திருக்க முடியாது.

அப்படியானால் சட்டமறுப்புச் செய்வதாகச் சொன்னதுவே காரணமாயிருக்க வேண்டும். ஆனால் ஒருவன் சட்ட மறுப்புச் செய்வேன் என்றவுடன் அவனைக் கைதி செய்து விடலாமா? அப்படிச் சொன்னவன் செய்யாமல் இருந்து விடவும் செய்யலாம் அல்லவா? இதோ செய்யப் போகிறேன் என்று செய்ய ஆரம்பித்தால்தானே கைதி செய்யலாம்?

காங்கிரஸ் கமிட்டியார் என்ன சொன்னார்கள்? அவர்கள் போர் ஆரம்பமானதுமுதல் சர்க்காருக்கு இடைஞ்சல் விளைவிக்கக் கூடாது என்றே நடந்து வந்திருக்கிறோம், அதனாலேயே காந்தியடிகள் கூறிய மாதிரியில் சத்தியாக்ரகம் செய்தால் பிரயோஜனப் படாது என்று தெரிந்திருந்தும் அந்த மாதிரியிலேயே செய்தோம், ஆனாலும் எங்கள் எண்ணத்தை மதித்து அதிகாரத்தை அளிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம், இப்பொழுதும் எங்களுக்கு இடைஞ்சல் செய்ய விருப்பமில்லை, நேச தேசங்களுக்கு உதவி செய்யவே விரும்புகிறோம், ஆனால் சர்க்கார் எங்கள் வேண்டுகோளை நிராகரித்து விட்டால் நாங்கள் சும்மா இருக்க முடியாது, சும்மாயிருந்தால் தேசத்தின் எதிர்ப்புச் சக்தி குறைந்து போகும், அதனால் அஹிம்ஸா சக்தியைக்கொண்டு சுதந்திரப் போர் நடத்த வேண்டியவர்களாவோம் என்றே கூறினார்கள்.

உடனே சட்டமறுப்பு ஆரம்பிப்போம் என்று கூறவில்லை. உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம், நீங்கள் நிராகரித்து விட்டால் ஆரம்பிக்க வேண்டியவர்களாவோம் என்றே கூறினார்கள்.

அதனாலேயே காந்தியடிகளும் "தீர்மானம் நிறைவேறியவுடன் சட்டமறுப்பு ஆரம்பமாகிவிடாது. சட்ட மறுப்பு ஆரம்பிக்குமுன் நான் எப்பொழுதும் செய்வது போல வைஸ்ராய்க்குக் கடிதம் எழுதி நம்முடைய

வேண்டுகோளுக்கு இணங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வேன்" என்று ஆகஸ்ட் ஆறும் தேதியே கூறினார்.

அப்படிக் கடிதம் எழுதுமாறு விட்டிருந்தால் காந்தியடிகள் சத்யாக்கிரஹம் நடத்தாமல் இருப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்திருப்பார். ஒருவேளை சத்தியாக்ரஹம் ஆரம்பித்தாலும் சர்க்காருக்கு இடைஞ்சல் கொடுக்க விரும்பாததால் சாத்வீகத்திலும் சாத்வீகமான முறையில் நடத்தியிருப்பார்.

ஆகவே சட்டமறுப்பு ஆரம்பிக்கவும் இல்லை, ஆரம்பிக்கத் தேதி குறிப்பிடவுமில்லை, அதைத் தவிர்க்கும் பொருட்டு வைஸ்ராய்க்கு கடிதம் எழுதவே எண்ணியிருந்தார். ஆனால் சர்க்கார் அதற்கு இடங்கொடாமல் தீர்மானம் நிறைவேறிய மறுநாள் சூரியன் உதிக்கு முன்பே கைதி செய்துவிட்டார்கள்.

இந்த அவசரமேன்? ஒருவேளை கடிதம் எழுதுவதாகக் கூறிக்கொண்டே ரகஸ்யமான ஏற்பாடுகள் செய்துவிடுவார்கள் என்று எண்ணி அவசரப்பட்டு விட்டார்களோ? ஆனால் காந்தியடிகளிடம் ரகஸ்யமாகக் காரியஞ் செய்தல் என்பது ஒருநாளும் கிடையாதே. எது செய்தாலும் பகிரங்கமாகச் சொல்லிச் செய்வதுதானே அவருடைய வழக்கம். அஹிம்சா தர்மம் ரகஸ்யம் என்பதை அணுவளவும் சம்மதியாதல்லவா? அஹிம்சா தர்மம் தானே காந்தி அடிகளின் உயிர்நாடி?

அப்படியானால் சர்க்கார் அவசரப்பட்டதற்குக் காரணம் யாது? மஹாத்மா காந்தியடிகள் கைதியான ஐந்தாவது நாள் வைஸ்ராய்க்கு எழுதிய கடிதத்தில் "நாங்கள் சத்யாக்ரகம் நடத்தும் விஷயத்தில் மிதமிஞ்சிய ஜாக்ரதையும் காலதாமதமும் செய்வதைக் கண்டு உலகத்தார், சர்க்கார் சுதந்தரம் தராமலிருப்பதற்குக் கூறும் காரணங்கள் சாரமற்றவை என்று கண்டு

கொண்டு எங்கள் பால் அநுதாபங்காட்ட ஆரம்பித்து வருவதைக்கண்டு சர்க்கார் பயந்துதான் இப்படி அவசர மாகக் கைதுசெய்து விட்டார்களோ என்று எண்ண வேண்டி யிருக்கிறது"—என்று குறிப்பிட்டதுதான் காரணமோ?

பத்து வருஷங்களுக்கு முன் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் சர்ச்சில் "காந்திக்கு விட்டுக் கொடுப்பது என்பதை நான் எதிர்க்கிறேன், அவருடன் பேசுவதையும் ஒப்பந்தம் செய்வதையும் எதிர்க்கிறேன், அவர் நம்முடைய வியாபாரத்தை இந்தியாவிலிருந்து சாஸ்வதமாக விரட்டி விடுவதற்கே முயன்று கொண்டு இருக்கிறார். என்றைக்கேனும் ஒருநாள் காந்தியின் கொள் கையைப் பிடித்து நசுக்கிவிடவேண்டும் என்பதே நாம் அறியவேண்டிய உண்மையாகும்" என்று கூறினரே அதுதான் காரணமோ?

எந்தக் காரணமாயிருந்தாலும் சர்க்கார் ஆகஸ்ட் ஒன்பதாந்தேதி காலை கைது செய்துவிட்டார்கள். மறு நாள்முதல் நாட்டில் ஹர்த்தால் கண்டனக் கூட்டங்கள் போன்றவை நடந்ததோடு அஹிம்சா தர்மத்திற்கு விரோதமான பலவிதமான காரியங்களும் நடைபெற்றன.

ஏதோ சில காங்கிரஸ்காரர்கள் விஷயம் தெரியாமல் கலந்திருந்தாலும் பொதுவாகக் காங்கிரஸ்காரர்கள் எல் லோரும் அஹிம்சா விரோதமான காரியங்களைக் கண்டு வருந்தவும் கண்டிக்கவும் செய்தார்கள்.

அவைகளை அடக்குவதற்காக அரசாங்கத்தார் கை யாண்ட அடக்குமுறை பிரிட்டிஷ் நண்பரான லூயி பிஷர்கூட 'அச்சு நாட்டாரிடம் காட்டவேண்டிய வீரத்தை எல்லாம் அடிமை நாட்டாரிடம் காட்ட ஆரம் பித்து விட்டார்களே' என்று எண்ணும்படி அவ்வளவு கடுமையானதாக யிருந்தது.

"ஜனங்கள் ஹிம்ஸை முறையில் இறங்கியது உண்மைதான்; ஆனால் சர்க்கார் கிறிஸ்துவின் அஹிம்ஸா தர்மத்தைப் பின்பற்ற முடியாவிட்டாலும் அவருக்குமுன் மோசே பல்லுக்குப் பல் பழிவாங்கும்படி கூறியபடியாவது நடந்தார்களா? ஒரு பல்லுக்கு பதினாயிரம் பல் வாங்க அல்லவோ செய்தார்கள்? அது சிம்மம் ஹிம்ஸை செய்யப் புறப்பட்டது போலல்லவோ?" என்று காந்தியடிகள் வைசிராய்க்கு எழுதிய கடிதம் ஒன்றில் கேட்டார்.

## காந்தியடிகளின் உபவாசம்

ஜனங்கள் அஹிம்சா விரோதமான காரியங்கள் செய்தார்கள். சர்க்கார் அடக்குமுறையைக் கையாண்டார்கள். பொருளாதார நிலைமை நாளுக்குநாள் மோசமாய்க் கொண்டு வந்தது. விலைவாசிகள் தலைகால் தெரியாமல் கூடிவிட்டன. பஞ்சமும் நோயும் அதிகரிக்கலாயின. இப்படியாக மாதங்கள் கழிந்துகொண்டு வந்தன. ஆயினும் அரசியல் முட்டுக்கட்டையை நீக்கி அமைதியுண்டாக்க யாதொரு முயற்சியும் நடைபெறவில்லை.

ஆனால் காந்தியடிகள் ஆகாகான் மாளிகையான சிறைக்குள் புகுந்து ஆறுமாதம் நிறைந்த மறுநாள் அதாவது 1943 பெப்ரவரி 10-ந் தேதி அரசாங்க அறிக்கை ஒன்று வெளிவந்தது. அதைக் கண்டதும் இந்திய மக்கள் மட்டுமன்று, உலகத்தின் பல பாகங்களில் உள்ளவர்களும் திடுக்கிட்டுப் போனார்கள்.

அரசாங்க அறிக்கை, காந்தி அடிகளுக்கும் வைசிராய்க்கும் கடிதப் போக்குவரத்து நடந்ததாகவும் அதைத் தொடர்ந்து காந்தியடிகள் மூன்று வாரங்கள் உண்ணா விரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்தது. காந்தியடிகள் சாக விரும்பாததால் ஜலத்தைக் குடிக்கும்போது உமட்டாதிருப்பதற்காக ஆரஞ்சுச்சாறு சேர்த்துக் குடிக்கப் போவதாகக் கூறியது எல்லோருக்கும் சிறிது ஆறுதல் அளித்தது. ஆயினும் மாஞ்சஸ்டர் கார்டியன் என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை கூறியதுபோல இந்திய மக்கள் எல்லோரும் என்றுமில்லாத துக்கத்தில் ஆழ்ந்து போனர்

கள். பாரதத் தாயின் நெஞ்சம் முழுவதும் கலங்கிவிட்டது.

இப்படித் திடீரென்று காந்தியடிகள் எழுபத்து நாலாவது வயதில் இருபத்தொருநாள் உபவாசம் இருக்க வேண்டியதின் காரணம் யாது?

காந்தியடிகள் தம்மைக் கைதிசெய்த ஐந்தாவது நாள் (14-8-42) அன்று வைசிராய்க்கு ஒரு கடிதம் எழுதினர்:—

"எங்களைக் கைதி செய்ததற்கு தங்கள் காரணங்கள் சரியாயில்லை. நிர்வாக சபையிலுள்ள இந்திய மெம்பர்களும் சம்மதித்ததாகக் கூறுகிறீர்கள். இந்த தேசத்தில் அத்தகையோர் எளிதில் கிடைப்பர் என்பதுதான் அதன் பொருள். அதுவும் நாங்கள் உடனே சுதந்திரம் வேண்டும் என்பதற்கு ஒரு காரணமாகும்.

நீங்கள் அவசரப்பட்டு விட்டீர்கள். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் நான் செய்திருந்த பிரசங்கங்களைப் படித்துப் பார்த்திருந்தால் நான் உடனே சட்ட மறுப்பு ஆரம்பியாமல் தங்கட்கு முதலில் கடிதம் எழுதவே உத்தேசித்திருந்தேன் என்பதைத் தெரிந்திருப்பீர்கள். அத்துடன் நீங்கள் சட்டமறுப்பு ஆரம்பமாகும் வரையாவது பொறுத்திருந்திருக்க வேண்டும். உங்கள் அவசரம் உலக மகா ஜனங்கள் எங்கள்பால் அநுதாபங் கொள்ள ஆரம்பித்து வருவது கண்டு நீங்கள் பயந்துவிட்டீர்கள் என்பதையே காட்டுகிறது.

பரிபூரண சுதந்திரம் கேட்பது எப்படித் தவறு? தலைவருடைய பொறுமையாக எங்களுக்கு விஷயத்தை விளக்குவதா? அதை விட்டு உடனே அடக்குமுறையைக் கையாளுவதா? சுதந்திரம் கேட்ட மாத்திரத்தில் குழப்பம் உண்டாய் விடுமா? சுதந்திரம் கேட்டவர்களை கைதி செய்தது தானே குழப்பத்தை உண்டாக்கி இருக்கிறது?

பலாத்காரமான காரியங்கள் செய்ய அபாயகரமான ஏற்பாடுகள் நடந்திருந்தால் உடனே ஏன் ஏற்பாடு செய்த

வர்களை கைதி செய்யவில்லை? எப்பொழுதும் அஹிம்சா தர்மமே காங்கிரஸின் கொள்கை. அது பலாத்காரமான காரியங்களைச் செய்ய எண்ணவேயில்லை. அது எதையும் ரகசியமாகவும் செய்வதில்லை. எங்கள் கோரிக்கைக்கு உங்களை இணங்கும்படி செய்வதற்குப் போதுமான தியாகத்தைச் செய்வதே காங்கிரஸின் நோக்கமாகும்.

பூரண சுதந்திரம் தேவையென்று கூறிக்கொண்டு காங்கிரசை எதிர்ப்பதற்காகப் பல கட்சிகள் காளான்கள் போலத் தோன்றுவதும் சர்க்கார் ஆதரவு பெறுவதும் சகஜமாய்விட்டன. ஆனால் சுதந்திரம் அளித்தாலன்றி ஒற்றுமை உண்டாகாது. தேசத்தின் கோரிக்கையைக் கூறுபவனை உயிரோடு புதைத்து விட்டதால் முட்டுக்கட்டை தீர்ந்துவிடவில்லை, அதிகப்படவே செய்திருக்கிறது. அதனால் தங்கள் கொள்கையைப் புனராலோசனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்".

இந்தக் கடிதத்துக்கு லின்லித்கோ பிரபு சர்க்கார்மீது கூறும் கண்டனத்தை ஏற்றுக்கொள்ளவும் சர்க்கார் கொள்கையைப் புனராலோசனை செய்யவும் முடியாதென்று பதிலெழுதினார்.

மகாத்மா காந்தியடிகளின் கடிதத்தை சர்க்கார் உடனே வெளியிட்டிருந்தால் ஜனங்கள் தாங்கள் அவசரப்பட்டு காரியங்கள் செய்யப் புறப்பட்டது பிசகு என்றும், அஹிம்சைக்கு விரோதமான காரியங்கள் காங்கிரஸின் கொள்கைக்குப் புறம்பானவை என்றும் அறிந்துகொண்டிருப்பார்கள். அஹிம்சா விரோதமானகாரியங்கள் ஐந்து நாள் வாழ்வோடு மடிந்து போயிருக்கும். அரசாங்கம் கடிதத்தை வெளியிடாத காரணம் யாதோ?

அதன் பின் செப்டம்பர் 23-ம் தேதி காந்தியடிகள் "சர்க்கார் என் கடிதம் வரும்வரை காத்திருந்தால் இந்தத் தவறுகள் நடைபெற்றிரா. காங்கிரஸின் கொள்கை

எப்பொழுதும் அஹிம்சையே ஆகும். காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரையும் கைதி செய்தது ஜனங்களுக்கு மதியிழக்கும்படியான கோபத்தை உண்டாக்கிவிட்டது. அதனால் அவைகளுக்குக் காரணஸ்தர் காங்கிரஸ் அன்று, கவர்ன்மெண்டே. ஆதலால் உடனே தலைவர்களை விடுவித்து அடக்கு முறையை நிறுத்தி சமரசத்துக்கான வழிகளைத் தேடுவதே சரியான காரியம்" என்று சர்க்கார் காரியதரிசிக்கு எழுதினார்.

சர்க்கார் 'அவைகளுக்குக் காரணஸ்தர் காங்கிரஸே தான்' என்று கூறினார்களே யன்றி, காந்தியடிகளின் இந்தக் கடிதத்தையும் அப்பொழுதே வெளியிடாமல் அடக்கிவிட்டு இப்பொழுது மகாத்மா உபவாசம் இருக்கும் சமயந்தான் வெளியிட்டார்கள்.

அவர்கள் கடிதம் கிடைத்த உடனேயே வெளியிடா விட்டாலும் நவம்பர் மாதத்தில் திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியார் வைஸ்ராயைக் கண்டு பேசினபொழுதேனும் அவரிடம் கூறியிருக்கலாம் அல்லவா? அதுவும் இல்லை. அதற்குப் பதிலாக காந்தி அட்டூழியங்களைக் கண்டிக்கவில்லை பார்த்தீர்களா என்று மட்டுமே வைசிராய் கேட்டதாக ராஜாஜி அறிக்கை கூறுகிறது.

"கடித விபரம் என்னிடம் கூறியிருந்தால் எத்தனை உயிர்கள் பிழைத்திருக்கும்? இப்படிக் கடிதங்களை வெளியிடாதது குறித்து காந்தியடிகளும் உபவாச சமயம் நான் பார்க்கப் போயிருந்தபொழுது என்னிடம் கூறி வருத்தப்பட்டார்" என்று ராஜாஜி கூறுகிறார்.

அமெரிக்க ஜனாதிபதியின் பிரதிநிதியாக வந்திருந்த பிலிப்ஸ் துரையும் இந்தியாவின் தலைமை பிஷப்பும் காந்தியடிகளைக் காண விரும்பியதற்கு சர்க்கார் அனுமதி கொடுத்திருந்தால் அவர்களும் காந்தியடிகள் ஹிம்சையைக் கண்டிக்கிறார் என்று எழுதியிருப்பார்கள்.

சர்க்கார் காங்கிரஸ் கோரிக்கைக்கு இணங்காவிட்டாலும், நடந்த காரியங்கள் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமானவை என்று காந்தியடிகள் எழுதிய கடிதங்களை வெளியிடவாவது வேண்டாமா? காரியங்கள் நடக்கட்டும், அடக்கு முறையைக் கையாளுவோம் என்று எண்ணிவிட்டார்கள் அல்லவா? அதனுல் மகாத்மா கூறுவதுபோல் முட்டுக்கட்டை தீர்ந்துவிட்டதா அதிகப்பட்டிருக்கிறதா? அடக்கு முறையால் பாமரஜனங்களைப் பயமுறுத்தி விடலாம். ஆனுல் அதனுல் காங்கிரஸ் அழிந்துவிடுமா? "நம்மை நாமே அழித்துக் கொண்டாலன்றி நம்மை யாரும் அழிக்க முடியாது" என்று சியாங்கே ஷேக் கூறுவதைக் காங்கிரஸ்காரர்கள் அறிவார்கள்.

காந்தியடிகள் செப்டம்பர் 23-ம் தேதி எழுதிய கடிதத்துக்கு மூன்று மாதங்களாகப் பதில் வராததால் கிறிஸ்துமஸ் சமயம் ஒரு கடிதத்தை எழுதினுர். அதற்கு வைஸ்ராய் சர்க்கார்தான் ஜவாப்தாரி என்று கூறுகிறீர்களே யன்றி கண்டிக்கக் காணுமே; ஆயினும் தாங்கள் பிழையை உணர்வதாக அறிவித்தால் அதுபற்றி ஆலோசனை செய்வேன் என்று பதில் எழுதினுர்.

அதற்குக் காந்தியடிகள் "நடந்த காரியங்களைக் கண்டு வருந்துகிறேனுயினும் காரணஸ்தர் சர்க்கார் தான் என்பதை மீண்டும் கூறுகிறேன். நான் அஹிம்சாவாதி, தவருன காரியங்களைக் கண்டிக்க வேண்டியவன். அந்தவிதம் இதற்குமுன் எத்தனையோ முறை செய்திருக்கிறேன். ஆனுல் அப்பொழுதெல்லாம் நான் சிறையிலில்லாமல் வெளியிலிருந்தேன். அத்துடன் சர்க்கார் உத்தியோகஸ்தர் கூறுவதை மட்டும் ஆதாரமாக வைத்துக் கொண்டு எப்படி அபிப்பிராயம் கூறமுடியும்? நான்

மன்னிப்புக் கேட்க வேண்டுமானல் என் பிழையை எனக்கு நிரூபித்துக் காட்டுங்கள். காங்கிரஸ் கேட்க வேண்டுமானல் எங்கள் எல்லோரையும் சந்திக்கும்படி செய்யுங்கள்" என்று 19—1--43-ல் வைசிராய்க்கு எழுதினர்.

காந்தியடிகள் அட்டூழியங்களைக் கண்டிக்கவில்லை என்று மட்டும் இதுவரை குறை கூறிவந்த வைஸ்ராய் இப்பொழுது எழுதிய பதில் கடிதத்தில் காந்தியடிகளே தான் காரணஸ்தர் என்பதாகக் குற்றஞ் சாட்டவும் ஆரம்பித்தார்.

அதற்குக் காந்தியடிகள் அப்படியானல் 'அதற்கு ஆதாரம் காட்டுங்கள், வெறும் வாய்ச் சொற்கள் போதா, அல்லது நானே நிலைமையைப் பரிசோதிக்கும்படி என்னை விடுவியுங்கள். தேசீய சர்க்கார் அமைத்து நிவர்த்தி செய்திருக்கக்கூடிய உணவுப் பஞ்சத்தால் லக்ஷக்கணக்கான மக்கள் கஷ்டப்படுவதையும் இந்த அடக்கு முறைகளையும் காண என்னல் சகிக்க முடியவில்லை. என் மன வேதனையை நீக்க நீங்கள் சம்மதிக்காவிட்டால் அதைச் சத்யாக்ரக வழியில் பெற பெப்ரவரி 10-ந் தேதி முதல் மூன்று வாரம் உண்ணமல் இருக்க உத்தேசிக்கிறேன். இடையில் நீங்கள் இணங்கும்பொழுது உண்பேன்' என்று பதில் எழுதினர்.

இந்தக் கடிதத்துடன் காந்தியடிகள் காங்கிரஸ் அதிகாரத்தைத் தனக்காகக் கேட்காமல் ஜனங்கள் எல்லோருக்குமாகவே கேட்கிறது என்பதையும் அதனல் தேசீய சர்க்காரை ஜின்ன சாஹிபே அமைத்தாலும் காங்கிரஸுக்கு சம்மதமே என்பதையும் எழுதி ஒரு துண்டும் அனுப்பி வைத்தார்.

அதற்கு வைஸ்ராய் 'அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பேரால் விநியோகிக்கப்பட்ட அந்தரங்க

யோசனைகளின் படியேதான் தவறான காரியங்கள் நடை பெற்றன என்பதற்குப் போதிய சான்றுகள் உள, உண்ணுதிருந்து எளிதில் தப்பித்துக்கொள்ளவும் பயமுறுத்திக் காரியம் சாதித்துக்கொள்ளவும் பார்க்கிறீர்கள். அதனால் யோசித்து முடிவு செய்யுங்கள்' என்று பதில் எழுதினார்.

அதற்கு காந்தியடிகள் கடைசியாக எழுதிய கடிதத்தில் "போதிய சான்றுகள் இருந்தால் எங்களைப் பாரபக்ஷமற்றக் கோர்ட்டில் விசாரணை செய்யுங்கள். அப்படி உடனே செய்யாவிட்டால் குற்றவாளிகள் சாக்ஷிகள் காலம் எவ்வளவோ யார் அறிவார். பயமுறுத்துவதாக எண்ணற்க. நான் இறந்துவிட்டால் தங்களிடம் பெருத நியாயத்தை சர்வேஸ்வரனிடம் பெறுவேன். நம் சந்ததியாரும், சர்வ வல்லமையுள்ள சர்க்கார் பிரதிநிதியாகிய தாங்கள் செய்தது சரியா அல்லது தேசத்துக்குச் செய்யும் ஊழியத்தின் மூலம் மக்கள் சமூகத்துக்குத் தொண்டு செய்து வரும் ஏழையேன் செய்தது சரியா என்று தீர்மானித்துக் கொள்ளுவார்கள்" என்று 7-2-43-ல் பதில் விடுத்தார்.

உண்ணுவிரதம் இருக்கக் குறிப்பிட்ட தேதிவரைக் கோரிய பரிகாரம் கிடையாததால் பெப்ரவரி மாதம் பத்தாம் தேதி காலை முதல் உண்ணுதிருக்க ஆரம்பித்தார். இது காந்தியடிகள் இந்தியாவுக்கு வந்தபின் இருந்த உபவாசங்களில் ஐந்தாவதாகும். ஆனால் இப்பொழுது வயது எழுபத்தினாலு, சிறையில் அடைபட்டு வதங்கிய சமயம், தவறான காரியங்கள், அடக்குமுறை, ஆகாரப் பஞ்சம், முதலியவைகளைக் கண்டு தாங்க முடியாமல் சங்கடப் படும் நேரம். இந்த நிலைமையில் காந்தியடிகள் உபவாசமிருக்க ஆரம்பித்தது கேட்டு நியாய புத்தியுள்ள ஜனங்கள் எல்லோரும் அளவில்லாத வருத்தம் அடைந்தார்கள்.

ஆயிரக்கணக்கான ஸ்தாபனங்கள் காந்தியடிகளை உடனே நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும் என்று வைசிராய்க்குத் தந்தி கொடுத்தன. ஒன்று பாக்கியின்றி சகல பத்திரிகைகளும் அதையே வற்புறுத்தி எழுதின. வங்காள சட்டசபை, மத்திய சட்டசபை, ஸிலோன் சட்ட சபை எல்லாம் விடுதலைத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைத்தன. 'உலகத்தைக் கலக்கத்தக்க வேண்டு கோள் விடுக்கக்கூடிய என் தந்தையார் இல்லாமல் போய் விட்டாரே' என்று தாகூரின் குமாரர் வருந்தினார். இந்தியா விலுள்ள பிரதம பிஷப்பும் வங்காள பிரதம மந்திரியும் சேர்ந்து காந்தியடிகளுக்காகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக் கொண்டார்கள். வைசிராயின் நிர்வாக சபையிலிருந்த மூன்று இந்திய மெம்பர்கள் உடனே விடுதலை செய்யாததற்காக ராஜிநாமாச் செய் தார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா முதலிய தேசங்களில் இருந்தும் வேண்டுகோள் வந்து குவிந்தன. பிரிட்டிஷ் சர்க்காரை ஆதரிக்கும் பிரதம லண்டன் பத்திரிகை டைம்ஸும்கூட 'இந்த நிலைமை யாருக்கும் திருப்தி அளிக்கவில்லை, இப்போதும் சந்தித்துப் பேசலாமே' என்று எழுதிற்று. சென்ற மகா யுத்தத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜும் பிரிட்டிஷ் பிரதம பாதிரியாரும் காந்தியடிகளுக்கு என்ன நேருமோ என்று கவலைப்பட்டார்கள். தேசத்தின் சகல பாகங்களிலிருந்தும் பிரிட்டிஷ், ஹிந்து, முஸ்லிம், பார்ஸி ஆகிய சகல வகுப்புக்களையும் சேர்ந்த பிரபலமான தலை வர்கள் முன்னூறு பேர் டெல்லியில் மகாநாடு கூடி விடு தலைத் தீர்மானம் நிறைவேற்றி உடனே வைஸ்ராய்க்கும் சர்ச்சிலுக்கும் அனுப்பி வைத்தார்கள்.

இத்தனை வேண்டுகோளுக்கும் வைசிராயும் சர்ச்சி லும், விடுதலை செய்ய முடியாது, உபவாசத்தின் பொறுப்

பெல்லாம் காந்தியுடையதே என்று ஒரே பதிலே கூறினார்கள்.

உலகத்திலுள்ள இருநூறு கோடிமக்களில் இவரே பெரியவர் என்று அறிஞர் அனைவராலும் போற்றப்படும் உத்தமர். இந்திய மக்கள் எல்லோரும் தெய்வம்போல் எண்ணி வணங்கியும் சொற்கேட்டும் வரும் மகாத்மா, இவருடைய உயிர் ஏனையோர் உயிரினும் காக்கப்பட வேண்டிய உயிரல்லவா? சாதாரண மக்களுக்குக்கூடத் தெரிந்த•இந்த உண்மை சர்க்காருக்குத் தெரியாது போனதென்ன? இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் இந்தியா மந்திரியாயிருந்த மாண்டேகு 'ஐயோ! அரசாங்கம் வெறும் மரக்கட்டையாய் இருக்கிறதே' என்று வருந்தினாரே, அதுதான் காரணமோ?

ஆனால் இந்த மரக்கட்டை சர்க்காருக்கு உண்மையை அறிந்து காரியம் செய்யத் தெரியாதே தவிர, உண்மையை மறைத்துப் பிரசங்கம் செய்யத் தெரியும். காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருந்த பொழுது அமரி துரை, வைசிராய் தமது நிர்வாக சபையிலுள்ள இந்திய மெம்பர் அனைவருடைய சம்மதத்தின் பேரிலேயே காந்தியடிகளின் கோரிக்கையை நிராகரித்ததாக பார்லிமெண்ட் சபையில் கூறினார். அப்படியானால் அவர்களில் மூவர் இந்தக் காரணத்தைக்கூறி ராஜிநாமாச் செய்ததேன்?

இந்த விதமாக சர்க்கார் சகல தேசத்து வேண்டுகோளுக்கும் இணங்காது நிற்கவே எல்லோரும் காந்தியடிகளுக்கு என்ன நேருமோ என்று கவலை அடைந்தார்கள். அவருடைய நிலைமையும் அவ்விதமாகவே இருந்து கொண்டிருந்தது. சகல மதத்தாரும் அவரை ரக்ஷித்தருளுமாறு கடவுளை வழுத்தினார்கள். வைத்ய நிபுணர்கள் அநேகர் அவர் பக்கத்தில் இருந்து கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்தார்கள்.

காந்தியடிகள் 21 நாள் உபவாசத்தை யாதொரு இடையூறுமின்றி செய்து முடித்தார் என்று கேட்டதும் ஜனங்களும் சான்றோரும் அளவில்லாத மகிழ்ச்சி யடைந்தார்கள், ஆநந்தக் கூத்தாடினார்கள், ஆண்டவனுக்கு வந்தன வழிபாடுகள் நடத்தினார்கள். அரசாங்கத்தாரும் அப்பா கடவுள் காப்பாற்றினார், அபாயமுண்டாயிருந்தால் என்னென்ன உற்பாதங்கள் ஏற்பட்டிருக்குமோ என்று எண்ணி நெஞ்சைத் தடவிக் கொடுத்துக் கொண்டார்கள்.

மகாத்மா உயிர் தப்பியது ஒரு அற்பதமே என்பதில் ஐயமில்லை. அதற்கு அவருடைய ஆத்ம சக்தியே காரணம் என்று அவர் பக்கத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த பிரபல வைத்திய சிகாமணி டாக்டர் ராய் கூறுகிறார். உலகம் இன்று தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலைமையில் ஆத்மசக்தி போதகர் வேண்டுமே என்று எண்ணித்தான் ஆண்டவன் இந்த அற்புதத்தை நிகழ்த்தியுள்ளான். இன்னும் காந்தியடிகளால் எத்தனையோ அற்புதங்கள் நிகழும். நாமே பாக்கியசாலிகள்.

# சர்க்காரின் குற்றச்சாட்டு

வைசிராய் லின்லித்கோ பிரபு 1942 ஆகஸ்டு 11-ந் தேதி முதல் நடந்த காரியங்களுக்குக் காங்கிரஸே காரணம் என்று காந்தியடிகளுக்கு எழுதினார். அதற்கு காந்தியடிகள் காங்கிரஸ் அல்ல காரணஸ்தர், காங்கிரஸைக் கடிதம் எழுதிச் சமரஸம் பேச இடங்கொடாமல் அவசரப்பட்டுக் கைதி செய்த கவர்ண்மெண்டே என்று பதில் எழுதினார். அதன் மேல் வைஸிராய் நீங்களே அட்டூழியங்கள் செய்ய ஏற்பாடு செய்தீர்கள் என்பதற்குப் போதிய சான்றுகள் உள என்று கூறினார். அப்படியானால் உடனே கைதி செய்திருக்க வேண்டாமா, இப்பொழுதேனும் எங்களை விசாரணை செய்தால் என்ன என்று காந்தியடிகள் கேட்டார்.

சான்றுகள் இருப்பது உண்மையானால் சர்க்கார் கோர்ட்டு மூலம் விசாரணை செய்ய ஏற்பாடு செய்வது தானே நியாயம்! ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல் டாட்டன்ஹாம் என்ற உத்யோகஸ்தரைக் கொண்டு காங்கிரஸ் மீது குற்றம் சாட்டி ஒரு அறிக்கை தயாரித்து வெளியிட்டார்கள்.

அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மூன்று :—

(1) காங்கிரஸ் பலாத்காரச் செயல்களுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தது.

(2) தேசீய சர்க்கார் அமைத்து ஆதிக்கம் செலுத்த ஆசைப்பட்டது.

(3) ஜப்பானுடன் சமரஸம் செய்து கொள்ளத் தயாராயிருந்தது.

ஸாப்ரூ முதலிய மிதவாதத் தலைவர்கள் காங்கிரஸ் காரர்களில் சிலர் கலந்து கொண்டார்கள் என்பதைக் கொண்டு காங்கிரஸே ஏற்பாடு செய்தது என்று கூற முடியாது என்றும், சர்க்காரிடம் சான்றுகள் இருந்தால் கோர்ட்டு பரிசீலனை செய்து கூறும் தீர்ப்பையே ஏற்றுக் கொள்ள முடியும் என்றும் கூறினார்கள்.

பிரிட்டிஷ் பத்திரிகை கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் "காங்கிரஸ் பெரிதும் வெகு காலமாகவுள்ளதும் அதிகக் கட்டுப்பாடுள்ளதுமான ஒரு ஸ்தாபனம். அதன் தலைவர்கள் அறிவு மிகுந்தவர்கள். அத்தகைய சபையார் பல வாரங்களாக பலாத்காரத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள் என்பதும், அப்படி ஏற்பாடு செய் தவர்கள் தங்களைக் கைது செய்து விட்டால் அதன் பின் நடக்க வேண்டிய காரியங்களைத் திட்டம் செய்யாமல் இருந்து விட்டார்கள் என்பதும் நம்பக்கூடியதாகத் தோன்றவில்லை" என்று எழுதியது.

காங்கிரஸ் தேசீய சர்க்காரில் ஆதிக்கம் செலுத்த விரும்பியதாகக் கூறுவது சரியா? காந்தியடிகள் வைஸி ராய்க்கு எழுதிய கடிதத்திலேயே எங்கட்காக கேட்க வில்லை, யார் வேண்டுமானாலும், ஜின்னா சாஹிபே யானா லும் அமைக்கட்டும், எங்கட்குச் சம்மதமே என்று கூற வில்லையா? கிரிப்ஸ் துரைக்கும் ஆஸாத்தும் அப்படியே எழுதினாரல்லவா? அப்படி யிருக்க இந்த அபாண்டமான பழியைக் கூறுவானேன்?

காங்கிரஸ் ஜப்பானுடன் சமரஸம் செய்து கொள்ள விரும்பியது போல் கூறுவதும் சரியா? ஜப்பான் பிலிப் பைன் தீவுகளைத் தாக்கிய பின்னர்தான் பிரிட்டிஷாருக்கு ஜப்பான் காரியம் கசக்கலாயிற்று. அதுவரை அவர்கள்

ஜப்பான்,சைஞ விஷயத்தில் அக்கிரமமாய் நடந்து வந்ததை எல்லாம் தடுக்காமல் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். சைஞவுக்கு யுத்த தளவாடங்கள் பர்மா வழியாகப் போகக்கூடாது என்று ஜப்பான் கூறியதும், ஆகட்டும் என்று உடனே பாதையை மூடி விட்டார்கள். அப்பொழுது காங்கிரஸ் தலைவர் அது நியாயமில்லை என்று கூறிஞர். அதற்கு முன் ஜப்பான் சைஞ மீது பாய ஆரம்பித்தவுடனேயே காங்கிரஸ் மகா சபை ஜப்பானிய சாமான்களை பகிஷ்கரிக்கும்படி ஏற்பாடு செய்தது.

காந்தியடிகளும் காங்கிரஸ் கமிட்டியாரும் எங்களுக்கு சுதந்திரம் பெற ஜப்பானுடைய உதவி தேவையில்லை, ஜப்பான் வந்தால் நாங்கள் எதிர்க்கவே செய்வோம் என்று பன்முறை கூறியது உலக மறிந்த விஷயமாயிற்றே. காந்தியடிகள் ஜப்பான் ஜெயித்தால் பிரிட்டிஷார்க்கு இந்தியா மட்டும் நஷ்டம், ஆனுல் எங்கட்கு சகலமும் நஷ்டம் அல்லவா என்று கூறியிருக்கிருரே. அப்படியிருக்க அரசாங்கம் ஏன் இப்படிக் கூறவேண்டுமோ? காங்கரஸுக்கு விரோதமாக நேச நாடுகளைக் கிளப்பி விடவா? அது ஒருநாளும் பலிக்காது. அவ்வளவு முட்டாள்கள் அல்ல நேச நாடுகள்.

அதனுல்தான் அமரிதுரை டாட்டன்ஹாம் அறிக்கையை ஒட்டி ஒரு 'வெள்ளைத்தாள்' வெளியிட்டபொழுது முதல் இரண்டு குற்றச்சாட்டுக்களையும் வைத்துக் கொண்டு மூன்ருவது குற்றச்சாட்டை மெள்ள நழுவ விட்டுவிட்டார்.

அவருடைய வெள்ளைத்தாளைக் கண்டதும் டெய்லி ஓர்க்கர் என்னும் லண்டன் பத்திரிகை "இது வெள்ளைத் தாள் அன்று, வெள்ளை யடிக்கும்தாள்" என்று கூறிற்று.

காங்கிரஸ் கமிட்டியாரை கோர்ட்டில் விசாரணை செய்யப் போகிறீர்களா என்று கேட்டதற்கு அமரி அந்த

உத்தேசம் இப்பொழுதில்லை என்று கூறினார். அதை அறிந்ததும் அமரிக்கர் லூயி பிஷர் "காங்கிரஸை அழித்துவிட வேண்டுமென்று எண்ணித்தான் இப்பொழுது விசாரணை இல்லை என்கிறீர்களோ" என்று கேட்கலானார்.

ஆகவே காங்கிரஸ் மீதும் காந்தியடிகள் மீதும் பழி சுமத்துவதும், சான்றுகள் கொண்டு கோர்ட்டில் நிரூபியுங்கள் என்று கேட்டால் இப்பொழுதில்லை என்று கூறுவதும்தான் பிரிட்டிஷ் நியாயம் போலும்!

இப்படி அமரியும் வைஸிராயும் கோர்ட்டு ஏற்படுத்தி விசாரணை செய்ய ஏற்பாடு செய்யாவிட்டாலும் அந்த விஷயத்தைக் குறித்து கோர்ட்டு விசாரணை நடக்காமல் இருக்கவில்லை.

டில்லி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் "அட்டூழியங்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அனுமதித்த காரியத் திட்டத்தில் சேர்ந்தவை என்பதற்குச் சான்றுகள் தரப் படவில்லை." என்று ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறினார்.

வார்தா ஜில்லா ஜட்ஜ்—"காங்கிரஸ் சட்ட மறுப்பு ஆரம்பிக்குமாறு தீர்மானம் செய்ததாகவோ அல்லது சட்ட மறுப்பு ஆரம்பிக்குமாறு ஜனங்கட்கு ரகசிய தாக்கீது விடுத்ததாகவோ நிரூபிக்கப்படவில்லை. யாரோ சில காங்கிரஸ்காரர் அட்டூழியங்களில் கலந்து கொண்டதைக் கொண்டு சட்ட மறுப்பியக்கம் நடப்பதாகவும் அதைக் காங்கிரஸ் ஆரம்பித்ததாகவும் தீர்மானிப்பது நியாயமாகாது" என்று தெளிவாகக் கூறினார்.

இவர்கள் இருவரும் காந்தியடிகள் கேட்ட பட்ச பாதமற்ற கோர்ட்டார் அல்லர், பிரிட்டிஷ் சர்க்காரின் நீதிபதிகள். இவர்களே இப்படிச் சொல்வதானால் விஷயம் முழுவதையும் விசாரணை செய்யச் சம்மதியாமல் காங்கிரஸ் மீது வீண் பழி சுமத்துவது எள்ளளவேனும் நியாயமாகுமா?

## பாதுகாப்புச் சட்ட அமுல்

தேசத்தில் நாளுக்குநாள் உணவுப்பஞ்சம் மிகுந்து கொண்டிருந்தது. வங்காளத்தில் மக்கள் சாலைகளில் பட்டினியால் வாடி இறந்து விழுந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக வரத் தொடங்கின. ஆனால் அதிகாரிகளோ விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவோ உணவுப் பொருள்கள் தட்டுண்டான இடங்களுக்கு அனுப்பிவைக்கும் ஏற்பாடுகளைச் செய்யவோ இல்லாம லிருந்தார்கள்.

" இப்பொழுதுள்ள சர்க்கார் போலீஸையும் துருப்புக் களையும் கொண்டு குழப்பங்கள் உண்டானால் அடக்க முடியுமே யன்றி, வேறு எதையும் திறமையாகச் செய்ய முடியாது" என்று ராஜாஜி கூறியது முற்றிலும் உண்மை.

நாட்டில் ஜனங்களைப் பட்டினியிலிருந்தும் நோயி லிருந்தும் காப்பாற்றும் அரசியலுக்குப் பதிலாக பிரிட்டிஷ் ராஜ்யாதிகாரத்தை காப்பாற்றும் இந்தியப் பாதுகாப்புச் சட்ட அரசியலே நடந்து கொண்டு இருந்தது.

மத்திய சட்ட சபையில் உள்நாட்டு மெம்பர் மாக்ஸ் வெல் 1942 ஆகஸ்ட் 11 முதல் டிசம்பர் 31 வரை

| | |
|---|---|
| துப்பாக்கிப் பிரயோகங்கள் | 538 |
| அதில் இறந்தவர் | 940 |
| காயம் அடைந்தவர் | 1630 |
| கைதியானவர்கள் | 60229 |
| தண்டனை யடைந்தவர்கள் | 26000 |
| விசாரணையில்லாத பாதுகாப்புக் கைதிகள் | 18000 |

என்றும், ஆனால் டிசம்பர் 31ம் தேதி சிறையிலிருந்தவர்கள் :—

| | |
|---|---|
| தண்டனை பெற்றவர்கள் | 14000 |
| பாதுகாப்புக் கைதிகள் | 11000 |

என்றும் கூறினார்.

விசாரணை செய்யாமல் சிறையில் இருக்கும் பாதுகாப்புக் கைதிகள் விஷயத்தை பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டதற்கு முடியாது என்று கூறினார்.

ஆனால் யுத்தகாலத்தில் இந்தியாவில் மட்டும்தான் பாதுகாப்புச் சட்டம் உண்டு என்பது இல்லை. இங்கிலாந்து முதலிய நாடுகள் எல்லாவற்றிலும் உண்டு. ஆனால் அந்த நாடுகள் எல்லாம் அந்தச் சட்டத்தை அதிக ஜாக்கிரதையாக அத்தியாவசியமான சந்தர்ப்பத்தில் மட்டுமே உபயோகித்து வருகிறார்கள். பிரஜா உரிமைகள் என்பவையே ஜனசமூகத்துக்கு உயிர்தரும் மூச்சாகும். அதனால் பாதுகாப்புச் சட்டங்கள் அவைகளை அநாவசியமாகப் பாதித்தலாகாது. ஆயினும் போர் நிகழும் காலத்தில் அவைகளைச் சிறிது குறைத்துக் கொள்வது அவசியமேயாகும். ஆனால் போரின் அவசியத்துக்கு அதிகமாகக் குறையாமலும், ராணுவச் சட்டம் ஏற்படும் வரை கோர்ட்டுகளின் பாதுகாப்பை நீக்காமலும் இருக்கவேண்டும்.

இந்த உண்மைகளை அறிந்தே இங்கிலாந்தில் நடந்து வருகிறார்கள். போர் முயற்சிகளுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டிருந்ததாக நம்பத்தக்க ஆதாரம் இருந்தாலன்றி அங்கே பாதுகாப்புக் கைதியாக வைப்பதில்லை. அதுவுந்தவிர ஆலோசனைக் கமிட்டி யொன்றும் அமைத்திருக்கிறார்கள். பாதுகாப்புக் கைதிகள் அதற்

குத் தங்கள் விஷயத்தை பரிசீலனை செய்யுமாறு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அப்படி அதிசீக்கிரமாக விண்ணப்பித்துக் கொள்ளுவதற்கு வேண்டிய வசதிகள் அரசாங்கத்தார் செய்து கொடுக்கிறார்கள். அந்தக் கமிட்டி விடுதலை செய்யச் சொன்னால் விடுதலை செய்து விடுகிறார்கள்.

ஆனால் இந்தியாவிலோ போர் வந்துவிட்டது என்று இந்தியப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. அதன் அதிகாரத்தைக்கொண்டு வைஸிராய் 150க்கு மேற்பட்ட விதிகள் பிறப்பித்தார். இந்த விதிகளை எல்லாம் ஏழெட்டு சதமான எழுத்து வாசனையுள்ள இந்த தேசத்தார் அறிந்து அதன் வலையில் அகப்பட்டுக் கொள்ளாமல் நடப்பது எப்படியோ, ஈசனுக்கே தெரியும். அவைகளிலும் 26-வது விதி விசேஷமானது. அதன்படி தான் ஆயிரக்கணக்காவர்கள் போர் முயற்சிக்கு விரோதம் என்று கைதி செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு விசாரணையும் கிடையாது, விஷயத்தை பரிசீலனை செய்ய ஆலோசனை சபையும் கிடையாது.

1943 ஏப்ரல் மாதத்தில் இந்தியாவிலுள்ள ஹை கோர்ட்டுகளுக்கு மேலுள்ள பெடரல்கோர்ட்டார் 26-வது விதி சட்ட விரோதமானது, வைசிராய்க்கு அதைச் செய்ய அதிகாரம் கிடையாது என்று தீர்ப்புச் செய்தார்கள். அப்படியானால் அந்த விதியின்படி அன்று தினத்தில் சிறையிலிருந்த காந்தியடிகள் உள்பட 9 ஆயிரம் பேரையும் உடனே விடுதலை செய்ய வேண்டியதாகும்.

ஆனால் வைஸிராய்க்கு யாரும் ஆட்சேபிக்க முடியாத அவசரச் சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் ஒன்று யுத்த ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட்டிருந்தது. அதை உபயோகித்து அவர் 26-வது விதி சட்டவிரோதயன்று என்று ஒரு அவசரச் சட்டம் செய்து அந்த 9 ஆயிரம்

பேரும் சிறையிலேயே கிடந்து புழுங்குமாறு செய்து விட்டார்.

பாதுகாப்புக் கைதிகளை மட்டுந்தான் விசாரணை யின்றி சிறையில் வைக்கலாம். மற்றக் கைதிகளை எல்லாம் கோர்ட்டில் விசாரணை செய்து தீரவேண்டும். இது ஒரு பிரதானமான பிரஜா உரிமை. ஆனால் வைஸிராய் இதி லும் கைவைத்து, சர்க்கார் விரும்பினால் சாதாரணக் கோர்ட்டுகளில் விசாரணை செய்ய விடாமல் அதற்கென்று அமைக்கப்படும் விசேஷ கோர்ட்டுகளிலேயே விசாரணை செய்யலாம் என்றும், சாதாரணக் கோர்ட்டுகளில் விசா ரணை நடந்தால் அப்பீல் செய்துகொள்ளும் உரிமை உண்டே, அது விசேஷ கோர்ட்டில் விசாரணை செய்யப் படுவோர்க்குக் கிடையாது என்றும் ஒரு விதி பிறப்பித் தார். இந்த விசேஷ கோர்ட்டுகளில்தான் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்படாதவர்கள் பலரும் விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்.

இந்த விஷயத்தையும் பெடரல் கோர்ட்டார் பரி சீலனை செய்து இந்த மாதிரி விசேஷ கோர்ட்டு ஏற்படுத்த வைஸிராய்க்கு அதிகாரம் கிடையாது என்று முடிவு கூறினார்கள். உடனே சர்க்கார் விசேஷ கோர்ட்டில் நடந்துவந்த வழக்குகளை சாதாரணக் கோர்ட்டுகளுக்கு மாற்றிவிட்டு விசேஷ கோர்ட்டுகளைக் கலைத்துவிட் டார்கள். அது போலவே விசேஷ கோர்ட்டால் தண்டிக்கப்பட்டவர்களையும் விடுதலை செய்யவேண்டு மல்லவா? ஆனால் அவர் அப்படிச் செய்யாமல் அந்தக் கைதிகள் தண்டிக்கப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டவர் கள் தாம் என்றும் அவர்கள் அப்பீல் செய்துகொள்ள லாம் என்றும் கூறி அவசரச் சட்டம் செய்தார்.

இந்த விதமாக பெடரல் கோர்ட்டு பிரஜா உரிமை களைக் காக்க முன்வந்த போதெல்லாம், அதை நிராகரித்து

பிரஜா உரிமைகளைப் பறிப்பதிலேயே சர்க்கார் கவனம் செலுத்தி வந்தது. ஆனால் இங்கிலாந்தைப் பாருங்கள். இங்கிலாந்திலும் ஒரு பாஸிஸ்ட்கட்சி இருந்து வருகிறது, அதற்குத் தலைவர் ஸர் ஆஸ்வால்டு மாஸ்லி. பாஸிஸத்தை ஒழிப்பதற்காகவே நேசநாடுகள் அரும்பாடுபட்டு வந்தன. அதனால் மாஸ்லீ சிறையில் தவிர வேறு எங்கே இருக்கமுடியும்? அப்படியே சிறையில்தான் வைத்திருந்தார்கள். ஆனால் சமீபத்தில் அவரை உள்நாட்டு மந்திரி விடுதலை செய்துவிட்டார். அது தவறு, மாஸ்லி பகிரங்கமாக பாஸிஸத்தை விட்டு விடுவதாகக் கூறவுமில்லையே என்று ஆங்கில நாடெங்கும் ஆட்சேபங்கள் அபரிமிதமாகக் கிளம்பின. ஆனால் மந்திரியோ, "ஒருவரை அவருடைய அபிப்பிராயம் தவறு என்பதற்காகச் சிறையில் வைக்கலாமா? அப்படிச் செய்தால் பிரஜா உரிமை பறிக்கப்பட்டு விடுமல்லவா? அப்பொழுது ஜனநாயக அரசாங்கம் என்பது ஏது? மந்திரிசபை தனக்குள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகு மல்லவா?" என்று கேட்டார்.

இப்படி அங்கே தேசத்தின் முதல் விரோதியாகக் கருதப்படுபவரை விடுதலை செய்யாதிருந்தால் அநியாயம் என்று கருதுகிறார்கள். ஆனால் இந்த தேசத்திலோ பாஸிஸத்தை எதிர்க்கப் பலம் தாருங்கள் என்று கேட்கும் காந்தியடிகளை விடுதலையும் செய்யமாட்டோம், விசாரணை செய்யவும் மாட்டோம் என்று சாதித்தார்கள். பாஸிஸத்தைப் பரப்பிவந்த மாஸ்லி பாஸிஸம் தவறு என்று கூறாதிருந்தும் அவரை விடுதலை செய்துவிட்டார்கள். ஆனால் செய்யாத காரியத்தைச் செய்ததாக ஒப்புக் கொள்ளாதவரையில் காந்தியடிகளையும் காரியக் கமிட்டியாரையும் விடுதலை செய்யமாட்டோம் என்று கூறினார்

கள். இதிலிருந்து இந்தியப் பாதுகாப்புச் சட்டம் இந்தியாவை எதிரியிடமிருந்து பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டதா அல்லது பிரிட்டிஷ் அதிகாரத்தை இந்தியரிடமிருந்து பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டதா என்று கேட்க வேண்டியதாய் இருக்கிறது.

சாதாரணமாகவே இந்திய சர்க்கார் ஜனநாயக முறையில் நடைபெறவில்லை. அதற்காகவே காங்கிரஸ் கமிட்டியார் சுதந்திரமும் , தேசீய சர்க்காரும் வேண்டுமென்று கேட்டார்கள். அப்படியிருக்க அப்பொழுது சர்க்கார் ஜனநாயக வேஷமுங்கூட இல்லாமல் சுய சர்வாதிகாரமாகவே நடந்து வந்தார்கள். வைஸிராய் இயற்றும் அவசரச் சட்டத்துக்கும் சட்டப்படி 'சட்டம்' என்றுதான் பெயர். ஆனால் உண்மையில் அவர் இட்டது தான் சட்டம். அவர் இஷ்டப்பட்டு விட்டால் எவ்வித சுதந்திரமும் இல்லாமல் செய்துவிட முடியும். ஏதேனும் பாதுகாப்பு கோர்ட்டுக்கள் அளிக்குமோ என்று எதிர்பார்த்தால் அலகாபாத் ஹைகோர்ட்டு பிரதம நீதிபதி "இந்தியப் பாதுகாப்புச் சட்டம் எங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லாமல் செய்துவிட்டது" என்று ஒரு வழக்கு நடக்கும் சமயம் வருத்தத்துடன் கூறினார். பெடரல் கோர்ட்டு ஏதேனும் ஒரு விதியைத் தவறு எனக் கூறினால் உடனே வைஸிராய் அது தவறு அன்று என ஒரு அவசரச் சட்டம் செய்துவிடுகிறார். ஆகவே நாம் ஹெச். ஜி. வெல்ஸ் என்னும் ஆங்கில அறிஞருடன் சேர்ந்து "இந்திய சர்க்கார் எதேச்சாதிகாரி யில்லாத எதேச்சாதிகாரம்" என்று கூறலாம். சட்டப்படியே அவசரச் சட்டம் செய்வதால் சட்டப்படி எதேச்சாதிகாரம் ஆகாது, ஆனால் எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல் செய்துவிடுவதால் அது எதேச்சாதிகாரமே யன்றி வேறன்று.

இவ்விதமாக தேசத்தில் ஜனங்களின் நலம் ஒன்றே வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்ட தலைவர்கள் சிறையில் இருக்கிறார்கள். பஞ்சம் வாட்டி வருகிறது. பாது காப்புச் சட்டம் பிரஜா உரிமைகளை வேட்டையாடி வருகிறது. என்ன செய்வது? நியூ ஸ்டேட்ஸ்மென் என்னும் லண்டன் பத்திரிகை "தேசீய சர்க்கார்தான் உணவுப் பிரச்னையைத் தீர்த்து வைக்கமுடியும்" என்று கூறியதுதான் காரியம்.

ஆதலால் ஒரு கட்சியும் சேராத தலைவர்களுடைய மகாநாடு அரசியல் சிக்கல் சம்பந்தமாகப் பேசவும், காந்தியடிகளைக் கண்டுபேச அனுமதி பெறவும் வேண்டி வைஸிராயை 1-4-43ல் பேட்டி காண விரும்பி அவர்க்கு எழுதினார்கள். அவருடைய விருப்பப்படி தங்கள் அறிக்கையை அவருக்கு அனுப்பியும் வைத்தார்கள். அவர் சரி நீங்கள் வரலாம், ஆனால் நீங்கள் அறிக்கையைப் படித்ததும் என்னுடைய பதிலைப் படிப்பேன், அவ்வளவுதான் உடனே நீங்கள் போய்விட வேண்டியது, விவாதம் ஒன்றும் கிடையாது என்று பேட்டி காணும் முறையைத் தெரிவித்தார். அப்படியானால் நாங்கள் வரவில்லை, உங்கள் பதிலை அனுப்புங்கள் என்று எழுதி வைஸிராயின் பதிலைப் பெற்றார்கள்.

இவர்கள் அறிக்கையில்—சமரஸம் செய்ய வேண்டியது அவசரம், அதற்குக் காந்தியடிகளைக் கண்டு பேச வேண்டியது அவசியம், அதற்கு நீங்கள் சம்மதியா விட்டால் சர்க்காருக்கு முட்டுக்கட்டையைத் தீர்க்க எண்ணமில்லை என்றே ஏற்படும்—என்று கூறியிருந்தார்கள்.

அதற்கு வைஸிராய்—காந்தியடிகளும் காங்கிரஸ் கமிட்டியாரும் ஆகஸ்டு தீர்மானத்தை ரத்து செய்து தங்களால் ஏற்பட்ட அட்டூழியங்களைக் கண்டித்தால்

மட்டுமே சமரஸம் பேசச் சம்மதிக்கமுடியும் — என்று பதில் எழுதியிருந்தார்.

அதைக்கண்ட ராஜாஜி—"சர்க்காருக்கு சமரஸம் செய்யப் பிரியமில்லை. அது மட்டுமா, அவர்கள் காங்கிரஸ் சபையை அடிபணியச் செய்யவேண்டுமென்றும் எண்ணுகிறார்கள். அப்படியிருக்காது அவர்களுடைய நோக்கம் என்று எண்ண எத்தனை தடவை முயன்றாலும் அதுவேதான் என்ற எண்ணம் என் மனத்தில் எழுந்துகொண்டே இருக்கிறது" என்று அபிப்பிராயம் கூறினார்.

வைஸிராய் பேட்டி முறை வகுத்ததையும், பதில் அளித்ததையும் கண்டு, நாடெங்கும் அதிருப்தி உண்டாயிற்று. மனக்கசப்பும் கண்டனமும் எழுந்தன. தலைவர்கள் மகாநாடு காந்தியடிகளை விடுதலை செய்யும்படிகூடக் கேட்கவில்லை, பேசி வருவதற்கான அனுமதியை மட்டுமே கேட்டது. அதைக்கூட சர்க்கார் மறுத்து விட்டார்கள்.

அதற்குக் காரணம் யாது? சர்க்கார் மெம்பர் சட்ட சபையில் காந்தியடிகளைக் "கலகக்காரர்" என்று கூறினாரே, அதுதான் காரணமோ? அதற்கு ஸாப்ரூ மிதவாதிகள் மகாநாட்டில்,

"மகாத்மாஜி கலகக்காரரா? அப்படித்தான் ஸ்மட்ஸும் டிவாலராவும் கலகக்காரர்களாயிருந்தார்கள். இன்று ஸ்மட்ஸ் தென் ஆப்பிரிக்காவின் பிரதம மந்திரியாயும் சர்ச்சிலின் வலது கையாயுமிருக்கிறார். டிவாலரா இப்போது ஐர்லாந்தின் பிரதம மந்திரி. அவர் நம்மைவிட்டுப் போய்விடக் கூடாதே என்று சர்ச்சில் சதாகாலமும் கவலையோடிருக்கிறார். பிரிட்டிஷ் சர்க்கார் சமரஸம் பேசுவதெல்லாம் ராஜபக்தர்களுடன் அன்று, கலகக் காரர்களுடனேயேதான். இங்கும் கலகக்காரர்களுடன் சமரஸம் செய்யாமல் இருக்கப் போவதில்லை,

அப்பொழுது நம்மை யார் கவனிக்கப் போகிறார்கள்" என்று கூறினார்.

ஆதலால் கலகக்காரர் என்றாலும் காந்தியடிகளுடன் பேசித்தான் ஆகவேண்டும். எத்தனை ஜின்னாக்கள் அணை கோலினாலும் காங்கிரஸ் வெள்ளத்தைத் தடுத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றி விடமுடியாது. ஆனால் ஆசைமிகுந்து விட்டால் அறிவு தோன்றாதல்லவா? வீழ்ச்சி அடையப் போகிறவன் அதற்குக் காரணமான கர்வத்தைப் பெற்றே விடுவான் என்னும் கிறிஸ்துவ வேதமொழி உண்மைதானே?

வீடு தீப்பற்றி எரியுதே, என்ன செய்யலாம் என்று மிதவாதத் தலைவர்கள் கவலையுற்று காரியங்கள் நடத்திக் கொண்டிருந்த காலத்தில் ஜின்னா சாகேப் என்ன செய்தார்? இந்துக்களா முஸ்லிம்களா அதிகநாள் அடிமையாயிருப்பவர்கள் என்னும் பெரியதோர் விஷயத்தை ஆராய்ச்சி செய்து இந்துக்கள் 800 வருஷகாலம் முஸ்லிம்களின் அடிமைகளாகவும் 200 வருஷகாலம் பிரிட்டிஷார்க்கு அடிமைகளாகவும் இருக்க, முஸ்லிம்கள் 200 வருஷகாலமே அடிமைகளாய் இருக்கிறார்கள் என்று சரித்திரத்துக்கு விரோதமான அரிய முடிவை உலகுக்கு வழங்கினார். எத்தனை காலம் அடிமையாயிருந்தாலும் அடிமை அடிமைதானே. நஞ்சு கொல்வதற்கு ஒரு துளி போதாதோ ஒரு நாழி வேண்டுமோ?

ஜின்னா சாகேப் டெல்லியில் நடந்த முஸ்லிம் லீக் கூட்டத்தில் காந்தியடிகள் என்னுடன் பேச விரும்பினால் எனக்குச் சந்தோஷமே, எனக்கு நேரே கடிதம் எழுதலாம், யாரும் தடுக்கத் துணியமாட்டார்கள் என்று கூறினார்.

அதன்பின் சர்க்கார் காந்தியடிகள் ஜின்னாவுக்கு ஒரு கடிதம் எழுதியதாகவும் ஆனால் தாங்கள் அதை ஜின்னா

வுக்கு அனுப்ப விரும்பாததாகவும் அதன் சாரத்தை மட்டும் அவர்க்குத் தெரிவித்து விட்டதாகவும் ஒரு அறிக்கை வெளியிட்டார்கள்.

தமக்கு அனுப்பும் கடிதத்தைத் தடுக்க சர்க்கார் துணியமாட்டார்கள் என்று ஜின்னு முழங்கினுரே, இப்பொழுது தடுத்துவிட்டார்களே, என்ன செய்தார்? அவர் அதைப்பற்றி வருந்தவுமில்லை, சர்க்கார்க்கு எழுதவுமில்லை. அதற்குப் பதிலாக "காந்தியடிகள் தம்முடைய கொள்கையை மாற்றி பாகிஸ்தானை ஒப்புக்கொள்ளாமல் கடிதம் எழுதி எனக்கும் சர்க்காருக்கும் மனஸ்தாபம் உண்டாக்க முயன்றுவிட்டார்" என்று அடிகள்மீது சீறி விழுந்தார். பாகிஸ்தான் விஷயத்தை இருவரும் கலந்து பேசாமலே காந்தியடிகள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றுல் பிறகு இருவரும் கலந்து பேசவேண்டிய அவசியம் ஏது? சமரஸம் பேசவேண்டாமா என்று சர்க்காரிடம் கேட்டால் காங்கிரஸ் குற்றத்தை ஒப்புக்கொள்ளட்டும் என்கிருர்கள்; ஜின்னுவிடம் கேட்டால் காங்கிரஸ் பாகிஸ்தானை ஒப்புக்கொள்ளட்டும் என்று கூறுகிருர். எப்படி யிருக்கிறது இவர்களுடைய நியாயம்?

# புதிய வைஸிராய் நியமனம்

பஞ்சம் சூறையாடிக்கொண் டிருந்தது. அதைப் போக்கவல்ல தேசிய சர்க்கார் ஏற்படவில்லை, என்ன செய்வது என்று தேசம் தத்தளித்துக்கொண் டிருந்தது. அப்பொழுது சேனாதிபதியாய் இருந்த வேவல் பிரபு வைஸிராயாக நியமிக்கப்பட்ட விஷயம் கேட்டதும் ஜனங்கள் விமோசனம் வந்தாலும் வரலாம் என்று எண்ணினார்கள்.

எகிப்துக்கு சுதந்தரம் கொடுத்தே தீரவேண்டும் என்று பிடிவாதம் செய்து வெற்றிபெற்ற ஆலன்பி தளபதியின் சரித்திரத்தை எழுதி வரும் வேவல் பிரபு அல்லவா?

" அழையாமல் வந்த விருந்தினர் அதிக நாள் இருந்த பின்பும் நன்றியறிவான வார்த்தை ஒன்றுகூடக் கூறா திருந்தால் வீட்டுக்காரனுடைய உணர்ச்சி எப்படி யிருக்குமோ அவ்விதமான உணர்ச்சியே எகிப்திய தேசிய வாதிகளிடமும் காணப்பட்டது." என்று அதில் எழுதி இருப்பதால் நம்முடைய உணர்ச்சியையும் மதித்து நடப்பார் அல்லவா?

அத்துடன் வைஸ்ராய் என்று நியமனம் பெற்றதும் அவர் பத்திரிகைக்காரர்களுக்கு அளித்த பேட்டியில்

"போர் முடியும் வரை அரசியல் முன்னேற்றம் இருக்க முடியாது என்று எண்ணவேண்டாம்" என்றும் கூறினார் அல்லவா?

இந்தவிதமாக எண்ணி மிதவாதிகள் எல்லோரும் வேவல் துரையால் நன்மை உண்டாய் விடும் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அமரி துரை அந்தப் பாலையாவது அதிக நாள் குடித்துக்கொண்டிருக்கச் சம்மதிப்பாரா? வைஸ்ராய்தான் புதியவர், சர்க்காரின் கொள்கையில் மாறுதல் கிடையாது என்று மிதவாதிகளின் ஆசையில் மண்ணைப் போட்டார்.

## லின்லித்கோ சாதித்தவை

ஆகஸ்ட் இரண்டாம் தேதி லின்லித்கோ பிரபு மத்திய சட்டசபையாரிடம் விடைபெற்றுக்கொள்ளும் பொழுது தாம் தம்முடைய ஏழுவருஷ ஆட்சியில் சாதித்த அரும்பெரும் காரியங்களைக் குறித்துப் பெருமை பேசலானார். அவர் கூறியவை அனைத்தையும் ஆராய்வது மணற்சோற்றில் கல் தேடுவதுபோலவே யிருக்கும். ஆயினும் இரண்டொன்றைக் கவனிக்க வேண்டியது அவசியமே ஆகும்.

அவர் இந்தியாவையும் இங்கிலாந்தையும் இணைத்து விடுவதற்காக அதிகச் சிரமம் எடுத்துக் கொண்டாராம். அதனால்தான் அந்தத் தேசங்களிடையே இதற்குமுன் ஏற்படாத மனக் கசப்பு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறதோ?

பிரிட்டிஷார் அதிகாரத்தை இந்தியர் கையில் கொடுத்துவிடத் தயாராயிருக்கிறார்களாம்! அப்படியானால் காந்தியடிகளையும் காங்கிரஸ் கமிட்டியாரையும் கைதி செய்வானேன்? நிர்வாக சபையில் அதிகமான இந்தியர்களைச் சேர்த்துக் கொண்டதுதான் அதிகாரத்தைக் கொடுக்க விரும்புவதின் அறிகுறியோ?

அதிகாரத்தைக் கொடுக்கத் தடையா யிருப்பது நம்முடைய ஒற்றுமைக் குறைவாம்! அப்படியானால்

கலந்து பேச இடம் தராமல் இருப்பதின் காரணம் என்ன ?

அவர் சாதித்ததாகக் காட்டுவதை நாம் ஒப்புக்கொள்ளமுடியாவிட்டாலும், அவர் ஒன்றுமே சாதிக்கவில்லை என்று கூறிவிட முடியாது. சாதாரண ஜனங்களும் தெரிந்துகொள்ளக் கூடிய விதத்தில் சாதித்துள்ளவைகள் உண்டு.

கிரிப்ஸ் தூதைத் தோல்வியுறச் செய்ததும், காங்கிரசைச் சிறையில் வைத்ததும், என்றுமில்லாத அடக்குமுறைகளைக் கையாண்டதும், எப்பொழுதும் சர்க்காருக்கு ஆதரவளித்து வந்த மிதவாதிகளைக்கூட மனம் கசக்குமாறு செய்ததும், போர் நிகழுங் காலமாயினும் ஆஸ்திரேலியா, அயர்லாந்து, அமெரிக்கா, முதலிய நாடுகளில் எல்லாம் சட்டசபைகளுக்குப் புதிதாகத் தேர்தல் நடைபெற்றிருக்கக் காங்கிரஸின் பலம் உலகமறிந்து விடும் என்று பயந்து இங்குமட்டும் போர்ச் சமயம் என்று சாக்குச் சொல்லித் தேர்தல் நடத்தாமல் ஜனநாயகத்தைக் குழிவெட்டிப் புதைத்ததும் இவர் இந்தியாவுக்குச் செய்த மகத்தான சேவைகள் அல்லவா ?

லாகூரில் கூடிய முஸ்லிம் மகாநாட்டில் "என்னையும் வைஸ்ராய் காந்திக்கு நிகராக மதித்து விட்டாரே, என்ன ஆச்சரியம்" என்று ஜின்னு சாஹிபே பிரமித்துக் கூறும் வண்ணம் முஸ்லிம் லீக்குக்கு அதன் தகுதிக்கு அதிகமான பெருமையைக் கொடுத்ததும், ஒன்றுக்குப் பத்தாக ஹிந்து முஸ்லிம் வேற்றுமைக்கு உயிர் கொடுத்து ஏகாதிபத்தியத்துக்கு காயகற்பங் கொடுத்து வந்ததும் அவற்றைவிடப் பெரிய காரியங்கள் அல்லவா ?

இவைகள் எல்லாம் ஜனங்களுக்குத் தெரியாவிட்டாலும் இவருடைய தர்ம ராஜ்யாதிகாரத்தில் என்றும்

இல்லாத பஞ்சம் தோன்றி லட்சக்கணக்கான மக்கள் யமனுலகு சென்று வருவதை எந்தக் காலத்திலும் மறக்க முடியாது. கர்ஸன் என்றதும் வங்காளப் பிரிவினை என்றும், மின்ரோ என்றதும் முஸ்லிம் தனித் தொகுதி என்றும், எப்படி ஞாபகம் வருகிறதோ அப்படியே லின்லித்கோ என்றதும் வங்காளப் பஞ்சம் என்பது ஞாபகத்துக்கு வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

# வங்காளப் பஞ்சம்

1943 அக்டோபர் 18-ந் தேதி வேவல் பிரபு வைஸ்ராய் பதவியை ஏற்று, அடுத்த வாரம் கல்கத்தா சென்று, பஞ்சத்தின் கொடுமையைத் தீர்க்க சேனையின் உதவியை வங்காள சர்க்காருக்குக் கிடைக்கும்படி செய்தார். அதனால் ஜனங்களுக்குச் சில சௌகர்யங்கள் உண்டாயின. ஆயினும் பஞ்சம் நடந்து கொண்டேதான் இருந்தது.

வங்காளத்தில் ஏப்ரல் மாதம் அதிகமாகத் தொடங்கிய பஞ்சம் நவம்பர் மாதத்துக்குள் நாவால் சொல்ல வேண்டாம், மனத்தால்கூட நினைக்க முடியாத அளவு அதிகப்பட்டுவிட்டது. தேசமெங்கும் ஜாதிமத வேறுபாடின்றி வங்காளத்துக்குப் பண உதவியும் வைத்திய வசதியும் அளிக்க ஏற்பாடுகள் எல்லோராலும் அவசர அவசரமாகச் செய்யப்பட்டன. 5500 இடங்களில் சமையல் செய்து 21 லட்சம் பேர்க்கு இலவசமாக உணவு அளிக்கப்பட்டது. ஆயினும் கல்கத்தாவிலுள்ள ஆஸ்பத்திரிகளில் தினந்தோறும் 60, 70, பேர் பட்டினியால் இறந்துபோய்க்கொண்டிருந்தார்கள். தெருக்களிலெல்லாம் பிணங்கள் குவியலாயின. அவற்றைச் சுட முனிஸிபாலிட்டியார் ஏற்பாடுகள் செய்தும் உடனுக்குடன் சுட முடியாமல் பிணங்கள் அடுக்கிக் கிடக்கும்படி அவ்வளவு அதிகமாக அநாதை மரணங்கள் உண்டாய் வந்தன. தாய் தந்தையர் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு

தங்கள் அருமந்த குழந்தைகளைத் தனியே விட்டு விட்டு ஓடும் படியான நிலைமை கூட வந்துவிட்டது.

சாதாரணமாக நமது நாட்டுக்கு பர்மா முதலிய நாடுகளிலிருந்து பத்து சதமானத்துக்குக் குறைவாகவே தானியங்கள் வந்துகொண்டிருந்தன. அதனால் பர்மா ஜப்பான் வசமாகி விட்டபோதிலும் பிரமாதமான தானியப் பஞ்சம் ஏற்பட்டுவிட வேண்டியதில்லை. ஆயினும் விலைவாசிகள் யுத்த ஆரம்ப காலத்தில் 100 என்றால், 1943-ல் 254 ஆக ஏறிவிட்டன.

ஆனால் நம்மை ரக்ஷிப்பதற்காக கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இங்கிலாந்தின் நிலைமை என்ன? அங்கே நாட்டில் விளைந்த உணவுப் பொருள்கள் 5 கோடி ஜனங்களில் 2 கோடிப் பேருக்கே போதுமானதாக இருந்தன. பாக்கி 3 கோடிக்கும் அயல்நாடுகளிலிருந்தே வந்துகொண்டிருந்தன. ஆதலால் அயல் நாடுகளில் இருந்து வர முடியாததும், வந்தாலும் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களைத் தப்பி வருவது கஷ்டமாய் இருந்ததுமான யுத்த காலத்தில் ஆகாரப் பஞ்சம் அதிகமாக உண்டாய் இருக்க வேண்டும் அல்லவா? ஆனால் அங்கே உணவுப் பொருள்களின் விலை 25 சதமானமாகவே கூடியிருந்தது. போர் என்றதும் போதுமான உணவு உண்டாக்க ஆரம்பித்து விட்டதாலும், ஜனங்களிடை பணக்கஷ்டம் இல்லாததாலும், விலைவாசிகள் சிறிதளவே ஏறியிருந்ததாலும் இங்கிலீஷ் ஜனங்கள் ஆகாரக் கஷ்டத்தைக் கொஞ்சங் கூட அநுபவிக்கவில்லை. அவர்கள் முன்னிலும் அதிக ஆரோக்கியமாக இருப்பதாகக்கூடச் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

ஆனால் இந்தியாவில் மட்டும் வீட்டில் அரிசியிருக்க மக்கள் பட்டினி கிடப்பானேன்? அதிலும் வங்காளம் இந்தியாவின் நெற்களஞ்சியமாயிற்றே. அப்படியிருக்க

அங்கே இந்தக் கொடுமையான பஞ்சம் வரக் காரணம் என்ன ?

சர்க்கார் உணவுப் பொருள்களை ஏராளமாக வாங்கி அயல்நாடுகளுக்கு அனுப்பியதும், சேனைகளுக்கு விநியோகித்ததும், அதிகமாக உற்பத்தி செய்வதற்குத் தீவிரமான ஏற்பாடுகள் செய்யாததும், சகல பாகங்களுக்கும் சரியாக விநியோகிக்காததுமே முக்கியமான காரணங்களாகும்.

அரசாங்கத்தார் இதுவிஷயத்தில் எவ்வளவு அஜாக்ரதையாக இருந்தார்கள் என்பதற்கு பஞ்சம் ஆரம்பமான காலத்தில் அமரி துரை "இந்தியாவில் ஜனங்களுக்கு இப்பொழுது அதிகமான வருமானம் கிடைப்பதால் அதிகமான உணவே உண்கிறார்கள்" என்று சர்வ சாவதானமாக உரைத்ததே போதுமான சான்று.

அது மட்டுமா? பின்னொரு சமயம் வங்காளத்தில் பஞ்சத்தால் இறந்தவர் தொகை என்ன என்று கேட்ட பொழுது "பத்து லட்சத்துக்குக் குறைவாகவே" என்று சற்றும் மனம் பதறாமல் கூறினார். 10 லட்சம் வேண்டாம், 10ப்பேர்கூடப் பட்டினியால் இறக்கலாமா? ஆனால் பரம கருணை வள்ளல்களாகிய பிரிட்டிஷாருடைய ஆக்ஷியில் 10 லட்சம் பேரா இறந்தனர்? கல்கத்தா சர்வகலா சாலையார் நடத்திய பரிசோதனையின்படி 35 லட்சம் பேரல்லவோ இறந்தனர்? நவம்பர் மாதம் நடந்த மத்திய சட்ட சபையில் வங்காளம் முழுவதும் நேரில் போய்ப் பார்த்து வந்த இந்திய ஊழியர் சங்கத்தலைவர் பண்டித குன்ஸ்ரூ அங்கே வாரந்தோறும் 50 ஆயிரம் பேர் இறந்து வருவதாகக் கூறினாரே, அப்படியிருக்க அமரி உண்மையை இப்படி மறைப்பானேன் ?

காங்கிரஸ் அதிகாரத்தை விட்டு விலகுங்கள் என்று கூறினால், நாங்கள் இந்தியாவின் க்ஷேமத்துக்கு ஜவாப்

தாரியாயிற்றே, எப்படி உங்கள் கையில் அதிகாரத்தைக் கொடுப்பது, இந்து முஸ்லிம்கள் சண்டையிட்டு நாட்டைப் பாழ்படுத்தி விடமாட்டார்களா என்று சர்க்கார் கேட்கிறார்களே. ஆனால் அவர்கள் இந்தியாவின் க்ஷேமத்தைக் காப்பது இது தானே? ஆறு மாத காலத்தில் ஆறு கோடிப் பேர் உள்ள இடத்தில் 35 லட்சம் பேர் உயிர் துறந்ததும், பாக்கிப் பேர் நோயால் வாடி வந்ததும் நாட்டைப் பாழ்படுத்தியது ஆகாதோ?

பிரிட்டிஷ் சர்க்கார் நம் நாட்டின் க்ஷேமத்தில் அக்கரை காட்டும் விநோதத்தைப் பாருங்கள். 1943 நவம்பர் மாதம் காமன்ஸ் சபையில் இந்தியாவில் சென்ற 150 வருஷ காலத்தில் ஏற்பட்டிராத அவ்வளவு கடுமையான பஞ்சத்தைக் குறித்து விவாதம் நடந்தது. ஐரோப்பாவில் சுண்டைக்காய் போல சிறிதாயுள்ள நாடுகள் விஷயத்தில் கூட கச்சை கட்டிக் கொண்டு அக்கரை காட்டப் புறப்படும் சர்ச்சில் துரைமகனுருக்கு அந்த விவாதம் நடந்த சமயம் பிரஸன்னமா யிருக்கத் திருவுள மாகவில்லை. அது மட்டுமா, வானுலகில் இருந்து ஆண்டவன் கவனித்து வருவது போல அவனுடைய பிரதிநிதியாக 6000 மைலுக்கு அப்பாலிருந்து கவனித்து வரும் பார்லிமெண்டில் 600 மெம்பர்களுக்கு அதிகமுண்டு. ஆனால் நமது பஞ்ச விவாத சமயம் 50 பேர் கூட ஆஜரா யிருக்கவில்லை. அதனால் தான் டாக்டர் ஜயக்கர் "எங்கள் விஷயம் கவனிப்பதாக இந்தக் கோமாளி வேஷம் எதற்காக?'' என்று கேட்டார்.

இந்த விதமாக நமது யஜமானர்கள் நம்முடைய விஷயத்தில் ஏனோ தானோ என்றிருக்கிறார்களே, அடிமை தேசங்களுக்கெல்லாம் சுதந்திரம் வழங்கப் போவதாகக் கூறி அட்லாண்டிக் சாஸனத்தை வெளியிட்ட அமரிக்க

ஜனதிபதி ரூஸ்வெல்ட் விஷயம் என்ன? அவர் இந்தியா வைப்பற்றி சிந்திக்காமல் இருக்கவில்லை. ஆனால் 1943 டிசம்பரில் அமரிக்கக் காங்கிரஸின்முன் பேசிய பொழுது இந்தியா ஜப்பானை ஜெயிப்பதற்கு எவ்வளவு முக்கிய மான பாசறை என்பதைப்பற்றி மட்டுமே குறிப்பிட் டாரே அன்றி இந்தியாவில் படை படையாக அள்ளி வரும் பஞ்ச யமனைப்பற்றியோ, அதைத் தடுப்பதற்கு வேண்டிய தேசிய சர்க்காரைப்பற்றியோ ஒரு வார்த்தை கூடக் கூறினரில்லை.

இப்படிப் பிரிட்டனும் அமரிக்காவும் இந்தியாவின் சுதந்திர விஷயத்தில் அலட்சியமாய் இருப்பதைக் கண்டே அமரிக்கப் பத்திரிகைகள் எல்லாம் இந்த யுத்தம் ஏகாதி பத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யும் யுத்தமாக ஆய்விடும்போல் இருக்கிறதே என்று ரூஸ்வெல்ட்டுக்கு நினைவூட்ட ஆரம்பித்தன. ஆனால் ஏகாதிபத்திய யுத்தமாக இனிமேலா ஆரம்பிக்கப் போகிறது? என்றுவரை இந்தி யாவுக்குச் சுதந்திரம் வழங்கப்படவில்லையோ அன்றுவரை யார் என்ன சொன்னலும் ஏகாதிபத்திய யுத்தமே என் பதில் சந்தேகம் வேண்டியதில்லை. அப்படியே தான் பெர்னர்ட் ஷா போன்ற பிரிட்டிஷ் அறிஞர்களும், பெர்ல் பக் போன்ற அமரிக்க அறிஞர்களும் அடிக்கடி கூறி வந்தார்கள்.

இப்படி அமரிக்காவும் பிரிட்டனும்தான் அலட்சிய மாக இருந்தன என்று எண்ண வேண்டாம். நமது ஜின்னா சாகிப் அவர்களும் இந்த நேரத்திலாவது சமரச மாய்ப் போவோம் என்று எண்ணமல் டிசம்பர் 23-ம்தேதி கராச்சியில் நடந்த முஸ்லிம் லீக் கூட்டத்தில் "நமக்குச் சொந்தமான முஸ்லிம் பிரதேசங்களை நாம் கைப்பற்றி ஆளாமல் இருந்து விடப் போவதில்லை" என்று கர்ஜிப் பதிலேயே கண்ணுயிருந்தார்.

சைனுவில் 5 கோடி முஸ்லிம்கள் உளர். அவர்களுடைய தேசிய சங்கத்தின் தலைவர் உமர்பாய் என்பவர். அவர் சைனுவின் உபசேனுதிபதியுமாவார். அந்த சங்கத்தின் நோக்கங்கள் தேச க்ஷேமம், இஸ்லாமிய வளர்ச்சி என்பன. அந்த இரண்டிலும் தேச க்ஷேமத்தையே அதிக முக்கியமாகக் கருதுகிருர்கள். சங்கத்தின் தலைவர் உமர் பாய் சமீபத்தில் ஜின்ஞு சாகிபை காங்கிரஸுடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொண்டாராம். ஆனுல் ஜின்ஞு சாகிப் யார் சொன்னுல் கேட்பார்?

# ஸரோஜனி தேவியார்க்குத் தடை

காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்களில் நோயா யிருந்த சரோஜனி தேவியார் 1944 ஜனவரி 26-ம் தேதி லாகூர் சென்றபொழுது, பத்திரிகைப் பிரதிநிதிகள் சர்க் காருடைய குற்றச்சாட்டுகளைப்பற்றி கேட்டபொழுது, அவர் "சர்க்கார் கூற்று உண்மைக்கு விரோதமானது. அதிகாரம் வேண்டும் என்று கேட்டோம். அதற்காக சத்யாக்கிரகம் செய்ய விரும்பினோம். ஆயினும் அதை ஆரம்பிக்குமுன் அரசாங்கத்துடன் மறுபடியும் சமரசம் பேச எண்ணினோம், சர்க்கார்தான் அவசரப்பட்டு விட் டார்கள், காந்தியோ காங்கிரஸோ ஒருநாளும் அஹிம் ஸையிலிருந்து பிறழ்ந்து நடக்க எண்ணியதில்லை. காந்தி யடிகளை ஜப்பான் ஆள் என்று கூறுவது சுத்தப் பொய். அவர் ஆகஸ்டுத் தீர்மானத்துக்கு முன் மே மாதத்தி லேயே ஸ்லேட் அம்மையார், ஜப்பான் வந்தால் என்ன செய்வது என்று கேட்டதற்கு, எதிர்க்கவேண்டும் என்று பதில் எழுதியிருந்தார், ஆனால் சர்க்கார் அதைத் தடுத்து வைத்துக்கொண்டார்கள். அப்படியிருந்தும் அவர்கள் காந்தியடிகளை ஜப்பான் பக்தரென்று கூறுவது எவ் வளவு விபரீதமான செயல்? இப்பொழுதும் காரியக் கமிட்டியாரைச் சந்திக்க காந்தியடிகளுக்குச் சந்தர்ப்பம் அளித்தால் ஏதேனும் விமோசன மார்க்கம் தோன்றாமல் போகாது. ஆனால் காங்கிரஸ் கொள்கைக்கு விரோத மான சமரசம் செய்ய ஒருநாளும் சம்மதிக்க முடியாது" என்று கூறினார்.

அவ்வளவுதான் உடனே சர்க்கார் அவர் இனிமேல் அரசியல் விஷயமாகப் பேசவுங்கூடாது, அறிக்கைவிடுக்கவுங் கூடாது, என்று தடை உத்திரவு போட்டுவிட்டார்கள். காங்கிரஸின் கொள்கை இதுதான் என்று ஐயம் திரிபறக் கூறக்கூடியக் காரியக்கமிட்டியாரில் இவர் ஒருவரே சிறைக்கு வெளியே இருக்க, அந்தக் கொள்கையைக் கூறக்கூடாது என்று அவர் வாயை அடைப்பது எவ்வளவு அநீதி!

அவர் கூறியதில் ஏதேனும் குற்றமான விஷயம் உண்டா? பலாத்காரமோ அல்லது சட்டவிரோதமான செயலோ செய்யச் சொல்லவுமில்லை. சர்க்காரின் யுத்த முயற்சிகளுக்குத் தடை செய்யவுமில்லை.

அதற்குப் பதிலாக அவர் கூறியது அஹிம்ஸா தர்மத்தை உறுதிசெய்வதாகவும், ஜப்பானை எதிர்க்கவேண்டும் என்ற உணர்ச்சியை வளர்ப்பதாகவும் சமரசத்திற்கு வழிகோலுவதாகவுமே இருந்தது.

ஆனல் அதே சமயம் அவருடைய பேச்சு சர்க்கார் கூற்றுக்கள் எல்லாம் வெறும் வேஷம் என்று உலகத்துக்குக் காட்டிவிட்டதை சர்க்கார் பொறுக்க முடியுமா? அத்துடன் அவர்களுக்குச் சிக்கலைத் தீர்க்கவேண்டும் என்ற ஆசையும் கிடையாதல்லவா? சரோஜனிதேவியாரைத் தடைசெய்ததேன் என்று மத்திய சட்டசபையில் கேட்டபொழுது சர்க்கார் மெம்பர் மாக்ஸ்வெல், தேவியார் கூறியதைக் காட்டியதோடு அவர் 26-4-4ல் சுதந்திரப் பிரதிக்ஞை செய்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தாரே அந்தப் பிரதிக்ஞை ராஜத்துரோகமானது என்ற காரணத்தையுங் கூறினர்.

சுதந்திரப் பிரதிக்ஞை ராஜத் துரோகமானதா? சுதந்திரம் கடவுள் தரும் பிறப்புரிமை. அதைக்கேட்பது ராஜத் துரோகமானல், அதைக் கேட்கக் கூடாது

என்று தடுப்பது தெய்வத் துரோகமல்லவா? ஆனால் ஏகாதிபத்தியம் என்றேனும் தெய்வத்தைப்பற்றிச் சிந்திப்பதுண்டா? சாத்தான் சர்வேஸ்வரன் இருவருக்கும் தொண்டுசெய்வது இயலாத காரியம் என்று இயேசு கூறியது உண்மையே அன்றோ?

சர்க்கார் மெம்பர் சுதந்திரப் பிரதிக்ஞை ராஜத்துரோகமானது என்று கூறிய அதே சமையத்தில் சர்க்கார் நீதிபதியான வார்தா ஜில்லா ஜட்ஜ் "சுதந்திரப் பிரதிக்ஞை பலாத்காரம் செய்யும்படியோ, சர்க்காரைக் கவிழ்க்கும்படியோ, தூண்டும் என்று சொல்லக் கூடியதாக இல்லை. ஒவ்வொரு வருஷமும் வாசிக்கப்பட்டிருந்தும், அதை இதுவரை சர்க்கார் தடுக்காததிலிருந்து அதனால் சர்க்காருக்கு இடைஞ்சல் ஏற்படவில்லை என்றே கூறவேண்டி யிருக்கிறது." என்று ஒருவழக்கில் அபிப்பிராயம் கூறினர். நிர்வாக மெம்பர் கூறுவது சரியா? நியாய அதிபதி கூறுவது சரியா?

## வேவல் பிரசங்கம்

வேவல் துரை வந்தால் விமோசனம் வந்து விடும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமே அடைந்தார்கள். அவர் 1944 பெப்ரவரி மாதம் நடைபெற்ற மத்தியசபைக் கூட்டத்தில் :—

"யாரும் பூகோள அமைப்பை மாற்றிவிட முடியாது. தேசப் பாதுகாப்பு, அந்நிய நாட்டுச் சம்மந்தம், உள்நாட்டு, வெளிநாட்டுப் பொருளாதாரப் பிரச்னை, எதைக் கவனித்தாலும் இந்தியா ஒரே தேசமே."

என்று கூறியது பாக்கிஸ்தான் பாக்கிஸ்தான் என்று கேட்டுப் புண்பட்டுப் போயிருந்த இந்தியத் தாயின் மனத்துக்கு அமிர்தாஞ்சனமாகவே இருந்தது. அப்படியானால் வேவல்துரை ஜின்னா சாகிபிடம் தேசத்தைப் பிரிக்கமுடியாது, உம்முடைய கடையைக் கட்டும் என்று கண்டிப்பாய்க் கூறிவிடுவார் என்ற எண்ணம் உதித்தது. அவரும் ஏகாதிபத்தியச் சக்கரங்களில் ஒருவரே என்பது மறந்து போய்விட்டது.

அதை மறக்கலாமா ? என்று கேட்பதுபோல அவர் அடுத்த வாக்கியத்தில்—

"ஆனால் இரண்டு முக்கியக் கட்சிகளுமாவது ஒன்று சேர்ந்தாலன்றி சமீபத்தில் முன்னேற்றம் உண்டாகும் என்ற அறிகுறி தோன்றவில்லை."

என்று கூறி நமக்கு ஏகாதிபத்தியத்தின் மூலமந்திரத்தை நினைவூட்டினார்.

ஒரு கையால் அடிப்பதும் ஒரு கையால் அணைப்பதும் இராஜதந்திரமாகையால் இப்படிக் கூறிவிட்டு,

"ஆனால் ஸ்காட்லாந்து, கானடா, ஸ்விட்ஜர்லாந்த், அமரிக்கா, ரஷ்யா முதலிய தேசங்களில் வகுப்புப் பிரச்சினையைத் தீர்த்திருப்பதால் நீங்களும் அவைகளை ஆராய்ந்து ஒற்றுமைக்கு வழி காணலாம்" என்று யோஜனை கூறினார்.

ஆனால் அங்கெல்லாம் சர்க்கார் குதிரைக்கு முன்னால் வண்டியை நிறுத்தாமல், வண்டிக்கு முன்னால் குதிரையைப் பூட்டினார்கள் என்பது நமக்குத் தெரியாதென்று எண்ணிவிட்டாரோ என்னவோ, அந்த நாடுகளின் சரித்திரங்களை ஆராய்ந்துதான் காங்கிரஸ் மகா சபையாரும் அங்குபோல் இங்கும் சுதந்திரம் வழங்கினால்தான் ஒற்றுமை உண்டாகும் என்று வற்புறுத்தி வருகிறார்கள்.

அது போகட்டும் ஒற்றுமையுண்டானால்தான் சுதந்திரம் என்று கூறுகிறாரே ஒற்றுமை உண்டாக்க இவர் என்ன செய்தார்? இவராக ஒன்றும் செய்யவும் இல்லை, பிறர் செய்ய இடம் தரவும் இல்லை, காரியக் கமிட்டியாரையும் காந்தியடிகளையும் விடுவித்து சிக்கலைத் தீர்த்து வைக்கும்படியாக ஒன்றரை வருஷகாலமாக இந்தியா, அமரிக்கா, இங்கிலாந்து, மூன்று தேசங்களிலிருந்தும் வேண்டுகோள் இடைவிடாமல் குவிந்தவண்ணமாக இருக்கின்றதே. அதை இவர் கொஞ்சமேனும் லட்சியம் செய்யாமல் சட்ட சபையில் காங்கிரஸ் ஒத்துழைப்பதாக இன்னும் காட்டிக்கொள்ளவில்லை, எப்படி விடுதலை செய்வது என்று கேட்டார்.

காங்கிரஸ் ஒத்துழைப்பதென்றால் சர்க்கார் அகராதியில் "ஆகஸ்டுத் தீர்மான ரத்து—அட்டூழிப் பொறுப்பு ஏற்பு" என்பதே பொருளாகும்.

ஆனால் காரியக் கமிட்டியாரை விடுதலை செய்தால் தானே ஆகஸ்டுத் தீர்மானத்தை புனராலோசனை செய்ய முடியும்?

அட்டூழியங்கள் செய்யும்படி காங்கிரஸ் சொல்லா திருக்க அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்வது எப்படி? அவர்கள்தான் பொறுப்பாளிகள் என்றால் அதைப் பாரபக்ஷமற்ற கோர்ட்டில் நிரூபிக்கத் தயங்குவானேன்?

ஆனால் சர்க்கார் சிக்கலைத் தீர்க்க விரும்பினால் தானே இந்த இரண்டு நியாயமான காரியங்களும் செய்வார்கள்? ஆயினும் சர்க்காரின் நியாயமற்ற பிடிவாதத்தால் எவ்விதமான நன்மையும் உண்டாகவில்லை என்று கூற முடியாது.

தேசிய சர்க்காரின்றி எவ்வித விமோசனமும் கிடையாது என்பதும், அதற்குக் காங்கிரஸ்தான் வழி காட்ட முடியும் என்பதும், அதனால் உடனடியாகக் காரியக் கமிட்டியாரை விடுதலை செய்ய வேண்டியது அவஸியம் என்பதும், உலகத்திலுள்ள சகல கக்ஷியாருடைய மனத்திலும் உறுதியாகப் பதிந்துவிட்டன. இது ஒரு மகத்தான நன்மை அல்லவா?

112 பத்திரிகாசிரியர்கள் தங்கள் கக்ஷிகளும் அபிப்பிராயங்களும் வேறு வேறாக இருந்தாலும் இந்த விஷயத்தில் ஒன்று சேர்ந்து வைசிராய்க்கு வேண்டுகோள் அனுப்பினார்கள்.

அதைவிட முக்கியமானது சென்னை சட்டசபை எதிர்க் கக்ஷித்தலைவர்—காங்கிரஸ் சபையை எப்பொழுதும் தாக்கி வரும் ஜஸ்டிஸ் கக்ஷியின் பிரதமர் குமார ராஜா முத்தையா செட்டியார் இந்திய வியாபார சங்க பெடரேஷன் கூட்டத்தில் தலைமை வகித்துச் செய்த பிரசங்கமாகும்.

"அநேகமாக, நாட்டிலுள்ள, சகல கக்ஷித் தலைவர்களும் காங்கிரஸ் கமிட்டியாரையும் காந்தியடிகளையும் விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விட்டார்கள். விடுதலை செய்தால் விபரீதம் விளையும் என்ற காலம் கடந்துபோய் விட்டது. இனி ஒரு நிமிஷமும் தாழ்த்தலாகாது. என்னைப்போன்றவர்களும்கூட சர்க்காரின் தவறுகளைப் பகிரங்கமாகக் கண்டிக்க வந்து விட்டார்கள் என்றால் சர்க்கார் எப்பொழுதும் தன்னைத் தாங்கிப் பேசுவோர் உட்பட சகல ஜனங்களுடைய நம்பிக்கையையும் படிப்படியாக இழந்து வருகின்றது என்பதுதான் பொருள்" என்று எவ்வளவு பச்சையாகக் கூற முடியுமோ அவ்வளவு பச்சையாகக் கூறினார்.

மத்திய சட்டசபை மார்ச்சு மாதம் கூடியபொழுது காங்கிரஸ், முஸ்லிம்லீக், தேசீயக் கட்சி மெம்பர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துகொண்டு வைசிராயின் நிர்வாக சபையிடம் நம்பிக்கையில்லை என்று கூறி இந்தியப் பாதுகாப்புச் சட்ட அமுலைக் கண்டித்தார்கள். சர்க்கார் கொண்டுவந்த நிதி மசோதாவையும் நிராகரித்தார்கள்.

இப்படிச் சர்க்காரைக் கண்டிக்கும் விஷயத்தில் காங்கிரசுடன் முஸ்லிம்லீக் சேர்ந்துகொண்டதிலிருந்தும் ஏழெட்டுத் தேர்தல் மெம்பர்களே சர்க்காருக்கு ஓட்டுச் செய்தார்கள் என்பதிலிருந்தும், இந்த சர்க்கார் எப்பொழுது மாறுமோ என்று எல்லோரும் ஒருப்போல் எண்ண ஆரம்பித்தார்கள்.

1944 பெப்ரவரி மாதம் அன்னை கஸ்தூரிபாய் அவர்கள் தெய்வம் ஆனார்கள். அதன் பின் ஏப்ரல் மாதத்தில் காந்தியடிகளுக்குச் சுகமில்லை என்ற செய்தி வெளியாயிற்று. நாடெங்கும் ஒரே கவலை குடி கொண்டது.

காந்தியடிகளை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்று சகல பாகங்களிலிருந்தும் வைசிராய்க்கு வேண்டுகோள் போய்ச் சேர்ந்தன. சர்க்கார் யோஜனை செய்து கடைசியாக மேமாதம் 5-ம் தேதி காலையில் விடுதலை செய்தார்கள்.

அன்னை கஸ்தூரி பாய் நோயாய் இருந்த பொழுது விடுவிக்க மறுத்து சிறையிலேயே உயிர் நீக்க விட்ட சர்க்கார் மகாத்மா காந்தியடிகளை விடுவித்து விட்டது. ஏன்? சமரச நோக்கத்தோடு தான் விடுவித்திருக்கிறார்கள், அதனால் காங்கிரஸ் கமிட்டியாரையும் விடுவித்து விடுவார்கள், சமரச சம்பாஷணை ஆரம்பமாகும் என்று அநேகர் எண்ணினார்கள். அதன் பேரில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் எல்லோரையும் உடனே விடுவித்து விடும்படியாகக் கேட்க ஆரம்பித்தார்கள்.

பிரிட்டிஷ் சர்ச்சுகளின் சங்கத்தாரும் பிரிட்டிஷ் தொழிற்கட்சி பார்லிமெண்ட் மெம்பர்கள் பலரும் அமரியைப் பேட்டி கண்டு காங்கிரஸ் தலைவர்களை விடுவிக்கும் படியும் சட்ட சபைகளுக்குத் தேர்தல் நடத்தும்படியும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் அமரி துரை காந்தியை நோய் காரணம் பற்றியேதான் விடுவித்திருக்கிறோம், எல்லோரையும் விடுவிக்க வேண்டுமானால் வைஸிராய் கூறிய நிபந்தனை பூர்த்தி செய்யப்படக் காணோம் என்று பழைய கதையையே கூறினார்.

அமரியின் "அண்ணா" சர்ச்சில் துரை பார்லிமெண்டு சபையில் "தேசங்கள் கொள்ளையடிக்கப் புறப்படுவதை அடியோடு நிறுத்தியே தீர வேண்டும். ஆனால் இதற்கு முன்னால் தேடி பரம்பரையாக அனுபவித்து வரும் சந்தோஷங்களுக்கு உரிமை கிடையாது என்று சொல்லுவதாக எண்ண வேண்டாம்" என்று கூறினார்.

அதன் பொருள் இனிமேல் யாரும் கொள்ளையடிக்கக் கூடாது, இதற்கு முன் கொள்ளையடித்ததைப் பறிக்க மாட்டோம் என்பது தானே?

ஆனால் அமரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சர்வதேச தொழில் ஸ்தாபனம் சகலருக்கும் சுதந்திரமும் தொழிலும் அளிப்பதாகக் கூறி 'பிலடல்பியா சாஸனம்' தயாரித்ததை அங்கீகரித்து "உலகத்தில் அமுக்கி வைக்கப்பட்டிருக்கும் நாடுகளுக் கெல்லாம் இந்த சாஸனத்தில் கண்ட லட்சியங்கள் கைகூடும்படி செய்ய அமரிக்கா தீர்மானித்திருக்கிறது" என்று கூறினார்.

அதுபோலவே அமெரிக்கா மந்திரி கார்டல் ஹல் "அமரிக்கா அடிமை ஜனங்களை எல்லாம் சுதந்திரத்துக் காக உழைக்கும்படி உற்சாகம் ஊட்டுகிறது. அதுவே தான் அது எந்தக் காலத்திலும் எல்லா இடங்களிலும் தவறாமல் செய்து வந்திருக்கும் காரியம்." என்று கூறினார்.

ஆனால் இவர்கள் சர்க்கரை என்ற உடன் இனித்து விடாது என்பதை அறிந்து பேசுகிறார்களா? அல்லது அறியாதது போல் பேசுகிறார்களா? ஆயிரம் ரூபாய் பின்னால் கொடுப்பதாகக் கூறுவதினும் ஐந்து காசு இப்பொழுது கொடுப்பதே நம்பிக்கை உண்டாக்குவதாகும். அட்லாண்டிக் சாஸனம் எங்களுக்கும் உண்டா என்ற கேள்விக்கு இதுவரை பதில் உரையாததால் இவர்கள் "எல்லோருக்கும்" என்னும்போது "வெள்ளையர் எல்லோருக்கும்" என்று தானே பொருள் கொள்ள வேண்டும்? இதைவிட உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத சர்ச்சில் பேச்சே உத்தமம் அல்லவா?

சர்க்கார் விஷயம் இதுவானால் சர்க்கார் துணையான ஜின்னா சாகிப் விஷயம் என்ன? காங்கிரஸைப்பற்றி

அடிக்கடி குறை கூறிவரும் சர். ஸி. ஆர். ரெட்டி "சென்ற மூன்று மாதமாக ஜின்னு சாகேப் பேசிய பேச்சுக்களைப் பார்த்தால், அவருடைய கொள்கையில் நிமிஷத்துக்கு நிமிஷம் வேறு வேறு மாறுதல்கள் தோன்றி வருவதைக் காணலாம். நான் விட்டேன் என்று பயமுறுத்துவதும், அப்படியே ஆகட்டும் என்று அடிபணிவதும், அடுத்தடுத்துக் காணப்படுகின்றன" என்று ஜின்னுவின் நிலைமையை வெகு அழகாகக் கூறினார்.

# ஜின்னாவின் போக்கு

ஜின்னா சாஹேப் ஆதியில் முஸ்லீம்களுக்கு சிறு பான்மையோர்க்கு உரிய விசேஷப் பாதுகாப்பு மட்டுமே கோரினார். அதன்பின் அரசியல் வாழ்வில் முஸ்லிம்கள் சிறுபான்மையோரா யிருந்தாலும் அவர்களுக்கு இந்துக்களுடன் சரிசமமான அந்தஸ்துக் கொடுக்கப்படவேண்டும் என்றார். அப்பால் போர் துவக்கியதும் வைசிராய் காந்தியடிகளுக்குக் கொடுத்த அந்தஸ்தை அவருக்கும் கொடுத்து அவரை தாம்ஸன் துரை கூறுவதுபோல "ஒரு முஸ்லிம் மகாத்மா" ஆக்கியதும் அவரே பிரமித்துப் போய் பிறகு பிரக்ஞை வந்ததும் அப்படியானால் இனி மேல் இந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு சமூகங்கள், நாட்டைப் பங்கிட்டுக் கொள்வோம் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார். ஆனால் பாக்கிஸ்தான் தீர்மானம் செய்த சில மாதங்களுக்குள் ஆஸாத் முஸ்லிம் மகாநாடு அல்லாபக்ஷ் சாஹேப் தலைமையில் ஆயிரக்கணக்கான முஸ்லீம் பிரதிநிதிகளுடன் டெல்லியில் கூடி முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம்களின் பிரதிநிதி என்பதை மறுத்தும், நாட்டைப் பிரிக்கும் யோஜனையைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியது. அதைக்கண்டு முஸ்லிம் லீகர்கள் பயந்துபோனார்கள். ஆனால் ஜின்னா சாஹேப் அணுவளவும் அதைரியப்படாமல் விடாப்பிடியாகத் தம்முடைய புதிய யோஜனையை அடிமேல் அடியாகக் கூறிக்கொண்டே இருந்தார். சர்க்கார் கவர்னர்களும் சூழ்ச்சிகள் செய்து அஸ்ஸாம், எல்லைப்புறம், ஸிந்து,

வங்காளம், ஆகிய நான்கு மாகாணங்களிலும் முஸ்லிம் லீக் மந்திரி சபைகள் ஏற்படும்படி செய்து லீக்குக்குப் பலம் அளித்தார்கள். கிரிப்ஸும் கடைசியாக இந்து முஸ்லிம் பிளவைக்காட்டி ஜின்னுவுக்கு அதிகமான உத்சா கத்தைக் கொடுத்தார்.

ஆதலால் அவர் 1943 ஏப்ரலில் இந்துக்களைப் பார்த்து சுதந்திரமா வேண்டும், இந்தியாவைப் பிரியுங் கள், இருவரும் சேர்ந்து பிரிட்டிஷாரைப் போகும்படி செய்து விடுவோம் என்று கூறினுர். இந்துக்கள் அசைய மாட்டார்கள் என்று கண்டதும் பிரிட்டிஷாரைப் பார்த்து இந்துக்கள் பிரிக்க இணங்காவிடில் இருக்கட்டும், நீங்கள் பிரித்துக் கொடுத்துவிட்டு விலகிக்கொள்ளுங்கள் என்று கூறலானுர்.

ஆனுல் பிரிட்டிஷ் சர்க்கார் அவ்வளவு எளிதில் விலகிக் கொள்ளுமா? அதிலும் ஜின்னுவின் சொல்லைக் கேட்டா? அப்படி விலகிக்கொள்ளவா இத்தனை நாளும் காட்டிவரும் பிடிவாதமும் செய்துவரும் சூழ்ச்சிகளும்? ஜின்னுதான் விலகிக்கொள்ளச் சொன்னுரே, உண்மையி லேயே விலகவேண்டும் என்று எண்ணியேதான் சொன் னுரா? நாட்டை இரண்டாகப் பிரித்துவிட்டால் நடு நிலைமை காக்க பிரிட்டிஷ் சர்க்கார் இருக்கவேண்டியது அவசியமல்லவா?

ஆதலால் வேவல் துரை மத்திய சட்டசபையில் உங்கள் விஷயம் கவனிக்கவேண்டிய விஷயமாயினும் ஒரே சமூகம்தான் இந்தியநாடு என்று கூறியதும் ஜின்னு சாஹேப் பிரிட்டிஷ் சர்க்கார் நாட்டைப் பிரித்துவிட்டு விலகாவிட்டாலும் பிரிக்கப்பட்ட இரண்டு பாகங்களுக் கும் இப்பொழுது மாகாணங்களுக்கு இருக்கும் அதிகா ரத்தைவிட அதிகமான அதிகாரம் கிடைக்கும் அல்லவா என்று லண்டன் நியூஸ் க்ரானிக்கிள் பத்திரிகையின்

பிரதிநிதியிடம் கூறினர். அதைக் கண்டதும் முஸ்லிம் அறிஞர் லத்தீப் சாஹேப் அப்படியானால் பாக்கிஸ்தான் என்பது 500 சமஸ்தானங்களோடு 501வது சமஸ்தான மாக யிருக்கும், அவ்வளவுதானே? அதற்குமேல் என்ன அந்தஸ்து உயர்வு? என்று கேட்டார்.

மகாத்மா காந்தியடிகள் விடுதலை அடைந்த பின்னர் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான முஸ்லிம்கள் காந்தியடிகளைக் கண்டு பேசி காங்கிரசுடன் ஒன்று சேரும்படி ஜின்னா சாஹேபை வேண்டிக்கொண்டு வந்தார்கள். காந்தியடிகள், ஜின்னா சாஹேபைக் கண்டு பேச விரும்புவதாக சிறையிலிருந்து எழுதிய கடிதத்தை ஜின்னாவிடம் சேர ஒட்டாமல் சர்க்கார் தடுத்துவிட்டார்களே, அந்தக் கடிதத்தை காந்தியடிகளின் காரியதரிசி இப்பொழுது பிரசுரித்தார். ஆனால் ஜின்னா சாஹேப் ஒரு வார்த்தை கூடக்கூறாமல் மௌனம் சாதித்தார்.

முஸ்லிம்களில் ஒரு வகுப்பாராகிய அஹ்ரார் களுடைய மகாநாடு டெல்லியில் நடந்தது. அதற்கு லட்சம் முஸ்லிம்கள் பணம் கொடுத்து டிக்கட் வாங்கிக் கொண்டு போனார்கள். அந்தப் பிரம்மாண்டமான கூட் டத்தில் முஸ்லிம் லீக் முஸ்லிம்களின் தனிப்பிரதிநிதி அன்று என்பதைத் தெளிவாக்கினார்கள்.

அப்படியே தேசீய முஸ்லீம் மஜ்லிஸ் என்னும் புதிய ஸ்தாபனமும் தோன்றி வேலைசெய்ய ஆரம்பித் தது. அநேக முஸ்லிம்கள் ஜின்னாவிடம் காங்கிர சுடன் ஒன்று சேரும்படி வேண்டிக்கொள்வது ஒருபுறம் இருக்க இன்னும் அநேக முஸ்லிம்கள் காந்திஜியிடம் லீகைக் கவனிக்கவேண்டாம் என்று வேண்டிக்கொண்டு வந்தார்கள்.

ஆனால் யார் என்ன சொன்னாலும் ஜின்னா சாஹேப் முஸ்லிம்களில் ஒரு பகுதியாரை சுதந்திர இயக்கத்தில் கலந்துகொள்ள விடாமல் தடுப்பதும், தேசம் சுதந்திரம் அடைய ஒட்டாமல் முட்டுக்கட்டை போட்டு நிற்பது மாகிய இரண்டு பெரிய காரியங்களைச் செய்து வந்தார்.

இந்த முட்டுக்கட்டையை எந்தத் தச்சன் செய்திருந்த போதிலும் எந்த மகான் அதை நம்முடைய சுதந்திரப் பாதையில் போட்டுப் பிடித்துக்கொண்டிருந்த போதிலும் முட்டுக்கட்டை முட்டுக்கட்டைதான். அதை விலக்க வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

காங்கிரஸ் சுதந்திரம் தாருங்கள், ஒற்றுமை உண் டாய்விடும் என்று சர்க்காரிடம் கூறுகிறது.

ஆனால் சர்க்கார் அது முடியாது ஒன்று சேர்ந்து வந்தால்தான் தருவோம் என்கிறார்கள்.

அதனால் காங்கிரஸ் ஜின்னா சாஹிபை பார்த்து நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டால் அவர் நாட்டைப் பிரியுங்கள், ஒன்று சேர்ந்து வருகிறேன் என்று கூறுகிறார்.

அதற்குக் காங்கிரஸ், நாட்டை இரண்டாய்ப் பிரிப்ப தெப்படி, எந்த விதத்திலும் நன்மையாகாதே, அந்த யோஜனையை விட்டு விடுங்கள், உங்களுக்குப் போது மான பாதுகாப்புத் தருகிறோம், அதுவும் போதா தென்றால் நியாயமான சுயநிர்ணய உரிமையையுங்கூட அரசியல் அமைப்பில் சேர்த்துக்கொள்வோம் என்று கூறுகிறது.

காங்கிரஸ் கூறும் இந்த நியாயமான யோஜனை களுக்கு ஜின்னா சாஹேப் என்ன கூறுகிறார்? இப் பொழுது உள்ள சர்க்காரை மாற்றி தேசிய சர்க்கார் அமைக்க வேண்டியது அவசரமான காரியம் என்று

எல்லாக் கக்ஷியாரும் ஒன்றுபோல் ஆசைப்பட ஆரம்பித்து விட்டார்கள். காங்கிரஸும் நியாயமான சுய நிர்ணய உரிமைகொடுக்க தயாராய் இருக்கிறது. அதை லீகர் சிலர்தவிர ஏனைய முஸ்லிம்களும் சிறுபான்மை கக்ஷியாரும் சரி என்று ஒப்புக்கொள்ளுகிறுர்கள். அதனுல் முஸ்லிம் லீகர்களும் இன்னும் பிடிவாதம் செய்து கொண்டிராமல் காங்கிரஸுடன் சேர்ந்து தேசீய சர்க்காரை அமைக்க முன்வருவார்கள் என்று ஜனங்கள் நம்பினுர்கள்.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் அநேக முஸ்லிம்கள், காந்தியடிகளைக் கண்டுபேசி காங்கிரஸுடன் சமரஸம் பேசுமாறு ஜின்னு சாகிபிடம் கேட்டுக்கொண்டார்கள். அதே சமயத்தில், சமீபத்தில் டெல்லியில் லட்சம் முஸ்லிம்கள் பணம்கொடுத்து டிக்கட்டு வாங்கிக்கொண்டு போன அஹ்ரார் மகாநாட்டாரும், அகில இந்திய முஸ்லிம் மஜ்லிஸ்காரர்களும் காந்தியடிகளிடம் முஸ்லிம் லீகுடன் சேரலாகாது என்று வேண்டிக் கொண்டார்கள்.

## காந்தியடிகள் யோசனை

ஆனால் காந்தியடிகள் எதுவும் அவசரப்பட்டு முடிவு செய்துவிடாமல் தேகபலம் பெறுவதிலேயே கவனம் செலுத்திவந்தார். ஆயினும் நாட்டில் பஞ்சமும் நோயும் மல்கிவருவதைக் கண்டு மனம் சகிக்கமாட்டாமல் அதற்கு என்ன பரிகாரம் என்ற எண்ணமாகவே இருந்தார். அதனால் அநேக தலைவர்கட்கு தங்கள் கருத்துக்களை அறிவிக்குமாறு கடிதம் எழுதினார். அவருடைய கார்யதர்சி பல தலைவர்களைக் கண்டு பேசிவந்தார்.

அதன்மேல் காந்தியடிகள் பூரணமாக பலம் பெறு முன்னரே, வைஸிராயையும் காங்கிரஸ் கமிட்டியாரையும் சந்திப்பதற்கு அனுமதி அளிக்குமாறு வைஸிராய் வேவல் பிரபுவுக்கு 1945 ஜூன் 17 தேதி கடிதம் எழுதினார்.

ஆனால் வைஸிராய் இப்படிக் காந்தியடிகள் தாமாக சமரஸம் பேச முன்வருவதைப் பயன்படுத்திக் கொள்ளாமல், நீங்கள் ஆகஸ்டுத் தீர்மானம் தவறு என்று கூறவுமில்லை, அந்தத் தீர்மானத்தின்பின் நடந்த காரியங்களுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவுமில்லை, அதனால் அனுமதி தரமுடியாது, ஆயினும் தேச க்ஷேமார்த்தமாக ஏதேனும் உருவான யோசனை கூறினால் கவனிப்பேன் என்று பதில் அனுப்பினார்.

இந்தச் சமயத்தில் லண்டன் 'நியூஸ் கிரானிக்கள்' பத்திரிகை இந்த அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்க்க ஏதேனும் வழியுண்டா என்று காந்தியடிகளைக் கேட்டு

அறியுமாறு தன் நிருபர் கெல்டர் துரையை அனுப்பி வைத்தது. அவரிடம் காந்தியடிகள் சில யோசனைகள் கூறினார். அவர் அவற்றை வைஸிராயிடம் கூறிவிட்டுத் தமது பத்திரிகையில் வெளியிட்டார்.

அதன்பின் காந்தியடிகள் தமது யோசனையை வைஸிராய்க்கு எழுதினார். அதன் சாரம் இது:—

1. பிரிட்டிஷ் சர்க்கார் உடனே பரிபூரண சுதந்திரம் வழங்குவதாகப் பிரகடனம் செய்யவேண்டும்.

2. மத்திய சட்டசபைக்குப் பொறுப்புள்ளதாக தேசிய சர்க்கார் அமைக்கவேண்டும்.

3. அந்தத் தேசிய சர்க்காரிடம் சிவில் நிர்வாகம் முழுவதையும் ஒப்புவித்துவிட வேண்டும்.

4. ராணுவ நிர்வாகம் யுத்தம் முடியும்வரை இப்பொழுது போலவே நடந்து வரவும் யுத்தம் முடிந்தபின் தேசிய சர்க்காரிடம் ஒப்புவிக்கப்படவும் வேண்டும்.

5. யுத்தச் செலவுகளை இந்தியாவின்மீது சுமத்தக் கூடாது.

6. இந்த ஏற்பாட்டுக்கு இணங்கினால், இப்பொழுதுள்ள நிலைமையில் சட்டமறுப்புச் செய்ய முடியாது என்றும், சர்க்காரின் யுத்த முயற்சிகளில் பரிபூரணமாக ஒத்துழைக்கவேண்டும் என்றும் காங்கிரஸ் கமிட்டிக்குச் சிபார்சு செய்கிறேன்.

இந்தவிதமாக மகாத்மா காந்தியடிகள் (1) 1944-ம் வருஷம் 1942-ம் வருஷமன்று (2) சட்டமறுப்புச் செய்ய முடியாது (3) ராணுவ நிர்வாகம் முழுவதும் பிரிட்டிஷ் சர்க்கார் கையிலேயே இருக்கட்டும் (4) தேசிய சர்க்கார் யுத்த விஷயத்தில் முழுமூச்சாக வேலைசெய்வார்கள் என்று பட்டவர்த்தனமாகச் சொன்னார்.

இதைக் கண்டதும் லண்டன் டெய்லி ஓர்க்கர் என்னும் பத்திரிகை “சமரஸம் செய்யவேண்டும் என்பதற்

தற்காக மகாத்மா காந்தியடிகள் தமது அஹிம்சா தர்மத்தையுங்கூட ஒதுக்கி வைத்துவிட்டு அரசாங்க யுத்த முயற்சிக்கு உதவிசெய்ய முன்வந்திருக்கிறாரே, இதுபோல் செய்யக் கூடிய இராஜதந்திரிகள் எத்தனைபேர் மேனாட்டில் உண்டு?" என்று எழுதியது.

ஆனால் வைஸிராயோ காந்தியடிகளின் யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் எழுதிய பதிலின் சாரமாவது :—

சர்க்காருக்கும் அரசியல் சமரஸம் ஏற்படவேண்டும் என்பதில் ஆவல்தான். ஆனால் கீழ்கண்ட காரணங்களால் காந்தியடிகளின் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை :—

(1) யுத்தத்துக்குப் பின்னர்தான் பரிபூரண சுதந்திரம் வழங்கப்படும், அதுவும் முக்கியமான கட்சிகள் எல்லாம் ஒப்புக்கொள்ளக் கூடிய அரசியல் அமைப்பு நிர்மாணிக்கப்பட்ட பின்னர்தான்.

(2) தேசிய சர்க்கார் அமைக்க வேண்டுமானால் இப்பொழுதுள்ள சட்டத்தில் மாறுதல் செய்தாக வேண்டும், அது யுத்த சமயத்தில் சாத்தியமில்லை.

(3) ஸிவில் நிர்வாகம், இராணுவ நிர்வாகம் என்று பிரிக்க முடியாது ; இரண்டு நிர்வாகமும் யுத்த சமயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் வசமே இருக்க வேண்டியது அவசியமாகும்.

(4) இப்பொழுதுள்ள அரசியல் முறையிலேயே ஜனப்பிரதிநிதிகளைக் கொண்ட சர்க்கார் ஏற்படுத்தலாம், ஆனால் அதுவும் புதிய அரசியல் நிர்மாணம் சம்பந்தமாக முக்கியமான கட்சிகளிடையே ஒற்றுமை உண்டானால்தான்.

(5) யுத்தச்செலவு பிரிட்டிஷ் சர்க்கார்க்கும் இந்திய சர்க்கார்க்கும் இடையிலுள்ள விஷயமாகும், அதில்

ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமானால் அவர்கள் தான் செய்யலாம்.

(6) முக்கியமான கட்சிகள் ஒன்று சேர்ந்தால் இப்பொழுதே புதிய அரசியல் நிர்மாண வேலையைத் துவக்கி விடலாம். அப்படிச் செய்தால் யுத்தம் முடிந்தபின் சீக்கிரமாக சுதந்திர சர்க்கார் அமைக்க முடியும். அதனால் பொறுப்பு முழுவதும் இந்தியத் தலைவர்களையே சார்ந்ததாகும்.

காந்தியடிகளின் யோசனையைக் கேட்டதும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இதுவென்ன புதுயோசனை, இரண்டு வருஷங்கட்கு முன் நம்முடைய கிரிப்ஸ் கொண்டுபோன திட்டம்தானே என்று கூறினார்கள்.

ஆனால் காந்தியடிகள் யோசனை வேறு, கிரிப்ஸ் யோசனை வேறு. கிரிப்ஸ் இப்பொழுதுள்ள சர்க்காரில் கலந்துகொள்ளுங்கள், போர் முடிந்த பின்னர் சுதந்திர சர்க்கார் ஏற்படுத்துகிறோம் என்றே கூறினார். ஆனால் காந்தியடிகளோ இப்பொழுதே சுதந்திரம் வழங்குங்கள், யுத்தத்தில் ஒத்துழைக்க விரும்புவதால் அதற்குத் தக்கதான தேசீய சர்க்காரை இப்பொழுதே ஏற்படுத்துங்கள் என்று கேட்கிறார்.

இரண்டு திட்டங்களும் ஒன்றே என்று கூறினால், என் திட்டத்தை ஏற்றுக்கொள்ளலாமே, ஏன் தயங்குகிறீர்கள் என்றும் கேட்டார்.

பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் விஷயம் அப்படியிருக்க. இந்தியாவிலுள்ள ராஜதந்திரிகளில் சிலர், இதற்குமுன் பேசிய வீரம் என்ன, இப்பொழுது கேட்கும் சர்க்கார் என்ன என்று குறைகூற ஆரம்பித்தார்கள். அதற்கு மகாத்மா காந்தியடிகள் "கோரிக்கையைக் குறைத்துக் கொண்டால் சுதந்திரம் கிடைக்குமானால் அப்படிக்

குறைத்துக்கொள்ள நான் ஒருநாளும் தயங்கமாட்டேன்" என்று பதில் கூறினர்.

வைஸிராய் எழுதிய பதிலை ஒட்டியே இந்தியா மந்திரி அமிரிதுரை காமண்ஸ் சபையிலும் உதவி மந்திரி மன்ஸ்டர் பிரபு பிரபுக்கள் சபையிலும் காந்தியடிகளின் யோசனையைப்பற்றி அபிப்பிராயம் கூறினர்கள்.

அதைக் கண்டதும் காந்தியடிகள் "இங்கிலீஷ் பார்லிமெண்டு சபை இப்படி என்னுடைய யோசனையை நிராகரித்துவிடும் என்று எண்ணவில்லை. நேசதேசத்தார்க்கு வெற்றிகிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை, ஆனல் அடிமை தேசத்தார் அதற்காக சந்தோஷம் அடையமாட்டார்கள். அந்த வெற்றியே அடுத்த யுத்தத்துக்கு விதை ஊன்றும் என்பதை அறிந்துகொள்வார்கள். அப்படிச் சிறிதும் பயனற்ற வெற்றிக்காகவா இப்படி இரத்தத்தை ஆருய்ப் பெருக்கவேண்டும் என்று என் மனம் கேட்கிறது" என்று கூறினர்.

அதன்பின் வைஸிராயின் பதிலைப் பெற்றதும், "வைஸிராய் சட்டமறுப்புக் கூடாது. ஒத்துழைக்கவேண்டும் என்று கூறினர், ஆகட்டும் என்று யோசனை கூறினேன், ஆனல் அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கட்கு ஆளும் பணமும் கிடைக்கிறது. எங்களுடைய ஆத்மார்த்த ஆதரவு எதற்கு? முக்கியமான கட்சிகளின் ஒற்றுமை என்று பிரஸ்தாபிக்கிருர். ஆனல் செப்பிடு வித்தைக்காரர் துணியை நீக்கிவிட்டுப் புதுப்புது பொருள்களைக் காட்டுவதுபோல இவரும் சமயம் வரும்போது இன்னும் எத்தனை கட்சிகளைக் காட்டுவாரோ தெரியவில்லை. பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதிகாரத்தை விட்டுப் பிரிய மனமில்லை என்பது பளிங்குபோல் தெளிவாய் விட்டது. அவர்கள் நேசபாவத்தில் தரமாட்டார்கள். நாம்தான் பறித்து எடுத்துக்கொள்ள வேண்டும். அதை

நாம் அஹிம்சா முறையில் செய்வோம் என்று பரிபூரண மாக நம்புகிறேன் " என்று கூறினர்.

காந்தியடிகள் சுதந்திர சர்க்கார் அமைக்கும்படி கேட்டார். அதற்கு வைஸிராய் அதெல்லாம் யுத்தம் முடிந்த பிறகுதான் என்று கூறினர். அப்படி யுத்தம் முடிந்த பிறகாவது கிடைக்குமா என்றால், கட்சி ஒற்றுமை கட்சி ஒற்றுமை என்று கூறுவதால் அதையும் நம்புவதற் கில்லை. ஆயினும் காந்தியடிகள் விடுதலை வந்தே தீரும், வெற்றி நமதே, தோல்வி வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை என்று தைரியம் கூறினர். இது நிற்க.

# இந்து முஸ்லிம் பிரச்னை

பிரிட்டிஷ் சர்க்கார் ஒன்று சேர்ந்து வாருங்கள் என்று இடைவிடாமல் கூறிவருகிறார்களே, அந்த ஒற்றுமையின் அவசியத்தை காந்தியடிகளும் காங்கிரஸும் அறியாமல் இல்லை. ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் நடைபெறும்வரை பூரணமான ஒற்றுமை உண்டாகாது என்பது அவர்களுடைய திடமான நம்பிக்கை. ஆயினும் அதுவரை சும்மாயிருக்கக் கூடாது என்று எண்ணியே தீண்டாமை விலக்கையும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையையும் காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தில் பிரதான அம்சங்களாகச் சேர்த்திருக்கிறார்கள்.

ஹிந்து முஸ்லிம் வேற்றுமை என்னும் முட்டுக் கட்டையை பிரிட்டிஷ் தச்சனே செய்தான் என்பதையும், அது தேய்ந்து போகாமல் அவன் அடிக்கடி இரும்புப் பூண் பிடித்துவருகிறான் என்பதையும், அவ்விஷயத்தில் சில இந்தியர்கள் விஷயம் அறியாமல் அவனுக்கு உதவி செய்து வருகிறார்கள் என்பதையும் காந்தியடிகள் அறிவார். ஆயினும் அதை உடைத்து எறிந்தால்தான் நாட்டிற்கு நலம் என்று எண்ணி அவ்வேலையில் அவர் சென்ற இருபது வருஷங்கட்கு அதிகமாக உழைத்து வருவதும், அதற்காக ஒரு சமயம் மூன்றுவாரங்கள் உண்ணாவிரதம் இருந்ததும் உலகமறிந்த விஷயமாகும். முஸ்லிம்களை

நியாயமான வழிகளில் எப்படி எல்லாம் திருப்திப்படுத்த முடியுமோ அப்படி எல்லாம் திருப்திப்படுத்த முயன்று வந்தார். ஆனால் முஸ்லிம்லீக் அதுவேண்டும், இது வேண்டும் என்று நாளுக்கு நாள் அதிகமாகக் கேட்டுக் கொண்டே வந்து, கடைசியில் 1940-ம் வருஷத்தில் லாகூரில் வைத்து நாட்டை இரண்டாகப் பிரித்து முஸ்லிம்களுக்கும் தனி ராஜ்யம் கொடுக்கவேண்டும் என்று தீர்மானம் செய்ததும் காந்தியடிகள் அப்படியே ஸ்தம்பித்துப்போய்விட்டார்.

பிரிந்துபோக விரும்புகிறவர்களைப் பிரிந்து போக விடாமல் தடுக்கக்கூடாதுதான், ஆனால் நாட்டை இரண்டாகப் பிளப்பது எவ்வளவு அடாதகாரியம், பாபமான செயல் என்று அபிப்பிராயப்பட்டார்.

ஆனால் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் இந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்தால்தான் சுதந்திரம் கிடைக்கும் என்றிருக்கும்பொழுது, முஸ்லிம்கள் விரும்புவதுபோல் தனிராஜ்யம் கொடுத்துவிட வேண்டியதுதான் என்று காங்கிரஸில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை; காந்தியடிகள் கூறியவாறேதான் கூறிற்று. அதனால் ராஜாஜி காங்கிரஸை விட்டு விலகிக்கொண்டு நாடெங்கும் பிரசாரம் செய்து தமது கருத்துக்கு ஆதரவு தேடலானார். அடிக்கடி ஜின்னா சாகிபைக் கண்டு பேசி அவருடைய கருத்தையும் அறிந்துகொள்ள முயன்று வந்தார்.

முஸ்லிம் லீக் நாட்டைப் பிரித்துத் தனிராஜ்யம் கேட்கிறது. காங்கிரஸ் நாட்டின் ஒருமை குலைந்து போனால் பாதுகாப்புக்குப் பங்கம் உண்டாகும் என்று பயப்படுகிறது. நாட்டின் ஒருமை குலையாமல் முஸ்லிம் ராஜ்யம் ஏற்படுத்த முடியாதா என்று ராஜாஜி யோசித்தார்.

இப்படி ராஜாஜியைக் காங்கிரஸை விட்டு விலகி நின்று யோசிக்கும்படி செய்த முஸ்லிம் லீகின் லாகூர் தீர்மானமாகிய பாக்கிஸ்தான் — முஸ்லிம் ராஜ்யத் தீர்மானம் கூறுவது யாது?

அதன் சாரம் வருமாறு:—

(1) வட மேற்கிலும் வட கிழக்கிலும் முஸ்லிம்கள் எண்ணிக்கையில் மெஜாரிட்டியா யிருக்கிறார்கள்.

(2) அப்படி மெஜாரிட்டியா யிருக்கும் பிரதேசங்கள் அடுத்தடுத்து இருப்பவைகளை ஒன்று சேர்த்து எல்லைகளை நிர்ணயம் செய்து தனி முஸ்லிம் ராஜ்யமாக ஆக்க வேண்டும்.

(3) அப்படிப் பிரித்தபின் இரண்டு ராஜ்யங்களும் மைனாரிட்டி வகுப்பார்க்கு அவர்களைக் கலந்துகொண்டு தேவையான பாதுகாப்புக்களை அரசியல் சட்டத்தில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

(4) இரண்டு ராஜ்யங்களும் பாதுகாப்பு முதலிய விஷயங்களை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தகுந்ததாக அரசியல் அமைப்பை நிர்மாணம் செய்யவேண்டும்.

இந்தத் தீர்மானம் முஸ்லிம் ராஜ்யமாகப் பிரிக்க வேண்டும் என்று கூறுகிறதே தவிர (1) முஸ்லிம்கள் எவ்வளவு மெஜாரிட்டியாகவுள்ள பாகங்களை எந்த முறையில் ஒன்று சேர்க்கவேண்டும் என்பதைப் பற்றியும், (2) அந்தப் பிரதேசங்களிலுள்ள ஜனங்களிடம் பிரிந்து போவதைப் பற்றி எந்த முறையில் சம்மதம் கேட்க வேண்டும் என்பதைப் பற்றியும், (3) பிரிந்து போனபின் இரண்டு ராஜ்யங்களுக்குமிடையில் எந்தவிதமான உறவு இருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் தெளிவாகக் கூறவில்லை.

# ராஜாஜி திட்டம்

ராஜாஜி முஸ்லிம் லீக் தீர்மானத்தில் விளங்காத விஷயங்களைத் தெளிவுபடுத்தி கீழ்க்கண்ட விதமாக அந்தத் தீர்மானத்துக்கு உருக்கொடுத்தார் :—

(1) முஸ்லிம் லீக், பரிபூரண சுதந்தரக் கோரிக்கையை ஆதரித்து, இடைக்கால சர்க்கார் அமைப்பதில் காங்கிரஸுடன் ஒத்துழைக்க வேண்டும்.

(2) யுத்தம் முடிந்தபின் வடமேற்கிலும் வட கிழக்கிலும் முஸ்லிம் பெருவாரியாக மெஜாரிட்டியா யிருக்கும் பிரதேசங்கள் அடுத்தடுத்திருப்பதை ஒன்ருய்ச் சேர்த்து எல்லை நிர்ணயம் செய்ய ஒரு கமிஷன் நியமிக்க வேண்டும்.

(3) அதன் பின் முஸ்லிம் லீக் பிரிவினைக் கொள்கையையும் காங்கிரஸ் ஒருமைக் கொள்கையையும் பிரசாரம் செய்ய உரிமை இருக்கவேண்டும்.

(4) அதன்பின் அந்தப் பிரதேசங்களில் 18 வயது ஆனவர்கள் எல்லோர்க்கும் ஓட்டுரிமை கொடுத்து சர்வ ஜன ஓட்டு எடுக்கவேண்டும்.

(5) பிரிந்து போவது என்று ஏற்பட்டுவிட்டால் இரண்டு ராஜ்யங்களும் தேசப்பாதுகாப்பு போன்ற பொது விஷயங்களைக் குறித்து உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.

இந்தவிதமாக உருக்கொடுத்தபின் ராஜாஜி 1944-ம் வருஷம் மார்ச் மாதம் காந்தியடிகள் உண்ணுவிரதமிருந்த சமயம் அவரைப் பார்க்கப் போயிருந்தபொழுது, தம்முடைய யோசனையை மகாத்மாவிடம் கூறினுர்.

மகாத்மா அதைக் கேட்டதும்—அது சரிதான். முஸ்லிம்கள் அதிகமாகவுள்ள பிரதேசங்களையே பிரிக்கிறோம், அதுவும் அங்குள்ள சகல ஜனங்களிடமும் கேட்டே பிரிக்கிறோம், அப்படிப் பிரித்த பிறகு இரண்டு ராஜ்யங்களும் பொதுவான விஷயங்களைப் பொதுவாகவே கவனிக்க உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் என்றும் கூறுகிறோம், அதனால் தேசத்தின் ஒருமையும் குலையவில்லை, சுயநிர்ணய உரிமையும் மறுக்கப்படவில்லை— என்று கண்டு உடனே ராஜாஜி திட்டத்துக்கு ஆசிகூறியதோடு அதை ஜின்னு சாகிபுக்கு அறிவிக்குமாறு அதிகாரமும் அளித்தார்.

ஆனால் காந்தியடிகள் சிறையிலிருக்கும் பொழுது அதை ஜின்னு சாகிபுக்கு அனுப்புவதும், வெளியிடுவதும் பலன் தராது என்று ராஜாஜி எண்ணி காந்தியடிகள் வெளிவரும்வரை பொறுத்திருந்தார். மகாத்மா விடுதலை அடைந்ததும் ஜின்னு சாகிபுக்கு அனுப்பி அதை முதலில் அவர் அங்கீகரித்துக்கொண்டு அதன் பின் லீகை அங்கீகரிக்கும்படி செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு ஜின்னு சாகிப் நான் ஏற்கவும்மாட்டேன், தள்ளிவிடவும் மாட்டேன், லீக் கவுன்ஸில் முன் சமர்ப்பிக்க மட்டுமே செய்வேன் என்று பதில் எழுதினுர்.

ஜின்னு சாகிப் ஏற்காவிட்டால் லீக் கவுன்ஸில் ஏற்காது, அதனால் லீக் கவுன்ஸில் முன் சமர்ப்பிக்குமுன் திட்டத்தை வெளியிட்டு அதற்குப் பொதுஜன ஆதரவைப் பெருக்கவேண்டும், அப்படிச் செய்தால் தான் ஜின்னு சாகிபும் அங்கீகரிப்பார், லீகும் அங்கீகரிக்கும் என்று எண்ணி ராஜாஜி தமது திட்டத்தையும், காந்தியடிகளின் ஆசியையும், ஜின்னு சாகிபின் விடையையும் வெளியிட்டார்.

ராஜாஜி தமது திட்டத்துக்கு காந்தியடிகளின் சம்மதத்தைப் பெற்றதும் வெளியிட்டிருந்தால், நாட்டில் அவருக்கு ஏற்பட்டிருந்த எதிர்ப்பும், அவர்மீது சுமத்தி வந்த பழிச் சொல்லும் அறவே நீங்கிவிடா. விட்டாலும் அமோகமாகக் குறைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அவர் தமது சொந்த கௌரவத்தைப் பொருட்படுத்தாமல், திட்டம் பலன் தருவதற்கு ஏற்ற பருவம் வரும்வரை தமது கையைக் கட்டிக்கொண்டு இருந்த அவருடைய பொறுமையையும் தியாகத்தையும் இராஜதந்திரத்தையும் எல்லோரும் போற்றுவார்கள்.

திட்டம் வெளியானதும் முஸ்லிம் லீக் தானாக அதைப் பரிசீலனை செய்யும் என்று அநேகர் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஜின்னா சாகிப் அதை மகாத்மா அனுப்பினால் லீகின் முன் சமர்ப்பிப்பதாகக் கூறினார். அப்படியே அனுப்பப்பட்டது. அவர் லீக் கூட்டத்தில் அதை ஒப்புக்கொள்ள முடியாது என்று பல ஆட்சேபங்கள் எடுத்துரைத்தார். லீக் கவுன்ஸில் அது சம்பந்தமாக முடிவு செய்ய அவருக்கே சகல அதிகாரங்களையும் அளித்தது.

காந்தியடிகள் ஜின்னா சாகிப்புக்குத் திட்டத்தை அனுப்பியதோடு, அது சம்பந்தமாக அவருடன் கலந்து பேச விரும்புவதாகக் கடிதமும் எழுதினார். ஜின்னா சாகிப் அதற்குச் சம்மதித்து 1943 ஆகஸ்டு மத்தியில் சந்திக்கலாம் என்று பதில் எழுதினார்.

மகாத்மா காந்தியடிகள் தாமும் ஜின்னா சாகிபும் கலந்து பேசுவதன் மூலம் காங்கிரஸ்—லீக் ஒப்பந்தம் ஏற்படும்படி ஆண்டவன் தங்கள் இருவர்க்கும் அறிவும் ஆற்றலும் அருளுமாறு 1945 ஆகஸ்டு 9உ யன்று நாடெங்கும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். அப்படியே ஆகஸ்டு 9உ

ஆயிரக்கணக்கான ஊர்களிலே அதிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆனல் ஆகஸ்டு மாதம் ஜின்னு சாகிபுக்குத் திடீரென்று தேக அசௌக்யம் ஏற்பட்டதால் அவர்களுடைய சம்பாஷணை ஒத்திவைக்கப்பட்டது.

திரு. சவர்க்கரைத் தலைவராகக் கொண்ட அகில இந்திய இந்து மகா சபையார்கள் இந்தியா தேசம் எங்கள் புண்ணிய பூமி, அதைப் பிளக்கச் சம்மதிக்கமாட்டோம் என்று கிளர்ச்சி செய்தார்கள். அதுபோலவே மாஸ்டர் தாராசிங் தலைமையில் சீக்கியர்களில் ஒரு பகுதியாரும் கூறினர்கள். மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தேசத்தின் பெருமையும் பிரதேசங்களிடையிலுள்ள பெரிய ஸ்தானமும் பாதிக்கப்பட்டாலுங்கூடப் பாதகமில்லை, தேசத்தின் பாதுகாப்புக்குங்கூட உலைவைத்துவிடுமே, அதை எப்படிப் பொறுப்பது என்று பிரசங்கத்துக்கு மேல் பிரசங்கம் செய்து வந்தார். திருவிதாங்கூர் திவான் ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர் எந்தக் காரணம் எப்படிப் போனலும் இந்திய நிர்வாகம் ஒன்ருக இருந்தால்தான் உணவு முதலிய பல கார்யங்கள் ஒழுங்காய் நடைபெறும் என்று வற்புறுத்தினர்.

ஆயினும் நாடெங்கும் காந்தி-ராஜாஜி திட்டத்துக்கு எதிர்ப்பைவிட ஆதரவே அதிகம் என்று சொல்லலாம். அரசாங்கத்தின் அபிப்பிராயம் யாதாயிருந்தாலும் ஆங்கில நாட்டிலும் அமெரிக்காவிலும் சுதந்திரத்தையும் நியாயத்தையும் ஆதரிக்கும் தீர்க்கதிருஷ்டிவாய்ந்த பெரியோர்கள் எல்லோரும் காந்தி அடிகளின் முயற்சிகளுக்கு ஆசியே கூறிவந்தார்கள்.

## காந்தி - ஜின்னு சம்பாஷணை

ஜின்னு சாஹிபுக்கு சுகமுண்டான பின் 1945 செப்டம்பர் மாதம் 9-ம் தேதியன்று அவரை காந்தி யடிகள் பம்பாயில் அவருடைய மாளிகையில் போய்ச் சந்தித்தார். சம்பாஷணை 27-ந்தேதி வரை நடந்தது. மொத்தம் 26 மணி நேரம் பேசினுர்கள். இடையில் தங்கள் அபிப்பிராயங்களைக் குறித்து பதினைந்து கடிதங்கள் வரை பரிமாறிக் கொண்டார்கள். நாடெங்கும் ஜனங்கள் சமரஸம் ஏற்பட்டுவிடும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனுல் 27-ந்தேதியன்று காந்தியடிகளும் ஜின்னு சாஹிபும் நாங்கள் தோல்வி அடைந்துவிட்டோம். ஆயினும் இந்திய மக்கள் சோர்வடைய வேண்டாம், இது எங்கள் முயற்சியின் இறுதியான முடிவன்று என்று அறிக்கை வெளியிட்டார்கள். சுதந்திரப் பிரியர்கள் எல்லோரும் ஏமாற்றம் அடைந்தார்கள்.

சம்பாஷணை முறிந்துவிட்டதன் காரணம் யாது? காந்தியடிகள் ஜின்னு சாஹிபைச் சந்தித்த ஆரம்பத்திலேயே தாம் சொந்த ஹோதாவிலேயே பேச வந்திருப்பதாகக் கூறினுர். உடனே ஜின்னு சாஹிப் பிரதிநிதித்வ அந்தஸ்து இல்லாதவருடன் பேசுவதால் பிரயோஜனம் கிடையாது என்று கூறினுர்.

மஹாத்மா காந்தியடிகள் காங்கிரஸின் பிரதிநிதியல்ல, காங்கிரஸில் மெம்பர்கூடயில்லை. அது உண்மை

தான், ஆனால் அவர்தான் ஆலோசனைகூறி காங்கிரஸை நடத்துபவர் என்பதை உலகம் முழுவதும் அறியும்.

லண்டன் "நியூ ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை வேவல் பிரபுவுக்கு யோசனை கூறும் சந்தர்ப்பத்தில் "இந்தியாவுக்காக காந்திஜியைத் தவிர வேறு யாரும் பேச முடியாது. நேரு, ராஜாஜி யாருமே அவருடைய சம்மதமில்லாமல் எதையும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்" என்று கூறியதுதான் உண்மையான விஷயம்.

ஆகஸ்ட் தீர்மானத்திற்குப் பின் அநேக காரியங்கள் நடைபெற்றனவே, அவற்றில் சம்மந்தப்பட்டதாக அநேகரைக் கைதி செய்ய எண்ணியும் அவர்கள் தலைமறைவாயிருந்து வந்தபடியால் சர்க்காரால் அவர்களைக் கைதி செய்ய முடியவில்லை. அதைக் கண்ட காந்தியடிகள் தாம் விடுதலை அடைந்து வெளியே வந்தபின், அது தவறு, உடனே சர்க்காரிடம் ஆஜராய் விடவேண்டும் என்று கூறினார். அப்படி ஆஜரானால் அரசாங்கத்தின் கோபம் அதிகப்பட்டு அநேக துன்பங்கள் நேரலாம். ஆயினும் காந்தியடிகளின் ஆணையைச் சிரமேற்கொண்டு தலைமறைவாய் இருந்தவர்கள் சர்க்காரிடம் தங்களை ஒப்புவித்துக் கொண்டார்கள். இந்தப் பெரிய சோதனை ஒன்றே காந்தியடிகளுக்குள்ள இணையற்ற செல்வாக்கை நிரூபித்து விடக்கூடியதாகும். இதற்கு அதிகம் தேவையானால் அவ்வருஷம் காந்தியடிகளின் பிறந்ததினம் நாடெங்கும் கொண்டாடப் பெற்ற விமரிசையும், அன்னை கஸ்தூரிபாய் நிதிக்கு சகல கக்ஷியாரும் தாராளமாகக் கொடுத்த அன்பும் தக்க சான்றுகளாகும்.

காந்தியடிகளும் எனக்குக் காங்கிரஸிடம் எவ்வளவு செல்வாக்கு உண்டோ அவ்வளவு செல்வாக்கையும் உபயோகித்து காங்கிரசை நம்முடைய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்வேன் என்று ஜின்னா சாஹிபிடம்

உறுதி கூறினர். அதனுல் ஜின்னு சாஹிப் காந்தியடிகளைக் காங்கிரஸின் பிரதிநிதியாகவே ஏற்றுக்கொண்டிருந்தால் தவருகாது. அப்படிச் செய்யாமல் அவர் காந்தியடிகள் யாருக்கும் பிரதிநிதியில்லை என்று தாம் எழுதிய ஒவ்வொரு கடிதத்திலும் எடுத்துக் காட்டிக் கொண்டேயிருந்தார்.

இதில் ஒரு விஷயம். காந்தியடிகள் காங்கிரசின் பிரதிநிதி என்று கூறுவதோடு இந்தியா தேசம் முழுவதற்கும் ஏகப்பிரதிநிதி என்று கூறுவதும் பொருந்தும். காந்தியடிகள் ஜின்னு சாஹிபுக்கு எழுதிய கடிதமொன்றில் "ஜாதிமத வித்தியாசமின்றி சகலரையும் வாட்டி நிற்கும் சங்கடமும் சோர்வும் என்னுடைய இருதயத்தையும் வாட்டி நிற்கின்றபடியால் நான் இந்திய மக்கள் எல்லோர்க்கும் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ள ஆசையுடையவனுயிருக்கிறேன்" என்று எழுதியுள்ளதை யாரால் மறுக்க முடியும்?

அதனுல்தானே அமரிக்க அறிஞர் ஜோஸபைன் ரிப்ளி என்பவர் "இந்தியாவில் 170 பிரதான பாஷைகளும் 544 கிளை மொழிகளும் உள என்பது உண்மைதான். ஆனுல் இந்தியா முழுவதற்கும் காந்தி என்ற ஒரே ஒரு குரல் தான் உண்டு" என்று 'கிறிஸ்தியன் மானிட்டர்' என்னும் பத்திரிகையில் எழுதுகிருர்.

# காந்திஜியின் திட்டம்

ஜின்ஞ சாஹிப் எடுத்த எடுப்பிலேயே ராஜாஜி திட்டத்தைப்பற்றி ஆலோசிக்கக் கூட மறுத்து விட்டார். இடைக்கால சர்க்கார் ஏற்பட்டு அந்த சர்க்கார் மூலம் பிரிவினை செய்வதை அவர் ஆக்ஷேபிப்பது போலத் தெரிந்ததும், காந்தியடிகள் அப்படியானல் ராஜாஜி திட்டம் வேண்டாம், இப்பொழுதே பிரிவினைக்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்வோம், அதன்பின் ஒன்று சேர்ந்து சுதந்திரம் கேட்போம், அதற்காகப் போர் நடத்த வேண்டி வந்தால் அப்பொழுது தாங்கள் இஷ்டப்படா விட்டால் அதில் சேராமல் நின்று கொள்ளலாம் என்று தாம் ஒரு திட்டத்தைக் கூறினர்.

## ஜின்னுவின் வியாக்யானம்

ஆனல் ஜின்ஞ சாஹிபுவுக்கு அதுவும் பிடிக்கவில்லை. அதன்மேல் காந்தியடிகள் அப்படியானல் உங்களுக்கு வேண்டியதுதான் என்ன? லாகூர் தீர்மானத்துக்கு உங்கள் வியாக்யானம் யாது? என்று கேட்டார். அதற்கு ஜின்ஞ சாஹிப் கூறியதின் சாரம் வருமாறு:—

(1) முஸ்லீம்களும் இந்துக்களும் இரண்டு தனிப் பட்ட தேசிய சமுதாயங்கள். அதனல் முஸ்லீம்களுக்குத் தனியாகவே சுய நிர்ணய உரிமை உண்டு. ஆதலால் பிரிய வேண்டுமா என்று முஸ்லிமல்லாதவரிடம் கேட்கும் சர்வ ஜன ஓட்டுக்கு அவசியமே யில்லை. அத்துடன் முஸ்லிம் லீக் முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதி. அது பிரிக்க வேண்

டும் என்று கேட்பதால் முஸ்லிம்களிடமும் ஓட்டு எடுக்க வேண்டிய அவசியமில்லை. முஸ்லிம் ராஜ்யத்தைப் பிரிக்க வேண்டியதைத் தவிர வேறு வேலையில்லை.

(2) அப்படிப் பிரிக்கும்பொழுது வட மேற்கில் சிந்து, எல்லைப்புறம், பலுச்சிஸ்தானம், பஞ்சாப், வடகிழக்கில் வங்காளம், அஸ்ஸாம் இந்த ஆறு மாகாணங்களையும் அப்படியே முஸ்லிம் ராஜ்யமாகப் பிரித்து விட வேண்டும். அப்படிப் பிரிப்பதும் பிரிட்டிஷ் சர்க்கார் உள்ள இப்பொழுதே நடைபெற வேண்டும். இடைக்கால சர்க்காரில் இந்துக்கள் மெஜாரிட்டியாய் இருப்பார்களாதலால் அந்த சர்க்கார் பிரித்தால் முஸ்லிம்களுக்குத் திருப்தி யுண்டாகாது.

(3) தேசத்தை இரண்டு ராஜ்யங்களாகப் பிரித்தபின் அவற்றின் இடையில் அன்னிய ராஜ்யங்களின் இடையிலுள்ள சம்பந்தமே இருக்கும். பொது விஷயங்களைப் பரிபாலிக்க என்று ஒரு மத்திய போர்டுக்குத் தேவையில்லை.

## ஜின்னா திட்டத்துக்கு ஆக்ஷேபங்கள்

I. இரண்டு சமுதாயக் கொள்கை :—

(1) லாகூர் தீர்மானத்தில் இந்தப் பேச்சே யில்லை. அது கூறுவதெல்லாம் முஸ்லிம் மெஜாரெட்டியான பிரதேசங்களை முஸ்லிம் ராஜ்யமாகப் பிரிக்க வேண்டும் என்பது ஒன்றே. அதை எப்படிப் பிரிக்க வேண்டும் என்ற விஷயங்கூட அதில் சொல்லப்படவில்லை என்று காந்தியடிகள் எடுத்துக் காட்டினார்.

(2) ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்துக்கு மாறியவுடன் மதம் மாறியவர்கள் வேறு சமுதாயத்தாராக ஆகிவிடுகிறார்கள் என்பது சரித்திரத்தில் எங்கும் காணாத விஷயம். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களில் 95 சதமானவர்கள் இந்துக்களாயிருந்து முஸ்லிம்களானவர்கள்.

அப்படியிருக்க அவர்கள் வேறு சமுதாயத்தார் ஆகி விட்டார்கள் என்று கூறுவது எப்படி? அப்படியானல் இந்துக்கள் எல்லோரும் முஸ்லிம்களாகிவிட்டால் இப் பொழுதுள்ள இரண்டு சமுதாயங்களும் ஒரு சமுதாயம் ஆகிவிடுமா? நாம் முன்னலும் ஒரு சமுதாயம்தான், இப்பொழுதும் ஒரு சமுதாயம் தான். நாம் எல்லோரும் அடிமைகள், நம்முடைய கூட்டு முயற்சியால் அடிமைத் தளையிலிருந்து விடுவித்துக் கொண்டோமானல் அந்தக் காரணத்தாலும் நாம் ஒரு புதிய தனி சமுதாயமாக ஆகி விடுவோம்.—இது மகாத்மா காந்தியடிகளின் அசைக்க முடியாத இரண்டாவது ஆட்சேபம்.

ஆனல் சென்னை முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் ஹமீத் கான் சாஹிப் "ஒருவன் மதம் மாறியவுடன் அவ னுடைய கலாசாரம் எல்லாம் மாறிவிடுவதால் அவன் புதிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் ஆகிவிடுகிருன்" என்று வாதித்தார். அதற்கு பெர்ஹாம்பூர் மாஜி எம். எல். ஸி. அப்துல் ஆமத் சாஹிப் "அப்படியானல் வங்காள முஸ்லிம்களுடைய கலாசாரமும் பழக்க வழக்கங்களும் மற்ற முஸ்லிம்களுடைய கலாச்சாரங்களிலிருந்தும் பழக்க வழக்கங்களிலிருந்தும் வேறுபட்டுக் காண்பதேன்? வங்காள முஸ்லிம்களுக்கும் மற்ற முஸ்லிம்களுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள் வங்காள முஸ்லிம் களுக்கும் வங்காள இந்துக்களுக்கும் இடையில் காணப் படாதது ஏன்?" என்று கேட்பதே சரியான சமாதானம்.

## "நேஷன்" பொருள்

இந்தச் சந்தர்ப்பத்தில் தேசீய சமுதாயம் என்பதற்கு ஜின்னு சாகிப் உபயோகிக்கும் ஆங்கிலப் பதமாகிய "நேஷன்" என்பதற்கு ஆங்கில அறிஞர்கள் எல்லோரா லும் அங்கீகரிக்கப்பட்டுள்ள "ஆக்ஸ்போர்ட் அகராதி"

யில் காணப்படும் பொருளைக் கவனிப்பது பொருத்தமா யிருக்கும். அகராதி கூறும் பொருள் "பரம்பரையாலும் பாஷையாலும், சரித்திரத்தாலும், அரசியல் வாழ்வாலும் தனியாகப் பிரிந்து நிற்கும் சமூகம்" என்பதாகும். இதில் மதத்தைப்பற்றிய பிரஸ்தாபமே இல்லை என்பதை முதலில் கவனிக்க வேண்டும். முஸ்லிம்களில் 95 சதமான வர்கள் இந்துக்களாயிருந்து மதம் மாறியவர்கள். ஒவ்வொரு பிரதேசத்திலும் இந்துக்களின் தாய் மொழியே முஸ்லிம்களுக்கும் தாய் மொழியாகும். ஆயிர வருஷகால மாக இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்தே இந்திய நாகரீகத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள். நூறு வருஷ காலமாக பிரிட்டிஷ் சர்க்காரின் அடிமைகளாய் இருந்து வருகிறார்கள். ஆகவே "நேஷன்" என்பதன் பொருளைக் கொண்டு பார்த்தால் இந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு சமுதாயத்தார் ஆகமாட்டார்கள் என்பது நன்கு விளங்கும்.

## ஸர். ஸையது அகமத்கான் உபதேசம்

நம்முடைய தேசத்தில் தாதாபாய் நவரோஜீ எவ்வளவு கீர்த்தி பெற்றிருந்தாரோ அவ்வளவு கீர்த்தி பெற்றிருந்தவரும் அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையை ஸ்தாபித்தவரும் முஸ்லிம் சமூக புனருத்தாரணத்தின் முக்கிய புருஷருமான ஸர். ஸையத் அகமத்கான் 60 வருஷங்களுக்கு முன்னாலேயே,

"ஒரு தேசத்தில் தனித்தனி விசேஷத்தன்மை களுடைய பல வகுப்பார்களிருந்தாலும் அவர்கள் ஒரே தேசத்தில் வசிப்பதால் அவர்கள் எல்லோரையும் ஒரே சமுதாயத்தாராகவே மதிக்க வேண்டும் என்பது இன்று நேற்று உண்டான சம்பிரதாயமன்று, பழங்காலத்தி லேயே உண்டானதாகும். இந்து முஸ்லிம் சகோதரர்

களே! நீங்கள் இருவரும் இந்துஸ்தானத்தில் தானே வசிக்கிறீர்கள்? இந்துஸ்தானத்தில் தானே மாளப் போகிறீர்கள்? அப்படியிருக்க இரண்டு சமுதாயத்தாராவது எப்படி? இந்து என்பதும் முஸ்லிம் என்பதும் மதத்தை மட்டுமே குறிக்கும் சொற்கள் ஆகும். அதனல் இந்துக்களும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே ஆவார்கள்" என்று உபதேசித்ததை முஸ்லிம் சகோதரர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறோம்.

## ஒரு குடும்பம் – இரு சகோதரர்கள்

(3) மகாத்மா காந்தியடிகள், இந்துக்களையும் முஸ்லிம் களையும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர் கள் எனக் கூறுவதே பொருந்தும் என்று கூறுகிறார்.

இந்த உண்மையை உட்கொண்டே ஸர். ஸையத் அகமத் கான் அவர்களும் ஒரு உடம்புக்கு இரண்டு கண்கள் எப்படி அவசியமோ, அவை இரண்டையும் எப்படிப் பிரிக்க முடியாதோ அப்படியேதான் இந்தியா தேசத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் இணைபிரிக்க முடியாதவர்கள் என்று கூறினர். இவர் கூறிய இந்த உவமை உலகப் பிரசித்தமானதாகும்.

## II. சர்வஜன ஓட் :—

முஸ்லிம் லீக் அதிகமான பிரதிநிதித்துவம் உடையது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனல் அதுதான் முஸ்லிம்கள் அனைவர்க்கும் ஏகப் பிரதிநிதி என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. லீக்கின் கருத்தை ஒப்புக் கொள்ளாத முஸ்லிம்கள் ஏராளமானவர் உளர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதனல் பிரியவேண்டுமா என்று அவர்களிடம் கேட்காமல் இருக்கலாமா? அதுவும்

தவிர பிரிக்கப்போகும் பிரதேசத்திலுள்ள முஸ்லிமல்லாதாருடைய சம்மதத்தையும் கேட்க வேண்டாமா, அது தானே சுயநிர்ணய உரிமை, அதுதானே ஜனநாயகம்? ஆதலால் சர்வஜன ஓட்டு எடுக்கவேண்டியது அத்யாவசியமாகும் – இதுதான் சர்வஜன ஓட்டு விஷயமாக மகாத்மா காந்தியடிகள் ஜின்னுசாகிபிடம் கூறிய சமாதானமாகும்.

III. முஸ்லிம் பிரதேசங்கள் :—

(1) முஸ்லிம்கள் சிந்து மாகாணத்தில் 71 ஸதமானம், பலுச்சிஸ்தானத்தில் 81 ஸதமானம், எல்லைப்புறத்தில் 92 ஸதமானம். அத்துடன் அந்த மாகாணங்களில் ஒவ்வொரு ஜில்லாவிலும் மெஜாரிட்டியாக இருக்கிருர்கள். அதனுல் அவைகளை அப்படியே பிரித்துவிடலாம்.

(2) ஆனுல் முஸ்லிம்கள் பஞ்சாபில் 57 ஸதமானமும் வங்காளத்தில் 54 ஸதமானமுமே இருக்கிருர்கள். அதோடு பஞ்சாபில் ஸட்லெஜ் நதிக்கு மேற்கேயுள்ள 17 ஜில்லாக்களில் மட்டுமே மெஜாரிட்டியாய் இருக்கிருர்கள். கிழக்கேயுள்ள 12 ஜில்லாக்களிலும் முஸ்லிமல்லாதாரே மெஜாரிட்டி.

அதுபோல வங்காளத்தில் 12 ஜில்லாக்களில் முஸ்லிமல்லாதாரே மெஜாரிட்டியாய் இருக்கிருர்கள். அஸ்ஸாமிலோ ஒரே ஒரு ஜில்லாவில்தான் முஸ்லிம்கள் மெஜாரிட்டி, அந்த மாகாண முழுவதிலும் முஸ்லிமல்லாதாரே மெஜாரிட்டி.

ஆதலால் முஸ்லிம்கள் மெஜாரிட்டியாயுள்ள ஜில்லாக்களை மட்டுமே முஸ்லிம் ராஜ்யமாகப் பிரிக்கலாமேயன்றி முஸ்லிமல்லாதார் மெஜாரிட்டியாயுள்ள ஜில்லாக்களையும் முஸ்லிம் ராஜ்ஜியத்தில் சேர்த்துவிடவேண்டும் என்று கேட்பது சிறிதும் நியாயம் அன்று என்று காந்தியடிகள் கூறினர்.

பிரதேசங்களைப் பிரிப்பதும் ஓட் எடுப்பதும் பிரிட்டிஷ் சர்க்கார் இருக்கும்பொழுதே நடத்திவிட வேண்டும் என்று ஜின்னு சாகிப் கூறுகிருரே, அப்படியானுல் பிரிவினை என்பது பிரிட்டிஷார் தேசத்தின்மீது திணித்த தாக இருக்குமே தவிர ஜனங்களாக நியாயம் என்று உணர்ந்து பிரித்துக் கொடுத்ததாக இராது, அது பிற்கால வாழ்வுக்கு நல்லதா? என்று காந்தியடிகள் கேட்டார்.

இப்படிப் பிரிட்டிஷார் மூலம் பிரிவினை நடத்த விரும்பியதன் காரணம் ஜின்னுவுக்கு இடைக்கால சர்க்கார் இந்து சர்க்காராய் இருந்துவிடும் என்ற பயமேயாகும். ஆனுல் காந்தியடிகள் நாம் ஒத்துக்கொண்ட பிறகு மற்றக் கட்சியாருடன் கலந்து பேசி எல்லோருக்கும் திருப்தியான முறையிலேயே இடைக்கால சர்க்காரை அமைப்போம் என்று கூறியதை ஜின்னு சாகிபும் ஒப்புக்கொண்டார். அப்படியிருக்க இடைக்கால சர்க்காரைப் பற்றி பயப்படுவானேன்?

அதுவும் தவிர ஹிந்து மெஜாரிட்டி என்பது வெறும் பிரமையேயாகும். ஹிந்துக்கள் பெரும்பான்மையோராக இருந்துவிட்டால் அதைக்கொண்டு அவர்கள் எல்லோரும் ஒரே கட்சி என்று கூறமுடியுமா? இப்பொழுதுள்ள சட்ட சபைகளிலும் ஹிந்துக்கள் அதிகம்தான், ஆயினும் அவர்களுக்குள் எத்தனை கட்சி பேதங்கள் உள? இடைக்கால சர்க்காரும் இப்பொழுது சமரசமாக அமைக்கும் முறையில்தானே காரியங்களை நடத்துவார்கள்?

அந்த சர்க்காரையும் அனியாயமான முறையில் நடக்க முடியாதபடி தடுத்துவிடக் கூடிய ஏற்பாடுகளை முன் கூட்டிச் செய்துவிட முடியாதா?

## IV. பொது விஷயங்கள் :—

இரண்டு ராஜ்யங்களுக்கும் இடையில் பொதுவான விஷயங்கள் கிடையா என்றும், இரண்டும் பரிபூரண சுதந்திரமுடைய தனித்தனி ராஜ்யங்கள் என்றும் கூறினால் அது அனுபவ சாத்தியமான விஷயமா? அப்படியானால் அதை நேசப்பான்மையில் தீர்க்கமுடியுமா, சண்டை போட்டுத்தானே தீர்க்கவேண்டி இருக்கும். ஒரே குடும்பத்திலுள்ள இரண்டு சகோதரர்கள் பிரிந்துகொள்வதாக எண்ணினால்தான் எளிதில் சமரசம் உண்டாகும். இரண்டு சகோதரர்கள் பங்கிட்டுக் கொண்டால் அதனால் அவர்கள் இருவரும் விரோதிகள் ஆய்விடமாட்டார்கள். உலகத்தார் முன்னிலையில் ஒன்று சேர்ந்து சகோதரர்களாகவே நிற்பார்கள். அப்படி எண்ணி எங்கள் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் முஸ்லிம்களுக்கும் நன்மையுண்டு, ஹிந்துக்களும் பிரிவினைக்கு ஒத்துக்கொள்வார்கள் என்று காந்தியடிகள் கூறினார்.

## சர்க்கார் இணங்குமா?

அதுவும் தவிர காங்கிரஸும் லீகும் தனித்தனி அன்னிய ராஜ்யங்களாகப் பிரிந்துகொள்ளச் சம்மதித்தாலும் பிரிட்டிஷ் சர்க்கார் அதற்கு இணங்குவார்களா? வைசிராய் வேவல் துரை இந்தியாவின் ஒருமையைக் குறித்து அடிக்கடி பேசி வந்தார். அதுபோலவே முன்னால் வைசிராயாய் இருந்த லின்லித்கோ பிரபுவும் அதையே வற்புறுத்தி வந்தார். இங்கிலாந்து சென்ற பிறகுகூட இந்தியாவுக்குப் பாதுகாப்பு வேண்டுமானால் அதைக் கவனித்துக் கொள்வதற்கு ஒரு பொதுவான மத்திய நிர்வாக சர்க்கார் இல்லாமல் முடியாது என்று தெளிவாகக் கூறினார்.

அவருக்கு முன் வைசிராயாய் இருந்த ஹாலிபாக்ஸ் பிரபுவும் பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியாவுக்கு ஏற்பட்ட நன்மைகளில் தேசத்தின் ஒருமையே பிரதானம் என்று கூறினார்.

ஆதலால் பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தாங்கள் சிருஷ்டித்த தேச ஒருமையைக் குலைக்கச் சம்மதமில்லை. அது தேசத்தின் பாதுகாப்பிற்கு அத்யாவசியம் என்பது அவர்களுடைய கருத்து.

### ஸமரஸமுறை

ஸமரசமென்றால் இரண்டு கட்சியாரும் தத்தம் கோரிக்கையில் கொஞ்சமேனும் குறைத்துக்கொள்ள வேண்டாமோ? இரண்டு இரும்புத் துண்டுகள் இளகினால் தானே ஒன்றாய்ச் சேரமுடியும்? முஸ்லிம்கள் பிரிய வேண்டும் என்கிறார்கள். மற்றவர்கள் ஒன்றாய் இருக்க வேண்டும் என்கிறார்கள். இந்த இரண்டு விருப்பங்களையும் பூர்த்தி செய்தால்தான் சமரஸம் உண்டாகும். அதை உணர்ந்தே காந்தி - ராஜாஜி திட்டம் வகுக்கப்பட்டது. காந்தியடிகள் பிரிவினைக்கு ஒப்புக்கொள்ளும்பொழுது ஜின்னா சாகிப் சகோதரர்போல் பிரிந்திருக்கச் சம்மதித்திருந்தால் அப்பொழுதே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையுண்டாயிருக்கும் அல்லவா?

முஸ்லிம் லீக்கர்கள் இரண்டு சமுதாயங்கள் என்ற கொள்கையையும், இடைக்கால சர்க்காரிடமுள்ள பயத்தையும், அன்னிய ராஜ்யங்கள் என்ற அபிப்பிராயத்தையும் நீக்கிக்கொண்டு, முஸ்லிமல்லாத ஜில்லாக்களையும் முஸ்லிம் ராஜ்யத்தில் சேர்ப்பது நியாயமில்லை என்பதையும், பிரியவேண்டுமா என்ற விஷயத்தைக் கூற எல்லோர்க்கும் சந்தர்ப்பம் அளிக்க மறுப்பது ஜனநாயகத்திற்கு பொருத்தமில்லை என்பதையும், தனி ராஜ்யங்க

ளாய் இருப்பது பாதுகாப்புக்கு உகந்ததில்லை என்பதையும் ஒப்புக்கொண்டிருந்தால் சமரஸம் ஏற்பட்டு சீக்கிரமாகச் சுதந்திரம்பெற ஏதுவாயிருக்கும்.

### பிறர்க்கு பயம் வேண்டாம்

இப்படிக் காங்கிரஸாரும் லீகும்தானே சமரஸம் பேசுகின்றார்கள், இவர்கள் நம்முடைய நலன்களுக்கு பாதகமாக முடிவு செய்துவிட்டாலோ என்று மற்ற வகுப்பார்கள் பயப்பட்டார்கள். இடைக்கால சர்க்கார் ஏற்படுத்தும்போது எல்லாக் கட்சியார்க்கும் திருப்தியான முறையிலேயே ஏற்படுத்துவோம் என்று காந்தியடிகள் ஜின்னா சாகிபுவுக்கு எழுதியதையும் அவர் அதை ஒப்புக்கொண்டதையும் மேலே கண்டோம்.

அதுபோலவே காந்தியடிகள் இருவரும் செய்துகொள்ளும் ஒப்பந்தம் இதர கட்சியார்களுடைய அங்கீகாரம் பெற்ற பின்னரே இடைக்கால சர்க்காரால் அமுல் நடத்தப்படும் என்று எழுதியிருப்பதும் பயத்தை நீக்குவதா யிருந்தது.

சம்பாஷணை முடிந்தபின் காந்தியடிகள் பத்திரிகைப் பிரதிநிதிகள் மகாநாட்டில் "ஒரே ஒரு இந்தியனுடைய நலனுக்கு மட்டுமே ஹானி உண்டாக்குவதாய் இருந்தாலும் நான் என்னை தேச விஸ்வாஸ மில்லாதவன் என்றே கருதிக்கொள்வேன்" என்று கூறியதும் எல்லோர்க்கும் தைரியத்தை அளிப்பதாயிற்று. அனேகர் காந்தியடிகள் சுதந்திரம் பெறவேண்டும் என்ற ஆவல் மிகுதியால் முன்பின் யோசியாமல் தேச ஒருமைக்கு விரோதமாக முஸ்லிம்கள் நியாயமில்லாமல் கேட்டாலும் அவர்கள் கேட்பதை எல்லாம் கொடுத்து விடுவாரோ என்று பயந்தார்கள். ஆனால் அந்த பயமெல்லாம் வீண் என்பதை காந்தியடிகள் நடந்துகொண்ட நடு நிலைமை முறையிலிருந்து அறிந்து கொண்டார்கள்.

## சம்பாஷணை முறிவுக்குக் காரணம்

ஜின்னு சாகிப் பெரிய அறிவாளியும் தேசபக்தரும் ஆயிற்றே, அப்படி இருக்க இப்படி சம்பாஷணை வெற்றி பெறுமல் முறிந்து விட்டதேன்? அதற்கு காந்தியடிகள் "மூன்ருவது மனிதன் உள்ளவரை முடிவு காண்பது கஷ்டம். அடிமையான மனம் சுயேச்சையான மனதைப் போல் வேலை செய்யமுடியாது" என்று கூறியதுதான் உண்மையான காரணம்.

இதைக் கண்டதும் ஜின்னு சாகிப் என் மனம் அப்படி ஒன்றும் அடிமைப் பட்டிருக்கவில்லை என்று கூறினர். ஆனுல் அவரே சம்பாஷணைக்குமுன் லாகூரில் பத்திரிகை பிரதிநிதிகளிடம் மூன்ருவது மனிதன்தான் ஒன்று சேரவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிருன் என்று கூறினர்.

# நற்குறிகள்

இந்த விதமாக காந்தி-ஜின்னு ஸமரஸப்பேச்சு முறிந்த போதிலும் தேச க்ஷேமத்திற்காக சில நற்குறிகள் தோன்றின. வடக்கே பங்டான் சமஸ்தானுதிபதி தம்முடைய ஜனங்களுக்குப் பொறுப்பாட்சி வழங்கினுர். தெற்கே திருவிதாங்கூர் திவான் எந்த ஸமஸ்தானமாவது தேசீய உணர்ச்சிக்கு விரோதமாகவேனும், பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்படும் தேசீயக்கொள்கைக்கு விரோதமாகவேனும் நடந்துகொள்ளுமானுல் அந்த சமஸ்தானம் உயிர் வாழத் தகுந்ததாகாது என்று தெளிவாகக் கூறினுர்.

இத்துடன் ஆங்கில அமெரிக்க அறிஞர்கள் நம்முடைய சுதந்திர அபிலாஷைகளை ஆதரித்தார்கள். ஆங்கில கடற்படையைச் சேர்ந்த எட்வர்ட் எங் என்னும் தளபதி நேசதேசத்தார் கடைசியாக வெற்றிபெற்று விட்டோம் என்று கூறி தலை நிமிரவேண்டுமானுல், அதற்கு இந்திய மகா ஜனங்களின் பரிபூரணமான ஒத்துழைப்பு இன்றியமையாததாகும் என்று கூறினுர். ஆங்கிலப் பேரறிஞர் ஏ. ஜி. கார்டினர் உலக சமாதானம் நிலைபெற அமெரிக்காவும் இங்கிலாந்தும் ரஷ்ஷியாவும் சைனுவும் ஒன்று சேர்ந்தால் போதாது, சுதந்தரம் பெற்ற இந்தியாவும் சேர்ந்தாகவேண்டும், அதுதான் அந்த மாளிகைக்கு ஐந்தாவது தூண் என்று வற்புறுத்தினுர்.

அமெரிக்க ஜனுதிபதி ரூஸ்வெல்டின் தூதராக வந்திருந்த பிலிப்ஸ் யுத்தத்திற்குப் பின் ஒரு குறிப்பிட்ட தேதியில் சுதந்திரம் அளிப்பதாகக் கூறி உடனே தேசீய

சர்க்கார் அமைத்தால்தான் நமக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு கிடைக்கும், அது கிடையாதவரை நாம் ஜப்பானை வெல்ல முடியாது என்று ரூஸ்வெல்டுக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

சைனாவின் முடிசூடா மன்னராயுள்ள ஷியாங்கே ஷேக்கும் இந்தியாவைத் திருப்தி செய்யும்படி பிரிட்டிஷ் சர்க்காருக்கு யோசனை கூறுமாறு அமெரிக்க ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்தன.

## துர்க்குறிகள்

இதெல்லாம் கேட்டதும் இப்பொழுதே சுதந்திரக் கனி நம்முடைய மடியில் தொப் என்று விழுந்துவிடும் போல் தோன்றிற்று. ஆனால் உண்மையில் அப்படி எதுவும் நடந்து விடவில்லை. அமெரிக்க அறிஞர்களும் கூறினார்கள், ரூஸ்வெல்ட்டின் பிரதிநிதியும் கூறினார், ஆனால் ரூஸ்வெல்ட் மகா பிரபு வாய் திறந்து ஏதேனும் கூறினாரா? அவர் ஜனநாயகம், சுதந்திரம், சமாதானம் என்று பெரிய பெரிய விஷயங்களைப் பொதுப்படையாகப் பேசினாரே தவிர ஒரு வார்த்தையாவது இந்தியாவின் பெயரைச் சொல்லி உச்சரிக்கவில்லை.

பிரிட்டிஷ் அறிஞர்கள் கூறினார்களே, அவர்களுக்கு அரசாங்கத்திடம் செல்வாக்குக் கிடையாது. அதுதான் வேண்டாம், அரசாங்கத்திடம் அழுத்தமாக வற்புறுத்திக் கூறக் கூடிய மனோதைரியமாவது உண்டா? அதுவும் கிடையாது என்று ஆங்கில ஆசிரியர் எட்வர்ட் தாம்ஸன் ராஜாஜி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் கூறினார்.

பிரிட்டிஷ் சர்க்காரோ நியாயத்துக்கும் நேர்மைக்கும் செவி சாய்க்காமலும் அறிஞர்கள் எச்சரிப்பதைக் கவனியாமலும் ஏகாதிபத்தியப் பிடிப்பை அதிகமாக இறுக்கவே வேலை செய்துகொண்டு வந்தார்கள்.

வேவல் பிரபுவிடம் தேசிய சர்க்கார் ஏற்படுத்தினல் தான் நாட்டில் காணப்படும் பஞ்சமும் நோயும் போகும் என்று கூறினல், அவர் அது யுத்தகாலத்தில் சாத்திய மில்லை, அதை விட்டு ஜனங்களுடைய வருவாயை விருத்தி செய்ய அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வாருங்கள் என்று கூறி ஜனங்களுடைய மனத்தை சுதந்திர விஷயத்தை விட்டு வேறு விஷயங்களில் திருப்பிவிட முயன்ருர். ஆனல் அரசியல் சுதந்திரத்தை ஏற்படுத்தாமல் பொருளாதார முன்னேற்றத்தைக் காண முயலுவது வண்டிக்கு முன் குதிரையைப் பூட்டாமல் குதிரைக்கு முன் வண்டியைப் பூட்டுவதாக இருக்கிறதென்று காந்தியடிகள் கண்டித்தார். தேசத்தின் வருவாயைப் பெருக்குவதற்காக 'பம்பாய் திட்டத்தை' வகுத்தவர்களும் அப்படியே கூறினர்கள்.

வேவல் துரை பொருளாதாரத் துறையில் வேலை செய்ய வேண்டுமென்று கூறினரே, அந்தத் துறையில் நடைபெற்று வந்தது யாது?

இங்கிலாந்துக்கு நாம் கடன் கொடுக்கவேண்டி இருந்தது. அந்தக் கடனை நாம் இங்கிலாந்திடம் கைநீட்டி வாங்கியதில்லை. இங்கிலீஷ் சர்க்கார்தான் தங்கள் நலனுக்காக பர்மா, ஆப்கானிஸ்தானம், அபிஸீனியா, மலேயா முதலிய இடங்களில் நடத்திய யுத்தங்களின் செலவை எல்லாம் நம் தலையில் கடனக ஏற்றிவைத்து விட்டார்கள். அதனல் நாம் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறியபொழுது, கொண்ட கடனைத் தீர்க்க வேண்டாமா என்று கோபிக்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது யுத்தத்திற்காக சாமான்கள் அனுப்பி அந்தக் கடனை தீர்த்து விட்டோம். அதுபோக ஆயிரம் கோடி பவுன் அவர்களுக்குக் கடனக தந்துமிருக்கிருேம். அந்தப் பணத்தைக் கொண்டு யுத்தத்திற்கு பின் கைத்

தொழில்களை விருத்தி செய்வோம் என்றால் அதற்குப் பலவிதமான இடையூறுகள் ஏற்படுத்த முயன்றார்கள். அதற்கும் மேலாக அரசாங்கத்திடம் அதிகச் செல்வாக்குள்ள கெயின்ஸ் பிரபு என்பவர் இங்கிலாந்து அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை என்பது போல யோஜனை கூற ஆரம்பித்தார். இவ்விதம் பணக்கார தேசம் ஏழை தேசத்தின் கடனைக் கொடுக்க மறுக்கும் விநோதம் இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில்தான் காண முடியும்.

கெயின்ஸ் பிரபு இதுமட்டுமா செய்தார்? அமெரிக்காவுக்குச் சென்று யுத்தத்திற்குப் பின் இந்தியாவுடன் வர்த்தகம் செய்து லாபமடைவதை அமெரிக்காவுடன் பங்கு போட்டுக்கொள்ளும் விஷயமாக ஒப்பந்தம் செய்ததாகவும் செய்தி வந்தது.

பிரிட்டிஷ் வர்த்தக போர்டின் தலைவர் டால்டன் துரை பிரிட்டன் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதை ஒன்றரை மடங்கு அதிகமாகப் பெருக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு யோசனை கூறினார். அது போலவே பிரிட்டனில் நடைபெறும் 50 விதமான கைதொழில்களின் பிரதி நிதிகள் ஒன்றுகூடி யுத்தத்திற்குப் பின் எந்த விதமான ஏற்றுமதிகளை இந்தியாவுக்கு அனுப்பலாம் என்பது பற்றி யோஜித்தார்கள். இந்தக் காரியங்கள் எல்லாம் வேவல் துரை கூறும் இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளோ என்னவோ அதை அவர்தான் அறிவார்.

இந்தவிதமாக இந்தியாவின் பொருளாதாரத் துறையில் காரியங்கள் நடைபெற்று வந்ததுபோலவே அரசியல் துறையிலும் நடைபெற்று வந்தன. இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்க ஆத்திரப் பட்டுக்கொண்டு இருப்பது போல இந்தியா மந்திரியும் வைசிராயும் காட்டிக்கொண்

டாலும் இங்கும் நேசநாடுகளிலும் நடைபெற்ற காரியங்கள் நல்ல மாதிரியாகத் தோன்றவில்லை.

இங்கிலாந்தில் ஸர். எப். கே. நூன்போன்ற பெரிய இந்திய உத்தியோகஸ்தர்கள் இந்தியாவில் எல்லாம் சரியாக நடந்து வருவதுபோல பிரசாரம் செய்து வந்தார்கள். அமெரிக்காவில் அரசாங்க சார்பில் பிரசாரம் செய்வதற்காக சில இந்தியர்களை அனுப்பி அவர்களை இந்தியாவில் அதிக செல்வாக்குள்ளவர்கள்போல் காட்டி வந்தார்கள். அவர்களைத் தவிர சுமார் முன்னூறு வெள்ளைக்காரர்களையும் நியமித்து பிரசாரம் நடத்தி வருவதாகவும் செய்திகள் வந்தன.

இந்தியாவில் சர்க்கார் இந்தியக் கைத்தொழில் பெடரேஷனுக்கு ஏராளமான பணம் கொடுத்தார்கள் அதைச் சேர்ந்த ராயிஸ்டுகள் காங்கிரஸை எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்தார்கள். "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையின் விசேஷ நிருபர் இந்தியாவின் முக்கிய மான நகரங்களிலெல்லாம் சர்க்கார் பணவுதவியால் நடை பெறும் பத்திரிகைகளும் நேசநாட்டுத் தலைநகரங்களி லெல்லாம் சர்க்கார் அமைத்துள்ள செய்தி ஸ்தாபனங் களும் தேசீய சுதந்திர இயக்கத்திற்கு விரோதமாக வேலை செய்யப் போவதாக அறிவித்தார்.

லின்லித்கோ பிரபு பிரிட்டிஷ் டோரிக் கட்சியார் வரப்போகும் தேர்தல்களில் இந்தியப் பிரச்னை விஷய மாக எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று யோசனை சொல்வதற்காக அந்தக் கட்சியின் தலைவர் பதவியை ஏற்கப்போவதாகவும் செய்தி வந்தது.

இன்னும் ஓர் சூழ்ச்சி நடப்பதாக லண்டன் யு. பி. நிருபர் கூறினார். போர்முனையிலுள்ள இந்திய வீரர்களை ஒரு தனி வகுப்பாராகச் சிருஷ்டித்து இந்திய சுதந்திரக்

கோரிக்கைக்கு விரோதமாக நிற்குமாறு செய்வதே அந்தச் சூழ்ச்சியாம்.

சென்ற மகா யுத்தத்தில் ஜெர்மன் சேனை வெள்ளம் பாரிஸையும் லண்டனையும் மூழ்கடித்துவிடாமல் இடை மறித்து நின்று காத்துக் கொடுத்தவர்கள் நமது வீரர்கள் தான் என்பதும் அதற்காக அவர்களை கர்ஸன் பிரபு வானளாவப் புகழ்ந்தார் என்பதும் உலகப் பிரசித்தம். ஆனால் அவ்வீரர்கள் செய்த உதவிக்காக அவர்களுடைய தாய்நாடு பெற்ற பரிசுகள் ரவ்லட் சட்டமும் பஞ்சாப் அநீதியுமேயாகும். இந்த யுத்தத்தில் 20 லட்சம் இந்திய வீரர்கள் ஆப்பிரிக்காவிலும் இத்தாலியிலும் அஸ்ஸாமிலும் நாஸிஸத்தை எதிர்த்து விரட்டிவந்தார்கள். அப்படி அவர்கள் பிற நாடுகளின் சுதந்திரத்தைக் காப்பாற்றத் தங்கள் ரத்தத்தை ஆறுய்ப் பெருக்கி வந்தார்களே, அவர்களுடைய தாய்நாட்டிற்கு நியாயத்தை ஒட்டி இல்லாவிட்டாலும் நன்றியை ஒட்டியாவது சுதந்திரம் வழங்கவேண்டாமா? அதற்குப் பதிலாக அவர்களை அப்படி வீரர்கள் இப்படிச் சூரர்கள் என்று புகழ்வதும் அவர்கள் திரும்பி வந்தபின் அவர்களுக்குக் கொஞ்ச நிலமும் அவர்களுடைய குழந்தைகட்கு இலவசக் கல்வியும் அவர்களுடைய பெண்களுக்கு இலவச மருந்தும் கொடுக்க ஏற்பாடு செய்வதும் போதுமோ?

ஆனால் அரசாங்கத்தார் செய்யும் ஏற்பாடுகள் எல்லாம் அவ்வளவாகத்தான் இருந்தன. அந்த ஏற்பாடுகளைச் செய்துவிட்டால் அந்த வீரர்கள் அவற்றில் மயங்கி அரசாங்கத்தின் அடிமைகளாக ஆகி தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக சத்தியாக்கிரகப் போர் செய்யும் தங்கள் சகோதரர்களுக்கு விரோதமாக நின்றுவிடுவார்கள் என்று சர்க்கார் மனப்பால் குடித்தார்கள்.

நமது வீரர்கள் சேனையின் விதிகளுக்கு அணுவளவும் பிறழாமல் நடப்பார்கள், நன்றி விசுவாசமாய் இருப்பார்கள். ஆயினும் அதே சமயத்தில் சுதந்திர தாகமுடையவர்கள், நன்றி விசுவாசம் என்று எண்ணி நாட்டின் சுதந்திரத்திற்கு விரோதமாக நிற்கமாட்டார்கள். அவர்கள் சாப்பாட்டை எண்ணியே சேனையில் சேர்ந்தபோதிலும் சண்டையில் ஈடுபட்டதும் நாசிசத்தின் கொடுமையை அறிந்துகொண்டு அதை ஒழிக்கத் தீவிரமாகப் போராடினார்கள். வீட்டை விட்டுப் புறப்படும் பொழுது அவர்களிடம் மண்ணில் புதைந்த விதைபோல மறைந்து கிடந்த சுதந்திர வேட்கை அங்கே போர் முனைகளில் சுதந்திரப் பிரியர்களான ஆங்கில அமெரிக்க வீரர்களுடன் பழக நேரிட்டதும் முளைத்து வளர்ந்ததேயன்றி அழிந்து போகவில்லை என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் அவர்களைச் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையாக உபயோகித்து கொள்ளலாம் என்று அமெரி கூட்டத்தார் எண்ணியதெல்லாம் பின்னால் வெறும் பகற்கனவாகவே முடிந்தது.

# சம்பாஷணைக்குப் பின்

இந்த விதமாக நாட்டின் அரசியல் நிலைமையில் ஏற்பட்டிருந்த சிக்கலைத் தீர்த்து ஜனங்களுக்கு நன்மை தேடும் பொருட்டு மஹாத்மா காந்தியடிகள் வைசிராய்க்கு எழுதிய யோசனையும் ஜின்னு சாகிபுடன் நடத்திய சம்பாஷணையும் பயன்படாமல் போகவே நாடெங்கும் அதிருப்தி அதிகமாக ஏற்பட்டிருந்தது.

அதனுல் மத்திய சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் தலைவராயிருந்த புலாபாய் தேசாய் ஹிந்து முஸ்லிம் சமரஸம் காண விரும்பி மத்திய சட்டசபையில் முஸ்லிம் லீகின் தலைவராயிருந்த நவாப்ஜாதா லியாகத் அலிகானுடன் சம்பாஷணைகள் நடத்தி இறுதியில் தேசாய்—லியாகத் ஒப்பந்தத்தை உருவாக்கினுர். அதன் முக்கிய ஷரத்துக்கள் பின்வருமாறு :—

1. இப்பொழுதுள்ள அரசியல் சட்டத்தின் கீழ், அடியிற் கண்ட விதமாக இடைக்கால சர்க்கார் அமைக்க காங்கிரஸும், லீகும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

(அ) நிர்வாக சபையில் காங்கிரஸும், லீகும் சமமான ஸ்தானங்கள் பெறவேண்டும்.

(ஆ) ஹரிஜனங்களுக்கும் சீக்கியர்களுக்கும் ஸ்தானங்கள் அளிக்கப்படவேண்டும்.

(இ) சேனுதிபதியும், நிர்வாக சபையில் ஒரு அங்கத்தினரா யிருப்பார்.

2. மத்திய சட்டசபையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் பெரும்பாலோர் ஆதரிக்கும்

சட்டத்தையே நிர்வாக சபையார் அமுல் நடத்துவார்கள்.

3. இடைக்கால சர்க்கார் அமைந்ததும் காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்களையும் இதர காங்கிரஸ் காரர்களையும் விடுதலை செய்யவேண்டும்.

4. இடைக்கால சர்க்கார் அமைந்தபின் மாகாணங் களில் காங்கிரஸ் லீக் கூட்டு மந்திரி சபைகள் அமைக்கப் படவேண்டும்.

இந்தத் திட்டத்தை புலாபாய் தேசாயும் லியாகத் கானும், வைசிராயிடம் சமர்ப்பித்தார்கள். வைசிராய் அதை ஆதாரமாகக்கொண்டு அரசியல் சிக்கலை அவிழ்த்து விட எண்ணினார். அதனால் 1945 மார்ச்சு மாதத்தில் வைசிராய் வேவல்பிரபு இது விஷயமாக பிரிட்டிஷ் மந்திரி சபையாருடன் கலந்து பேசுவதற்காக இங்கிலாந் திற்குச் சென்றார்.

அதன்பின் ஜூன் மாதம் 5ம் தேதி இந்தியாவுக்குத் திரும்பிவந்து 14ம் தேதி தம்முடைய திட்டத்தை ரேடியோ மூலம் இந்திய மகா ஜனங்களுக்குத் தெரிவித் தார். அதன் சுருக்கம் வருமாறு :—

1. பிரிட்டிஷ் சர்க்கார் வைசிராயின் நிர்வாக சபையை ஜனப்பிரதிநிதித்துவம் அதிகமாக உள்ள முறையில் அமைக்க விரும்புகிறார்கள். வைசிராய் அரசி யல் தலைவர்களுடன் கலந்து பேசி அங்கத்தினர்களைத் தெரிந்தெடுப்பார். நிர்வாக சபையில் ஜாதி ஹிந்துக் களுக்கும் முஸ்லிம்களுக்கும் சரி சமானமாக ஸ்தானங்கள் அளிக்கப்படும். அயல்நாட்டு விஷயத்தை இந்திய அங்கத் தினரே நிர்வகிப்பார். வைசிராயும் சேனாதிபதியும் தவிர இதர அங்கத்தினர்களெல்லாரும் இந்தியர்களாகவே இருப்பார்கள்.

2. இந்த நிர்வாக சபை தற்பொழுதுள்ள அரசியல் சட்டத்தின்படியே வேலை செய்யும். வைசிராய் தம்

முடைய அதிகாரத்தைத் துறந்துவிடமாட்டார். ஆனால் அதை நியாயமான வழியிலேயே உபயோகிப்பார்.

3. இடைக்கால சர்க்கார் ஏற்படுவது இறுதியாக ஏற்படவேண்டிய ஒப்பந்தத்தை எந்த விதத்திலும் பாதிக்காது.

4. இந்த சர்க்கார் ஜப்பான் தோற்கும் வரை ஜப்பானிய யுத்தத்தை முழு மூச்சாக நடத்திவரும்.

5. இந்த சர்க்கார் சாசுவதமான அரசியல் சட்டம் வகுக்கப்பட்டு புதிய சர்க்கார் ஏற்படும் வரை பிரிட்டிஷ் இந்தியாவின் அபிவிருத்திக்கு வேண்டிய சகல காரியங்களையும் நடத்திவரும்.

6. இந்த சர்க்கார் அரசியல் கட்சிகளுக்குள் சமரஸம் ஏற்படுவதற்கான வழிகளைப் பற்றியும் யோசனை செய்யும்.

7. இந்த சர்க்காரை ஏற்படுத்த வைசிராய் சிம்லாவில் ஜூன் 25ம் தேதி ஒரு மகாநாடு கூட்டுவார்.

8. இது வெற்றிபெற்று இடைக்கால சர்க்கார் ஏற்பட்டால் மாகாணங்களில் கூட்டு மந்திரி சபைகள் ஏற்படும்.

9. இந்த சர்க்கார் ஏற்படாவிட்டால் இப்பொழுதுள்ள நிர்வாக சபையே இருந்து கொண்டிருக்கும்.

10. இந்த மகாநாடு நடத்துவதற்காக காங்கிரஸ் காரியக் கமிட்டியார் உடனே விடுதலை செய்யப்படுவார்கள்.

இந்தத் திட்டத்தை ஒலி பரப்பியபொழுது வேவல் பிரபு எல்லா கட்சியாரும் பழயவற்றை மறந்துவிடும்படியும், மன்னித்து விடும்படியும் கேட்டுக்கொண்டார்.

நிர்வாக சபையார் ஏதேனும் ஒரு விஷயத்தைக் குறித்து ஏக மனதாகத் தீர்மானித்தாலும் அதை நிராகரித்துவிட வைசிராய்க்கு அதிகாரமுண்டு. இந்த அதி

காரம் இருக்கும்பொழுது இடைக்கால சர்க்கார் அமைப்ப தால் என்ன பயன் உண்டாகும் என்று தேசபக்தர்கள் எண்ணினார்கள்.

அதற்கு இந்தியா மந்திரியாயிருந்த அமரி கீழ்க் கண்டவாறு சமாதானம் சொன்னார் :—

வைசிராய்க்கு இந்த விசேஷ அதிகாரம் இருப்பது உண்மைதான். ஆனால் அந்த அதிகாரம் இந்திய மக் களுக்கு விரோதமாக உபயோகப்படுத்துவதற்காக ஏற் பட்டதன்று. இதுவரை அவ்விதம் உபயோகிக்கவு மில்லை. அது சிறுபான்மை இனத்தோரையும் சமஸ்தானங் களையும் பாதுகாப்பதற்காகவே ஏற்பட்டதாகும். ஆதலால் நிர்வாக சபையார் நாட்டை அபிவிருத்தி செய்யும் விஷயத் தில் அவர்களுக்கு வைசிராயின் விசேஷ அதிகாரத்தால் எவ்விதத் தடையும் ஏற்படாது.

ஜூன் மாதம் 15ம் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் 34 மாதம் 6 நாள் சிறையில் இருந்துவிட்டு வெளியே வந்தார்கள். அவர்களை தேச மஹாஜனங்கள் அளவற்ற சந்தோஷத்தோடு வரவேற்றார்கள்.

1942க்குப் பிறகு அவர்கள் முதன் முதலாக பம்பாயி லுள்ள பிர்லா மாளிகையில் ஜூன் மாதம் 21ம் தேதி கூட்டம் கூடினார்கள். மௌலானா ஆஸாத் தலைமை வகித்தார். நாட்டின் நிலைமையைப் பற்றியும், வைசி ராயின் திட்டத்தைப் பற்றியும் 2 நாட்கள் ஆராய்ந்தார் கள். இறுதியில் வைசிராயின் அழைப்புக் கிணங்கி சிம்லாவுக்குச் செல்வதாக முடிவு செய்தார்கள்.

ஆனால் வைசிராய் மௌலானா ஆஸாதை அழைக் காதது பெருந் தடையாக இருந்தது. அதைக் காந்தியடிகள் வைசிராய்க்கு எடுத்துக் காட்டினார். வைசிராய் உடனே ஆஸாதுக்கும் அழைப்பு அனுப்பி வைத்தார்.

அதுபோலவே காந்தியடிகள் ஜாதிஹிந்து என்னும் பதத்தை உபயோகித்திருப்பதை ஆட்சேபித்த பொழுதும் வைசிராய் மஹாத்மாவுக்குத் திருப்தி உண்டாகும் முறையில் தம்முடைய பதப் பிரயோகத்தை மாற்றிக் கொண்டார்.

இந்த விதமாக வைசிராய் நடந்து கொண்டது அவர் உண்மையாகவே இந்தியாவில் அரசியல் ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென்று விரும்புகிருர் என்பதைக் காட்டுகிறதென்று காங்கிரஸ் தலைவர்கள் எண்ணினர்கள். அதனல் காங்கிரஸ் சபையார் பழையவற்றை மறந்தும் மன்னித்தும் பிரிட்டிஷ் சர்க்காரோடு ஒத்துழைக்கத் தீர்மானித்தார்கள்.

# சிம்லா மஹாநாடு

சிம்லா மஹாநாட்டுக்காக அழைக்கப்பட்டிருந்தவர்கள் ஜூன் 24ம் தேதி சிம்லா வந்து சேர்ந்தார்கள். மஹாத்மா மஹாநாட்டிற்குப் போகாமல் இருப்பதென்றும் ஆலோசகர் ஸ்தானத்திலேயே சிம்லாவில் தங்கியிருப்பதென்றும் முடிவு செய்தார்.

ஜூன் 25-ம் தேதி காலையில் மஹாநாடு வைசிராய் மாளிகையில் கூடிற்று. அங்கத்தினர்கள் வைசிராய் வேவல் திட்டத்தின் பொதுப்படையான தத்துவங்களையெல்லாம் ஒப்புக்கொண்டனர்.

அதன்பின் நிர்வாக சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் காங்கிரஸும் லீகும், ஒத்துப் போவதற்காக கோவிந்த வல்லபாய் பந்த் 3 நாட்கள் பெருமுயற்சிசெய்தார். ஆனால் பயனுண்டாகவில்லை. அதன்மேல் வைசிராய் ஒவ்வொரு கட்சித்தலைவர்களும் தனித்தனியாக அங்கத்தினர் ஜாப்தா தயாரித்து தம்மிடம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

## ஜின்னாவின் வாதம்

ஜின்னா கீழ்க்கண்ட காரணங்களைக் கூறி ஜாப்தா சமர்ப்பிக்க மறுத்தார் :—

1. ஹிந்து அங்கத்தினர்களும் முஸ்லிம் அங்கத்தினர்களும் ஒரே தொகையினராக இருப்பார்களென்று கூறியபோதிலும் நிர்வாக சபையில் முஸ்லிம்கள் மைனாரட்டியாகவே இருப்பார்கள். ஏனெனில் இந்துக்களுடன்,

ஹரிஜனங்களும் சீக்கியர்களும் சேர்ந்து கொள்வார்கள். அதனால் நிர்வாக சபையில் காங்கிரஸே மெஜாரட்டியாயிருக்கும். வைசிராயின் விசேஷ அதிகாரம் முஸ்லிம்களை பாதுகாக்கக் கூடுமாயினும் வைசிராய் அதை அடிக்கடி உபயோகிப்பாரென்று எதிர்பார்க்க முடியாது.

2. காங்கிரஸ் சபை முஸ்லிம்களை நியமிக்கத் தனக்கு உரிமை இருப்பதாகக் கூறுகிறது. ஆனால் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களில் தொண்ணூற்றென்பது சதமானமானவர்கள் முஸ்லிம் லீகையே ஆதரிக்கிறார்கள். ஆதலால் முஸ்லிம்களின் பெயர்களை வைசிராய்க்குக் கொடுப்பதற்கு முஸ்லிம் லீகுக்குமட்டும்தான் உரிமை உண்டு.

## காங்கிரஸ் வாதம்

ஜின்னா மேற்கண்டவிதமாக அறிக்கை வெளியிட்டதும் பண்டித பந்த் அவருடைய வாதத்தை மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அதன் சாரம் வருமாறு :—

1. நாட்டில் ஹிந்துக்கள் முஸ்லிம்களைவிட 3 பங்கு தொகையினர். ஆனால் அவர்களுக்கு நிர்வாக சபையிலுள்ள ஸ்தானங்களில் மூன்றில் ஒரு பங்கே கிடைக்கின்றன. இவ்விதம் பெரும்பான்மைக் கட்சியார் சிறுபான்மை ஆய்விடுகின்றனர்.

2 ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நலன்கள் ஒன்றே. அதனால் இருகட்சியாரும் ஒன்று சேர்ந்து வேலை செய்ய முடியும்.

3. முஸ்லிம்களல்லாதவர்கள் எல்லோரும் முஸ்லிம்களுக்கு விரோதமாக ஒன்று சேர்ந்து கொள்வார்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் கிடையாது.

4. முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக உள்ள மாகாணங்களில் லீக் மந்திரிசபை காணப்படவில்லை. எல்லைப்புற மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிசபையும்

பஞ்சாபில் ஐக்கியக்கட்சி மந்திரி சபையுமே நடைபெறு கின்றன. சிந்திலும் அஸ்ஸாமிலும் உள்ள மந்திரி சபைகள் காங்கிரஸ் ஆதரவைக் கொண்டே நடந்து வரு கின்றன. ஆதலால் இந்தியாவிலுள்ள சகல முஸ்லிம் களுக்கும் தானே ஏகப் பிரதிநிதி என்று முஸ்லிம் லீக் கூறுவது பொருந்தாது.

## காங்கிரஸ் ஜாப்தா

காங்கிரஸ் காரியக் கமிட்டியார், காங்கிரஸிலும் முஸ் லிம் லீக்கிலும் இந்து மகாசபையிலும் உள்ள தலைவர் களில் மிகப் பெரியவர்களைப் பொறுக்கி எடுத்து அவர்க ளுடன் ஒரு பார்ஸி, ஒரு கிறிஸ்தவர், ஒரு சீக்கியர் ஆகிய வர்களையும் சேர்த்து ஒரு ஜாப்தா தயார்செய்து அதை வேவலிடம் சமர்ப்பித்தார்கள்.

ஆனால் முஸ்லிம் லீக் முஸ்லிம் அங்கத்தினர்களுடைய பேர்களை மட்டுமே கூறுவதாகவும் அந்தப்பேர்களை மாற்று மல் அப்படியே வைசிராய் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகவும் கூறிற்று. அத்துடன் லீக்கில் சேராத எந்த முஸ்லிமையும் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்றும் முஸ்லிம் லீக்குக்கு அனுகூலமாக வைசிராய் தம்முடைய விசேஷ அதிகாரத்தை உபயோகிக்க வேண்டுமென்றும் ஜின்னா வைசிராயிடம் கேட்டார். வைசிராய் இவ்விதம் நடந்துகொள்ள இணங்கவில்லை. அதன்மேல் முஸ்லிம் லீக் அங்கத்தினர் ஜாப்தா கொடுக்க மறுத்துவிட்டது.

அதன்பின் வைசிராய் தாமே முஸ்லிம்கள் ஜாப்தா ஒன்று தயார் செய்து அதை ஜின்னாவிடம் காட்டினார். அதில் முஸ்லிம் லீக்கிற்கு 4 ஸ்தானங்கள் வழங்கப்பட் டிருந்தன. ஆனால் ஜின்னா வைசிராயின் ஜாப்தாவை ஏற் றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

முஸ்லிம் லீகோடு ஒத்துப் போவதற்காகப் பெரு முயற்சி செய்துவந்த ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் முஸ் லிம் லீகர்கள் முஸ்லிம் லீக்கில் சேராதவர்களைப் பரி பூரணமாக விலக்கிவிடவேண்டும் என்று சொல்வதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது என்று கூறினார்.

## மஹாநாடு முறிவு

மஹாநாடு இறுதியாக ஜுலை 14-ந்தேதி கூடிற்று. அப்பொழுது வைசிராய் முஸ்லிம் லீக் ஜாப்தா கொடாத தால் மஹாநாடு தோல்வியுற்றதென்று அறிவித்தார். அத்துடன் மஹாநாடு தோல்வியுற்றதற்குத் தாமே பொறுப்பாளி என்றும் சொல்லிக் கொண்டார்.

ஆனால் உண்மையில் மஹாநாடு முறிந்ததற்கு முஸ் லிம் லீகின் நியாயமற்ற பிடிவாதமே காரணமாகு மென்று மௌலானா ஆஸாத் கூறினார். அது மட்டுமன்று. காங்கிரசையோ லீகையோ சேராத இரண்டு தேசிய முஸ்லிம்களைச் சேர்க்க முஸ்லிம் லீக் சம்மதித்தால் காங் கிரஸ் முஸ்லிமை சேர்க்க வேண்டுமென்று தாம் வற் புறுத்தப் போவதில்லை என்று முஸ்லிம் லீக்கிடம் கூறிய தாகவும் சொன்னார்.

மஹாநாடு முறிந்ததின்பின் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி யார்,

"வேவல் பிரபு மஹாநாடு கூட்டியதன் நோக்கத்தை நாம் தவறாக அர்த்தப்படுத்திக்கொண்டோம் என்று தோன்றுகிறது. ஜின்னா ஒப்புக்கொண்டால் நிர்வகா சபையுண்டு, ஜின்னா ஒப்புக்கொள்ளாவிட்டால் நிர்வாக சபையில்லை என்று வேவல் முன்கூட்டியே சொல்லி யிருந்தால் வீணான சிரமம் வேண்டாமென்று நாம் அவ ரிடம் முன் கூட்டியே சொல்லியிருப்போம்"

என்று பத்திரிகைப் பிரதிநிதியிடம் கூறினார்.

## காங்கிரஸின் வெற்றி

காங்கிரஸ் மகாசபையைப்பற்றிப் பிரிட்டிஷ் சர்க்காரும் முஸ்லிம் லீக்கும் கூறிவந்த அபவாதங்கள் தவறானவை என்று இந்த மஹாநாட்டில் தெளிவாக நிரூபிக்கப்பட்டன. காங்கிரஸ்காரர்கள் ஜப்பானியர் வரவை ஆதரிப்பதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் கூறிவந்தார்கள். ஆனால் காங்கிரஸ் கமிட்டி இடைக்கால சர்க்காரில் சேர்ந்து ஜப்பானியரை முறியடிக்க உதவுவதாக இந்த மஹாநாட்டில் ஏற்றுக்கொண்டது.

காங்கிரஸ் அதிதீவிரமான தேசீயக் கட்சியாயிருப்பதால் அது எந்தவிதமான சமரசத்தையும் ஏற்றுக்கொள்ளாது என்றும் அதனாலேயே அது கிரிப்ஸ் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது என்றும் பிரிட்டிஷ் சர்க்கார் கூறிவந்தார்கள். ஆனால் வேவல் திட்டத்தில் எத்தனையோ குறைகள் காணப்பட்ட போதிலும் அதைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ள முன்வந்ததிலிருந்து பிரிட்டிஷ் சர்க்கார் கூறியது தவறென்று புலனாயிற்று.

காங்கிரஸ் மகாசபை ஒரு இந்து ஸ்தாபனம் என்றே பிரிட்டிஷ் சர்க்காரும் முஸ்லிம் லீக்கும் கூறிவந்தன. ஆனால் வேவல் பிரபு காங்கிரஸின் தலைவரான மௌலானா ஆஜாத்தை அழைத்ததிலிருந்து காங்கிரஸ் மகாசபை ஒரு தேசீய ஸ்தாபனம் என்று நிரூபிக்கப்பட்டது.

முஸ்லிம் லீக் தானே முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதி என்று கூறிவந்ததும் தவறென்று இந்த மஹாநாட்டில் வெளியாகிவிட்டது. மஹாநாட்டில் காங்கிரஸ் முஸ்லிம்களும் லீக் முஸ்லிம்களும் இரண்டிலும் சேராத முஸ்லிம்களும் பிரஸன்னமாயிருந்தார்கள். வைசிராய் வேவலும் லீகின் தனிப் பிரதிநிதித்வ பாத்தியதையை அங்கீகரிக்கவில்லை.

## தொழிற்கட்சி மந்திரி சபை

ஜெர்மனியுடன் நடந்துவந்த யுத்தம் முடிந்துவிட்டதால் இங்கிலீஷ் பிரதம மந்திரி இங்கிலாந்தில் பார்லிமெண்ட் சபைக்குப் பொதுத் தேர்தல் நடத்த முடிவுசெய்தார். அப்படியே அது 1945 ஜூலை 5-ம் தேதி நடைபெற்றது. சர்ச்சில் தாமும் தம்முடைய கட்சியாருமே பெருமிதமான வெற்றிபெறப் போவதாக மனப்பால் குடித்துக் கொண்டிருந்தார். ஆனால் தேர்தலின் முடிவைக்கண்டு அவர் திகைத்துப் போய்விட்டார். அவருடைய கட்சிக்கு 210 ஸ்தானங்களும் தொழிற்கட்சிக்கு 417 ஸ்தானங்களும் கிடைத்தன. அதனால் தொழிற்கட்சி மந்திரிசபை ஏற்பட்டது. ஆட்லி பிரதம மந்திரியானார்.

1940 மே மாதம் 10ம் தேதி அதிகாரத்துக்கு வந்த சர்ச்சில் 1945 ஜூலை மாதம் 27ம் தேதி வெளியேறினார். 5 வருஷகாலமாக காங்கிரஸை நசுக்கத் தம்மால் இயன்றமட்டும் முயற்சி செய்த சர்ச்சில் போனதும் தொழிற்கட்சி மந்திரிசபை ஏற்றதும் இந்தியாவுக்கு நல்ல சகுனங்களாகத் தோன்றின. அத்துடன் இந்திய அபிலாஷைகளில் அனுதாபமுடைய பெத்விக் லாரன்ஸ் இந்தியா மந்திரியானார்.

இதை அறிந்ததும் இந்திய தேசியவாதிகள் இந்தியாவுக்கு விமோசனகாலம் சமீபித்து விட்டதாக எண்ணினார்கள்.

# இந்திய தேசீய ராணுவம்

அதன்பின் ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்கர்கள் ஜப்பான்மீது அணுகுண்டு வீசியதன் காரணமாக ஜப்பானிய யுத்தம் திடீரென்று முடிவுற்றது. அதன்பின் பர்மாவிலும் மலேயாவிலும் இந்திய தேசீய ராணுவத்தைச் சேர்ந்த போர் வீரர்களை இந்தியாவில் கொண்டுவந்து சிறையிலடைத்து வைத்தார்கள். இந்த ராணுவத்தின் சரித்திரத்தை அறிந்துகொள்வது அவசியம்.

பிரிட்டன் ஜெர்மனியுடனும் இத்தாலியுடனும் போர்புரிந்து கொண்டிருந்த சமயத்தில் ஜப்பான் சைனுவை அடிமைப்படுத்த அரும்பாடு பட்டுக்கொண்டிருந்தது. சைனுவுக்கு ஆயுத தளவாடங்கள் பர்மா வழியாகச் செல்வதைத் தடுப்பதற்காக பர்மா பாதையை மூடிவிட வேண்டும் என்று ஜப்பான் பிரிட்டிஷ் சர்க்காரிடம் கூறிற்று. அப்படியே செய்கிறோம் என்று கூறி அவர்கள் பர்மா பாதையை மூடிவிட்டார்கள். உலகத்தில் சுதந்திரத்தைக் காப்பதற்காகப் போரில் இறங்கியிருப்பதாகக் கூறிய பிரிட்டன் தன்னுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றும் பொருட்டு நான்கு வருஷங்களாக சொல்லொணுத் துன்பங்கள் அடைந்து வந்த சைனுவுக்கு உதவி செய்யாமல் சுதந்திரத்தை கொள்ளையிட விரும்பும் ஜப்பானுக்கு உதவி செய்யப் புகுந்தது ஏன்? அதுதான் பிரிட்டனுடைய ராஜதர்மம்.

ஆனுல் ஜப்பான் 1941 டிஸம்பர் 7-ம் தேதியன்று அமெரிக்காவுக்குச் சொந்தமான பிலிப்பைன் தீவிலுள்ள

"பெர்ல் ஹார்பர்" என்னும் பிரதான துறைமுகத்தை யுத்தப் பிரகடனம் செய்யாமலே திடீரென்று தாக்கிற்று. உடனே அமெரிக்காவும் பிரிட்டனும் ஜப்பானுடன் போர் செய்வதாக அறிவித்தார்கள்.

பெர்ல் ஹார்பரைத் தாக்குவதும் பிடிப்பதும் சாதாரணமான காரியமன்று. அதை ஜப்பானியர் அரை நொடியில் செய்து முடித்துவிட்டார்கள். அதன் பின் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான இரண்டு பெரிய பிரமாண்டமான யுத்தக் கப்பல்களையும் மலேயா கடலில் தாழ்த்திவிட்டார்கள்.

இதைக் கண்டதும் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் பிரமித்துப்போனார்கள். பெர்ல் ஹார்பர் தாக்கப்பட்டதற்கு மூன்று நாட்களுக்குமுன்னர்தான், (1941 டிஸம்பர் 3-ம் தேதி யன்று) தூரக் கீழ்நாட்டிலிருந்த நேசதேசத் துருப்புக்களின் சேனாதிபதியாயிருந்த ஸர் ராபர்ட்புரூக்—போபாம் என்பவர் —

" ஜப்பான் பிரதம மந்திரி டோஜோ என்னசெய்வதென்று அறியாமல் தலையைச் சொரிந்துக்கொண்டிருக்கிறார். பிரிட்டிஷாரையும் அமரிக்கரையும் தாக்கும்படியான துணிவு ஜப்பானுக்குக் கிடையாது. அவர்கள் வரட்டும், எந்தக் காலத்திலும் மறக்க முடியாதபடி தக்கபாடம் கற்பிப்போம்" என்று கூறினார்.

அப்படி பிரிட்டிஷ் அதிகாரிகள் ஜப்பான் குள்ளன் தானே இவன், என்ன செய்துவிடுவான் என்று இறுமாப்புடன் எவ்வித முன்னேற்பாடுமில்லா திருந்தார்கள். அதனால் ஜப்பான் தட தட வென்று ஜெயித்து வருவதைக் கண்டு ஆச்சரிய மடைந்தார்கள்.

கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டி உண்டாக்கிய சிங்கப்பூர் கடற்படை அரண் பிரிட்டிஷாருக்கு எவ்விதப் பாதுகாப்பும் அளிக்கவில்லை. அதுவும் வெகு சீக்

கிரத்தில் ஜப்பானியர் வசமாய்விட்டது. ஜப்பானியர் அதைக் கடல்வழியாக வின்றி நிலம் வழியாகவே வந்து கைப்பற்றிக் கொண்டார்கள்.

## பிரிட்டிஷ் சரணுகதி

பிரிட்டிஷ் படைகள் எல்லாம் கப்பல் ஏறித் தப்பித்துக் கொண்டன. இந்தியப் படைகள் மட்டும் இறுதி வரை ஜப்பானியருடன் போராடிக் கொண்டிருந்தன. ஆயினும் சிங்கப்பூர் அரண் விழுந்துவிடவே 1942 பெப்ரவரி 15-ந் தேதி யன்று பிரிட்டிஷ் தளபதி ஜெனரல் பெர்ஸிவல் சிங்கப்பூர் நகரத்தை யாதொரு நிபந்தனையுமின்றி ஜப்பானிய சேனுதிபதி ஜெனரல் யமாஷிட்டா என்பவரிடம் ஒப்புவித்தார்.

உடனே சிங்கப்பூர் நகரம் 'தென்னுட்டு சிம்மம்' என்று பொருள் படக்கூடிய "ஷோனுன்" என்னும் ஜப்பானிய நாமம் சூட்டப் பெற்றது.

அதன்பின் இரண்டு நாட்கள் சென்றதும் அந்த நகரத்திலுள்ள பரார் பார்க்கில் "சரணுகதிவிழா" நடைபெற்றது. அப்பொழுது இந்திய ராணுவவீரர்களும் அதிகாரிகளுமாக 32 ஆயிரம் பேர் அணிவகுத்து நின்றுர்கள். உப சேனுதிபதி கர்னல் ஹண்ட் என்பவர்

"நான் இன்று உங்களை பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பாக ஜப்பானியரிடம் ஒப்புவிக்கிறேன். நீங்கள் பிரிட்டிஷாருக்குப் பயந்து நடந்தது போலவே ஜப்பானியருக்கும் பயந்து நடக்க வேண்டும். அப்படி நடக்காவிட்டால் தண்டனைக்குள்ளாவீர்கள்" என்று ஒலி பெருக்கி மூலமாகத் தம்முடைய படைக்குச் சொன்னுர்.

அதன்பின் வீரர்களுடைய ஜாபிதா ஜப்பானியத் தளபதி புஜிவாரா என்பவரிடம் கொடுத்தார். இந்தவிதமாக இறுதிவரை பிரிட்டனுக்காக இரத்தம் கொட்டிய

இந்திய வீரர்களுடைய உடலையும் உயிரையும் ஜப்பானியரிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

அதன் பின் தளபதி புஜிவாரா —

"நான் உங்களை ஜப்பானிய சர்க்கார் சார்பாக ஏற்றுக்கொண்டு தளபதி மோகன் சிங்கிடம் ஒப்புவிக்கின்றேன். இனிமேல் நீங்கள் அவருக்கே பணிந்து நடக்க வேண்டும்" என்று கூறினார்.

அதன்பின் தளபதி மோகன் சிங்

"இந்தியாவுக்கு விடுதலை அளிக்கவும் கீழ்நாடுகளிலுள்ள இந்திய மக்களைப் பாதுகாக்கவும் இந்திய தேசிய ராணுவம் அமைக்கவேண்டும் என்று ஒரு யோசனை இருந்துகொண்டிருக்கிறது. நீங்கள் எல்லோரும் சந்தோஷமாக அதில் சேர்வீர்கள் என்று நம்புகிறேன்" என்று கூறினார்.

இந்தவிதவாக இந்திய தேசிய ராணுவம் அமைக்க வேண்டும் என்ற யோசனை பெப்ரவரி 17-ந் தேதியே வெளியிடப்பட்ட போதிலும் அது உருவாவதற்கு ஆறு மாதங்கள் ஆயின.

பிரிட்டிஷார் பயந்துபோய் தங்களைத் தனியே விட்டு விட்டு ஓடிவிட்டார்கள், ஜப்பானியர் எங்கு பார்த்தாலும் வெற்றி அடைந்து வருகிறார்கள், அவர்கள் இந்திய விடுதலைக்கு உதவி செய்வதாகக் கூறுகிறார்கள், அதனால் இந்திய தேசிய ராணுவம் அமைக்க வேண்டியதுதான் என்று இந்தியவீரர்கள் நினைத்தார்கள்.

ஆனால் இந்திய ராணுவ அதிகாரிகள் அடிமைப்புத்தியைத் துறக்க முடையாதவர்களாய் இருந்தபடியால் ஜப்பானியர்களை நம்பாமலிருந்தார்கள். தளபதி மோகன் சிங்கை ஏமாற்றிவிடுவார்கள் என்று எண்ணினார்கள். இந்திய வீரர்களை உபயோகித்து ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தி விடுவார்கள் என்று அஞ்சினார்கள்.

ஆனால் ஜப்பானிய சேனையானது மலேயாவை வசமாக்கிக்கொண்டு பர்மாவையும் கைப்பற்றிக்கொண்டது. மலேயா சர்க்கார் ஏமாந்து போனது போலவே பர்மா சர்க்காரும் ஏமாந்து போனார்கள். கவர்னர் அவசரம் அவசரமாக இந்தியாவுக்கு ஓடினார். பிரிட்டிஷ் தளபதி அலக்ஸாண்டரும் அவருடைய துருப்புக்களும் ஓடோடி மே மாதத்தில் இந்திய எல்லையைப்போய் சேர்ந்தன. அவர்கள் போகும் பொழுது ஜப்பானியர் கைவசமாகக் கூடாது என்று எண்ணி கடைகளையும் உணவுப் பொருள்களையும் எண்ணெய்க் கிணறுகளையும் இதுபோல் வாழ்க்கைக்கு வேண்டிய வஸ்துக்களை எல்லாம் தீக்கிரையாக்கினார்கள். அத்துடன் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு செல்ல விரும்பிய இந்திய மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க எவ்வித ஏற்பாடும் செய்தார்களில்லை. ஐரோப்பியர்களுக்கு மட்டுமே வசதிகள் செய்துகொடுத்தார்கள். இதை எல்லாம் பார்த்ததும் இந்திய மக்களுக்கும் இந்திய வீரர்களுக்கும் ஆங்கிலேயரிடமிருந்த மதிப்பு முழுவதும் மறைந்து போயிற்று. "இந்தியர்களை ஒருவிதமாகவும் இங்கிலீஷ்காரர்களை ஒருவிதமாகவும் நடத்தியதைப் போல வேறு எதுவும் இங்கிலீஷ் சர்க்காரிடம் அதிகமான துவேஷத்தை உண்டாக்கவில்லை" என்று எட்கார் ஸ்நோ என்னும் ஆங்கில ஆசிரியரே கூறினார்.

இதற்குள் ஜாவா, சுமத்ரா, அந்தமான், பத்தான், சாலோமன், பலி ஆகிய தீவுகள் எல்லாம் ஜப்பானியர் வசமாய்விட்டன. ஆதலால் இந்தியாவின் கீழ்கரையில் ஜப்பானியத் தாக்குதல்கள் ஏற்படலாம், பெரிய நகரங்களையெல்லாம் காலிசெய்துவிட வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் பார்லிமெண்டு சபையில் கூறினார்.

## இந்திய தேசிய ராணுவம்

அந்தச் சமயம் சிங்கப்பூரில் ராஷ்பிகாரிகோஷ் என்று ஒரு இந்திய தேசபக்தர் இருந்தார். அவர் சில வருஷங்கட்கு முன் ஒரு வெடிகுண்டு வழக்கில் சம்பந்தப்பட்டிருந்ததால் டோக்கியாவுக்குச் சென்று ஜப்பானியப் பெண் ஒருத்தியை மணந்துகொண்டு அங்கே வாழ்ந்துவந்தார். அவர் கீழ் நாடுகளிலுள்ள இந்திய மக்களிடம் சுதந்திர தாகத்தை உண்டாக்க முயன்றுகொண்டிருந்தார். அதன் காரணமாக "இந்திய சுதந்திர லீக்" என்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி யிருந்தார்.

ஜப்பானியர் மலேயாவைப் பிடித்தபின் அங்குள்ள மக்களை அனுகரிகமான முறையில் நடத்த ஆரம்பித்தார்கள். அப்பொழுது ராஷ் பிகாரி போஸ் ஜப்பான் சர்க்காரிடம் சொல்லி இந்தியர்களை நல்லவிதமாக நடத்தும்படி ஏற்பாடு செய்தார். இத்துடன் இந்திய சுதந்திர லீக்கையும் பலப்படுத்தி வந்தார். தாய்லாந்து, மலேயா, பர்மா, இந்தோ சைனு, ஜாவா, சுமத்ரா, பிலிப்பைன், ஷாங்காய், ஜப்பான் ஆகிய கீழ்நாடுகளில் சுமார் 30 லட்சம் இந்தியர்கள் வசித்துவந்தார்கள். அவர்களில் சுமார் $7\frac{1}{2}$ லட்சம் பேர் இந்திய சுதந்திர லீகில் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருந்தார்கள்.

இந்தச் சங்கத்தின் மகாநாட்டை ராஷ் பிகாரி போஸ் 1942 ஜூன் 15ம் தேதியன்று பாங்காக் நகரத்தில் கூட்டி வைத்தார். கீழ் நாடுகளிலிருந்தெல்லாம் ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

இந்திய தேசிய ராணுவத்தை அமைக்க இதுவரைத் தயங்கிக் கொண்டிருந்த இந்திய ராணுவ அதிகாரிகள் 30 பிரதிநிதிகளை அனுப்பி வைத்தார்கள். தாய்லாந்தின் வெளிநாட்டு மந்திரியும் ஜெர்மனி, இத்தாலி ஜப்பான்

தேசங்களின் தூதர்கள் வந்து தங்கள் தேசங்களின் ஆசியைக் கூறினர்கள். ராஷ் பிகாரி போஸ் தலைமை வகித்தார்.

(1) இந்தியா பிரியாமல் ஏகமாக இருக்கவேண்டும் என்றும்,

(2) ஜாதிமத பேதமின்றி சகல காரியங்களும் தேசியமாகவே நடைபெறவேண்டும் என்றும்,

(3) இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபையின் லட்சியங்களுக்கு ஒத்ததாகவே சங்கத்தின் வேலைகள் நடைபெற வேண்டும் என்றும்,

(4) இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சர்க்காரை அகற்றி பரிபூரணமான சுதந்திரம் ஸ்தாபிப்பதற்காக இந்திய தேசிய ராணுவம் அமைக்கவேண்டும் என்றும்,

(5) இந்தியாமீது படை யெடுக்குமுன் இந்தியாவிலுள்ள இராணுவத்திடமும் இந்திய மக்களிடமும் புரட்சி மனப்பான்மையை உண்டாக்க வேண்டும் என்றும்,

(6) இந்திய தேசிய காங்கிரஸின் மூவர்ணக் கொடியையே உபயோகிக்க வேண்டும் என்றும்,

(7) ஜப்பானிடம் அதன் யுத்த நோக்கங்கள் எவை என்று கேட்கவேண்டும் என்றும்.

(8) ஜப்பான் இந்தியாவின் பரிபூரண சுதந்திரத்தை அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்கவேண்டும் என்றும்,

(9) சுபாஷ் சந்திரபோஸை மலேயாவுக்குக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

இந்தத் தீர்மானங்களுக்கு இணங்க தளபதி மோகன் சிங்கின் தலைமையில் இந்திய தேசிய ராணுவம் அமைக்கப்பட்டது. அதில் சேரும் ஒவ்வொருவரும்

"நான் இந்தியாவின் விடுதலைக்காக என் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்வேன்.

எனக்காக எவ்வித நன்மையும் தேடமாட்டேன். எல்லா இந்தியர்களையும் ஜாதிமத பேதமின்றி என்னுடைய சகோதர சகோதரிகளாக பாவிப்பேன்"

என்று இந்திய விஸ்வாசப் பிரமாணத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள். அவ்விதமாக 30 ஆயிரம் பேர் சேர்ந்தார்கள். ஆனால் ஆயுதங்கள் முதலியன போதுமான அளவு இல்லாதிருந்ததால் 15 ஆயிரம் பேரைப் போர் வீரராகவும் 15 ஆயிரம் பேரைத் தொண்டர்களாகவும் சேர்த்துக் கொண்டார்கள்.

அத்துடன் ராணுவ உத்யோகஸ்தர்கள் ஆக வேண்டியவர்கட்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு பாடசாலை நீஸான் என்னும் இடத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதில் ஒரு சமயத்தில் 300 பேர் பயிற்சி பெறுவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தன. கவாத்து சமயம் ஆங்கிலப் பதங்கள் உபயோகியாமல் இந்துஸ்தானிப் பதங்களையே உபயோகித்தார்கள். தேசீய உணர்ச்சியை உண்டாக்குவதையே பிரதான அம்சமாகச் செய்திருந்தார்கள். அத்துடன் எவ்வித கஷ்டங்களையும் அனுபவிப்பதற்கும் கிழங்குகளை உண்டு ஜீவிப்பதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. கையில் காங்கிரஸ் கொடிச் சின்னமும் புஜத்தில் "ஐ. என். ஏ" என்ற சின்னமும் அணிந்து கொண்டார்கள். இந்திய தேசிய ராணுவம் என்பதை 'இன்டியன் நேஷனல் ஆர்மி' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அதன் முதல் எழுத்துக்களே "ஐ. என். ஏ" என்பனவாகும். இராணுவத்துக்கு வேண்டிய சகல படைகளையும் வகுத்து துப்பாக்கி மெஷின் பீரங்கி போன்ற சகல ஆயுதங்களையும் உபயோகிப்பதற்கான பயிற்சி அளித்தார்கள்.

ஆனால் ஜப்பான் சர்க்கார் தாங்கள் இந்தியா சம்பந்தமாகக் கொண்டிருந்த கொள்கையை விளக்கிக் கூற

வில்லே. ஜப்பானிய அதிகாரிகள் இந்தியர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளவில்லே. ஜப்பான் இந்திய வீரர்களைத் தங்கள் ஏகாதிபத்திய ஆசைக்காக உபயோகிக்க எண்ணுவது போலவே தோன்றிற்று.

இது தளபதி மோகன் சிங்குக்குப் பிடிக்கவில்லே. ஜப்பான் சர்க்காருடன் தர்க்கம் செய்தார். அதன் பயனுக ஒருவேளே அவர்கள் தம்மைக் கைதி செய்யலாம் என்று எண்ணினுர். அதனுல் தம்மைக் கைதி செய்தால் உடனே இராணுவத்தைக் கலேத்து விடும்படியாக உத்யோகஸ்தர்களிடம் கூறினுர்.

அப்படியே 1942 டிஸம்பர் இறுதியில் அவர் கைதி செய்யப்பட்டார். ராணுவமும் கலேந்து போயிற்று. ராஷ் பிகாரி போஸ் எப்படியாவது ஜப்பானுடைய உதவியுடன் இந்தியாவை விடுதலே செய்துவிட வேண்டும் என்று விரும்பியதால் மறுபடியும் இந்திய தேசிய ராணுவத்தை அமைக்கப் பெரு முயற்சிகள் செய்து பார்த்தார். ஆனுல் அவை பயன் பெருமல் போயின.

## சுபாஷ் சந்திர போஸ் விஜயம்

இந்திய வீரர்களுக்கெல்லாம் மறுபடியும் இராணுவம் அமைக்க ஆசைதான். ஆனுல் தங்களுக்குத் தகுந்த தலேவர் இல்லேயே என்று வருந்திக் கொண்டிருந்தார்கள். அந்த நிலேமையில் 1943 பெப்ரவரி மாதத்தில் சுபாஷ் சந்திரபோஸ் இன்னும் சில மாதங்களில் மலேயாவுக்கு வந்து சேர்வார் என்ற செய்தி வந்ததும் வீரர்கள் எல்லோரும் சந்தோஷம் அடைந்தார்கள்.

அவர்கள் இந்தியாவில் ராணுவத்திலிருந்தபோது அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்கள். யுத்தம் வந்தபின் அவர் பெர்லினிலிருந்து பேசிய உணர்ச்சி மிகுந்த பிரசங்கங்களேக் கேட்டிருந்தார்கள். அவர்

ஜெர்மனியி லிருந்துகொண்டு ஜெர்மனியாரிடம் கைதி யான இந்தியத் துருப்புக்களைக் கொண்டு அங்கே ஒரு தேசியப்படை அமைக்க முயன்றதையும் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆதலால் அவர் வந்தால் இந்தியாவி லுள்ளவர்களும் வெளிநாட்டிலுள்ளவர்களும் அவரிடம் நம்பிக்கை கொண்டு உழைப்பார்கள் என்று எண்ணி பெப்ரவரி மாதம் 20ம் தேதி இரண்டாவது இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்க ஆரம்பித்தார்கள்.

சுபாஷ் சந்திரபோஸ் 1943 ஜுலை மாதம் 2ம் தேதி யன்று ஷோனன் (சிங்கப்பூர்) வந்து சேர்ந்தார். அவருடைய மின்சார சக்தி நிறைந்த பேச்சைக் கேட்டதும் இந்திய மக்கள் எல்லோரும் இவரே நம் தலைவர், இந்தியாவுக்கு உயிர் விடுவதே நம் பாக்கியம் என்று அகமகிழ்ந்தார்கள்.

### சுதந்திர இந்தியச் சேனை

ஜுலை மாதம் 4ம் தேதி சிங்கப்பூரில் ஒரு மகாநாடு நடந்தது. அப்பொழுது ராஷ் பிகாரி போஸ் இந்திய சுதந்திர லீகின் தலைமைப் பதவியை சுபாஷ் சந்திர போஸிடம் ஒப்புவித்தார். அன்றுமுதல் சுபாஷ் சந்திரர் "நேதாஜி" என்ற கம்பீரமான திருநாமம் பெற்றுர்.

5ம் தேதியன்று இந்திய தேசிய ராணுவ வீரர்களுடைய அணிவகுப்பு நடைபெற்றது. அப்போது நேதாஜி—

"இந்திய சுதந்திர வீரர்களே!

இன்றுதான் என்னுடைய வாழ்நாளில் மகத்தான கௌரவம் பொருந்திய நாள். இந்திய சுதந்திரச் சேனை அமைக்கப்பட்டிருப்பதை வெளியிடும் பாக்கியம் பெற்றுளேன்.

இந்த இந்தியச் சேனை முற்றிலும் இந்தியர்களுடைய தலைமையிலேயே ஏற்பட்டிருப்பதையும்,

சமயம் வரும் போது முற்றிலும் இந்தியர்களுடைய தலைமையிலேயே போர்க்களம் செல்லும் என்பதையும் அறிந்து இந்திய மக்கள் அனைவரும் பேருவகையடைவார்கள்.

தோழர்களே! என்னுடைய வீரர்களே! "டில்லிக்குப் போகிறோம்" என்பதையே உங்கள் போர்க் கோஷமாக வைத்துக் கொள்ளுங்கள்.

நான் இன்பத்திலும் துன்பத்திலும் வெற்றியிலும் தோல்வியிலும் உங்களுடனேயே இருப்பேன். இப்போது நான் உங்களுக்குத் தரக்கூடியவையெல்லாம் பட்டினி, தாகம், துன்பம், மரணம் ஆகியவைகளே. இந்தியா விடுதலை பெறுவதைக் காண நம்மில் யாருக்குக் கொடுத்து வைத்திருக்குமோ அறியோம். ஆனால் இந்தியா விடுதலை பெற்றால் அதுவே நமக்குப் போதும். இந்தியா விடுதலை பெறுவதற்காக நாம் நம்முடைய உடல் பொருள் ஆவி அனைத்தையும் மனமுவந் தளிப்போம்"

என்று கூறி இந்திய தேசிய ராணுவத்துக்கு "ஆஜாத் ஹிந்த் பௌஜ்" என்று நாமகரணம் செய்தார். அதன் பொருள் "சுதந்திர இந்தியச் சேனை" என்பதாகும்.

அத்துடன் "ஜே ஹிந்த்" என்னும் மந்திரத்தையும் சிருஷ்டி செய்து வழங்கினார். இருபத்தைந்து வருஷங்கட்கு அதிகமாக இந்திய நாடெங்கும் முழங்கிவந்த "வந்தே மாதரம்" என்னும் தேசிய மந்திரத்தை உபயோகியாமல் ஜே ஹிந்த் என்னும் புது மந்திரத்தை உண்டாக்கியதன் காரணம் யாது?

சுமார் 50 வருஷங்கட்குமுன் வாழ்ந்திருந்த வங்க நாவலாசிரியர் தேசபக்தர் பங்கிம் சந்திர சட்டர்ஜி தான் "வந்தே மாதரம்" என்னும் சொற்றொடரையும் "வந்தே

மாதர கீத"த்தையும் இயற்றியருளினுர். அவற்றையே காங்கிரஸ் மகா சபையாரும் காந்தியடிகளும் அவர்கள் ஆணைவழி நிற்கும் தேசபக்தர்களும் உபயோகித்து தேசீய ஆர்வத்தை வளர்த்து வருகிருர்கள். வந்தே மாதரம் என்னும் மந்திரம் பாரத தேவியின் புத்திர புத்திரிகளின் தியாகத்தாலும் இரத்தத்தாலும் புனித மடைந்திருப்பது உலகமறிந்த விஷயம். ஆனால் அதை முஸ்லிம்கள் ஆட்சேபிப்பதை எண்ணியே நேதாஜி அதற்குப் பதிலாக "ஜே ஹிந்த்" என்னும் மந்திரத்தை உண்டாக்கினுர். அத்துடன் போர்வீரர்கள் அணிவகுத்து இடது காலையும் வலது காலையும் மாறிமாறி வைத்து 'மார்ச்' செய்யும்பொழுது வந்தே—மாதரம் என்று கூற வராது, ஜே—ஹிந்த் என்றே கூறவரும். மேலும் இந்திய சுதந்திரச் சேனைவீரர்கள் பிரிட்டிஷாரை முறியடித்து சுதந்திரம் அமைக்க வருவதால் அவர்கள் பகைவர்களைப் பார்த்து என் அன்னைக்கு வெற்றி, உங்கட்குத் தோல்வி என்று முழங்குவதற்கு "ஜே ஹிந்த்" கோஷம்தான் பொருத்தமானதாகும். வந்தே-மாதரம், அன்னையே வணங்குகிறேன் என்னும் மந்திரத்தை நம்முடைய சகோதர சகோதரிகளைக் காணும்போது கூறி வணங்குவதற்கே ஏற்றதாகும். ஆதலால் நாம் நண்பர்களைச் சந்திக்கும்போது வந்தே மாதரம் என்று கூறுவதும் பிரியும்போது ஜே-ஹிந்த் என்று கூறுவதும் நல்லது.

இந்த ராணுவம் மற்ற எல்லாவிஷயங்களிலும் இந்திய தேசிய முதல் ராணுவத்தைப் போலவே இருந்த போதிலும், அதன் உணர்ச்சி முற்றிலும் புதியதாகவே இருந்தது. பழய ராணுவம் இந்திய விடுதலையை நோக்கமாகக் கொண்டிருந்தபோதிலும் ஜப்பானியர் தரும் கஷ்டங்களை நீக்கிக் கொள்வதற்காகவே சிருஷ்டியானதாகும். ஆனால் இப்பொழுது நேதாஜி வீரர்களுடைய மனத்தில் பாரத

தேவியின் சுதந்திரத்தில் அடங்காத ஆவல் விளக்கைச் சுடர் விடும்படி ஏற்றி வைத்து விட்டார்.

1943 ஆகஸ்ட் 25-ம் தேதியன்று நேதாஜி ஆஜாத் ஹிந்த் பௌஜின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டு

"நாம் ரோட்ரோலர் மாதிரி இந்தியா மீது படை எடுத்துச் சென்று நம்முடைய தாய் நாட்டை விடுவிக்க வேண்டும். நம்முடைய பிறப்புரிமையை யாரும் பறித்துக் கொள்ள முடியாது. நாம் புது டில்லிக்குச் சென்று வைஸிராயின் மாளிகையின்மீது நம்முடைய தேசீயக் கொடியை நாட்டுவோம்." என்று கூறினார்.

முந்திய தேசீய இராணுவத்தில் 15 ஆயிரம் போர்வீரர்களே இருந்தார்கள். ஆனால் இப்பொழுது நேதாஜியின் சேனையில் சில நாட்களுக்குள்ளாகவே 40 ஆயிரம் பேர் சேர்ந்து விட்டார்கள்.

## ஜான்ஸி ராணிப்படை

நேதாஜி இந்த இராணுவத்தை அமைத்ததோடு நிற்கவில்லை. எந்த தேசீய இயக்கத்திலும் பெண்களுடைய உதவி எவ்வளவு அவசியம் என்பதை அவர் நன்கு அறிவார். ஆதலால் இந்தியாவில் 1857-ம் வருஷத்தில் நடந்த முதல் சுதந்திரப்போரில் இங்கிலீஷ்கார தளபதிகளும் மூக்கில் விரல் வைத்து வியக்குமாறு வீரத்துடன் போர் செய்து உயிர் துறந்த ஜான்ஸி ராணியின் பெயரால் ஒரு பெண்கள் படையை அங்கே டாக்டராயிருந்த லட்சுமிதேவியின் தலைமையில் நிறுவினார். அந்தப் படையில் அநேக பெண்கள் சேர்ந்து இராணுவப் பயிற்சி பெற்றார்கள். பர்மா முனையில் பல யிடங்களில் போர்க்களம் சென்று போர் புரியவும் செய்தார்கள்.

மழைகாலத்தில் அறுகம்புல் செழித்து வளரும். ஆனால் வெயில் காலம் வந்ததும் அது பட்டுப்போகும்.

அதைப் பார்த்ததும் குழந்தைகள் "இனி மறுபடியும் புல் வேண்டுமானால் இங்கே புல்லைக் கொண்டு வந்து நட வேண்டும்" என்று எண்ணுவார்கள். ஆனால் அது தேவை யில்லை, மழை விழுந்தால் போதும், மறுபடியும் முளைத்து வளர ஆரம்பித்து விடும் என்பதைப் பெரியோர்கள் அறி வார்கள்.

சாதாரணமாக நம்முடைய நாட்டில் பெண்களை அபலைகள் என்றே கூறுவார்கள். நம்முடைய பழய நூல் களைப்பார்த்தால் அது தவறு என்பது தெரிய வரும்.

நரம் பெழுந்துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை யெறிந்து மாறினன் என்று பலர் கூற
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்
முலை யறுத்திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள், சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரி துவந்தனளே

என்பது போன்ற பல பாடல்கள் புறநானூற்றில் காணப் படுவதே தக்க சான்றாகும். அத்துடன் பெண்களின் வீரத்தைக் கூறும் அந்தப் பாடல்களைப் பாடியவர்கள் அனைவரும் பெண்புலவர்களே என்பதும் கவனிக்க வேண் டிய விஷயமாகும்.

ஆனால் பண்டை நாளில்தான் அப்படிப் பெண்கள் வீரர்களாய் இருந்தார்கள் என்பதில்லை. சமீபத்திலும் இருந்தார்கள் என்பதற்கு ஜான்ஸி ராணியே தக்க சான் றாவார். ஆனால் தனிமரம் தோப்பாகுமா? என்று கேட்கக் கூடும்.

ஆனால் மழை விழுந்ததும் அறுகம்புல் முளைத்து விடுவதுபோல சுதந்திர உணர்ச்சி என்னும் மழையை சுபாஷ் என்னும் வருண பகவான் வர்ஷித்ததும் மலேயாவிலும் பர்மாவிலுமிருந்த இந்திய யுவதிகள் தங்கள் பாட்டிமாரைப்போலவே வீரப் பெண்மணிகள் ஆய்விட்டார்கள்.

## பாலர் சேனை

நேதாஜி சிறுவர்களையும் சிறுமிகளையும் சேர்த்து "பாலர் சேனை" ஒன்றையும் நிர்மாணம் செய்தார். "நீங்கள் கல்வி பயிலவும் வேண்டும், அத்துடன் தாய் நாட்டின் விடுதலைக்காகப் போர்புரியவும் வேண்டும்" என்று அவர்களுக்கு உபதேசம் செய்தார். அவர்களில் 43 பேரைப் பொறுக்கி எடுத்து விசேஷமான ராணுவப் பயிற்சி பெறுவதற்காக ஜப்பான் தலைநகராகிய டோக்கியோவுக்கு அனுப்பிவைத்தார்.

அதன்பின் அவர் "எனக்குச் சொந்த குமாரன் கிடையாது. ஆனால் என் வாழ்க்கையின் தனிப் பெரும் லட்சியமாயிருக்கும் பாரத மாதாவின் விடுதலைக்கே நீங்கள் உங்கள் வாழ்வு முழுவதையும் அர்ப்பணம் செய்திருப்பதால் நீங்கள் என் இதயத்தில் என் சொந்தக் குமாரனைவிட உயர்ந்த ஸ்தானத்தை அடைந்து விட்டீர்கள். அந்த லட்சியத்துக்கும் பாரத மாதாவுக்கும் எப்பொழுதும் உண்மையாக நடந்து வருவீர்கள்" என்று அவர்களுக்கு ஆசி அனுப்பிவைத்தார்,

1943 அக்டோபர் 21-ந் தேதி யன்று சிங்கப்பூரில் நடந்த இந்திய சுதந்திர லீக் மகாநாட்டில் நேதாஜி "ஆஜாத் ஹிந்த் தற்காலிக அரசாங்கம்" அமைப்பதாகப் பிரகடனம் செய்தார். அதைக் கேட்டதும் மகாநாட்டில் ஆநந்தமும் ஆராவாரமும் அதிகமாய் இருந்தன. நேதாஜி

அரசாங்கத்தின் தலைவரானார். இந்தியாவுக்கு விஸ்வாஸப் பிரமாணம் செய்தார். இதர மந்திரிகள் நேதாஜிக்கும் இந்தியாவுக்கும் விஸ்வாஸப் பிரமாணம் செய்தார்கள்.

இந்த சர்க்கார் அமைந்து விட்டதைக் கேட்டதும் மலேயாவிலுள்ள இந்தியர்கள் தங்கள் சொத்துச் சுகங்களுக்கும் மானத்துக்கும் மரியாதைக்கும் இனிமேல் பங்கம் ஏற்படாதென்று எண்ணி சந்தோஷப்பட்டார்கள். இரண்டு லட்சத்து 30 ஆயிரம்பேர் அந்த சர்க்காருக்கு விஸ்வாஸப் பிரமாணம் எழுதிக் கொடுத்தார்கள்.

## ஆஜாத் ஹிந்த் சர்க்கார்

கிழக்கு ஆசியாவிலிருந்த இந்தியர்கள் ஏராளமாகப் பணமும் நகையும் தானியமும் சொத்தும் ஆஜாத் சர்க்காருக்குக் காணிக்கையாக அளித்தார்கள். அவற்றைக் கொண்டு சர்க்கார் இராணுவத்தை நடத்தியதோடு மலேயாவிலிருந்த இந்திய மக்களுக்குக் கல்வி புகட்டவும் வைத்திய வசதிகள் செய்யவும் ஏற்பாடுகள் செய்தார்கள்.

இந்த சர்க்கார் ஜப்பானிய சர்க்காருடன் சமஅந்தஸ்து உடையதாகவே இருந்து வந்தது. ஆம், உண்மையிலேயே அது ஆஜாத் சர்க்கார்தான். கிழக்கு ஆசிய நாடுகளும் ஜெர்மனியும் இத்தாலியும் அந்த சர்க்காரை அங்கீகரித்தன. 1943 டிசம்பர் மாதத்தில் ஜப்பானிய சர்க்கார் தாங்கள் பிடித்திருந்த அந்தமான் தீவுகளையும் நீக்கோபர் தீவுகளையும் ஆஜாத் ஹிந்த் சர்க்காரிடம் ஒப்புவித்தார்கள்.

ஆஜாத் சர்க்கார் அமைத்தவுடன் நேதாஜி பிரிட்டன் மீதும் அமரிக்காமீதும் போர் தொடுக்கப் போவதாக யுத்தப் பிரகடனம் செய்தார். 1944 ஜனவரி 4-ம் தேதியன்று ஆஜாத் சர்க்காருடைய தலைமை ஸ்தலத்தை சிங்கப்பூரிலிருந்து ரங்கூனுக்கு மாற்றிக்கொண்டு இந்தியா மீது படை எடுக்க உத்திரவிட்டார்.

இந்திய தேசிய ராணுவ வீரர்கள் பெப்ரவரி மாதம் 4-ம் தேதியன்று இந்திய மண்ணில் அரக்கான் மலைமீது காங்கிரஸ் கொடியைக் கொண்டுபோய் நாட்டினார்கள். அன்று முதல் அந்த நாள் இந்திய தேசிய ராணுவ தின மாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதன்பின் இந்திய தேசிய ராணுவ வீரர்கள் இந்திய பர்மிய எல்லையைக் கடந்து மணிப்பூர் சமஸ்தானத்தில் புகுந்து பாலம் என்னும் இடத்தில் பிரிட்டிஷ் படை ஒன்றைச் சிறைப்படுத்தினார்கள்.

அதன்பின் தாமு, உக்ருல், விஷ்ணுப்பூர் முதலிய இடங்கள் அவர்கள் வசமாயின. இம்பால் யுத்தம் நடைபெற்றது. நாக மலைகளின் தலைநகரமாகிய கோஹிமாவைக் கைப்பற்றினார்கள். 14-ம் தேதியன்று காந்தி கொரில்லா படையினர் பாலெல் ஆகாய விமானத் தளத்தைப் பிடித்தார்கள். இவ்விதமாக அவர்கள் 15 ஆயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள இந்தியப் பிர தேசங்களைக் கைப்பற்றி நிர்வாகம் நடத்த ஆரம்பித் தார்கள்.

ஆனால் ஜப்பான் அவர்களுக்குப் போதுமான ஆயுதங் களும் ஆகாய விமானங்களும் அனுப்பித் தரவில்லை. அத் துடன் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் தேவையான அளவு ஒத்துழைக்கவுமில்லை. இம்பால் பிரதேசத்தில் போர் நடந்தபோது ஏராளமாக மழை வந்தும் இடைஞ் சல் செய்தது. ஆதலால் வெற்றிக்கு மேல் வெற்றிபெற இருந்த வீரர்கள் பின்வாங்க வேண்டியவர்களானார்கள்.

1945 ஏப்ரல் மாதம் 4-ம் தேதி ஜப்பானியர்கள் ரங்கூனை விட்டுப்புறப்பட்டார்கள். இந்திய தேசிய ராணுவத்திலிருந்த உத்யோகஸ்தர்கள் நேதாஜியை ரங்கூனை விட்டுப் புறப்பட்டுப் போகும்படியாக மன் றாடிக் கேட்டுக் கொண்டார்கள். அதனால் நேதாஜி தமது

சேனையை விட்டுப் பிரிய மனமில்லாமலே ஏப்ரல் 24-ம் தேதியன்று பாங்காக்குக்குச் சென்றார்.

அதன்பின் அனாவசியமாக உயிர் நஷ்டமாவதைத் தடுக்கும் பொருட்டு அவர் ரங்கூனிலிருந்த சேனையைச் சரணாகதி அடையுமாறு உத்தரவிட்டார். அப்படியே அவர்கள் மே 4-ந் தேதி சரணாகதி அடைந்தார்கள். நேதாஜி ஆகாய விமானத்தில் டோகியாவுக்குப் பிரயாண மானார். போகும் வழியில் நேர்ந்த விபத்தில் அவர் இறந்து விட்டதாக அவருடன் சென்ற அவருடைய காரிய தரிசி கூறுகிறார். இறந்தாலும் இருந்தாலும் அவர் நமது நேதாஜியே என்பதில் சந்தேகமில்லை.

## நேதாஜியின் அற்புதங்கள்

அவர் இரண்டு பெரிய அற்புதங்களைச் செய்திருக் கிறார். இதுவரை இந்திய அரசாங்கத்தார் இந்திய மக்களை ராணுவ வீரராகத் தகுந்த ஜாதியாரென்றும் ராணுவ வீரராகத்தகாத ஜாதியாரென்றும் இரண்டு வகுப்பாராகப் பிரித்து வைத்திருந்தார்கள். ஆனால் நேதாஜி இராணுவ வீரராகத்தகாத ஜாதியாரும் இராணுவ வீரராகத் தகுந்த ஜாதியார் போலவே வீரம் பொருந்தியவர்கள் என்பதை நிதர்சனமாகக் காட்டி விட்டார். அது மட்டுமன்று, இராணுவத்தில் சேராமல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந் தவர்கள் கூட வீரர்கள் ஆக முடியும் என்பதையும் காட்டி விட்டார். ஆம், நேதாஜி புல்லர்களையுங்கூட மல்லர் களாகச் சிருஷ்டி செய்துவிட்டார்.

அவர்கள் போர்புரிய மட்டுமா செய்தார்கள்? தங்களை இழிவாக நினைத்த ஐரோப்பியர்களை விரட்டி விரட்டி அடிக்கக் கூடச் செய்தார்கள்.

"இந்தியர்கள் வீரர்களாக முடியும், ஆனால் ஒரு நாளும் தளபதிகள் ஆக முடியாது" என்று ஆங்கிலேயர் கள் கூறுவது வழக்கம். ஆனால் நேதாஜியின் சேனையில்

இருந்த தளபதிகள் அனைவரும் இந்தியர்கள்தான். அவர்கள் ஐரோப்பிய அமரிக்கத் தளபதிகளை யுத்தத் தந்திரத்தில் வென்று விட்டார்கள்.

நேதாஜி செய்த மற்றொரு அற்புதம் யாதெனில் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் பார்ஸிக்கள் கிறிஸ்தவர்கள் எல்லோரையும் தேசிய மூவர்ணக் கொடியின் கீழ் ஒன்று சேர்ந்து இந்திய விடுதலைக்குப் போர் புரியும்படி செய்ததே யாகும்.

## இ. தே. ரா. விசாரணை

1945 நவம்பர் மாதத்தில் இந்திய சர்க்கார் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த ஷா நவாஜ் கான், ஷேகல், தில்லான், என்ற மூன்று தளபதிகளை ராணுவக் கோர்ட்டின் முன் விசாரணைசெய்ய ஏற்பாடுசெய்தார்கள். அவர்கள் மீது கூறப்பட்டக் குற்றச் சாட்டுகள் இரண்டு.

1. பிரிட்டிஷ் மன்னரை எதிர்த்துப் போராடியது.

2. தேசிய ராணுவத்தை விட்டு ஓடிப் போனவர்களைப் பிடித்து வந்து கொலை செய்தது,

இரண்டாவது குற்றம் முதல் குற்றத்தில் ஒரு அம்ஸமே ஆனதால் அப்பொழுது விசாரிக்கப்பட்ட குற்றம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு விசுவாசமா யிருக்க வேண்டுமா அல்லது தாய்நாட்டுக்கு விசுவாசமா யிருக்க வேண்டுமா? என்பதுதான்.

இந்த விசாரணை விஷயத்தை அறிந்ததும் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் எதிரிகளுக்கு வக்கீல்களாக இருக்கும்படி 17 பெரிய சட்ட நிபுணர்களை நியமித்தார்கள். அவர்களில் பிரதானமானவர்கள் புலாபாய் தேசாயும் பண்டித ஜவகர்லால் நேருவும் ஸர் தேஜ்பகதூர் சாப்ரூவும் ஆவார்கள். ஆயினும் புலாபாய் தேசாயே விசாரணையை வெகுதிறம்பட நடத்தி வெற்றிபெற்ருர்.

புலாபாய் தேசாய் ராணுவக் கோர்ட்டின்முன் செய்த பிரசங்கம் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது. அதில் அவர்

"(1) பூரண சுதந்திரமும் தனி அரசுரிமையும் உள்ள நாட்டுக்குத்தான் யுத்தம் தொடுக்க உரிமை உண்டு என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் அது அவசியமில்லை என்று இக்காலத்திய சர்வதேசச் சட்டம் கூறுகின்றது. அதற்கு போயர் யுத்தமே போதிய சான்றாகும்.

(2) நாட்டைவிட்டு ஓடிவந்த சர்க்கார்களும் யுத்தம் தொடுக்கலாம் என்பதற்கு பிரஞ்சு, பெல்ஜிய சர்க்கார் கள் லண்டனிலிருந்து கொண்டு ஜெர்மனியுடன் போர் நடத்தியதைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

(3) இந்தியாவைப் பொறுத்தவரை இராஜத்துரோகக் குற்றமேது? இங்கே மன்னர் வேறு, தேசம் வேறு. மன்னரை எதிர்த்துப் போராடியது உண்மைதான். ஆனால் அப்படிப் போராடியது தேச சுதந்திரத்திற்காகவே அல்லவா? அந்தப் போராட்டத்தில் ராஜ விஸ்வாசப் பிரச்னைக்கு இடமேது? இடமுண்டென்றால் என்றேனும் அடிமை சுதந்திரம் பெறமுடியுமோ? அமெரிக்கா இங்கிலாந்துக்கு விரோதமாக யுத்தம் செய்து தானே சுதந்திரம் பெற்றது?

(4) சிங்கப்பூர் வீழ்ச்சிக்குப் பிறகு எப்பொழுது இந்தியப் படைகள் ஜப்பானியர் வசம் ஒப்புவிக்கப் பட்டனவோ அப்பொழுதே ராஜவிஸ்வாசக் கட்டுப்பாடு நீங்கி விட்ட தல்லவா?

(5) ஒரு தேசம் தனக்குக் கீழுள்ள நாட்டைக் காக்க முடியாவிட்டால் அந்த தேசத்துக்கு அந்த நாட்டை ஆள உரிமை ஏது?

(6) சுதந்திர இந்திய சர்க்கார் அதிகார பூர்வமாக அமைக்கப்பட்டது. அயல் நாடுகளால் அங்கீகரிக்கப் பட்டது. இந்த சர்க்கார் சேனை அமைத்துக்கொண்டு சில பிரதேசங்களை ஆளவும் செய்தார்கள். யுத்தப் பிரகடன மும் வெளியிட்டார்கள்" என்று ஆணித்தரமான வாதங் களைக் கூறி,

**தேச பக்தியின் காரணமாகத் தேசத்தை ஆக்ரமித் துக்கொண்ட அன்னியர்மீது படையெடுப்பது குற்ற மாகாது**

என்று மிகத் தெளிவாக நிரூபித்துக் காட்டினர்.

அத்துடன் தேசமெங்கும் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று ஜனங்கள் கிளர்ச்சி செய்தார்கள். இவற் றின் பயனாக ராணுவக் கோர்ட்டார் அம்மூவர்மீது விதித்த ஆயுள் தண்டனையை சேனாதிபதி ரத்துச்செய்து அவர்களை விடுதலை செய்தார்.

# ஜே ஹிந்த்

தில்லி செங்கோட்டையில் நடந்த வழக்கில் விடுதலை யடைந்த இந்திய தேசீய ராணுவ வீர சிகாமணிகள் மூவரும் விடுதலை யடைந்ததும்,

"எங்கள் விடுதலை தேசத்திற்கே ஒரு பெரிய வெற்றியாகும். எங்கள் வாழ்நாளை இந்தியச் சுதந்திர லட்சியத்திற்காக அர்ப்பணம் செய்வதாக நாங்கள் நேத்தாஜிக்கு உறுதிமொழி தந்தோம். அந்த உறுதிமொழிக்கு இன்னும் நாங்கள் கட்டுப்பட்டவர்களே. ஐக்ய சுதந்திர இந்தியாவை நிலைநாட்டுவதென்ற மகத்தான லட்சியத்திற்காக நாங்கள் போராடினோம். அதற்காக இன்னும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோமென்று உறுதி கூறுகின்றோம்" என்று முழக்கம் செய்தார்கள்.

இந்த மூன்றுபேருடைய வழக்கு டில்லி செங்கோட்டையில் நடந்தபோது சுமார் 3 மாத காலத்துக்கு இ. தே. ராவைப் பற்றிய செய்திகளே பத்திரிகைகளில் அதிகமாக வந்துகொண்டிருந்தன. அவைகளைப் படிக்கப்படிக்க ஜனங்களுக்கு அளவற்ற ஊக்கமும் உற்சாகமும் உண்டாயின. இந்திய தேசீய ராணுவத்தைப்பற்றித் தாம் பெருமை கொள்வதாக பண்டித ஜவஹர்லால் நேரு அறிக்கை வெளியிட்டதும் தேசம் முழுவதும் புதிய உணர்ச்சி உண்டாக ஆரம்பித்தது. எங்கு பார்த்தாலும் ஜே ஹிந்த் என்ற கோஷம் வானைப் பிளக்கலாயிற்று. ஆம், இனி ஜே ஹிந்த் தான் அடிமையில்லை, அந்தச் சங்

கிலி சுக்குச்சுக்காக அறுந்துபோய் விட்டது என்று ஜனங்கள் எண்ணினார்கள்.

இந்திய தேசீய ராணுவத்தாரிடம் ஜனங்களைவிட அதிகமாக அனுதாபம் காட்டியவர்கள் இந்திய சர்க்காரிடமிருக்கும் இராணுவத்தாரே ஆவர். அவர்களில் அநேகர் இ. தே. ராணுவ சகாய நிதிக்குப் பகிரங்கமாகப் பண உதவி செய்தார்கள். இன்னும் பலர் இ. தே. ரா. வீரர்களை உடனே விடுவிக்க வேண்டுமென்று சர்க்காருக்கு எழுதிக்கொண்டிருந்தனர். சிலர் தேசீயக்கொடிக்கு பகிரங்கமாக வணக்கம் செலுத்த முன்வந்தனர். இந்தவிதமாக சுமார் 100 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய ராணுவமானது மறுபடியும் ராஜபக்தியைத் துறந்து தேசபக்தியுள்ள ராணுவமாக ஆக ஆரம்பித்துவிட்டது.

அழியாத புகழ்பெற்று விட்ட இந்திய தேசீய ராணுவத்தைச் சிருஷ்டித்த நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸினுடைய ஐம்பதாவது பிறந்த நாள் ஜனவரி மாதம் 23-ம் தேதி இந்தியா முழுவதிலும் கிராமம் கிராமமாக வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கல்கத்தா நகரத்தில் அன்று நடைபெற்ற ஊர்வலத்தைப்போல் என்றும் நடைபெற்றதில்லை. அந்த ஊர்வலம் தெருக்கள் வழியாக ஏழு மைல் தூரம் சென்றது. வீடுகளெல்லாம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஜனங்கள் தெருக்களின் ஓரங்களில் வரிசை வரிசையாக நின்றார்கள். சீக்கியர்கள் குதிரையின்மேல் அணிவகுத்துச் சென்றார்கள். ஜே ஹிந்த்! நேத்தாஜிக்கு ஜே! என்ற கோஷங்கள் வானைப் பிளக்கும்படி முழங்கின.

இந்தவிதமாக ஜனங்களிடையே உண்டான உத்ஸாகம் ராணுவத்தாரிடமும் போலீஸாரிடமும் பரவ ஆரம்பித்து விட்டது. இதுவரை அவர்கள் சர்க்கார் எது செய்தாலும் சரி என்று அடங்கி ஒடுங்கி இருப்

பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்களிடமும் தேசீய உணர்ச்சியும் சுயமரியாதை உணர்ச்சியும் கொழுந்துவிட ஆரம்பித்து விட்டன.

### ராணுவ வேலை நிறுத்தங்கள்

பம்பாயில் இருந்த இந்திய விமானப் படையின் ஆங்கிலத் தளபதி, வீரர்கள் சாப்பாட்டு அறையில் சாதாரண உடை உடுத்தி இருப்பதைக் கண்டதும் "இந்திய உத்யோகஸ்தர்களுக்கு கட்டுப்பாட்டை நிலை நாட்டும்படியான திறமையில்லை" என்று அகம்பாவமாகக் கூறினார். இதற்கு முந்திய காலங்களில் இப்படிக் கூறியிருந்தால் இந்திய வீரர்கள் எதுவும் செய்யாமல் சும்மாயிருந்திருப்பார்கள். ஆனால் இப்பொழுதோ அந்த ஆங்கிலத் தளபதி இவ்விதம் கூறியதும் அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று வீரர்களும் உத்யோகஸ்தர்களுமாக 600 பேரும் உண்ணுவிரதத்தை மேற்கொண்டார்கள். அது மூன்று நாள் நடைபெற்றது. மேலதிகாரி வந்து இனி இவ்விதம் நடைபெருது என்று உறுதி கூறிய பின்னரே உண்ணுவிரதம் நின்றது.

பம்பாயில் இருந்த கடற்படை வீரர்கள் யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பலவிதமான கஷ்டங்களுக்கிடையே சேவை செய்திருந்தும் அவர்கள் உணவு விஷயத்திலும் ஊதியம் விஷயத்திலும் ஆங்கில மாலுமிகளை விடக் கேவலமாக நடத்தப்பட்டு வந்தார்கள். இந்த அனியாயத்தைச் சகிக்கமுடியாது என்று அவர்கள் 3 ஆயிரம் பேர் வேலைநிறுத்தம் செய்தார்கள். அதை அடக்குவதற்காக சர்க்கார் ராணுவத்தைக்கொண்டு சுடும்படி செய்தார்கள். அதன்மேல் வேலைநிறுத்தம் செய்தவர்களும் சுட்டார்கள்.

அதன்மேல் கடற்படை தளபதி காட்பிரே என்பவர் "உங்களை அடக்கி விடுவதற்குப் போதுமான படைகள் சர்க்காரிடம் உள. கடற்படை முழுவதும் அழிந்து போனாலும் பாதகமில்லை, உங்களை அடக்கியே தீர்வோம்" என்று பயமுறுத்தினார்.

இங்கிலாந்திலுள்ள பிரதம மந்திரி ஆட்லி இந்தக் "கலகத்தை" அடக்குவதற்காக பிரிட்டிஷ் கடற்படையிலுள்ள சில கப்பல்களை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்.

வைஸிராய் நிர்வாக சபையிலுள்ள இராணுவக் காரியதரிசி "பிரிட்டிஷ் படையினர்க்குக் கொடுக்கும் சம்பளம்போல் இந்தியப் படையினர்க்குக் கொடுக்க சர்க்கார் வருமானம் இடங்கொடாது" என்று கூறினார்.

ஆனால் யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் அமரிக்க வீரர்களும் பிரிட்டிஷ் வீரர்களும் சம்பளம் போதாதென்று வேலைநிறுத்தம் செய்தபொழுது சர்க்கார் இவ்விதம் கூறினார்களா? அப்பொழுது தளபதிகள் பயமுறுத்தவுமில்லை. பிரதம மந்திரி கடற்படையை அனுப்பவுமில்லை. அவசரம் அவசரமாக வீரர்களுடைய குறைகளைத் தீர்த்து வைத்தார்கள். ஆனால் அவர்கள் வெள்ளைத்தோல் உடையவர்கள், இவர்கள் கறுப்புத் தோலுடையவர்கள் தானே!

இந்தக் கடற்படையினருடைய வேலைநிறுத்தம் தேசமெங்கும் பரவ ஆரம்பித்தது. கராச்சியிலும் கல்கத்தாவிலுள்ள கடற்படையினரும் பம்பாயிலும் மதராஸிலுமுள்ள விமானப்படையினரும் அனுதாப வேலைநிறுத்தம் செய்தார்கள்.

கடற்படை அதிகாரி பயமுறுத்தியதையும் பிரதம மந்திரி கடற்படை அனுப்பியதையும் கண்டு வேலைநிறுத்தம் செய்த இந்திய வீரர்கள் கொஞ்சம்கூட பயந்துவிட

வில்லே. அவர்கள் தங்கள் நிலைமையைக் கூறி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று ஸர்தார் படேல் போன்ற காங்கிரஸ் தலைவர்களிடமே யோசனை கேட்டார்கள். அவர்கள் வேலைக்குப் போகும்படி சொன்னதும் வேலைக்குச் சென்றூர்கள். ஆம், இனிமேல் அவர்களுடைய தலைவர்கள் சர்க்கார் அல்ல, தேசியத் தலைவர்கள் தான்.

அதன்பின் பெப்ரவரி மாதம் 27-ந் தேதி ஜப்பல்பூரிலுள்ள போர்வீரர்களும் அதே காரணத்துக்காக வேலை நிறுத்தும் செய்தார்கள். அரசாங்கத்தார் அவர்களுடைய தலைவர்களைக் கைதி செய்தார்கள். ஆயினும் அவர்கள் காங்கிரஸ் அக்கிராசனர் ஆஸாத் யோசனையின்பேரிலேயே வேலைநிறுத்தத்தை நிறுத்தி வைத்தார்கள்.

இந்திய இராணுவத்தில் உலகப் பிரசித்திபெற்ற புகழ்படைத்த வீரர்கள் கூர்க்கர்களே யாவரார்கள். அவர்களே பிரிட்டிஷ் சர்க்காரிடம் அதிகமான விஸ்வாஸமுடையவர்கள். ஆனல் இப்பொழுது அவர்களுங்கூட ஆங்கில அதிகாரி ஆட்சேபகரமான பதங்களை உபயோகித்தார் என்று கூறி டேராதூனில் வேலை நிறுத்தம் செய்து தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தார்கள்.

இராணுவத்தார் மட்டுமே இப்படிச் சுயமரியாதை உணர்ச்சியைக் காட்டினூர்கள் என்பதில்லை. டில்லியிலுள்ள போலீஸ்காரர்களும் தங்களுக்குச் சம்பளம் போதாதென்று உண்ணுவிரதமிருந்தார்கள். ஜே ஹிந்த் என்றும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு ஜே என்றும் கோஷித்துக்கொண்டு ஊர்வலமாகச் சென்றூர்கள். ஹிந்துஸ்தானம் போலீஸ்காரர்களுக்கும் தாய்நாடுதான், அதற்கு ஜெயம் உண்டாகவேண்டும் என்று அவர்களும் விரும்பவே செய்கிருர்கள்.

இந்தவிதமாக நாடெங்கும் ஜனங்களும் ராணுவ வீரர்களும்,

நாமிருக்கும் நாடு நமதே என்றும்
நமக்கே அது உரிமையாம் என்றும்

அறிந்து கொண்டார்கள்.

படித்தறியாத மிக ஏழைக் கிழவர்களுங் கூட,

துடித்தெழுந்து தம்மெலிந்த தோளைக் கொட்டித்
தொளை மிகுந்த கந்தலுடைச் சுருக்கிக் கட்டி
எடுத் தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென்றுரைத்து

அடித்தறைந்து ஆவேசம் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆயுதத்தின் அதிகாரம் அதற்கே அஞ்சி அடிபரவும் தாஸர்களுங்கூட இனிமேல் பிரிட்டிஷ் சர்க்கார் நிலைக்கப் போவதில்லை, சுயராஜ்யம் வந்தேதீரும் என்று கண்டு கொண்டார்கள்.

இளைஞர்கள் எல்லோரும்

இன்னமும் இந்தச் சின்னத்தனத்தில் ஏங்கிக் கிடந்திடத் தூங்குவமோ ?

என்று வீறுகொண்டு எழுந்தார்கள்.

## மூன்று விஷயங்கள்

(1) 1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் உண்டான பொதுஜன எழுச்சியும் அதே சமயத்தில் மலேயாவில் அமைக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவமும் இந்தியாவுக்கு சுதந்திரம் தேடும் முயற்சியில் வெற்றிபெறவில்லை என்பது உண்மைதான். ஆயினும் அவை பிரிட்டிஷ் சர்க்

காருக்கு மூன்று விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்கிவிட்டன.

1857-ம் வருஷத்தில் ஏற்பட்ட புரட்சியைக் கண்டதும் பிரிட்டிஷ் சர்க்கார் இனிமேல் இந்திய ராணுவ வீரர்களை இரும்புப் பெட்டிக்குள் வைத்தே வளர்த்து வரவேண்டும் என்று தீர்மானித்தார்கள். அப்படியே அவர்களுக்கும் ஜனங்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லாதபடி செய்து வைத்தார்கள். அதனால் நம்முடைய வீரர்கள் தேசபக்தி அணுவளவுகூடக் கலவாத ராஜ பக்தர்களாக ஆகிவந்தார்கள்.

அதனால்தான் 1935-ம் வருஷத்தில் அரசியல் அமைப்புச் சட்டம் லண்டன் பார்லிமெண்டு சபையில் வாதிக்கப்பட்டபொழுது அப்பொழுது இந்தியா மந்திரியாயிருந்த ஸர் ஸாமுவேல் ஹோர் "நம்முடைய பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நடந்து வருவதற்குத் துணையாகவுள்ள மற்றவைகள் எல்லாம் அழிந்துபோனாலும் நம்முடைய இந்திய ராணுவம் இருக்கிறது. நாம் அஞ்ச வேண்டியதில்லை" என்று தைரியமாகக் கூறினார்.

ஆனால் அந்த ராணுவம் இப்பொழுது ராஜவிஸ்வாஸத்தைவிட தேச விஸ்வாஸமே பிரதானமானது என்பதை நன்றாக அறிந்துகொண்டு விட்டது. உலகம் தோன்றிய நாள் முதல் சுதந்திர புருஷர்களாய் இருந்த இந்திய மக்கள் இருநூறு வருஷகாலம் அடிமைச் சங்கிலியால் இறுக்கப்பட்டுவிட்டதன் காரணமாக சுதந்திர உணர்ச்சி அறவே இல்லாமல் போய்விடுவார்களா? இந்திய ராணுவத்தாரிடமுள்ள சுதந்திர நெருப்பை அணைத்துவிட்டதாக பிரிட்டிஷார் எண்ணினார்கள். ஆனால் அது அணைந்து போகவில்லை, நீறுபூத்த நெருப்பாகவே இருந்து கொண்டிருந்தது. இப்பொழுது அது

யுத்தகாலத்தில் வீசிய சுதந்திரக் காற்று பட்டதும் நீறு நீங்கி சுடர்விட ஆரம்பித்துவிட்டது.

பிரிட்டிஷ் தளபதிகளுக்கு அடங்காத இந்திய தேசிய ராணுவ வீரர்களைச் சுடும்படி சொல்லியபொழுதும் மாட்டோம் என்று மறுத்துவிட்டார்கள். இனிமேல் தங்களுக்குத் துணையாக இராது என்று பிரிட்டிஷார் கண்டுகொண்டு விட்டார்கள்.

(2) இந்தியர்களுக்கு நவீனப் போர்முறைகள் தெரியா என்றும், என்றென்றும் இட்டது கேட்கும் வெறும் சிப்பாய்களாகவே இருப்பார்கள் என்றும் பிரிட்டிஷ் சர்க்கார் எண்ணிக்கொண்டிருந்ததும் இப்பொழுது மாயமாக மறைந்துபோய் விட்டது. வெறும் சிப்பாயானாலும் வெள்ளையர்களைவிட அதிகமான வீரத்தைக் காட்டக் கூடியவர்கள் என்பதை எகிப்திலும் இத்தாலியிலும் தெள்ளத் தெளியக் காட்டிவிட்டார்கள். போர்வீரர்கள் பெறும் பரிசுகளில் அதிகமாகப் போற்றப்படுவது "விக்டோரியா க்ராஸ்" என்பதேயாகும். பர்மாப் போரில் இந்தப் பரிசை பெற்றவர்களில் பெரும்பாலோர் இந்திய வீரர்களேயாவர். ஆகாயப் படையிலுள்ள அமரிக்கர்கள் தூரத்தில்வரும் ஜப்பான் விமானங்களைத் தங்கட்கு முன்னதாக இந்தியர்கள் கண்டுகொள்வதாகப் பாராட்டினார்கள்.

சாதாரண வீரர்கள் பிறர் சுதந்திரத்திற்காகப் போர் புரியும்பொழுது இவ்வளவு வீரத்தையும் தீரத்தையும் காட்டியிருந்தால் தங்களுடைய சொந்த நாட்டின் சுதந்திரத்துக்காக போர்புரிய நேர்ந்தால் எவ்வளவு அதிகமான வீரத்தையும் தீரத்தையும் காட்டுவார்கள்? அது நேதாஜி தலைமையில் இம்பால் போர் முனையில் இந்திய தேசிய ராணுவம் நடத்திய யுத்தத்தில் தெரிந்துவிட்டது.

அதில் சாதாரண வீரர்களுடைய சாமர்த்திய மட்டு மன்று, இந்தியத் தளபதிகளுடைய திறமையும் விளங்கி விட்டது. இந்தியர்களுக்குப் போர் புரியவும் தெரியும், போர்க்கு வேண்டிய சேனையைத் தயாரிக்கவும் தெரியும்.

அதுமட்டுமா? சந்தர்ப்பம் அளித்தால் போர்க்கு வேண்டிய ஆயுதங்களைத் தயாரிக்கவும் தெரியும்? நம் முடைய நாட்டிலுள்ள விஞ்ஞானிகள் அவற்றுள் சில முக்கியமானவற்றைச் செய்து கொடுத்திருப்பது அரசாங் கத்துக்குத் தெரியும். அமரிக்காவில் சர்க்கார் யுத்த காலத்தில் யுத்தத்துக்கு வேண்டிய சாமான்களைக் குறித்து விஞ்ஞான ஆராய்ச்சி செய்வதற்காக விஞ்ஞான நிபுணர் களின் தலைமையில் பல ஆராய்ச்சி இலாகாக்காரர்கள் அமைத்திருந்தார்கள். அவைகளில் மூன்று இலாக்காக் களின் தலைவர்களாக இருந்தவர்கள் இந்திய விஞ்ஞானி களே யாவார்கள். ஆதலால் நாமில்லாமல் இந்திய ராணுவ வீரர்கள் எதுவும் செய்யமுடியாது என்று எண்ணுவதையும் இனிமேல் விட்டுவிட வேண்டும் என் பதையும் அரசாங்கத்தார் அறிந்தார்கள்.

(3) 1942 ஆகஸ்ட் எழுச்சியை அடக்கிவிட்டது உண்மைதான். ஆனால் இந்திய மக்கள் காந்தியடிகளின் அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிக்கத் தவறிவிட்டாலும் வெறும் கோழைகள் அல்லர் என்பதை உலகமறிய நிதர் சனமாக்கிவிட்டார்கள். என்று கோழைகள் அல்லரோ, அன்று அவர்கள் ஹிம்சை முறையிலானாலும் அஹிம்சை முறையிலானாலும் சுதந்திரமாகிய பிறப்புரிமையைப் பெற்றே தீர்வர். நேதாஜியின் தலைமையின்கீழ் ஹிம்சை முறைக்குரிய தகுதியைக் காட்டிவிட்டார்கள். மகாத்மா ஜியின் தலைமையின்கீழ் அஹிம்சா முறைக்குரிய தகுதி யைக் காட்டிவிட்டார்கள். இனிமேல் அரைக்கணமும் அடிமையாக இருக்கமாட்டார்கள்.

இவ்விதமாக எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சாக முழங்கிக் கொண்டிருந்தது. அதனுல்தான் ஆங்கில அறிஞர் ஹிட்லி என்பவர்

" இன்னும் சில வருஷ காலங்களுக்குள் அணுகுண்டால் உண்டாகும் அதிர்ச்சியைவிடப் பெரிய அதிர்ச்சிகள் உலகத்தில் உண்டாகப் போகின்றன. அவைகளுள் பிரம்மாண்டமானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் குழிவெட்டிப் புதைக்கும் இந்தியப் புரட்சியாகவே இருக்கும். ஆதலால் இப்பொழுது அதிகாரம் ஏற்றிருக்கும் பிரிட்டிஷ் தொழிற் கட்சி சர்க்கார் இந்தியாவுக்கு உடனே பரிபூரண சுதந்திரத்தை வழங்கவேண்டும். இல்லையானல் இதுவரை காணப்படாத அளவு அதிகமான அடக்குமுறையும் இரத்தப் பெருக்கும் ஏற்படும். இந்தியப் பிரச்சினை தான் தொழிற் கட்சி சர்க்காருடைய நியாய புத்திக்கு உரைகல்லாகும். அவர்கள் இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்காவிட்டால் மனித ஜாதி விரோதிகள் என்னும் கூட்டத்தையே சேருவார்கள் "

என்று நியூ லீடர் என்னும் பத்திரிகையில் எழுதினர்.

இந்தமாதிரி இந்திய அரசியல் நிலைமை முற்றி வருவதைக் கண்டதும் 1945 செப்டம்பர் மாதத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி,

" இந்தியாவில் சட்டசபைத் தேர்தல்கள் நடந்து முடிந்தபின் பிரிட்டிஷ் சர்க்கார் அரசியல் நிர்ணய சபை அமைப்பது சம்பந்தமாக சட்டசபை அங்கத்தினர்களுடனும் சமஸ்தானப் பிரதிநிதிகளுடனும் கலந்து ஆலோசிப்பார்கள் " என்று கூறினர்.

அப்படியே 1945 நவம்பர் மாதத்தில் மத்திய சட்டசபைக்குத் தேர்தல் நடந்தது, அதில் காங்கிரஸ் மகா சபை பெருமிதமான வெற்றியடைந்தது.

காங்கிரஸ்காரர்களுக்கு முந்திய சபையில் 36 ஸ்தானங்கள் கிடைத்திருந்தன. ஆனால் இப்பொழுது கிடைத்த ஸ்தானங்கள் 56 ஆகும்.

## பார்லிமெண்டு கோஷ்டி

இப்படிக் காங்கிரஸ் மஹாசபைக்கு மத்திய சட்ட சபையில் ஏராளமான ஸ்தானங்கள் கிடைத்ததைக் கண்டதும் வேவல் பிரபுவும் பிரதம மந்திரி ஆட்லியும் கலக்கமடைந்தார்கள். வைஸ்ராய் வேவல் பிரபு, இங்குள்ள நிலைமையைப்பற்றி ஆட்லிக்குத் தினந்தோறும் டெலிபோன் மூலம் தெரிவித்துக் கொண்டிருந்தார். பார்லிமெண்ட் சபையில் பல மெம்பர்கள் இந்தியாவைப்பற்றி இடைவிடாமல் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பிரதம மந்திரியால் அவர்களுக்குத் திருப்திகரமாகப் பதில் சொல்ல முடியவில்லை.

ஆதலால் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவின் நிலைமையையும் இந்திய மக்களின் அபிலாஷைகளையும் நேரில் அறிந்து வரும்பொருட்டு பார்லிமெண்டு அங்கத்தினர்கள் பத்துப்பேரை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார்கள். அவர்கள் அதிகாரிகளைக் கண்டு பேசினார்கள். சகல கட்சித் தலைவர்களையும் சந்தித்தார்கள் கிராமங்களுக்குச் சென்று ஏழைமக்களிடம் பேசினார்கள்.

ஒரு கிராமத்தில் ஒரு விவசாயியிடம் "உமக்கு சுயராஜ்யம் என்றால் என்ன என்று தெரியுமா?" என்று கேட்டார்கள்.

உடனே அவர் "ஏன் தெரியாது. அது எங்களுக்கு வேண்டும். இப்பொழுதே கிடைக்கவேண்டும்" என்று பதில் கூறினார்.

ஒரு சாதாரண விவசாயி இந்தமாதிரி கூறியதைக்

கேட்டதும் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் திடுக்கிட்டு விட்டார்கள்.

"நீர் விவசாயத்தைத் தவிர வேறு வேலை பார்த்த துண்டா?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் "நான் சேனையில் வேலைபார்த்துவிட்டு இப்பொழுதுதான் வந்திருக்கிறேன்" என்று கூறினார்.

இதைக் கேட்டதும் அந்த வெள்ளைக்காரர்களுக்கு உண்டாயிருந்த திகைப்பு அதிகமாய் விட்டது. இங்கிலீஷ்காரர்கள் மற்ற இலாகாக்களில் உள்ள சிப்பந்திகளை விட ராணுவத்தில் உள்ள வீரர்களிடமே அதிகமாக நம்பிக்கை உடையவர்கள். ராணுவத்திலுள்ள இந்தியர்கள் ஊழூழிகாலம் பிரிட்டிஷ் ஆட்சியையே விரும்புவார்கள் என்பது அவர்களுடைய துணிவு. இந்தியா மந்திரி அமரி இத்தாலியில் இருந்த இந்தியர்களிடம்போய் ஹிந்துஸ்தானியில் பிரசங்கம் செய்தார். இறுதியில் "அரசியல் விஷயமாக உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் "எங்களுக்கு அதைப்பற்றி ஒரு வித அபிப்பிராயமும் கிடையாது" என்று கூறினார்கள்.

இதை அறிந்ததும் இங்கிலீஷ் ஜாதியார் எதை இழந்தாலும் ராணுவம் நம்முடையதே என்று மகிழ்ந்தார்கள். அதனால்தான் சேனையிலிருந்த ஒருவீரர் இப்படி சுயராஜ்யம் உடனே வேண்டும் என்று கேட்டது பார்லிமெண்டு மெம்பர்களுக்கு ஆச்சர்யத்திலும் ஆச்சர்யமா யிருந்தது.

அவர்கள் அத்துடன் நிற்காமல் அந்த ராணுவ வீரரிடம் "உடனே சுயராஜ்யம் வேண்டும் என்று கேட்கிறீரே ஏன்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் "நான் இத்தாலி முதலிய இடங்களுக்குப் போயிருந்தபொழுது சுதந்திரம் என்றால் என்ன என்பதை அறிந்துகொண்டேன். வெள்ளைக்காரர்களை

உயர்வாக நடத்துவதையும் பார்த்தேன். அத்துடன் இந்த யுத்தத்தில் சுதந்திரத்துக்காகவே நாங்கள் போர் செய்தோம். சுதந்தரம் பிறர்க்கு வேண்டுமானால் எங்களுக்கும் வேண்டாமோ?" என்று கூறினர்.

இதிலிருந்து பார்லிமெண்டு அங்கத்தினர்கள் இந்திய மக்களுடைய சுதந்திர ஆசை எவ்வளவு அதிகமாக முதிர்ந்துபோய் இருக்கிறது என்பதைத் தெளிவாக அறிந்துகொண்டார்கள்.

இவ்விதமாக அவர்கள் இரண்டு மூன்று வாரங்கள் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்று தங்கள் அபிப்பிராயத்தை பிரிட்டிஷ் மந்திரி சபையாரிடம் சமர்ப்பித்தார்கள்.

## சட்டசபைத் தேர்தல்கள்

1946 ஜனவரி மாதத்தில் மாகாணச் சட்டசபைகளுக்குத் தேர்தல் நடந்தன இந்தத் தேர்தல்களிலும், காங்கிரஸ் மஹாசபைக்கே ஏராளமான ஸ்தானங்கள் கிடைத்தன. மொத்தம் ஸ்தானங்கள் 1585. இவைகளில் 1937-ம் வருஷம் நடந்த தேர்தலில் 701 ஸ்தானங்களே கிடைத்திருந்தன. ஆனால் இப்பொழுது கிடைத்த ஸ்தானங்கள் 980 ஆகும். ஹரிஜன ஸ்தானங்கள் மொத்தம் 151-ல் 12 போக எஞ்சிய ஸ்தானங்களெல்லாம் காங்கிரசுக்கே கிடைத்தன.

இதன் காரணமாக 8 மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் உண்டாயின.

முஸ்லிம் லீக் பாக்கிஸ்தான் வேண்டும் என்று தேர்தல் பிரசாரம் நடத்தியபோதிலும் முஸ்லிம்கள் பெருவாரியாக உள்ள மாகாணங்களில்,

எல்லைப்புற மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிசபையே ஏற்பட்டது.

பஞ்சாப் மாகாணத்தில் காங்கிரசுடன் சேர்ந்த கூட்டு மந்திரிசபை ஏற்பட்டது.

சிந்திலும் அஸ்ஸாமிலும் ஐரோப்பியர்களுடைய உதவியைக்கொண்டு முஸ்லிம் லீக் மந்திரி சபைகள் ஏற்பட்டன.

## பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டி

அதன்மேல் பிரிட்டிஷ் மந்திரிசபையார் இனிமேல் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் நீடிக்கச் செய்வது பிரிட்டனால் முடியாத காரியமென்றும், பிரிட்டனுக்கு நல்லதன்று என்றும் எண்ணினார்கள். அதனால் ஒற்றுமை உண்டானால்தான் சுயராஜ்யம் என்று இதுவரை சொல்லிவந்த பல்லவி இனிமேல் பயன்படாது என்று உணர்ந்தார்கள்.

ஆதலால் பிரதமமந்திரி ஆட்லி "பெரும்பாலான ஜனங்களின் எண்ணம் நிறைவேற வொட்டாமல் எந்த மைனாரிட்டியும் தடுக்கும்படி விட முடியாது" என்று பார்லிமெண்டு சபையில் சொன்னார். ஆதலால் அவர்கள் தங்கள் மந்திரிகளில் மூவரை இந்தியாவிற்கு அனுப்பி எவ்விதமாக இந்தியரிடம் அதிகாரத்தை மாற்றிக் கொடுத்துவிடலாம் என்பதற்குரிய வழியைக் கண்டுபிடிக்க விரும்பினார்கள்.

அப்படியே பெப்ரவரி மாதத்தில் பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியார் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இந்தியா மந்திரியான பெத்விக் லாரன்ஸ் பிரபுவும், ஸர் ஸ்டாபோர்டு கிர்ப்ஸும், ஏ. வி. அலக்ஸான்டரும் ஆவார்கள்.

அவர்கள் இங்கிலாந்தை விட்டுப் புறப்படுவதற்கு முன் இந்தியாவிற்குப் பரிபூரண சுதந்திரம் வழங்குவதற்காகவே இந்தியாவிற்குப் போவதாக பத்திரிகை பிரதிநிதிகளிடம் கூறினார்கள். ஆயினும் இந்திய மகாஜனங்கள்

இங்கிலீஷ்காரர்களுடைய உறுதிமொழிகளைக் கேட்டுக் காது புளித்துப்போயிருந்தபடியால் இந்த தூது கோஷ்டியாரும் நம்மை ஏமாற்றத்தான் வருகிறார்கள் என்று எண்ணினார்கள். அப்பொழுது காந்தியடிகள் அப்படி அவர்கள் விஷயத்தில் ஐயம்கொள்வது சரியன்று, அவர்கள் உண்மையாகவே சுதந்திரம் வழங்குவதற்குத்தான் வருகிறார்கள் என்று இந்திய மக்களுக்குத் தைரியம் கூறினார்.

இங்கிலாந்திலிருந்து வந்த மந்திரிகள் நாட்டிலுள்ள சகல கட்சித் தலைவர்களையும் கண்டு பேசினார்கள். காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீகுக்கும் ஸமரஸம் ஏற்படுத்த பெருமுயற்சிகள் செய்தார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சிகள் பயன்பெறவில்லை. காங்கிரஸுக்கும் லீகுக்கும் ஒற்றுமை ஏற்படவில்லை. அதன்மேல் தூது கோஷ்டியாரும் வைசிராயும் சேர்ந்து மே 16-ம் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். இதுதான் தூதுகோஷ்டியின் திட்டமென்று வழங்கப்படுகிறது.

## தூது கோஷ்டியின் திட்டம்

அதன் சுருக்கம் வருமாறு :—

இந்தியா சீக்கிரமாகச் சுதந்தரம் அடைய வேண்டும் என்பது பிரிட்டிஷ் சர்க்கார் நோக்கம். ஆனால், இந்தியச் சுதந்தர அரசியலை இந்தியர்களே வகுத்துக்கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் சர்க்கார் அதற்கான ஏற்பாடுகளை மட்டுமே செய்வார்கள்.

சுதந்தரம் பெற்றபின் இங்கிலாந்துடன் சேர்ந்திருப்பதும் பிரிந்துபோவதும் இந்தியாவின் இஷ்டத்தையே பொறுத்தது. சேர்ந்திருப்பதால் நன்மைகள் உண்டு. ஆனால், சேர்ந்திருக்கும்படி எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது. எதுவாயினும், அதிகாரத்தை அமைதியான

முறையில் மாற்றிக்கொடுப்பதே பிரிட்டிஷ் சர்க்காரின் லட்சியம்.

நாங்கள் காங்கிரஸ்-லீக் கட்சிகளுக்கிடையே முட்டுக்கட்டையாக இருந்த பாக்கிஸ்தான் விஷயத்தில் இருவர்க்கும் ஒற்றுமை உண்டாக்க முயன்றோம். இரண்டு கட்சியாரும் பல விஷயங்களில் விட்டுக் கொடுத்தாலும், ஒற்றுமை ஏற்பட வில்லை.

முஸ்லிம் லீக்கைத் தவிர, ஏனையோர் அனைவரும் இந்தியாவைப் பிரிக்கக்கூடாது என்றே வற்புறுத்துகின்றனர். ஆயினும், இந்தியா பிரிக்கப்படாவிட்டால், ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக உள்ள ஆட்சியில் முஸ்லிம்கள் சாஸ்வதமாகக் கஷ்டப்பட வேண்டி யிருக்கும் என்று முஸ்லிம்கள் உண்மையாகவே பயப்படுவதால், நாங்கள் அவர்களுடைய பாக்கிஸ்தான் கோரிக்கையைக் கவனமாகப் பரிசீலனை செய்தோம்.

**பாக்கிஸ்தான்:** முஸ்லிம் லீக், இந்தியாவின் வடமேற்கிலும், வடகிழக்கிலும் சர்வ ராஜ்யாதிகாரமுள்ள இரண்டு முஸ்லிம் அரசாங்கங்களை ஏற்படுத்தவேண்டும் என்று சுய நிர்ணய உரிமையின் பெயரால் கேட்கின்றது.

அப்படியானால், முஸ்லிம்கள் குறைவாகவுள்ள பகுதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்பானேன்? அவைகளைச் சேர்க்காவிட்டால், அந்த முஸ்லிம் ராஜ்யங்களைச் சரியாக நிர்வாகம் செய்யவும் முடியாது, பொருளாதாரத்தில் பலவீனமாகவும் இருக்கும் என்று பதில் கூறுகிறார்கள்.

(1) ஆனால், பாக்கிஸ்தானத்தில் சேரும் ஆறு மாகாணங்களிலுமுள்ள முஸ்லிமல்லாதார் தொகை மிகப் பெரியதாகும்.

| | முஸ்லிம் சதமானம் | முஸ்லி மல்லாதார் சதமானம் |
|---|---|---|
| வடமேற்கில் | 62 | 38 |
| வடகிழக்கில் | 51·7 | 48·3 |
| பாக்கி இந்தியாவில் | 11 | 89 |

ஆகவே, சிறுபான்மையோர் பிரச்னையைப் பாக்கிஸ்தானுல் தீர்க்க முடியாது என்பது இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாகின்றது.

(2) அத்துடன், முஸ்லிமல்லாதாரே பெரும்பாலோராக உள்ள அஸ்ஸாமையும், பஞ்சாப் பகுதியையும், வங்காளப் பகுதியையும் பாக்கிஸ்தானில் சேர்ப்பது நியாயமாகாது.

(3) மேலும், பாக்கிஸ்தான் வேண்டுமென்று கேட்பதற்காகக் கூறும் வாதங்கள் எல்லாம் முஸ்லிமல்லாத பகுதிகளைச் சேர்க்கக்கூடாது என்று கூறுவதற்கும் பொருந்தும்.

(4) இந்த விஷயம், முக்கியமாகச் சீக்கியர்களைப் பாதிப்பதாகவும் இருக்கின்றது.

அதன்மேல், முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக உள்ள பாகங்களை மட்டும் சேர்த்து ஒரு சிறிய பாக்கிஸ்தான் அமைக்கலாமா என்று யோசித்தோம்.

ஆனுல், முஸ்லிம் அல்லாத பெரும் பகுதிகளை நீக்கி விடுவதால், இந்தப் பாக்கிஸ்தான் சிறிதும் அனுபவ சாத்தியமில்லை என்று முஸ்லிம் லீக் கூறுகிறது.

அத்துடன் பஞ்சாபையும், வங்காளத்தையும் துண்டு போடுவது அங்குள்ள ஜனங்களில் பெரும்பாலோருடைய விருப்பத்துக்கும் நலன்களுக்கும் விரோதமானதாகும்.

ஆதலால், எந்த விதத்திலும் பாக்கிஸ்தான் ஏற்படுத்துவதால் வகுப்புப் பிரச்னை தீர்ந்துவிடாது என்ற முடிவுக்கு வந்தோம்.

**ஆட்சேபங்கள் :** இவை தவிர, வேறு சில வெகு முக்கியமான ஆட்சேபங்களும் இருக்கின்றன.

(1) இந்தியாவைப் பிரித்தால், அகில இந்தியாவுக்கும் பொதுவாகவுள்ள போக்கு வரத்து, தபால், தந்தி வசதிகள் எல்லாம் தட்டுக் கெட்டுப்போய், இரண்டு பாகங்களுக்கும் பெருந் தீங்கு உண்டாகும்.

(2) இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிரிவினை கூடாது. சேனையைப் பிரிப்பதால் பெருத்த அபாயம் நேரிடும்.

(3) சுதேச சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்ந்துகொள்ளும் விஷயத்தில் சிரமம் ஏற்படும்.

(4) வடமேற்கு ராஜ்யத்துக்கும் வடகிழக்கு ராஜ்யத்துக்கும் 700 மைல் தூரமாகையால், அவைகளுக்கிடையில் போக்குவரத்து நடத்த இந்துஸ்தான் தயவையே நாடி நிற்கவேண்டியதாகும்.

(5) இரண்டு ராஜ்யங்களும் எல்லைப் புறங்களில் இருப்பதால், அயல்நாட்டுப்படையெடுப்பை எதிர்ப்பதற்குத் தகுந்த அளவு பெரியனவாக இல்லை.

ஆதலால், இந்தியாவை இரண்டு தனி ராஜ்யங்களாகப் பிரிக்கக் கூடாது என்று முடிவு செய்கின்றோம்.

ஆனல், இந்துக்களின் மெஜாரிட்டியால் தங்களுக்குக் கெடுதல் உண்டாகும் என்றுமுஸ்லிம்கள் பயப்படுகின்ருர்கள் என்பதில் சந்தேகமில்லை.

**காங்கிரஸ் திட்டம் :** இதற்காகக் காங்கிரஸ் கூறும் திட்டம் இது :—

1. மாகாணங்களுக்குப் பரிபூரணமான சுயஆட்சி.

2. மத்திய அரசாங்கத்துக்கு அயல் நாட்டு உறவு, பாதுகாப்பு, போக்கு வரத்து முதலிய சில விஷயங்களின் நிர்வாகம் மட்டும்.

3. இஷ்டப்பட்டால், மாகாணங்கள் வேறு விஷயங்களையும் மத்திய அரசாங்கத்துக்குக் கொடுப்பது.

இந்தத் திட்டத்தால், கட்டாயமாகக் கொடுக்கப்படும் விஷயங்களை நிர்வகிக்கும் மந்திரிகள் இந்தியா முழுவதுக்கும், இஷ்டப்பட்டுக் கொடுக்கும் விஷயங்களை நிர்வகிக்கும் மந்திரிகள் அப்படிக் கொடுக்கப்படும் மாகாணங்கட்கும், பொறுப்பு வகிப்பது போன்ற பல கஷ்டங்கள் நேருமாதலால், நாங்கள் காங்கிரஸ் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

**சமஸ்தானங்கள் :** இந்தியா சுதந்தரம் அடைந்து விட்டால், அதன்பின் சமஸ்தானங்களுக்குப் பிரிட்டிஷ் சர்க்காருடன் உள்ள தொடர்பு நீங்கிவிடும். இதைச் சமஸ்தானுதிபதிகள் ஏற்றுக்கொள்வதோடு, இனி ஏற்படப் போகும் சுதந்தர இந்தியாவுடன் சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் கூறுகிறூர்கள். எந்த விதத்தில் ஒத்துழைப்பது என்பது அரசியல் திட்டம் அமைக்கும் பொழுது பேசி முடித்துக்கொள்ள வேண்டிய விஷயமாகும்.

**எங்கள் சிபாரிசு :** இறுதியாக, எந்தக் கட்சியாருடைய நலன்களையும் பாதிக்காமல், உறுதியாகவும் அனுபவ சாத்தியமாகவுமுள்ள ஓர் அரசியலை வகுப்பதற்காகக் கீழ்க்கண்ட யோசனையை நாங்கள் கூறுகின்ரேம்.

**ஆதாரமான அம்சங்கள் :**

(1) இந்தியா முழுவதுக்கும் ஒரே ஒரு யூனியன், அயல்நாட்டு உறவு, தேசப் பாதுகாப்பு, போக்குவரத்து மூன்றையும் நிர்வகிக்கும். அதற்கான பணத்தை வசூலிக்க அதிகாரமுடையதா யிருக்கும்.

(2) அந்த யூனியனுக்கு நிர்வாக சபையும் சட்ட சபையும் உண்டு.

(3) மேற்கண்ட மூன்று விஷயங்கள் தவிர, மற்றவை யெல்லாம் மாகாணங்கட்கும் சமஸ்தானங்கட்குமே.

(4) மாகாணங்கள் மூன்று தொகுதிகளாகப் பிரிந்து நிர்வாகம் நடத்தலாம்.

(5) எந்த மாகாணச் சட்ட சபையாவது அரசியல் திட்டத்தில் மாற்றங்கள் செய்ய விரும்பினுல், அதற்கான ஏற்பாடுகள் பத்து வருஷங்கட்கு ஒருமுறை செய்யப்படும்.

அரசியல் திட்டத்தின் ஆதாரமான அம்சங்களை வகுத்துவிட்டால்தான் இரண்டு கட்சியாரும் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்துவதற்கு ஒன்று சேர்வார்கள் என்று தெளிவாகத் தோன்றுவதாலேயே இந்தச் சிபார்சைச் செய்கின்ருேம்.

**அரசியல் நிர்ணய சபை :** (1) வயது வந்தவர்க்கு ஓட்டுரிமை கொடுத்து மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பதே நியாயமானதாகும். ஆனுல், காலதாமதம் ஆகுமானதால், இப்பொழுதுள்ள சட்ட சபைகளையே உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

(2) ஆனுல், மெம்பர் தொகை ஜனத்தொகைக்கு ஏற்ப இல்லாததால் 10 லட்சம் ஜனத்தொகைக்கு ஓர் அங்கத்தினர் வீதம் தேர்தல் செய்யவேண்டும்.

(3) முஸ்லிம்—சீக்கியர் — இருவரும் அல்லாதார்— என்று பிரிந்து, ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் ஜனத் தொகைக்குத் தக்கவாறு தேர்தல் செய்வர்.

(4) மாகாணங்கள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டு, அங்கத்தினர் தேர்தல் நடைபெறும் :—

| | முஸ்லிம் | பொது | சில்லரை | சீக்கியர் |
|---|---|---|---|---|
| மதராஸ் முதலிய முஸ்லிம் மைனரிட்டி மாகாணங்கள் ஆறுக்கும் | 20 | 167 | 3 | 0 |
| வடமேற்குத் தொகுதி | 22 | 9 | 1 | 4 |
| வடகிழக்குத் தொகுதி | 36 | 34 | 0 | 0 |
| | 78 | 210 | 4 | 4 |

ஆக மொத்தம் 296 அங்கத்தினர்கள். அவர்களுடன் சமஸ்தானப் பிரதிநிதிகள் 93 பேர். அவர்களைத் தேர்தல் செய்யப் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளும், சமஸ் தானப் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு கமிட்டி அமைக்கப் படும்.

(5) இந்த அங்கத்தினர்கள் டில்லியில் கூடித் தலைவர் முதலிய உத்தியோகஸ்தர்களையும், மைனரிட்டி வகுப்பார் களுடைய நலன்களின் பாதுகாப்பு சம்பந்தமாக யோசனை சொல்ல ஓர் ஆலோசனைக் கமிட்டியையும் நியமனம் செய்வார்கள்.

(6) அதன்பின், மேற்கண்ட மூன்று பகுதிகளாகப் பிரிந்து மாகாணங்கட்கும் தொகுதிக்கும் அரசியல் வகுப் பார்கள்.

(7) அதன்பின், எல்லோரும் ஒன்றுகூடி, யூனியன் அரசியலை வகுப்பார்கள்.

(8) அமைப்பில் மாறுதல் செய்யவோ, அல்லது வகுப்பு நலம் சம்பந்தமான விஷயம் ஏதேனும் எழுப் பவோ வேண்டுமானால், அதற்கு இரண்டு பெரிய வகுப்

பின் பிரதிநிதிகள், வந்து ஓட்டுச் செய்பவர்களில் மெஜாரிட்டியாருடைய சம்மதம் பெறுவது தேவையாகும்.

(9) வகுப்பு நலன் சம்பந்தமான விஷயம் என்பதைத் தலைவரே முடிவு செய்வார். எந்த வகுப்பிலேனுமுள்ள பிரதிநிதிகளில் பெரும்பாலோர் விரும்பினால், அவர் முதலில் பெடரல் கோர்ட்டைக் கலந்துகொள்ள வேண்டும்.

(10) இந்தப்படி வகுக்கப்படும் அரசியல் அமுலுக்கு வந்த பிறகு அமையும் எந்த மாகாணச் சட்ட சபையாவது தானுள்ள தொகுதியைவிட்டு வெளியேறி விடத் தீர்மானித்தால், அந்த மாகாணம் வெளியேறலாம்.

(11) மைனாரிட்டி நலன் யோசனைக் கமிட்டி, ஜீவாதாரமான உரிமைகளையும் மைனாரிட்டிகளுக்கு வேண்டிய பாதுகாப்புக்களையும் அரசியல் நிர்ணய சபைக்குக் கூறும்.

(12) பிரிட்டிஷ் சர்க்கார் அதிகாரத்தைத் துறந்து விடுவதால், அவர்கள் இந்திய யூனியன் அரசியல் அமைப்புச் சபையுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள்.

**இடைக்கால சர்க்கார்:** முக்கியமான அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெற்ற இடைக்கால சர்க்காரை உடனே அமைக்கவேண்டியது அவசியமாகும். அதற்கான ஏற்பாடுகளை வைசிராய் செய்து கொண்டிருக்கிறார். ராணுவம் உட்படச் சகல விஷயங்களையும் இந்தியரே நிர்வகிப்பார்கள். அந்தச் சர்க்காருடன் பிரிட்டிஷார் பரிபூரணமாக ஒத்துழைப்பார்கள்.

இந்த யோசனைகள் எல்லோர்க்கும் திருப்தி தந்துவிடா. ஆயினும், பரஸ்பரம் விட்டுக் கொடுத்து ஏற்றுக் கொண்டால், சுதந்தரத்தைச் சீக்கிரமாகவும் அமைதியான முறையிலும் அமைத்துவிடலாம். இல்லாவிட்டால், என்ன என்ன குழப்பங்களும் கஷ்டங்களும் இந்திய மக்களுக்கு உண்டாகுமோ யார் அறிவார்? ஆதலால்,

ஒவ்வொரு கட்சியாரும் தேசத்தின் நலனையே பிரதான மாகக் கருதும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம்.

சுதந்தர இந்தியாவானது பிரிட்டனுடன் சேர்ந்திருக்கும் என்று நம்புகிறோம். அப்படி யில்லாவிட்டாலும், எங்களுடன் நெருங்கிய நண்பர்களாக இருப்பீர்கள் என்றே நம்புகிறோம். ஆனால், இவை யெல்லாம் உங்கள் இஷ்டம். எதுவாயினும் சரி, உங்களுக்குச் சீரும் சிறப்பும் செழிப்பும் உண்டாகுமாக.

# காங்கிரஸ் லீக் பரிசீலனை

இந்தத் திட்டத்தில் இந்தியாவை இந்துஸ்தானென்றும் பாக்கிஸ்தானென்றும் இரண்டு தனி ராஜ்ஜியங்களாகப் பிரிப்பது நல்லதில்லை என்றும் அதன் மூலம் மைனரிட்டிப் பிரச்னையை தீர்க்க முடியாதென்றும் அத்துடன் அது நடக்கக்கூடிய காரியமில்லை என்றும் பிரிந்தால் கிடைக்கக்கூடிய நன்மைகளை பிரியாமலே பெற்றுவிட முடியுமென்றும் தூது கோஷ்டியார் கூறி இருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தில் கூறப்படும் அடிப்படையான அம்சங்களாவன :—

(1) இந்தியா பரிபூரண சுதந்திரம் பெறும். பிரிட்டனுடன் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதை அரசியல் நிர்ணய சபை முடிவு செய்யும்.

(2) அரசியல் வகுக்கப்பட்டவுடன் பிரிட்டிஷ் சர்க்கார் விலகிக்கொண்டு இந்திய மத்திய சர்க்காருடன் ஒப்பந்தம் செய்துகொள்வார்கள்.

(3) அரசியல் வகுக்கப்படும்வரை பிரிட்டிஷ் சேனை இந்தியாவில் இருக்கும்.

(4) மைனரிட்டிகளின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு ஆலோசனைக் கமிட்டி ஏற்படும். அது அவர்களுக்கு வேண்டிய ஜீவாதாரமான உரிமைகளைக் குறித்து அரசியல் நிர்ணய சபைக்கு யோசனை கூறும்.

(5) ஹிந்து முஸ்லிம் சமூக விஷயங்களைப்பற்றி தர்க்கம் நேர்ந்தால் பாதிக்கப்படும் சமூகத்தின் மெஜாரிட்டு ஓட் மூலம் முடிவு செய்யப்படும்.

(6) இந்தியா முழுவதும் அதாவது மாகாணங்களும் சமஸ்தானங்களும் சேர்ந்து ஒரே ஐக்கிய இந்திய அரசாங்கமா யிருக்கவேண்டும்.

(7) அந்த அரசாங்கம் அயல்நாட்டு விஷயம், பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய காரியங்களைக் கவனிக்கும்.

(8) அவற்றிற்கு வேண்டிய பணத்திற்கு வரி விதிக்க அதற்கு அதிகாரம் உண்டு.

(9) இந்த ஐக்கிய அரசாங்கத்துக்கு சட்டசபையும் நிர்வாக சபையும் உண்டு. சட்டசபையில் சமஸ்தானப் பிரதிநிதிகளும் அங்கத்தினராக இருப்பார்கள்.

(10) மேற்கூறிய மூன்று விஷயங்களைத் தவிர இதர விஷயங்கள் எல்லாம் மாகாணங்களையும் சமஸ்தானங்களையுமே சேர்ந்தனவாகும்.

(11) மாகாணங்கள் "தொகுதி வட்டங்"களாகப் பிரிந்து மாகாண அரசியலையும் தொகுதி அரசியலையும் வகுத்தபின் மத்திய அரசியலை வகுக்கும்.

(12) புது அரசியல் ஆரம்பித்துப் பத்து வருஷங்கட்கு ஒருதரம் அரசியல் அமைப்பு ஷரத்துக்களை புனராலோசனை செய்ய ஒவ்வொரு மாகாண சட்டசபைக்கும் உரிமை உண்டு.

(13) எந்த மாகாணமும் தன் விருப்பம்போல் எந்தத் தொகுதியில் வேண்டுமானாலும் சேரலாம். ஒரு தொகுதியிலும் சேராமலே இருக்கவேண்டுமானாலும் இருக்கலாம். ஒரு மாகாணத்தின் விருப்பத்துக்கு விரோதமாக அதை எந்தத் தொகுதியிலும் சேரும்படி நிர்ப்பந்திக்க முடியாது.

(14) மதவாரியாக அரசியல் கட்சிகள் பிரிக்கப்பட்டிருந்தாலும் அரசியல் நிர்ணயசபை விரும்பினால் அத்

தகைய பிரிப்பை நீக்கிவிடமுடியும். மதப்பாகுபாடில்லாத அரசியல் கட்சிகள் உண்டாகவேண்டும் என்பதே லட்சியம்.

(15) அரசியல் நிர்ணய சபையில் அங்கத்தினராக இருக்கும் முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் தனித் தனியாகப் பெரும்பான்மை ஓட்டுமூலம் திட்டத்தில் கூறியிருக்கும் யோசனைகளைப் பெருக்கவோ குறைக்கவோ செய்யலாம்.

## காந்தி யடிகள் ஆராய்ச்சி

இந்தத் திட்டத்தைக் கண்டதும் அதை ஆராய்ந்து காந்தியடிகள் தமது ஹரிஜன் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். அதன் சாரம் வருமாறு:

"பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியாரும் வைஸிராயும் வெளியிட்டுள்ள அறிக்கையை நான்கு நாட்களாகத் துருவித் துருவி ஆராய்ந்தேன். இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தில் இதைவிட அதிகச் சிறப்பான அறிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டிருக்க முடியாது என்று எண்ணுகின்றேன்.

தூது கோஷ்டியார் இரண்டு கட்சியாரையும் கலந்து பேசுவதற்காக ஸிம்லாவில் கூட்டி வைத்தார்கள். ஆனால் இரண்டு கட்சியாரும் எவ்விதமாகவும் ஒத்துவர முடியவில்லை. ஆனால் தூது கோஷ்டியார் இந்தியாவுக்கு சுதந்திர சாஸனம் தயாரிக்கும் விஷயத்தில் இரண்டு கட்சியாரையும் ஒன்று சேர்த்து வேலை செய்வதற்கு எது குறைந்தபட்ச தேவையோ அதைத் தாங்கள் அவர்களுடன் பேசி வந்ததிலிருந்து அறிந்து கொண்டார்கள்.

அதன்மேல் அவர்கள் சிறிதும் சோர்வடையாமல் டில்லிக்கு வந்து பிரிட்டிஷாருடைய கண்காணிப்போ செல்வாக்கோ எதுவுமில்லாத இந்திய சுதந்திரச் சாஸனத்

தைத் தயாரிக்கக்கூடிய அரசியல் நிர்ணய சபையை நிறுவுவதற்கான நோக்கத்துடன் கூடிய ஒரு சிறந்த அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒரே லட்சியம் எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக பிரிட்டிஷ் ஆட்சியை முடித்து விடுவதேயாகும்.

உள் நாட்டு யுத்தம் என்று சொல்லக்கூடிய அளவில் சச்சரவுகள் நேராதபடி இந்தியாவை ஏக ஐக்கிய தேசமாக இருக்கும்படி செய்துவிட்டுப் போகவே விரும்புகிறார்கள்.

அவர்களுடைய அறிக்கை பிரிட்டிஷ் ஆட்சியைத் துறந்துவிடுவதற்கான பிரதம அறிகுறியாக இருப்பதால் அவர்கள் நம்முடைய மனமார்ந்த பாராட்டுதலுக்கு உரியவர்கள் ஆவார்கள்.

அப்படியில்லை என்று நிரூபிக்கப்படும் வரை அவர்களுடைய பேச்சில் நாம் நம்பிக்கை வைக்கவே வேண்டும்.''

அதன் பின் இந்தியாவிலுள்ள மாகாணங்களை ஹிந்துக்கள் மெஜாரிட்டியாகவுள்ள தொகுதி என்றும் முஸ்லிம்கள் மெஜாரிட்டியாகவுள்ள தொகுதி என்றும் முஸ்லிம்கள் அதிகத் தொகையினராகவுள்ள தொகுதி என்றும் பிரித்திருப்பதைக் குறித்துக் கீழ்கண்டவாறு எழுதினார் :—

"மாகாணங்கள் விஷயத்தில் அவர்கள் கூறும் யோசனை யாது? சீக்கியர்களுக்குப் பஞ்சாப் ஒன்றுதான் அவர்களுடைய தாய் நாடு. அப்படியிருக்க அவர்கள் தங்கள் விருப்பத்துக்கு மாறாகப், புதிதாக உண்டாக்க எண்ணும் வடமேற்குத் தொகுதியாகிய "பி" ராஜ்யத்தைத் தங்கள் தாய்நாடாக எண்ணுவதெப்படி?

அதேபோல் விருப்பத்துக்கு மாருக எல்லேப்புற மாகாணம் வடமேற்குத் தொகுதியாகிய "பி" ராஜ்யத்திலும், அஸ்ஸாம் மாகாணம் வடகிழக்குத் தொகுதியாகிய "ஸி" ராஜ்யத்திலும் சேர்ந்து கொள்ள வேண்டுமோ? அஸ்ஸாம் மாகாணம் பெரும்பாலும் முஸ்லிமல்லாத மாகாணமாயிற்றே.

அறிக்கையானது நிர்ப்பந்தம் எதுவும் செய்வதில்லே என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்து நிற்பதா சேர்ந்து கொள்வதா என்ற விஷயத்தில் பரிபூரணமான சுதந்திரம் அளிக்க வேண்டியதே நியாயம் என்று எண்ணுகிறேன்.

அப்படியே திட்டமானது ஏ. (இந்துக்கள் மெஜாரிட்டியாகவுள்ள தொகுதி) பி. (வடமேற்குத் தொகுதி) ஸி. (வடகிழக்குத் தொகுதி) என்ற தொகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கு அதில் சேரவும் சேராமலிருக்கவும் சுதந்திரம் அளிக்கின்றது என்றே எண்ணுகிறேன்.

ஆதலால் அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டத்தில் அதன் தலேவர், "மாகாண பிரதிநிதிகள் தொகுதி சேரும் தத்துவத்தை ஏற்றுக்கொள்கிருர்களா? ஏற்றுக் கொண்டால் தங்கள் மாகாணம் சேர வேண்டியதாகக் கூறப்பட்டிருக்கும் தொகுதியை ஏற்றுக்கொள்கிருர்களா?" என்று கேட்பார்.

இவ்விதமாகப் பொருள் கொண்டால் தொகுதியில் சேரும்படி நிர்ப்பந்தம் செய்வதாக அறிக்கை மீது கூறக் கூடிய குறை நிவர்த்தியாகும். ஆதலால் தொகுதி யோசனேயாலும் தொகுதியில் மாகாணங்களே அவற்றின் விருப்பத்தைக் கேளாமல் சேர்த்திருக்கும் முறையாலும் கலக்க மடைந்திருப்பவர்கள் என்னுடைய வியாக்கி

யானத்தை ஏற்றுக்கொண்டால் கலக்கத்துக்குச் சிறிதளவு கூடக் காரணமில்லை என்பதை அறிந்து கொள்வார்கள் ".

**குறைகள்**

அதன்பின் காந்தியடிகள் தூதுகோஷ்டியாரின் திட்டத்தில் காணப்படும் மிக முக்கியமான குறைகளைக் குறித்து வேறொரு கட்டுரையில் எழுதினார். அதன் சாரம் வருமாறு :—

(1) தூது கோஷ்டியார் சிம்லாவில் சிறிது காலம் தங்கிவிட்டு தில்லிக்கு வந்து தங்கள் திட்டத்தை வெளியிட்டனர். அப்படி யிருந்தும் இன்னும் மத்திய சர்க்கார் தேசீய சர்க்காராக மாறுமலே தான் இருந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் திட்டத்தை வெளியிடு முன்னரே அத்தகைய அரசாங்கத்தை அமைத்து விடுவார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் முதலில் திட்டத்தை வெளியிட்டுவிட்டு அதன் பிறகே இடைக்கால சர்க்கார் அமைப்பு விஷயமாக யோசனை செய்து வருகிறார்கள். கோடிக்கணக்கான மக்கள் உணவுப் பஞ்சத்தாலும் உடைப்பஞ்சத்தாலும் வாடி நிற்கும் இந்தச் சமயத்தில் இப்படிக் கால தாமதம் செய்யலாமா? இது தான் முதற் குறை.

(2) சமஸ்தானங்கள் சம்பந்தமாக இன்னும் சர்வாதிகார பீடப்பிரச்னை தீர்க்கப்படாமலே இருந்து வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சி நின்றுவிட்டதும் சர்வாதிகார பீடமும் நின்று போகும் என்று கூறுவது போதாது. சர்வாதிகார பீடம் இடைக்கால சர்க்கார் ஏற்படும் அன்றே ஒழிந்து போய்விடவேண்டும். அது சாத்தியப்படா விட்டால் சமஸ்தான ஜனங்களுடைய நன்மைக்காக மட்டுமே இருந்து வரவேண்டும். அதற்காக அது இடைக்கால

சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும். இதுதான் இரண்டாவது குறை.

(3) உள்நாட்டுக் கலகமும் அயல் நாட்டுப் படை எடுப்பும் நேராதிருப்பதற்காகப் பிரிட்டிஷ் சேனையை சுதந்திரச் சர்க்கார் ஏற்படும் வரை இந்தியாவில் நிறுத்தி வைக்க வேண்டும் என்று திட்டம் கூறுகிறது. அப்படி நிறுத்தி வைத்தால் அது அரசியல் நிர்ணய சபையின் வேலையைச் சரியாக நடக்க வொட்டாமல் செய்துவிடும். அத்துடன் ஏற்படப்போவதாகச் சொல்லும் சுதந்திர சர்க்கார் ஏற்பட்ட பின்னர்கூட அந்தச் சேனையை இருக்கச் சொல்லும்படியான நிலைமையும் ஏற்பட்டு விடும். எந்த தேசம் தன்னுடைய பாதுகாப்புக்காக அன்னியப் படைகளை விரும்பவோ அல்லது அன்னியப் படைகள் தங்கியிருப்பதைச் சகித்துக் கொண்டிருக்கவோ செய்யுமோ அந்தத் தேசத்தை எந்த விதத்திலும் சுதந்திரம் அடைந்த தேசமாக ஒரு போதும் கூற முடியாது. அது சுயராஜ்யத்துக்குத் தகுதியில்லாத உபயோகமற்ற தேசமேயாகும். சுதந்தரத்துக்குத் தகுதியுடையதா, அன்று என்பதை அது தனித்துத் தலை நிமிர்ந்து பிறர்க்குப் பணியாமல் நிற்கமுடியுமா என்பதைக் கொண்டே அறிய முடியும். சுதந்திரம் பெற்ற பின் நிமிர்ந்து நடக்க வேண்டுமானால், இடைக்காலத்தில் பிறர் உதவியின்றித் தத்தித் தத்தி நடக்கக் கற்றுக்கொள்ளுதல் அவசியம். பிறரால் ஊட்டப்படும் வழக்கத்தை இன்று முதலே நிறுத்திவிட வேண்டும். இது மூன்றாவது குறை."

**காந்திஜி சிபார்சு**

இத்துணையும் கூறிவிட்டு இறுதியில்,

" தூதுகோஷ்டியார் சொன்னபடி செய்யாமல் பிரிட்டிஷ் ஆட்சியை சாஸ்வதமாக்குவதற்கான வழி

களையே அமைப்பார்களானால் அப்பொழுதே அவர்கள் மீது குறை கூறுவோம். நாம் சந்தேகப்படுவதற்குக் காரணங்கள் இருந்தாலும், அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவதாக எண்ணுவதற்கான அறிகுறி யொன்றையும் காணோம்" என்று முடித்தார்.

## காங்கிரஸ் தீர்மானம்

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் மே 24-ம் தேதி யன்று புது தில்லியில் கூடி தூதுகோஷ்டியாரின் திட்டத்தை ஆராய்ந்து ஒரு தீர்மானம் செய்தார்கள். அதன் சாரம் வருமாறு :—

**லட்சியம்**

(1) (அ) பரிபூரண சுதந்திரம், (ஆ) பலம் பொருந்திய மத்திய சர்க்கார், (இ) பரிபூரணமான மாகாண சுயாட்சி, (ஈ) பரிபூரணமான வளர்ச்சிக்கு வேண்டிய ஜீவாதார மான பிரஜா உரிமைகள் சகலர்க்கும் கிடைத்தல், (உ) பிற சமூகங்கட்கு கேடு செய்யா வண்ணம் சகல சமூகங்களும் தங்கள் இஷ்டம் போல் வாழ்வதற்குரிய உரிமை பெறுதல் என்ற காங்கிரஸ் லட்சியங்களுக்கு முரண்பட்டிருப்பதைக் காண வருத்தமாயிருக்கிறது.

**அரசியல் நிர்ணய சபை**

(2) அரசியல் அமைப்பை வகுக்கும் விஷயத்திலும் அதை அமுல் நடத்தும் விஷயத்திலும் அரசியல் நிர்ணய சபையே இறுதியாக முடிவு செய்யக்கூடிய சகல ராஜ்யாதிகாரமுடைய ஸ்தாபனமாகக் கருதப்பட வேண் டும்.

(3) சமூகங்களைப் பொறுத்த முக்கியமான விஷயங்கள் பெரிய சமூகங்களுடைய மெஜாரிட்டித் தீர்மானத்தைப் பொறுத்தே முடிவு செய்ய வேண்டும்

என்ற நிபந்தனைக்குட்பட்டு எந்த மாறுதல்களைச் செய்யவும் அரசியல் நிர்ணய சபைக்கு சர்வ அதிகாரம் இருக்க வேண்டும்.

(4) சட்ட சபைகளிலுள்ள ஐரோப்பிய மெம்பர்களுக்குத் தேர்தலில் கலந்து கொள்ள உரிமை கொடுத்திருப்பது தவறு.

(5) மாகாணச் சட்ட சபைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள்தான் அரசியல் நிர்ணய சபைக்கு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். பலுச்சிஸ்தானத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் உள்ள சட்ட சபையில்லை. குடகு சட்ட சபையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அங்கத்தினர்கள்தான் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

(6) சமஸ்தானங்களிலிருந்து அரசியல் நிர்ணய சபைக்கு அங்கத்தினர்களைத் தெரிந்து எடுப்பது மாகாணங்களில் கையாளப்படும் முறைக்கு ஒத்ததாகயிருக்க வேண்டும்.

**தொகுதி முறை**

(7) மாகாணங்களைத் தொகுதிகளாகப் பிரிக்கும் விஷயத்தில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. அத்துடன் மாகாண சுய ஆட்சி என்னும் மூலாதாரமான உரிமைக்கு விரோதமாகவும் இருக்கிறது. அதனால் மாகாணங்கள், அரசியல் நிர்ணய சபையின் ஆரம்பத்திலேயே தொகுதியில் சேர்வதா, சேர்வதில்லையா என்று முடிவு செய்ய உரிமையுண்டு என்பதாக வியாக்கியானம் செய்ய வேண்டும்.

**பிரிட்டிஷ் சேனை**

(8) பிரிட்டிஷ் சேனையை இந்தியாவில் வைத்துக் கொண்டிருப்பது இந்தியாவின் பரிபூரண சுதந்திரத்திற்கு விரோதமாகும்.

**இடைக்கால சர்க்கார்**

(9) பரிபூரண சுதந்திரம் வழங்க விரும்பினால் இடைக்கால சர்க்கார் பரிபூரண சுதந்திர சர்க்கார் போலவே நடைபெற வேண்டும். அரசியல் நிர்ணய சபையையும் இடைக்கால சர்க்காரையும் பிரித்துப் பேசலாகாது.

**முடிவு**

(10) இந்த விஷயங்கள் தெளிவு செய்யப்பட்ட பின்னரே திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தை முடிவு செய்ய முடியும்.

## முஸ்லிம்லீக் பரிசீலனை

முஸ்லிம்லீக் தலைவர் ஜின்னா சாகேபும் பிரிட்டிஷ் தூது கோஷ்டியின் திட்டத்துக்குப் பல ஆட்சேபங்கள் எழுதி வைஸிராய்க்கு அனுப்பினார். அவற்றுள் பிரதானமானவை வருமாறு:—

**பாக்கிஸ்தான்**

தூதுகோஷ்டியார் சாஸ்வதமாக ஹிந்து மெஜாரிட்டி ஆட்சி ஏற்பட்டுவிடுமென்று முஸ்லிம்கள் பயப்படுகிறார்கள் என்று கூறிக்கொண்டே காங்கிரஸ் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக பாக்கிஸ்தான் வேண்டாம் என்று கூறுவது முஸ்லிம்களுடைய மனத்தைப் புண்படுத்துகின்றது.

**மத்திய சர்க்கார்**

(2) மாகாணங்களைத்தொகுதிகளாகப்பிரித்த போதிலும் மத்தியசர்க்காருடைய அதிகாரங்கள் இவைதான் என்று நிர்ணயம் செய்யவில்லை.

(3) மத்திய சர்க்காரில் பாக்கிஸ்தான் பிரதிநிதிகளும் ஹிந்துஸ்தான் பிரதிநிதிகளும் சமமான தொகையினராக இருக்க வேண்டும் என்று கோரியதும் தரப்படவில்லை.

(4) மத்திய சட்டசபையில் முக்கிய சமூகப் பிரச்னைகள் முக்கியமான சமூகங்களின் பிரதிநிதிகளின் தனித் தனி மெஜாரிட்டி ஓட்டின்பேரிலும் சகல மெம்பர்களின் மெஜாரிட்டி ஓட்டின்பேரிலுமே முடிவு செய்யப்பட வேண்டும் என்று கூறியிருந்த போதிலும் முக்கியமான சமூகப் பிரச்னை எது என்று தீர்மானிப்பவர் யார் என்பது விளக்கப்படவில்லை.

**அரசியல் நிர்ணய சபை**

(5) அரசியல் நிர்ணய சபையில் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் மொத்தம் 292 பேர். அவர்களில் 79 பேரே முஸ்லிம்கள். சமஸ்தானப் பிரதிநிதிகள் 93 பேரிலும் பெரும்பாலோர் ஹிந்துக்களாகவே இருப்பார்கள். அதனால் அரசியல் நிர்ணயசபையில் ஹிந்துக்களே மிகப் பெரிய மெஜாரிட்டியாக இருப்பார்கள்.

(6) இவர்களே சபையின் தலைவரை தேர்ந்தெடுப்பதால் அவரும் ஹிந்துவாகவே இருப்பார். பெரிய சமூகப் பிரச்னை இது என்று தீர்மானிப்பவரும் அவரே.

**தொகுதி முறை**

(7) பாக்கிஸ்தான் தொகுதிக்கு பத்து வருஷங்கட்குப்பின் பிரிந்து தனி ராஜ்யம் ஆவதற்கு உரிமை அளிக்கப்படவில்லை. பத்து வருஷங்கட்குப்பின் மத்திய அரசி

யல் திட்டத்தைப் பரிசீலனை செய்யலாம் என்று மட்டுமே கூறப்பட்டிருக்கிறது.

(8) மாகாணங்கள் தொகுதியிலிருந்து பிரிந்து கொள்ள விரும்பினால் அதைச் சகல ஜனங்களிடமும் ஓட்டுமூலம் கேட்பதற்குப் பதிலாக மாகாணச் சட்டசபை களிடமே கேட்கவேண்டும் என்று கூறியிருக்கிறது.

**மைனாரிட்டிகள்**

(9) மைனாரிட்டிகளின் நலனைப் பாதுகாக்க ஆலோசனை சபை ஏற்படுத்துவதாகச் சொன்னபோதிலும் அதையும் மெஜாரிட்டியான ஹிந்துக்களே அமைப்பார்கள்.

(10) அத்துடன் அந்தக் கமிட்டி சிபார்சு செய்யும் மூலாதாரமான உரிமைகளை அரசியல் அமைப்பில் சேர்க்கவும் ஹிந்து மெஜாரிட்டியின் தயவே தேவையாயிருக்கும்.

# தூதுகோஷ்டியார் பதில்

தூதுகோஷ்டியாரும் வைசிராயும் காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்திலும் ஜின்னாசாகிப்பின் அறிக்கையிலும் கண்ட ஆட்சேபங்களுக்கு சமாதானங் கூறும் முறையில் மே 25-ம் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டார்கள்.

அதன் சாரம் வருமாறு:—

## அரசியல் நிர்ணய சபை

(1) அரசியல் நிர்ணய சபையின் வேலையில் பிரிட்டிஷ் சர்க்கார் தலையிடாது, அந்தச் சபை அரசியலை வகுத்து முடித்தவுடன் பிரிட்டிஷ் சர்க்கார் ராஜ்யாதிகாரத்தை இந்திய மகாஜனங்களிடம் ஒப்புவித்துவிட ஏற்பாடு செய்வார்கள்.

(2) பலுச்சிஸ்தானத்தில் ஷாஹிஜிர்கா அங்கத்தினர்களும், குவட்டா முனிசிபல் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களும் சேர்ந்து அரசியல் நிர்ணய சபைக்குத் தங்கள் பிரதிநிதியைத் தெரிந்தெடுப்பார்கள்.

(3) குடகில் உத்தியோகப்பற்றுள்ள மெம்பர்கள் தேர்தலில் கலந்துகொள்ள மாட்டார்கள்.

(4) ஐரோப்பியர்கள் தேர்தலில் கலந்து கொள்வதும் கலந்து கொள்ளாதிருப்பதும் அவர்கள் இஷ்டத்தைப் பொறுத்த விஷயம்.

(5) சமஸ்தானப் பிரதிநிதிகள் விஷயத்தை அரசியல் நிர்ணய சபையே சமஸ்தானங்களுடன் பேசிமுடித்துக்கொள்ள வேண்டும்.

## தொகுதி முறை

(6) தொகுதியில் சேரும் விஷயத்தை அரசியல் நிர்ணய சபையின் ஆரம்பத்திலேயே முடிவுசெய்ய முடியாது. சகல கட்சியாரும் ஒத்துக்கொண்டால் மட்டுமே அப்படி செய்யலாம்.

## இடைக்கால சர்க்கார்

(7) இடைக்கால சர்க்காரில் அங்கத்தினர்கள் எல்லோரும் யுத்த மெம்பர் உட்பட இந்தியர்களாகவே யிருப்பார்கள்.

(8) தினசரி நிர்வாகத்தில் பரிபூரண சுதந்திரம் அளிக்கப்படும்.

(9) மத்திய சட்டசபையில் அவர்கள் கொண்டுவரும் சட்டம் நிறைவேருவிட்டாலும் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறினாலும் அவர்கள் தனியாகவோ ஒன்று சேர்ந்தோ ராஜிநாமாச் செய்துகொள்ளலாம்.

## பிரிட்டிஷ் சேனை

(10) சுதந்திர அரசியல் ஏற்படும்வரை நாட்டைக் காக்க வேண்டிய பொறுப்பு பிரிட்டிஷாருடையதா யிருப்பதால் அதுவரைமட்டும் பிரிட்டிஷ் சேனை இந்தியாவில் இருந்துகொண்டிருக்கும்.

## ஐரோப்பியர் விஷயம்

மஹாத்மா காந்தியடிகளும் காங்கிரஸ் காரியக் கமிட்டியாரும் சட்டசபைகளிலுள்ள ஐரோப்பியர்கள் அரசியல் நிர்ணய சபைக்கு நடத்தப்படும் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது என்று கூறியதைக் கேட்டதும் ஐரோப்பிய சங்கத்தின் தலைவர் நாங்கள் அபேட்சகராக

நிற்கமாட்டோம், ஆனால் மற்ற அபேட்சகர்களுக்கு ஓட்டுச் செய்வோம் என்று அபிப்பிராயம் தெரிவித்தார்.

அதைக் கண்டதும் காந்தியடிகள்—" இவருடைய நியாயமற்ற வாதமானது தூதுகோஷ்டியாருடைய அந்தரங்க சுத்தியை நம்பமுடியாமற் செய்கிறது. ஐரோப்பியர்களுக்கு சட்டசபைகளில் இருக்க உரிமை யேது? அவர்கள் வங்காளச் சட்டசபையிலும் அஸ்ஸாம் சட்டசபையிலும் இருந்து இதுவரை சாதித்த தென்ன ? இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து வைக்கும் புண்ணிய கைங்கரியத்தைத் தவிர வேறென்ன செய்தார்கள் ? இப்பொழுது அரசியலை வகுக்கும் காரியத்திலும் அவர்கள் தாராளமாக உதவி செய்ய வருகிறார்களாம். இந்தியாவிலுள்ள கோடானுகோடி வாயில்லாப் பூச்சிகளின் சங்கை நெரிப்பதைத் தவிர வேறென்ன உதவிசெய்துவிடப் போகிறார்கள் ? இந்தத் துன்பங்கள் இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடித்திருக்குமோ? இந்த அநீதியை நீக்காவிட்டால் எப்படி அரசியல் நிர்ணய சபை என்னும் தோணி வெற்றிகரமாகப் பிரயாணம் செய்ய முடியும்?" என்று ஹரிஜன் பத்திரிகையில் எழுதினார்.

ஐரோப்பியர்களுக்கு இவ்விதம் அரசியல் நிர்ணய சபைக்கு நடக்கும் தேர்தலில் ஓட்டுச் செய்யவோ அபேட்சகராக நிற்கவோ தூதுகோஷ்டித் திட்டம் உரிமை அளிக்கின்றதா என்று இந்தியாவிலுள்ள மிக முக்கியமான சட்ட நிபுணர்களாகிய சிவ நாராயணன், கே. எம். முன்ஷி, அல்லாடி கிருஷ்ணசுவாமி ஐயர், பகதூர்ஜி, டேக்சந்த் ஆகியவர்களுக்கு எழுதிக் கேட்டார்.

" இந்தியாவுக்கு அரசியல் வகுக்கும் உரிமை இந்தியர்களுக்கே உண்டு, இந்தியரல்லாதவர்களுக்குக் கிடையாது, அதனால் ஐரோப்பியர்கள் அரசியல் நிர்ணய சபைத்

தேர்தலில் அபேட்சராக நிற்கவுமுடியாது, மற்ற அபேட்ச கர்களுக்கு ஓட்டுச் செய்யவும் முடியாது" என்று அவர்க ளெல்லோரும் ஏக மனதாக அபிப்பிராயம் அறிவித்தார் கள்.

அதன்மேல் சட்ட சபைகளிலுள்ள ஐரோப்பிய அங்கத்தினர்கள் அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் எந்த விதத்திலும் கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்தார்கள்.

# இடைக்கால சர்க்கார்

அதன்பின் இடைக்கால சர்க்காரைப்பற்றி காங்கிரஸ் கமிட்டியாருக்கும் வைஸ்ராய்க்கு மிடையில் கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டு இருந்தது. தூது கோஷ்டியாரும் வைசிராயும் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் இடையில் இடைக்கால சர்க்கார் சம்பந்த மாக ஒரு ஒப்பந்தம் ஏற்படும்படிச் செய்ய முயன்ருர்கள். ஆனுல் அது பலன் பெறவில்லை. அதன்மேல் வைசி ராயும் தூது கோஷ்டியாரும் ஜூன் மாதம் 16ம் தேதி இடைக்கால சர்க்கார் சம்பந்தமாக ஒரு திட்டத்தையும் அந்த சர்க்காரில் அங்கத்தினர்களாக இருக்க வேண்டிய வர்களின் ஜாப்தாவையும் வெளியிட்டார்கள்.

அவர்கள் வெளியிட்ட திட்டத்தின் சாரம் வரு மாறு :—

(1) இடைக்கால சர்க்காரில் அங்கம் வகிப்பவர்கள் தூது கோஷ்டியின் அரசியல் நிர்ணய சபைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) அவர்கள் நிர்வகிக்கவேண்டிய விஷயங்கள் காங்கிரசுடனும் லீகுடனும் கலந்து முடிவு செய்யப்படும்.

(3) இந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டால் இடைக் கால சர்க்கார் ஜூன் 26ம் தேதி அமைக்கப்படும்.

(4) காங்கிரசோ லீகோ சேர மறுத்தால் தூது கோஷ்டித் திட்டத்தை ஒப்புக்கொள்ளும் கட்சிகளுடைய பிரதிநிதிகளடங்கிய இடைக்கால சர்க்காரை அமைக்க வைசிராய் ஏற்பாடு செய்வார்.

(5) அரசியல் நிர்ணய சபைக்கு மாகாணங்களில் தேர்தல் நடத்துமாறு கவர்னர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் சம்பந்தமாக காங்கிரஸ் அக்கிராசனருக்கும் வைசிராய்க்கு மிடையில் கடிதப் போக்குவரத்து நடந்தது. ஜின்னு சாகேப் சில கேள்விகளை வைசிராய்க்கு அனுப்பிவைத்தார். வைசிராய் அந்தக் கேள்விகளையும் அவற்றுக்கு அவர் எழுதிய பதில்களையும் காங்கிரஸ் அக்கிராசனர் மௌலானு ஆசாதுக்கு அனுப்பி வைத்தார்.

### காங்கிரஸ் கருத்து

இவைகளை எல்லாம் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் வெகு கவனமாகப் பரிசீலனை செய்தார்கள். தூது கோஷ்டியாருடைய அரசியல் நிர்ணய சபைத் திட்டத்தைச் செயல் முறையில் பரீக்ஷை செய்து பார்க்க விரும்பிய போதிலும் இடைக்கால சர்க்கார் திட்டமானது தேசீய ஸ்தாபனமான காங்கிரஸ் மஹா சபையை ஒரு வகுப்பு ஸ்தாபனமாக ஆக்கிவிடக் கூடியதா யிருந்தபடியால் அதை அப்படியே ஏற்றுக்கொண்டால் அரசியல் நிர்ணய சபை வேலையும் சரிவர நடைபெருது, தேசீய முஸ்லிம்களை கைவிட்டதாகவும் ஆகும் என்று எண்ணினுர்கள்.

காங்கிரஸ் மகாசபை தேசீய ஸ்தாபனமாகவே இருந்து வருவதாலும் முஸ்லிம் லீகில் சேராத ஐந்து பெரிய முஸ்லிம் ஸ்தாபனங்கள் இருப்பதாலும் அவைகள் எல்லாம் காங்கிரஸையும் தேசீயத்தையுமே ஆதரிப்பதாலும் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் இடைக்கால சர்க்காரில் தேசீய முஸ்லிமையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினுர்கள்.

## ஜின்னு கருத்து

ஆனால் ஜின்னு சாகேப் இதற்குச் சம்மதிக்கவில்லை. லீக் முஸ்லிம்களைத் தவிர தேசீய முஸ்லிமோ, காங்கிரஸ் முஸ்லிமோ, இரண்டிலும் சேராத முஸ்லிமோ எவரையும் நியமிக்கக்கூடாது என்று கூறினுர்.

அப்பொழுது காங்கிரஸ் கமிட்டியார் தங்களுக்குக் கிடைக்கும் ஸ்தானங்களில் ஒன்றை தேசீய முஸ்லிமுக்குக் கொடுப்பதாகக் கூறினுர்கள். அதுகூட ஜின்னுவால் தாங்க முடியவில்லை. என்னைத் தவிர வேறு யாரும் முஸ்லிம்களை நியமிக்க நான் சம்மதிக்க மாட்டேன் என்று பிடிவாதம் செய்தார்.

அதனுல் பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியார் நம்முடைய முயற்சி எல்லாம் பயன் தராமல் போய்விடும் போல் இருக்கிறதே என்று கவலையுற்றுர்கள். இந்தச் சமயம் யார் உதவி செய்வார் என்று ஆலோசித்துப் பார்த்து இந்தியா மந்திரி பெத்விக் லாரன்ஸ் பிரபுவும் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸுும் "நீங்கள் வந்துதான் நிலைமையைச் சீர்செய்து தரவேண்டும்" என்று ராஜாஜிக்கு எழுதினுர்கள். அப்போது காங்கிரஸ் அக்ராசனராக இருந்த மௌலானு அபுல்கலாம் ஆஸாதும் ராஜாஜியை உடனே டில்லிக்குப் புறப்பட்டு வருமாறு தந்தி கொடுத்தார். ராஜாஜி அந்த அழைப்புக்களை ஏற்றுக் கொண்டு டில்லி சென்றுர்.

## காங்கிரஸ் தீர்மானம்

அவரும் ஸர்தார் படேலும் செய்த முயற்சிகளின் பலனுகக் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் "பிரிட்டிஷ் தூது கோஷ்டியின் நீண்டகால அரசியல் நிர்ணய சபைத் திட்டத்தை ஒப்புக்கொண்டு இடைக்காலத் திட்டத்தை

நிராகரித்து விடுவது" என்ற தீர்மானத்தை ஜூன்மாதம் 25-ம் தேதி நிறைவேற்றினார்கள்.

அந்தத் தீர்மானத்தின் சாரம் வருமாறு :—

### அரசியல் நிர்ணய சபை

(1) அரசியல் நிர்ணய சபைத் திட்டம் காங்கிரஸின் லட்சியங்களை நிறைவேற்றக் கூடியதாக யில்லை.

(2) மாகாணத் தொகுதி முறை சீக்கியர்களுக்கும், அஸ்ஸாமுக்கும், எல்லைப்புற மாகாணத்துக்கும், நியாயம் வழங்குவதாக இல்லை.

(3) ஆயினும் அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டு சுதந்திர இந்திய அரசியலை வகுக்கத் தீர்மானிக்கிறார்கள்.

### இடைக்கால சர்க்கார்

(4) ஆனால் இடைக்கால சர்க்காருக்கு பரிபூரண சுதந்திர அந்தஸ்து அளிக்கப்படாததாலும் காங்கிரஸின் தேசீயத் தன்மைக்கு முரணாகயிருப்பதாலும் காங்கிரஸ் கமிட்டியார், இடைக்கால சர்க்கார் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

(5) இடைக்கால சர்க்கார் தகுந்த முறையில் அமைக்கப்படாவிட்டால் அரசியல் நிர்ணய சபை வேலை ஒழுங்காக நடைபெறாது என்று கருதுகிறார்கள்.

"இந்த விதமான நல்ல முடிவு ஏற்படுவதற்கு நமது சென்னை மாகாணத் தலைவர் ராஜாஜி பெரிதும் காரணமாயிருந்தார் என்பது குறித்துப் பெருமையுடன் தலைநிமிர்ந்து நடக்க நமக்கு உரிமை உண்டு" என்று "கல்கி" எழுதியது முற்றிலும் உண்மையாகும்.

## முஸ்லிம் லீக் தீர்மானம்

காங்கிரஸ் கமிட்டி இவ்விதம் தீர்மானம் செய்யவே முஸ்லிம்லீக் நீண்டகாலத் திட்டத்தையும் இடைக்காலத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்வதாகக் கூறிற்று. காங்கிரஸ் சேராவிட்டால் என்ன, ஒரு கட்சி சேராவிட்டாலும் இடைக்கால சர்க்கார் அமைப்பதை நிறுத்திவிட மாட்டேன் என்று வைஸிராய் கூறினரே, அதனால் நாம் பதவி ஏற்று ராஜ்யாதிகாரம் நடத்துவோம் என்று எண்ணி தாங்கள் இடைக்கால சர்க்காரை அமைக்கத் தயாராக இருப்பதாக வைஸிராயிடம் அறிவித்தார்கள். ஆனால் இடைக்கால சர்க்காரில் சேர முடியாது என்று கூறிய கட்சி சிறிய கட்சியா? அல்லது அலட்சியம் செய்ய கூடிய அளவு செல்வாக்கில்லாத கட்சியா? தேசத்தில் மகாப் பெரிய கட்சியாகவுள்ள காங்கிரஸ் கட்சியல்லவா? அதை விட்டு விட்டு எப்படி இடைக்கால சர்க்கார் அமைக்க முடியும்? அதனால் காங்கிரஸ் கேட்ட நியாயமான உரிமையைத்தர முஸ்லிம்லீக் மறுத்து விட்டதால் வைஸிராய் எண்ணியபடி இடைக்கால சர்க்காரை அமைக்க முடியாமல் போய்விட்டது.

## வைசிராய் அறிக்கை

இடைக்கால சர்க்கார் அமைக்க முடியாது போனது குறித்து தூது கோஷ்டியாரும் வைசிராயும் ஜூன் 25-ம் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டார்கள்.

அதன் சாரம் வருமாறு:—

(1) "காங்கிரஸ் சபையும் முஸ்லிம் லீகும் சமஸ்தானங்களும் அரசியல் நிர்ணயசபைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டதைக் கண்டு சந்தோஷமடைகின்றோம்.

(2) ஆனல் இடைக்கால சர்க்கார் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாதது வருத்தமாயிருக்கிறது. மூன்று மாதகாலம் அதிக வேலை பார்த்து விட்டதால் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடந்தபின்னரே மறுபடியும் இடைக்கால சர்க்கார் அமைக்க முயற்சி எடுத்துக்கொள்வார்கள். அதுவரை உத்தியோகஸ்தர்களைக் கொண்டு நிர்வாக சபை அமைத்து சர்க்கார் நடைபெறும்."

அப்படியே வைஸிராய் தற்காலிகமாக அதிகாரிகள் சர்க்காரை அமைத்து ராஜ்ஜியத்தை நடத்தலானர். பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியார் மூவரும் ஜூன் மாதம் 29-ம் தேதி இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்ருர்கள்.

## அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்

அதன்பின் எல்லா மாகாணங்களிலும் அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். காங்கிரஸ் காரியக் கமிட்டியார் காங்கிரஸ்காரர்களை மட்டும் தெரிந்தெடுக்காமல் சட்ட விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் நிபுணத்துவம் வாய்ந்த அறிஞர்களையும் தெரிந்தெடுக்குமாறு ஏற்பாடு செய்தார்கள்.

சீக்கியர்கள் மட்டும் அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்வதில்லை என்று கூறினார்கள். காங்கிரஸ் காரியக் கமிட்டியார் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு தேடித் தருவதாக உறுதி கூறினார்கள். அதன்மேல் சீக்கியர்களும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார்கள்.

## அ. இ. கா. கமிட்டி

அதன்பின் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஜூலை மாதம் 6, 7 தேதிகளில் பம்பாயில் புதிதாக தேர்ந்

தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அக்ராசனர் பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் காரியக் கமிட்டியார் ஜூன் 25-ந் தேதி செய்த தீர்மானத்தைப் பரிசீலனை செய்வதற்காகக் கூடியது.

மௌலானா ஆஸாத் அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளும்படியாகப் பிரேரித்து

"தூது கோஷ்டியின் திட்டத்தை ஏற்றுக் கொள்வதால் காங்கிரஸ் மகாசபை தன்னுடைய பரிபூரண சுதந்திர லட்சியத்தையும் நாட்டின் ஏகத்துவ லட்சியத்தையும் விட்டுவிட்டதாக எண்ண வேண்டாம். தூது கோஷ்டியார் பரிபூரண சுதந்தரம் தரவும் அதற்கான அரசியலை வகுக்க அரசியல் நிர்ணய சபை நடத்தவும் ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களுடைய மத்திய சர்க்கார்த் திட்டம் காங்கிரஸ் லட்சியத்துக்கு ஒத்ததாகவே இருக்கின்றது. தொகுதி முறைதான் நம்மால் பூரணமாக ஒத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. சேர வேண்டுமா சேர வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க மாகாணங்கட்கு உரிமை உண்டு என்றே நாம் வியாக்கியானம் கூறுகிறோம். நம்முடைய வியாக்கியானமே சரியானது என்பதில் சந்தேகமில்லை" என்று கூறினார்.

அதன்பின் தீர்மானத்தை ஆமோதித்த ஸர்தார் வல்லபாய் படேல்,

"அத்துடன் ராஜ்யாதிகாரம் சமாதான முறையில் இந்தியர் கைக்கு வருவதாக இருப்பதால் நாம் திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதும் அனுவசியமாக நாட்டைப் போராட்டத்தில் இறங்கிவிடக் கூடாது என்பதும் என்னுடைய திடமான எண்ணம். முஸ்லிம் லீகர்கள் பாகிஸ்தான் கிடைக்கும் என்று எண்ணுகிறார்கள். நாம் வேறுவிதமாக எண்ணுகிறோம். யார் எண்ணுவது

சரி என்பதை அரசியல் நிர்ணய சபையே முடிவு செய்யும்" என்று கூறினார்.

திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் முதலியவர்கள் தீர்மானத்தை எதிர்த்தார்கள். மகாத்மா காந்தியடிகள் மிகுந்த உற்சாகத்துடன் ஒரு மணி நேரம் பேசினார். அவர் பேசியதின் சாரமாவது :—

"அரசியல் நிர்ணய சபை ஜனங்களின் சட்டசபை அல்ல என்பதை நான் பரிபூரணமாக ஒப்புக் கொள்கிறேன். அதில் பல குறைகள் காணப்படுகின்றன. ஆனால் நீங்கள் அபாயத்தைக்கண்டு அஞ்சாத வீரர்கள். குறைகளிருந்தால் அவைகளை நீக்க வேண்டுமே அன்றி திட்டத்தை வேண்டாமென்று சொல்லிவிடக் கூடாது.

என்ன குறைகளிருந்தபோதிலும் திட்டத்தை வகுத்தவர்கள் உண்மையாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறிவிட வேண்டியதுதான் என்பதை அறிந்துகொண்டு விட்டார்கள். ஒழுங்கான முறையில் வெளியேறவே விரும்புகிறார்கள். அதற்குத் தக்கதாகவே இந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். இங்கிலாந்திலிருந்து இவ்வளவு தூரம் இங்கே பிரயாணம் செய்து வந்தது நம்மை ஏமாற்றுவதற்காகவே என்று கூறுவதை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்" என்று கூறினார்.

அதன்பின் மௌலானா ஆஜாத்

"முஸ்லிம் லீகர்கள் இந்தியாவை ஹிந்துஸ்தான் என்றும் பாகிஸ்தான் என்றும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் எனவும் இரண்டு ஸ்தானங்களுக்கும் தனித்தனியாக அரசியல் வகுப்பதற்காக இரண்டு அரசியல் நிர்ணய சபைகள் வேண்டும் எனவும் கூறி வந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் தாது

கோஷ்டித் திட்டத்தை ஒப்புக்கொண்டதன் மூலம் அவற்றைக் கைவிட்டு விட்டார்கள். இனிமேல் ஏகமான இந்தியாவும் ஒரே அரசியல் நிர்ணய சபையும் ஒரே மத்திய சர்க்காரும் தான். ஆதலால் நமக்குக் கிடைத்துள்ள வெற்றியைத் தோல்வியாகச் செய்து விடாதீர்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

இறுதியில் அக்ராசனர் நேரு

"நாம் அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்வதால் எந்தத் திட்டத்தையும் ஒத்துக்கொண்டு விட்டதாக எண்ண வேண்டாம். அரசியல் நிர்ணய சபைக்குச் சென்றபின் அங்கே சரியாக வேலை நடைபெறு விட்டால் நாம் வெளியே வந்து விடலாம். நம்மையாரும் தடுக்க முடியாது" என்று கூறினர்.

அதன்மேல் தீர்மானம் பெருவாரியான வோட்டுக்களால் நிறைவேறியது.

# முஸ்லிம் லீக் போர்முறை

இடைக்கால சர்க்காரை அமைக்காமல் நாட்டில் ஏற்பட்டுள்ள பஞ்ச நிலைமையைச் சமாளிக்கவும் முடியாது, அரசியல் நிர்ணயசபை வேலையைச் செய்யவும் முடியாது. ஆதலால் வைஸிராய் பலவாறு யோசித்துப் பார்த்து இறுதியில் இடைக்கால சர்க்காரை அமைக்கும் பொறுப்பை காங்கிரஸிடம் விட்டு விடுவதென்று தீர்மானித்தார்.

ஆதலால் வைசிராய் வேவல்பிரபு பண்டித நேருவை அழைத்து இடைக்கால சர்க்காரை அமைக்கும்படி வேண்டிக்கொண்டார். பண்டிதநேரு ஜின்னா சாகிபிடம் சென்று அவருடைய ஒத்துழைப்பை வேண்டினார். ஆனால் அவர் அதற்கு இணங்காமல் பழய பல்லவியையே பாடினார்.

அதன்மேல் பண்டித ஜவஹர்லால் நேரு இடைக்கால சர்க்கார் வைஸிராயின் பழய நிர்வாகசபை பேரால் இராமல் கூட்டுப் பொறுப்பில் வேலை செய்யும் மந்திரி சபையாகவே இருக்கவேண்டும் என்றும் வைஸிராய் தினசரி நிர்வாக வேலைகளில் தலையிடலாகாது என்றும் வைஸிராயிடம் கேட்டார். இதுதான் ராஜாஜி 1937ம் வருஷத்தில் மாகாணங்களில் மந்திரிசபை அமைக்கும் முன்பு கவர்னர்களின் நச்சுப் பற்களை விஷங்கொட்டாமல் இருக்கும்படி செய்த விதமாகும். வைஸிராய் காங்கிரஸின் யோசனையை ஏற்றுக்கொண்டார். பண்டித் நேரு இடைக்கால மந்திரி சபை அமைப்பில் ஈடுபடலானார்.

## ஜின்னு கோபம்

இதை அறிந்ததும் முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னு சாகேபுக்கு கோபம் பொங்கிவிட்டது. முஸ்லிம் லீக் கௌன்சிலைக் கூட்டினார். ஆவேசத்துடன் பிரசங்கம் செய்தார், பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் வாக்குறுதியை மீறி காங்கிரஸுடன் சேர்ந்து முஸ்லிம்களுக்கு விரோத மாகச் சதி செய்வதாகக் கூறினார். பிரிட்டிஷ் மந்திரிகளை முட்டாள்கள் என்றும் மோசக்காரர்கள் என்றும் திட்டினார்.

அவருடைய யோசனையின் பேரில் அந்தக் கௌன் ஸில் ஜூலை மாதம் 29ந் தேதியன்று மூன்று தீர்மானங் களை நிறைவேற்றிற்று. அவற்றின் சாரமாவது :—

(1) தூது கோஷ்டியின் திட்டத்தில் காணப்படும் நீண்டகால அம்சத்தையும் இடைக்கால அம்சத்தையும் நிராகரித்து விடவேண்டும்.

(2) பிரிட்டிஷ் சர்க்காரிடம் முஸ்லிம்கள் பெற் றிருந்த பட்டங்களை யெல்லாம் துறந்துவிட வேண்டும்.

(3) பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிராக நேரடியான போராட்டம் ஆரம்பிக்கவேண்டும். அதற்காக ஆகஸ்ட் 16ம் தேதியை "நேரடி நடவடிக்கைத் தினமாக" நாடெங்குமுள்ள முஸ்லிம்கள் கொண்டாட வேண்டும்.

பட்டங்களைத் துறக்கும்படி கூறிய தீர்மானப்படி முஸ்லிம்கள் பட்டங்களைத் துறந்தார்கள். ஆனால் 1921ம் வருஷத்தில் காங்கிரஸ் மகாசபை இதே மாதிரி யான "பட்டத்துறவு"த் தீர்மானம் செய்தபோது எப்படிப் பட்டதாரிகள் மடமடவென்று பட்டங்களைத் துறந்தார் களோ அப்படி அதிகமான முஸ்லிம்கள் பட்டங்களைத் துறந்து விடவில்லை.

பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் போவதாகக் கூறுகிருர்களே, உண்மையிலேயே அவர்களுக்குப் பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்துப் போராட தைரியமுண்டா? இதற்குமுன் என்றேனும் போராடி யிருக்கிருர்களா? போராடப் போவதாகப் பல முறை பயமுறுத்தி யிருக்கிருர்கள். அத்துடன் சரி அவர்களுடைய போராட்டம் எல்லாம். அவர்கள் போராட விரும்புவதெல்லாம் காங்கிரஸ்காரர்களையும் அவர்கள் ஆதரிக்கும் தேசிய முஸ்லிம்களையும்தான் என்பதில் சந்தேகம் கிடையாது.

வங்காளத்தில் முஸ்லிம் லீக் பிரதம மந்திரியா யிருக்கும் ஜனுப் சுஹறர்வர்த்தி "காங்கிரஸ்காரர்கள் இடைக்கால சர்க்கார் அமைத்தால் நாங்கள் வங்காளத்தில் பூரண சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொள்வோம்" என்று கூறிஞர்.

இந்தியாவில் முதன் முதலாக சுதந்திரப் போரை நடத்திய மாகாணம் வங்காளம்தான். ஆதலால் வங்காளத்திலேயே முதன் முதலாகப் பரிபூரண சுதந்திரம் ஸ்தாபிக்கப் போவது பொருத்தமே யாகும். ஆனல் ஜனுப் சுஹறர்வர்த்தி ஸ்தாபிக்கப் போவதாகக் கூறிய சுதந்திரம் எத்தகையது என்பது ஆகஸ்ட் 16ந் தேதி கல்கத்தாவில் நடந்த சம்பவங்களிலிருந்து தெளிவாக விளங்கிவிட்டது.

## கல்கத்தா அமளி

வங்காளத்திலும் சிந்திலும்தான் முஸ்லிம்லீக் மந்திரி சபைகள் நடைபெறுகின்றன. அதனல் அந்த இரண்டு மாகாணங்களிலும் மந்திரி சபைகள் ஆகஸ்ட் 16-ந் தேதி விடுமுறை நாள் என்று அறிவித்தார்கள்.

ஆனால் சிந்து மாகாண கவர்னர் முஸ்லிம்லீகிடம் மிகுந்த பரிவுடையவர். முஸ்லிம் லீகுக்குச் சட்டசபையில் மெஜாரிட்டி பலமில்லாதிருந்தும் அவருடைய தயவினாலேயே அது அங்கே உயிருடன் இருந்து கொண்டிருக்கிறது. ஆயினும் அவருக்கு 16-ந்தேதி விடுமுறை விடுவது பிடிக்கவில்லை. ஐ. ஸி. எஸ் காரரா யிருந்து அனுபவம் பெற்றவராதலால் அனர்த்தங் கள் ஏற்படும் என்று அறிவார். ஆதலால் அவர் பிரதம காரியதர்சி மூலம் விடுமுறை விடுவது சட்டவிரோத மானது என்று கூறி ரத்துசெய்தார். அதனால் அந்த மாகாணம் அட்டூழியங்களுக்கு ஆளாகாமல் பிழைத்துக் கொண்டது.

ஆனால் வங்காள கவர்னரோ இவ்விதம் அறிவோடும் தைரியத்தோடும் நடந்துகொள்ளவில்லை. வங்காளச் சட்டசபையிலுள்ள தேசீய வாதிகள் எல்லோரும் விடுமுறை விடுவது கூடாது, விடுமுறை அளித்தால் கலகங்கள் உண்டாக அதிக வசதியா யிருக்கும் என்று கூறினார்கள். ஐரோப்பிய மெம்பர்களும் அப்படியே கூறினார்கள். ஆனால் பிரதம மந்திரி சுஹர்வர்த்தி அவர்கள் கூறிய எச்சரிக்கைக்குச் செவிசாய்க்காமல் இருந்துவிட்டார்.

அதன்பின் முஸ்லிம் லீகர்கள்

" இந்த மாதம்தான் ரம்ஜான் மாதம். இந்த மாதத்தில்தான் குர்ஆன் வெளியிடப்பட்டது. இந்த மாதத்தில்தான் மகமது நபிநாயகம் ஆனார். இந்த மாதத்தில்தான் மெக்காவில் இஸ்லாம் மதவிரோதிகள் வேரறுக்கப் பட்டார்கள். இந்தமாதத்தைத்தான் பாக்கிஸ்தானுக்காக போர்துவக்குவதற்கு அகில இந்திய முஸ்லிம் லீக் தேர்ந்தெடுத்திருக்கிறது " என்று நகரமெங்கும் துண்டுப் பிரசுரங்களை வழங்கினார்கள்.

பச்சை நிறச் சட்டைகள் அணிந்த முஸ்லிம் லீகர்கள் லாரிகளில் ஏறிக்கொண்டு " தர்ம யுத்தம் " என்றும்

"பாக்கிஸ்தான்" என்று கோஷித்துக்கொண்டு நகர முழுவதும் சுற்றிவந்தார்கள்.

ஆகஸ்ட் 16-ந்தேதி யன்று காலையில் முஸ்லிம்கள் ஆயிரக் கணக்காகக் கூடி ஊர்வலம் வந்தார்கள். அவர்கள் கையில் நீண்ட கம்புகளும் இரும்புத் தடிகளும் கூர்மையான ஆயுதங்களும் வைத்திருந்தார்கள். போகும் இடமெல்லாம் அக்கிரமங்கள் செய்து கொண்டேபோனார்கள். எந்தயிடத்திலும் போலீஸ் காணப்படவில்லை. இறுதியில் நண்பகல் நேரத்தில் பொதுக் கூட்டம் நடந்தது. அதில் தர்மயுத்தம் செய்யும்படியாக வெறிகொண்டு பேசினார்கள்.

அதன்பின் மறுபடியும் தெருக்களில்சென்று அட்டூழியங்கள் செய்தார்கள். ஜனங்கள் டெலிபோன் மூலம் போலீஸ் உதவி கேட்டார்கள். ஆனால் அதை யாரும் லட்சியம் செய்யவில்லை.

அதன்பின் ஹிந்துக்களுக்கும் கோபாவேசம் உண்டாய்விட்டது. எங்கு பார்த்தாலும் கொலையும் கொள்ளையும் நெருப்பு வைப்பதும் நடக்கலாயின. அதைக் கண்ட பின்தான் லீக் மந்திரிசபையார் இராணுவத்தையும் போலிஸையும் கொண்டுவந்தார்கள். இறந்தவர்கள் 6 ஆயிரம், காயமடைந்தவர்கள் 15 ஆயிரம், பொருள் நஷ்டம் 5 கோடி ரூபாய் இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

இதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. ஹிந்துக்கள் எதிர்க்க ஆரம்பித்த பிறகுதான் ராணுவமும் போலீசும் தலையிட்டது ஒன்று. ஐரோப்பியர்களுக்கும் ஆங்கிலோ - இந்தியர்க்கும் கிறிஸ்தவர்க்கும் எவ்விதத் தீங்கும் இழைக்கப்படாதது ஒன்று. இதிலிருந்து ஜின்னா பிரிட்டிஷ் சர்க்காருக்கு விரோதமாகவே நேரடியான

எதிர்ப்பு செய்யப் போவதாகச் சொன்னது உண்மை யில்லை என்பது விளங்கும்.

இதுமட்டுமன்று. பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்து நேரடியான எதிர்ப்பு நடத்தியிருந்தால் வங்காள கவர்னர் உடனேயே ராணுவத்தையும் போலீஸையும் உபயோகித்திருக்க மாட்டாரா? காங்கிரஸ்காரர்கள் 1942 ஆகஸ்டில் பிரிட்டிஷ் சர்க்காருக்கு விரோதமாகப் போராட்டம் நடத்தவுமில்லை, நடத்தப் போவதாகக் கூறவுமில்லை. அப்படியிருந்தும் அரசாங்கம் போலீஸையும் ராணுவத்தையும் காங்கிரஸ்காரர்கள் மீதும் ஜனங்கள் மீதும் அவிழ்த்து விட்டுவிடவில்லையா? இதிலிருந்தும் ஜின்னு போர் துவக்கியது பிரிட்டிஷ் சர்க்கார் மீது அன்று என்பதும் காங்கிரஸ்காரர்மீதும் ஹிந்துக்கள்மீதுமே என்பதும் வெட்ட வெளிச்சமாக விளங்குகின்றன.

கல்கத்தாவில் நடந்தது போலவே பம்பாய் முதலிய வேறு சில நகரங்களிலும் ஆகஸ்ட் 16-ந் தேதி கலவரங்கள் நடைபெற்றன. ஆனால் அவைகள் எல்லாம் கல்கத்தாவில் நடந்தது போல அவ்வளவு கோரமாக நடைபெறவில்லை. அத்துடன் அவைகள் அதிசீக்கிரத்தில் அடக்கப்பட்டும் போயின. அங்குள்ள காங்கிரஸ் சர்க்கார்கள் அப்படி ஏதேனும் நடைபெறக்கூடும் என்று எண்ணி முன் கூட்டியே போலீஸையும் ராணுவத்தையும் தயாராக வைத்திருந்தார்கள்.

## காந்திஜி கருத்து

சிந்து மாகாணத்திலுள்ள முஸ்லிம் லீக் மந்திரிகளும் தலைவர்களும் பச்சை பச்சையாக பலாத்காரத்தைப் போதித்துக் கொண்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

இவைகளை எல்லாம் கண்டதும் காந்தியடிகள்,

"நேரடியான எதிர்ப்பு என்றால் என்ன என்பதையும் அதை எப்படி நடத்துவார்கள் என்பதையும் கல்கத்தா நகரம் கண்முன்னால் நிதர்சனமாகக் காட்டிவிட்டது. இந்தப் பலாத்காரச் செயல்களால் லாபம் அடைந்தவர் யார்? சாதாரணமான முஸ்லிம் பாமர ஜனங்களும் அல்லர், உண்மையாக இஸ்லாம் மதத்தை அனுஷ்டிப்பவர்களும் அல்லர். எந்தவிதமான பாக்கிஸ்தானத்தையும் முட்டாள்தனமாகப் பலாத்காரத்தை உபயோகிப்பதின் மூலம் பெற்றுவிட முடியாது. அறிவில்லாமல் செய்யும் பலாத்காரம் சாதிக்கக் கூடியதெல்லாம் அன்னிய அரசாட்சியின் வாழ்நாளை அதிகக் காலம் நீடிக்கச் செய்வதே ஆகும்.

நான் முஸ்லிம் லீக்கிடம் மரியாதையுடன் சொல்லிக் கொள்வது யாதெனில் பிரிட்டிஷாரையும் ஹிந்துக்களையும் பகைவர்களாகக் கருதுவதும் நேரடியான நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாகப் பயமுறுத்துவதும் சரியில்லை என்பதும் அது தர்க்க ரீதிக்குப் பொருந்த மாட்டாது என்பதுமாகும். முஸ்லிம் லீக் ஏககாலத்தில் இரண்டு குதிரைகளின்மீது சவாரிசெய்ய முடியாது. பிரிட்டிஷாரோடு ஒத்துழைப்பதில்லை என்று கூறினால் தேசமக்களோடு ஒத்துழைப்பது என்றே அர்த்தமாகும். அவர்கள் ஏன் ஒத்துழையாமையை மேற்கொள்ள வேண்டும்? காங்கிரஸ் ஒருநாளும் முஸ்லிம்களுக்கு விரோதமாகப் பிரிட்டரோடு சேர்ந்து கொள்ளாது. முஸ்லிம் லீக்கின் கொள்கை இஸ்லாம் மதத்திற்கு முரண்பட்டது என்றுகூடச் சொல்வேன். ஏதேனும் சச்சரவு ஏற்பட்டால் முதலில் பரஸ்பரம் விவாதித்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அது முடியாவிட்டால் மத்தியஸ்தத்துக்கு விட்டு அதன் தீர்ப்புப்படி நடந்துகொள்ள வேண்டும். அதுதான் நியாய

மான முறை" என்று ஹரிஜன் பத்திரிகையில் எழு தினர்.

### "ஸ்டேஸ்மன்" கருத்து

கல்கத்தாவிலுள்ள "ஸ்டேஸ்மன்" என்னும் பத்திரிகை பிரிட்டிஷாருடையது. அது எப்பொழுதும் முஸ்லிம் லீக்கையே ஆதரித்து வருவது. பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டியார் வந்திருந்தபொழுது முஸ்லிம்லீகை விசேஷமாக ஆதரித்ததை எல்லோரும் அறிவர். ஆதலால் அந்தப் பத்திரிகை கல்கத்தாவில் நடந்த கலவரங்களைப்பற்றிக் கூறுவதை பாரபட்சமாகக் கூறுகிறது என்று யாரும் சொல்லமுடியாது. அது ஆகஸ்ட் 18-ந் தேதி எழுதியது:—

"வங்காள சர்க்கார் ஆகஸ்ட் 16ந்தேதி விடுமுறை அளித்து இந்த அனர்த்தங்களை ஏற்படும்படி செய்து விட்டார்கள். அவைகள் நடவாத வண்ணம் அவர்கள் முன் கூட்டி எவ்வித ஏற்பாடும் செய்யாமல் இருந்து விட்டார்கள். அட்டூழியஞ் செய்தவர்களுக்கு எப்படி வாகன வசதிகள் கிடைத்தன? முன் கூட்டியே தரப் பட்டிருந்தன என்பதை எளிதில் மறுத்துவிட முடியாது.

இந்தியாவில் இரண்டு முஸ்லிம் லீக் மந்திரி சபைகளே நடைபெறுகின்றன. அவற்றுள் சிந்து மிகச் சிறியது. வங்காள மந்திரி சபை பெரியது. அதனால் அவர்கள் அன்று எவ்வித அக்கிரமமும் நடவாமல் கவனித்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆனல் அவர்கள் எதுவுமே செய்யாமல் இருந்து தங்கள் கட்சிக்கு இழிவு தேடிவிட்டார்கள்."

### காங்கிரஸ் தீர்மானம்

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் கூடி கல்கத்தா கலவரத்தைப்பற்றி ஆராய்ந்து ஒரு தீர்மானம் நிறை

வேற்றினார்கள். அதன் சாரம் வருமாறு :—

"வங்காள சர்க்கார் ஆகஸ்ட் 16ம் தேதி விடுமுறை நாள் என்று கூறியதால் 16ம் தேதிக் கொண்டாட்டத்தில் சேராதவர்களுக்குச் சர்க்கார் பாதுகாப்புக் கிடையாது என்று எண்ணும்படியாக ஆகிவிட்டது.

சாதாரணமாக முகரம் முதலிய விழாக்காலங்களில் ஊர்வலத்துடன் போலீஸ்காரர்கள் செல்வது வழக்கம். ஆனால் ஆகஸ்ட் 16ந்தேதி அப்படிச் செல்லவில்லை. அது மட்டுமன்று, போலீஸாரிடம் உதவி கேட்டபொழுது அவர்கள் உதவி செய்யவுமில்லை. சில இடங்களில் போலீஸ் கூடக் கொள்ளையிடுவதில் கலந்து கொண்டது.

ஹிந்துக்கள் எழுந்த பின்னரே இராணுவமும் போலீஸும் அழைக்கப்பட்டன. ஆதலால் உடனே அங்கு நடந்த சம்பவங்களைப்பற்றி விசாரணை நடத்த வேண்டும்.

வகுப்புப் பிரச்னையைப் பயமுறுத்தலாலும் பலாத்காரத்தாலும் தீர்க்க முடியாது. நட்பு முறையில் விவாதிப்பதாலும் அவசியப்பட்டால் மத்யஸ்தத்தாலுமே தீர்க்க முடியும்."

ஆம், மத்யஸ்தத்தால் தான் தீர்க்க முடியும், அதற்கு காங்கிரஸ் எப்பொழுதும் தயாராக இருக்கிறது. அதைப் பல தடவை பகிரங்கமாகக் கூறியும் ஆய்விட்டது. அது தான் நியாயமான முறை என்பதை நிதானமாக ஆராய்கிறவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அப்படியானால் ஜின்னா சாகேபுக்கும் முஸ்லிம் லீகுக்கும் "மத்யஸ்த முறை" கசப்பாய் இருப்பதேன்?

மத்யஸ்தத்துக்கு விடுவதற்கு ஏதாவது நியாயமான குறைகள் இருந்தால் தானே? இந்துக்கள் முஸ்லிம்களை அழித்து விடுவார்கள், காங்கிரஸ்காரர்கள் ஆட்சி செய்து விடுவார்கள் என்று உண்மைக்கு விரோதமான விஷயங்

களைக் கூறுவதைத் தவிர அவருக்கு உண்மையில் மத்யஸ்தத்துக்கு விடத்தக்க விஷயங்கள் எதுவும் கிடையாது. காங்கிரஸ் மந்திரி சபை மீது 1939ம் வருஷத்தில் குறை கூறினரே, அதைச் சர்ச்சில் சர்க்கார் கூட ஏற்றுக் கொள்ளவில்லை யல்லவா? அப்படி இருக்க இப்பொழுது என்ன குறையை நியாயமானதாகக் காட்ட முடியும்?

# சுயராஜ்ய ஆரம்பம்

பண்டித ஜவஹர்லால் நேரு இடைக்கால சர்க்கார் அமைக்க ஜின்னு சாகேப் இணங்கி வராததால் காங்கிரஸ் காரியக்கமிட்டியாருடனும் காந்தியடிகளுடனும் கலந்து கொண்டு மந்திரி சபையை அமைத்தார். அதில் கீழ்க் கண்டவர்கள் மந்திரிகள் :—

1. பண்டித ஜவஹர்லால் நேரு
2. ஸர்தார் வல்லபாய் படேல்
3. ஸி. ராஜகோபாலாச்சாரியார்
4. ராஜேந்திர பிரஸாத்
5. ஆஸப் அலி
6. ஜகஜீவன் ராம்
7. டாக்டர் ஷாபத்கான்
8. சரத்சந்திர போஸ்
9. பலதேவ் சிங்
10. டாக்டர் மத்தாய்
11. ஸி. எச். பாபா
12. ஸையத் அலி ஜஹீர்

இவர்களில் ஜகஜீவன் ராம் ஹரிஜனர். பலதேவ் சிங் சீக்கியர். டாக்டர் மத்தாய் கிறிஸ்தவர். ஸி. எச். பாபா பார்ஸி.

பண்டித நேரு பிரதம மந்திரியானார். இவர்கள் செப்டம்பர் மாதம் 2ம் தேதி பதவி ஏற்றார்கள்.

25 வருஷ காலமாக இங்கிலீஷ் சர்க்காருடன் இடைவிடாமல் போராடிய வீரர், ஒன்பது முறை அரசாங்கத்

தின் சட்டங்களை மீறி சிறை புகுந்த வீரர், அந்த ஒன்பது தடவைகளிலும் மொத்தமாகப் பத்து வருஷம் இரண்டு மாதம் சிறைச்சாலையில் தாய் நாட்டின் விடுதலைக்காகத் தவங்கிடந்த பெரியார், தமக்குப்பின் வாரீசாக காந்தியடிகளால் கருதப்பட்ட தேச பக்தர், இத்தகைய பண்டித ஜவஹர்லால் நேரு புது தில்லியிலுள்ள சர்க்கார் மாளிகையில் வீற்றிருந்து சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரி ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார். அவரைப் போலவே வாழ்நாளெல்லாம் ஆங்கில அரசாங்கத்துக்கு பரம விரோதிகளாய் இருந்து போராடி சிறையில் பல வருஷங்களைக் கழித்த சர்தார் படேல், ராஜாஜி, ராஜேந்திர பாபு முதலியவர்கள் இந்தியாவை ஆளும் அரசாங்க அதிகாரத்தை ஒப்புக்கொண்டார்கள்.

## காந்திஜி கருத்து

அன்று அதிகாலையில் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்த பொழுது காந்தியடிகள் எழுந்திருந்து இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் புதிய மந்திரிகள் செய்ய வேண்டிய கடமை என்ன என்பதைப் பற்றி பண்டித ஜவஹர்லாலு நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கூறியதின் சாரமாவது :—

" இன்று இந்து தேச சரித்திரத்தில் மிகவும் விசேஷமான நாள். இந்த தினத்தைக்காண இந்தியா தேசம் எவ்வளவோ காலமாகக் காத்துக் கொண்டிருந்தது. ஆயினும் பூரண சுதந்திரம் கிடைத்து விட்டதாக எண்ண வேண்டாம். இது அந்த ஏணியில்முதல் படி மட்டுமேயாகும்.

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இரண்டு மூன்று நூற்றுண்டுகளாக இருந்து வந்த சச்சரவைச்

சமாதானமான முறையில் தீர்த்து வைக்க முடிவு செய்திருப்பதற்காகப் பிரிட்டிஷ் சர்க்காருக்கு வந்தனமளிக்கின்றேன். அந்த சர்க்கார் இதற்கு முன் என்ன செய்திருந்தாலும் பழைய தவறுகளை எடுத்துக்கூறிக் கொண்டிருப்பதற்கு இது சமயமன்று.

அதிகாரம் முழுவதும் இன்னும் நம் கைக்கு வந்து சேரவில்லை. வைஸ்ராயும் இருக்கிறார். சேனையும் இருக்கிறது. நம்முடைய முடிசூடா மன்னரும் முதல் பிரதம மந்திரியுமான பண்டிட் நேருவும் அவருடைய சகாக்களும் கடமைகளைச் சரியாகவும் பரிபூரணமாகவும் நிறைவேற்றுவார்களானால் அதிகாரம் முழுவதும் காலதாமதமின்றிச் சீக்கிரத்திலேயே கைக்கு வந்து சேர்ந்துவிடும் என்று எண்ணுகின்றேன்.'' என்று கூறினார்.

இப்படி 300 வருஷ காலமாக இரும்பை யொத்த இங்கிலீஷ் ஆட்சியின்கீழ் அடிமைகளிலும் அடிமைகளாக உழைத்து வந்த 40 கோடி இந்திய மக்கள் காந்தியடிகளின் அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடித்து சொற்ப தியாகத்தின் மூலமாகச் சுலபமாகப் பூரண சுதந்திரம் பெற்றுவிட்டது உலக சரித்திரத்தில் எங்கும் கண்டிராத ஒரு அற்புதமேயாகும். அதனாலேயே இந்த நற்செய்தியைக் கேட்டதும் நமது நாமக்கல் கவிஞர்,

அச்சமற்ற வீரனாகி அறிவின்மிக்க பெருமையால்
அகிலதேச நேசமுற்ற ஆண்மையுள்ள ஜவஹரும்

கோச்சையற்ற நேர்மைவாழ்வு கொண்டுஎங்கும் யாவரும்
கும்பிடத் தகுந்தவல்ல பாய்படேலாம் தீரனும்

உச்சமாகும் கருணைவாழ்வில் உள்ளம்ஊன்றி நின்றிடும்
உயர்குணத்தின் பெயர்படைத்த ராஜன்பாபு ஒருவனும்

இச்சையற்ற கர்மயோகி இணையில் ராஜதந்திரி
எங்கள் ராஜாஜியென்று எவரும்போற்றும் தமிழனும்
சேர்ந்துசெய்யும் ராஜரீகம் நேர்ந்தஇந்த சேதிதான்
ஜெகதலத்தை மகிழ்வுகொள்ளச் செய்யவந்த புதுமையாம்
மனிதருக்குள் மனிதனென்னும் மகிமைபெற்ற மகரிஷி
மண்டலத்தில் கண்டிலாத தொண்டுசெய்யும் மன்னவன்
புனிதருக்குள் புனிதன்என்ற வாழ்க்கையுள்ள புண்ணியன்
புண்எவர்க்கும் எண்ணிடாத கண்ணியத்தின் புகலிடம்
தனியன்கர்ம பக்திராஜ ஞானயோகத் தவசியாம்
தலைவன்எங்கள் காந்திஎன்ற கற்பகத்தின் தருவின்ஓர்
கனிவிழுந்த தென்றுசொல்லத் தக்கதிந்தக் காட்சியே !
கடவுள்என்ற பொருளும்இன்று களிமிகுந்து துள்ளுதால் !

என்று அழகாகப்பாடி ஆனந்தக் கூத்தாடுகின்றார்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் மகஞ்சதரோ நாகரிகம் உச்சநிலையில் இருந்த காலத்தில் இந்தியா முழுவதும் தமிழரே ஆண்டு வந்ததாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அதற்குப் பின்பு அநேக நூற்றாண்டுகளாக அப்படியே இருந்ததாக நம்முடைய பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன. இப்போது மறுபடியும் தமிழனை டில்லியில் அரியாசனத்தில் தன்னுடைய சகோதரிகளுடன் சரிசமானமாக வீற்றிருக்கும் தெய்வீகக் காட்சியானது சகல தமிழ் மக்களுக்கும் அளவற்ற மகிழ்ச்சியைத் தருவதாகும். இனிமேல்,

ஏழைஎன்றும் அடிமைஎன்றும் எவருமில்லை ; ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பவ ரிந்தியாவில் இல்லையே ;
வாழிகல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் ஸமானமாக வாழ்வமே.

ஆனால் சிலர் இது உண்மையான சுதந்திரமாகுமா, இன்னும் பிரிட்டிஷ் சேனை இந்தியாவைவிட்டு வெளியேறவில்லையல்லவா என்று சந்தேகப்படுகிறார்கள்.

எலுமிச்சங்காய் ஊறுகாய் எல்லோரும் அறிவார்கள். ஊறுகாய் போட்ட அன்றோ அல்லது சில நாட்களிலோ அதைக் கழுவிப்பார்த்தால் எலுமிச்சங் காயின் வாசனையே தெரியும். உப்பின் வாசனையும் மிளகாயின் வாசனையும் அவ்வளவாகத் தெரியமாட்டா.

ஒன்றிரண்டு மாதங்கள் சென்றபின் கழுவிப் பார்த்தால் எலுமிச்சங்காய் வாசனையும் தெரியும், உப்பு மிளகாய் வாசனையும் தெரியும்.

ஆனால் ஒரு வருஷம் கழிந்தபின் ஊறுகாயை எத்தனைமுறை கழுவிப் பார்த்தாலும் எலுமிச்சங்காய் வாசனை எள்ளளவுகூடத் தெரியமாட்டாது, உப்பு மிளகாய் வாசனை மட்டுந்தான் தெரியும்.

அதேபோல்தான் அடிமையாகும் விஷயமும். அதிகக் காலம் அடிமையாயிருந்து விட்டபடியால் நாம் சுதந்திர வாசனையை அடியோடு மறந்துவிட்டோம். சூரியன் உதயமானாலும் குருடருக்கு எப்படி இருளாகவே தோன்றுமோ அப்படியேதான் இப்போது சுதந்திர சர்க்கார் ஏற்பட்டுங்கூட இன்னும் சிலர் இப்படிச் சந்தேகப்பட்டுக்கொண்டே இருக்கின்றனர்.

அதற்குக் காந்தியடிகள் "ஆம், இன்னும் பரிபூரண சுதந்திரம் அடைந்துவிடவில்லை என்பது உண்மைதான். ஆனால் சுதந்திர தேவியின் ஆலயத்தின் வாசல் திறந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியாக உபயோகித்துக் கொண்டால் நம்முடைய லட்சியம் சித்தியாய் விடும் என்பதில் சந்தேகமில்லை" என்று கூறுகிறார். ஆம்,

பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்,
புன்மை யிருட்கணம் போயின யாவும்

என்பது உண்மையே. சூரியன் உதயமாகி விடுவான். சுகவாழ்வு பெறுவோம். ஆதலால்,

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
பூமியிலெவர்க்குமினி அடிமை செய்யோம்-பரி
பூரணத்துக்கே யடிமை செய்து வாழ்வோம்.

வாழ்க நீ! எம்மான் இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!

வந்தே மாதரம்

ஜே ஹிந்த்

இடைக்கால
சர்க்காரில்
கலந்துள்ள



முஸ்லீம்
லீக்
அங்கத்தினர்கள்

ஜோகேந்திரநாத் மண்டல்



லியாகத் அலிகான்



சுந்திரிகர்



கஜ்னபர் அலிகான்



அப்துர் ராப் நிஷ்டர்

# அனுபந்தம்

## முஸ்லிம் லீக் வருகை

1946 செப்டம்பர் 2-ம் தேதியன்று தேசீய (இடைக் கால) மந்திரி சபையின் பதவி ஏற்பு வைபவம் வைஸிராயின் மாளிகையில் நடைபெற்றது. அன்றே சர்க்கார் காரியாலயங்களில் எல்லாம் பெரும் மாறுதல்கள் காணப் படலாயின. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சர்க்கார் பழைய நிர்வாக சபையன்று, உண்மையிலேயே தேசீய மந்திரி சபைதான் என்பது நிதர்சனமாக விளங்க லாயிற்று. பண்டித ஜவஹர்லால் நேரு அந்த மந்திரி சபையின் உபதலைவர் ஆனார். வைஸிராய் வேவல்தான் தலைவர் ஆனாலும் பேருக்கு மட்டும்தான். அத்துடன் சர்வ தேச விவகாரங்களிலும் நேரு செய்ய ஆரம்பித்த காரியங்கள் மின்னல் வேகத்தில் நடைபெறலாயின.

முஸ்லிம் லீக் சேராததால் இடைக்கால சர்க்கார் நன்றாக நடைபெறாது; நிர்வாகம் ஸ்தம்பித்துப் போகும் என்று ஜின்னா சாகேப் எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் தேசீய மந்திரி சபை நடந்துவரும் முறையையும் அடைந்துவரும் புகழையும் கண்டதும் அவர் என்ன செய்வது என்று திகைத்தார்.

உடனே வங்காள பிரதம மந்திரி ஜனாப் சுஹ்ரவர்த்தி ஜின்னா சாகேபிடம் போய் ஏதேதோ பேசி வந்தார். அதன்பின் போபால் சமஸ்தானாதிபதியாகிய நவாப் சாகேப் காங்கிரஸுக்கும் லீகுக்கும் சமரஸம் ஏற்படுத்தி

முஸ்லிம் லீகர்களும் இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொள்ளும்படி செய்வதற்கான முயற்சியை மேற்கொண்டார்.

இதன்பயனுக ஜின்னு சாகேப் அக்டோபர் 3-ம் தேதியன்று வேவல் பிரபுவுக்கு இடைக்கால சர்க்காரில் சேர்வதற்குத் தாம் கூறும் நிபந்தனைகளைக் குறித்து ஒரு கடிதம் எழுதினர்.

அந்த நிபந்தனைகள் வருமாறு.—

(1) நிர்வாக சபையில் 14 மெம்பர்கள் இருக்க வேண்டும்.

(2) காங்கிரஸ் ஒரு ஹரிஜன் மெம்பரை நியமிக்கலாம், ஆனுல் அதை ஊர்ஜிதப்படுத்தும் பொறுப்பு வைஸிராயைச் சேர்ந்தது.

(3) இப்போதுள்ள சிறுபான்மை வகுப்பாருடைய பிரதிநிதிகளாகவுள்ள மெம்பர்கள் பதவி இனிமேல் காலியானல் காங்கிரஸ், லீக் இரண்டு கட்சியாரிடமும் கேட்டே புதிதாக நியமிக்க வேண்டும்.

(4) இப்பொழுது அமைக்கும் ஏற்பாடு காங்கிரஸ், லீக் இரண்டு கட்சியாருடைய சம்மதத்தின் பேரிலேயே மாற்றப்பட வேண்டும்.

(5) காங்கிரஸ் எந்த முஸ்லிமையும் நியமிக்கக் கூடாது.

(6) முக்கியமான வகுப்புப் பிரச்னை விஷயத்தில் ஹிந்து மெம்பர்களின் மெஜாரிட்டியோ முஸ்லிம் மெம்பர்களின் மெஜாரிட்டியோ ஆட்சேபித்தால் அதைப்பற்றி முடிவு செய்யக்கூடாது.

(7) உப தலைவர் பதவி காங்கிரஸுக்கும் லீகுக்கும் மாறி மாறி அளிக்கப்பட வேண்டும்.

(8) முக்கியமான இலாக்காக்களை காங்கிரஸுக்கும் லீகுக்கும் சரிசமமாகப் பங்கிட்டுத் தரவேண்டும்.

(9) அரசியல் திட்டத்திலுள்ள நீண்டகால அம்சத்தை ஏற்கும் விஷயத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

வைஸிராய் வேவல் பிரபு இந்த நிபந்தனைகளில் முதல் நான்கையும் ஏற்றுக் கொண்டார். அதில் தர்க்கத்துக்கு இடமான விஷயம் எதுவுமில்லை. ஆனால் ஜின்னா சாகேப் கூறும் மற்ற ஐந்து நிபந்தனைகளும் நியாயமில்லாதவை.

முஸ்லிம் லீக்தான் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதி என்பதை வேவல் பிரபு ஸிம்லா மகாநாட்டின் சமயத்திலேயே ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார் அல்லவா ?

இடைக்கால சர்க்கார் பழய நிர்வாக சபை போலவே இருக்க வேண்டும் என்று ஜின்னா விரும்பியபோதிலும் வேவல் பிரபு அதைக் கூட்டு மந்திரி சபையாக இருக்க வேண்டுமென்றே கூறினார்.

அதனால்தான் கூட்டு மந்திரிசபை எதையும் ஒன்று சேர்ந்து முடிவு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார்.

காங்கிரஸே பெரிய கட்சி; அதற்கே ஆறு ஸ்தானங்கள்; அதுவே இடைக்கால சர்க்காரை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது; அது அழைத்தபோது முஸ்லிம் லீக் ஒத்துழைக்க மறுத்துவிட்டது; இந்த நிலைமையில் மந்திரி சபையின் உப தலைவர் பதவி வகிக்க காங்கிரஸுக்குத்தானே உரிமையுண்டு ?

இலாக்காக்களில் மிகவும் முக்கியமானவைகளில் சிலவற்றைக் காங்கிரஸ் கமிட்டியார் சிறுபான்மைக் கட்சி

மெம்பர்களுக்கு அளித்திருந்தனர். அதுதானே நியாய மாகும்? காங்கிரஸ் தேச முழுவதுமுள்ள சகல வகுப்பாரு டைய நலன்களையும் காப்பதையே கடமையாகவுள்ள தனிப்பெரும் ஸ்தாபனம் அல்லவோ? அந்த நியாயத்துக்கு விரோதமாக முக்கியமான இலாக்காக்களை யெல்லாம் காங்கிரஸும் லீகும் பங்குபோட்டுக் கொள்வது என்பது எப்படி நியாயமாகும்? அந்த லீக் நியாயத்தை எப்படி வேவல் ஒத்துக்கொள்ள முடியும்?

நீண்டகாலத் திட்டத்தை அமல் நடத்துவதற்காகவே இடைக்கால சர்க்கார் அமைக்கப்படும்பொழுது அதைப் பற்றி பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்பதை என்ன வென்று கூறுவது?

ஆதலால் வைஸிராய் வேவல் பிரபு தமது அக்டோபர் 4-ம் தேதிக் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு மறுத்து எழுதினார் :—

(1) காங்கிரஸ் முஸ்லிமை நியமிக்கக்கூடாது என் பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. இரண்டு கட்சியும் தத்தம் இஷ்டம்போல் நியமிக்கலாம்.

(2) இடைக்கால சர்க்கார் என்பது கூட்டு சர்க்கார். ஆதலால் முக்கியமான வகுப்புப் பிரச்னைகளை வோட் மூலம் முடிவு செய்வது சரிப்படாது. நட்பு முறையில் பேசியே முடிவு செய்துகொள்ள வேண்டும்.

(3) மாறி மாறி உபதலைவர் பதவி கொடுப்பது சாத் தியமில்லை. உபதலைவர் இல்லாத சமயம் முஸ்லிம் லீக் மெம்பருக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்.

(4) எல்லா இலாகாக்களும் முக்கியமானவைகளே. சிறுபான்மைக் கட்சி மெம்பர்களுக்கும் முக்கியமான இலாக்காக்களைக் கொடுக்க வேண்டியது அவசியம்.

(5) தூது கோஷ்டித் திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்கள்தான் இடைக்கால சர்க்காரில் சேர முடியும். அதனால் முஸ்லிம் லீக் சீக்கிரமாகக் கூட்டம் கூடி, திட்டம் வேண்டாம் என்று பம்பாயில் செய்த தீர்மானத்தை மாற்ற வேண்டும்.

அதன்பின் அக்டோபர் 12-ம் தேதியன்று "முஸ்லிம் லீக் தம் இஷ்டம்போல் நியமிக்கலாம் என்றும், முஸ்லிம் லீகும் காங்கிரஸும் தங்கள் ஜாபிதாவை அனுப்பிய பின் இலாக்காப் பிரிவினை விஷயம் பேசிக் கொள்ளலாம் என்றும்" ஜின்னா சாகேபுக்கு மறுபடியும் எழுதினார்.

அதற்கு ஜின்னா சாகேப் எழுதிய பதில் விநோதமானது. அதன் சாரம் இது:—

"தங்கள் இடைக்கால சர்க்கார் திட்டம் எங்களுக்குப் பிடிக்கவில்லை. 1940 ஆகஸ்ட் 8-ந் தேதி வைஸிராய் தந்த வாக்குறுதிக்கு விரோதமாயிருக்கிறது.

ஆயினும் தாங்கள் (1) முஸ்லிம் லீக் தன்னிஷ்டம்போல் ஐந்து மெம்பர்களை நியமிக்கலாம் என்று கூறுவதாலும் (2) மத்திய சர்க்கார் நிர்வாகம் முழுவதையும் காங்கிரஸின் கையில் விட்டுவிடுவது கூடாதாதலாலும் (3) முஸ்லிம் இந்தியாவின் நம்பிக்கையைப் பெறாத முஸ்லிம் இடம் பெற்றுவிடக் கூடுமாதலாலும் (4) இங்கு சொல்லாமலே அறிந்து கொள்ளக்கூடிய முக்கியமான காரணங்கள் இருப்பதாலும் தங்கள் விருப்பப்படி ஐந்து மெம்பர்களை நியமிக்கத் தீர்மானிக்கின்றோம்."

கோபுரத்தின் மீதுள்ள பொம்மை தான்தான் கோபுரத்தைத் தாங்குவதாக எண்ணியதாக ஒரு கதை சொல்லுவார்கள். அதுபோல் முஸ்லிம் லீகர்கள் தாங்கள் இல்லாமல் இடைக்கால சர்க்கார் என்னும் ரதம் ஓடாது என்று எண்ணினார்கள். இப்பொழுது வெகு குதூகலமாக

விரைந்து செல்வதைக் கண்டதும் 'ஆகா, அதிகாரத்தில் நமக்குப் பங்கில்லையே, ஏமாந்து போனேமே' என்று எண்ணியே இடைக்கால சர்க்காரில் வந்து சேர்ந்தார்கள்.

"இங்கு சொல்லாமலே அறிந்து கொள்ளக்கூடிய காரணங்கள்" என்று ஜின்ஞ சாகேப் கூறுகிருரே அந்தக் காரணங்கள் எவை? இடைக்கால சர்க்கார் நடைபெருமல் உள்ளே இருந்து முட்டுக்கட்டை போடுவதுதான் உள்ளே வருவதன் நோக்கமோ? அந்தக் காரியம் இனிமேல் பலிக்காது. பலிக்கவிட முடியாது.

ஜின்ஞ சாகேப் இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீக் சார்பாக சேரும் ஐந்து மெம்பர்களின் பெயரையும் வைசிராய்க்கு அனுப்பிவைத்தார். அதன்மேல் அவர்களுக்கு எந்த இலாக்காக்களைத் தருவது என்ற விஷயம் ஆலோசிக்கப்பட்டது.

ஜின்ஞ எப்படியும் உள்நாட்டுப் பாதுகாப்பு இலாகாவாவது முஸ்லிம் லீகுக்குக் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

ஆனல் அவர் பண்டித ஜவஹர்லால் நேரு தம்முடன் ஒத்துழைக்குமாறு அழைத்தபொழுதே வந்திருந்தால் அந்த இலாகா முஸ்லிம் லீகுக்குக் கிடைத்திருக்கும். முன்னல் காங்கிரஸின் சார்பாக ராஜாஜி, ஜின்ஞ சாகேபே தேசீய சர்க்காரின் பிரதம மந்திரியாகவே இருக்கட்டும் என்று கூறினர் அல்லவா? இரண்டு கட்சியும் ஒத்துழைப்பதானல் எந்தக் கட்சி எந்த இலாக்காவை நடத்தினல் என்ன? ஆனல் இப்பொழுது ஜின்ஞ சாகேப் உடன்பிறந்த சகோதரருடைய அழைப்புக்கு இணங்காமல் அடிமையாக்க வந்த ஐரோப்பிய வைசிராயின் அழைப்பின் பேரிலேயே வந்திருப்பதால் எப்படி இந்த முக்கியமான இலாகாவை லீகரிடம் ஒப்படைக்க முடியும்?

அது மட்டுமன்று, ஆகஸ்ட் 6-ந் தேதி கல்கத்தாவில் நடந்த அட்டூழியங்கள் போதா என்று கிழக்கு வங்காளத்தில் நோவகாளி ஜில்லாவில் இதுவரை எங்கும் கேட்டிராத அக்கிரமங்கள் நடைபெற ஆரம்பித்துவிட்டன.

இவற்றிற்குப் பொறுப்பு யார்? வங்கப் பிரதம மந்திரி ஜனுப் சுஹூர்வர்த்தி கல்கத்தாவிலும், கவர்னர் பர்ரோஸ் டார்ஜிலிங் மலைவாசஸ்தலத்திலும் இருந்து கொண்டு அப்படிப் பிரமாதமாக ஒன்றும் நடைபெற வில்லை என்று அறிக்கைகள் விட்டனரேயன்றி அவற்றை அடக்கத்தக்க முயற்சிகள் போதுமான அளவு செய்யாமல் இருந்தனர். அதன்மேல் புதிதாகக் காங்கிரஸ் அக்கிராசனர் பதவிக்கு வந்துள்ள ஆச்சார்யா கிருபளானி தம்முடைய தர்மபத்தினியாருடன் நோவாகாளி ஜில்லாவுக்குப் போய் அங்குள்ள நிலைமையைப் போய்ப் பார்த்து வந்தார்.

அவர் கூறுவதிலிருந்து தெரிவது இதுவாகும்:—

ஹிந்துக்களைத் தாக்க முன்கூட்டி ஏற்பாடு செய்திருந்தார்கள். முஸ்லிம் லீகின் பிரசாரமே முக்கிய காரணம். முஸ்லிம் லீக் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். அதிகாரிகளுக்கு முன்கூட்டி அறிவித்திருந்தும் அவர்கள் தக்க ஏற்பாடு செய்யாமல் இருந்துவிட்டார்கள். முஸ்லிம் உத்யோகஸ்தர்களில் சிலர் ஆதரவு அளித்து வந்தார்கள். அக்கிரமம் செய்த முஸ்லிம்கள் "லீக் வாழ்க—பாக்கிஸ்தான் வாழ்க" என்று கோஷித்துக் கொண்டே கொலையும் கொள்ளையும் செய்தார்கள். முஸ்லிம் ஜமீன்தார்களுடைய துப்பாக்கிகளும் உபயோகப்படுத்தப்பட்டன. ஏராளமான ஹிந்துக்களை இஸ்லாம் மதத்துக்குச் சேர்த்துளர். பல ஹிந்துப் பெண்களை முஸ்லிமாக்கி முஸ்லிம்களுக்கு மணம் செய்து கொடுத்துளர். போலீஸார்

அக்கிரமம் நடந்த சமயம் அடக்காமல் சும்மாயிருந்தார்கள்.

இந்த விஷயங்களை எல்லாம் ஆச்சார்யா கிருபளானி வந்து கூறுவதற்கு முன்னரே காங்கிரஸ் காரியக் கமிட்டியார் அக்டோபர் 24-ம் தேதி அக்கிரமங்களைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். அதன் சாரம் வருமாறு :—

"அங்கு நடக்கும் அக்கிரமங்கள் இவ்வளவு கோரமானவை என்று அறிந்து கொள்வதற்கு வங்காள சர்க்காரும் பிரதம மந்திரியும் விடுத்த அறிக்கைகளே போதும்.

இந்தப் பேயாட்டத்துக்குக் காரணம் முஸ்லிம் லீக் சில வருஷங்களாகச் செய்துவந்த வகுப்புவாதத் துவேஷப் பிரசாரம்தான் என்பதில் சந்தேகமில்லை.

இதன் பொறுப்பு முழுவதும் வங்காள சர்க்காரையே சாருமாயினும் வங்காள கவர்னரும், வைசிராயும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமலிருக்க முடியாது.

இந்த அக்கிரமங்கள் எல்லாம் தேசீயத்தை நசுக்கி விடுவதற்காகவே நடைபெறுகின்றன. ஆனால் வகுப்புவாதத்தை தேசீயத்தால்தான் வெல்ல முடியுமேயன்றி வகுப்புவாதத்தால் முடியாது. வகுப்புவாதம் அன்னிய ஆட்சியை நிலைத்திருக்கவே செய்யும். ஆதலால் ஹிந்துக்கள் பழி வாங்க அணுவளவுகூட எண்ணலாகாது."

இந்த விதமாக வங்காளத்தில் முஸ்லிம் லீகின் ஆட்சி நடந்து வரும்பொழுது யாரேனும் நாட்டின் பாதுகாப்பு இலாக்காவை முஸ்லிம் லீகிடம் கொடுக்க முடியுமா ?

இந்தவிதம் காங்கிரஸ் கமிட்டியார் உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுப் பாதுகாப்பு இரண்டையும் அதாவது போலீஸையும் இராணுவத்தையும் முஸ்லிம்

லீகிடம் தரமுடியாதென்று உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். அவர்கள் சொல்லைத் தட்டவும் வாதத்தை மறுக்கவும் வைஸிராய்க்குத் தைரியமில்லை. ஆதலால் அவர்,

"நிதி, வர்த்தகம், தபால், சுகாதாரம், சட்டம் ஆகிய ஐந்து இலாக்காக்களையும் முஸ்லிம் லீகுக்குத் தருகின்றேன்" என்று ஜின்னா சாகேபுக்கு அக்டோபர் 25-ந் தேதி எழுதினார்.

அதற்கு ஜின்னா சாகேப், "இது நியாயமில்லை. ஆனால் தாங்கள் முடிவு செய்துவிட்டபடியால் அதை ஆட்சேபியாமல் ஏற்றுக் கொள்கின்றேன்" என்று வைசிராய்க்குப் பதில் எழுதினார்.

ஜின்னா சாகேப் அனுப்பிய ஐந்து பெயர்களில் ஒருவர் திரு. ஜோகேந்திரநாத் மண்டல். அவர் ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்தவர். வங்காள மந்திரிகளில் ஒருவர். முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதி ஸ்தாபனம் என்று இடைவிடாமல் கூறிவரும் முஸ்லிம் லீக் இப்படி ஒரு ஹரிஜன் மெம்பரை நியமிக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

ஜின்னாவே அக்டோபர் 3-ந் தேதி வைஸிராய்க்கு எழுதிய கடிதத்தில் காங்கிரஸ் ஹரிஜன் மெம்பரை நியமிக்கலாம் என்று கூறியதோடு ஹரிஜனங்களை சிறுபான்மைக் கட்சிகளில் சேர்த்துப் பேசவுமில்லை.

அப்படியே அவர் ஹரிஜனங்களிடம் அனுதாபம் காட்ட விரும்பினால் அவர் முதலில் தம்முடைய வகுப்பு வாதத்தைத் துறந்து தேசியவாதி ஆக வேண்டாமா?

அத்துடன் அவர் நியமித்திருக்கும் திரு. மண்டல் ஹரிஜனங்களுடைய பிரதிநிதியாகவுமாட்டார். காங்கிரஸின் விரோதியாகிய டாக்டர் அம்பேத்கார்கூட அதை ஆட்சேபிக்கின்றார். காங்கிரஸைச் சேர்ந்த ஹரிஜனங்களுக்குத்தான் பெரும்பான்மையான ஸ்தானங்கள் சட்ட

சபைகளில் கிடைத்திருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளவும் செய்கிறார். ஆதலால் காங்கிரஸ் ஹரிஜன் தான் ஹரிஜனங்களுடைய உண்மையான பிரதிநிதி யாவார்.

அப்படியானால் ஜின்னா சாகேப் திரு. மண்டலை நியமித்திருப்பானேன்? வங்காளச் சட்ட சபையில் முஸ்லிம் லீகுக்கு மெஜாரிட்டி பலமில்லை. அதற்காக அது காங்கிரஸைச் சேராத ஹரிஜன மெம்பர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்களில் ஒருவராகிய திரு. மண்டலை மந்திரி ஆக்கியது. அதன் பயனாக காங்கிரஸ் ஹரிஜன மெம்பர் களில் சிலர் முஸ்லிம் லீகுடன் வந்து சேர்ந்துகொண்டார் கள். ஆகவே ஜனாப் சுஹர்வர்த்தி திரு. மண்டலை இடைக் கால சர்க்காரில் சேர்த்தால் தம்முடைய மந்திரி சபை நிலைத்திருக்கும் என்று ஜின்னா சாகேபிடம் கூறினாராம்.

அத்துடன் புனா ஒப்பந்தப்படி வங்காளத்தில் ஹரி ஜனங்களுக்கு அதிகமான ஸ்தானங்கள் தரப்பட்டிருக் கின்றன. அவர்களைத் தங்கள்பால் இழுத்துக் கொண் டால் வடகிழக்குத் தொகுதியில் சேரமாட்டேன் என்று சொல்லிவரும் அஸ்ஸாம் மாகாணத்தை நிர்ப்பந்தித்துச் சேர்த்துவிடலாம் என்றும் முஸ்லிம் லீகர்கள் எண்ணு கிறார்களாம். இது நிற்க,

இந்தவிதமாக சுமார் ஒன்றரை மாதகாலம் நடை பெற்ற முயற்சிகளின் பயனாக முஸ்லிம் லீகர்களுடன் கூடிய இடைக்கால சர்க்கார் கீழ்க்கண்டவிதமாக அக்டோபர் 26-ந் தேதி அமைந்தது.

1. பண்டித ஜவஹர்லால் நேரு
2. ஸர்தார் வல்லபாய் படேல்
3. ஸி. ராஜகோபாலாச்சாரியார்
4. ராஜேந்திர பிரஸாத்
5. ஆஸப் ஆலி

6. ஜகஜீவன் ராம்
7. ஸர்தார் பலதேவ் ஸிங்
8. டாக்டர் மத்தாய்
9. ஸி. எச். பாபா
10. லியாகத் அலிகான்
11. சுந்திரிகார்
12. அப்துல் ராப் நிஷ்டார்
13. கஜ்நாபர் அலிகான்
14. ஜோகேந்திரநாத் மண்டல்

இந்த மந்திரி சபை ஏற்பட்டதும் மகாத்மா காந்தியடிகள் கீழ்கண்டவாறு 27–10–46 ஹரிஜன் பத்திரிகையில் எழுதினுர் :—

" முஸ்லிம் லீகர்கள் இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறுர்கள். அதனுல் தேசத்துக்கு நன்மை உண்டாகும் என்று நம்பினேன். ஆனுல் அவர்கள் ஒரு ஹரிஜனையும் நியமித்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். முஸ்லிம் லீக் முற்றிலும் வகுப்பு ஸ்தாபனமேயாகும். அப்படியிருக்க அவர்கள் ஹரிஜன் ஒருவரை எப்படித் தங்களுடைய பிரதிநிதியாக நியமிக்க முடியும்? அதனுல் அவர்கள் சண்டை போடுவதற்காகவே மந்திரி சபைக்கு வந்திருக்கிறுர்களோ என்று எண்ணும்படியாயிருக்கிறது. ஆயினும் அவர்கள் சண்டை போடாமல் சகோதரர்கள்போல் ஒத்துழைப்பார்கள் என்றும், இந்தியா முழுவதற்குமாகச் சேவை செய்வார்கள் என்றும் எண்ணுகிறேன். உண்மையான பாரத புத்திரராகவும் ஊழியராகவும் நடந்து கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்."

நாமும் அவ்விதமே நம்புவோமாக!

வந்தே மாதரம்!

ஜே ஹிந்த்!